ஸ்ரீ:

# ஸ்ரீ வைஷ்ணவ சமய சாரம்.

MAHAMAHOPADHYAYA
Dr. U. V. SWAMINATHAIYAR LIBRARY
TIRUVANMIYUR, MADRAS-41

GF
Q22
G6

தே. வரதராஜன்.

விலை அணா 8.

ஸ்ரீ

# ஸ்ரீ வைஷ்ணவ சமய சாரம்.

## ஸ்ரீ வைஷ்ணவ சமயத்தின் நுட்பங்களை அறிவிக்கும் நூல்.

தே. வரதராஜனால்,
'எளிய தமிழில் இனிய நடையில் அனைவருக்கும் பயன்படுமாறு எழுதப்பட்டது.

நூலாசிரியரால் பிரசுரிக்கப்பட்டது.

திருப்பாதிரிப்புலியூர்
ஸ்ரீ வெங்கட்டா பிரிண்டிங் அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பட்டது.

1936.

உரிமை பதிவு செய்யப்பட்டது.

---

விலை அணா 10.

# பொருளடக்கம்.


| அத்தியாயம். | விஷயம். | பக்கம். |
| --- | --- | --- |
| | முகவுரை. | |
| I | சாதி | 1 |
| II | மதம் | 2 |
| III | மதப் பிரிவு | 8 |
| IV | ஸ்ரீ வைஷ்ணவம் | 11 |
| V | பஞ்ச ஸம்ஸ்காரம் அல்லது ஐந்து குறிகள் | 13 |
| VI | பிரதான பிரதி தந்திரம் அல்லது முக்கியமான சிறப்பியல் | 15 |
| VII | அர்த்த பஞ்சகம் அல்லது ஐந்து பொருள் | 25 |
| VIII | தத்வத்ரயம் அல்லது மூவகை உண்மைகள் | 39 |
| IX | பரப்ரஹ்மம் அல்லது தெய்வம் | 87 |
| X | முமுக்ஷுத்வம் அல்லது வீடுபெற விரும்புகிறவனுடைய தன்மைகள் | 94 |
| XI | பிரபத்தி அல்லது கெஞ்சிக் கேட்டுக் கொள்ளுதல் | 98 |
| XII | ஸதாசாரம் அல்லது நன்னடக்கை | 121 |
| XIII | பரிபூர்ண ப்ரம்மாநுபவம் அல்லது மோக்ஷம் | 136 |
| XIV | முடிவுரை | 141 |

# பிழை திருத்தம்.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 6 | 14 | சாதிக்குள | சாதிக்குள் |
| 32 | 9 | புழுஷார்த்தமாகும் | புருஷார்த்தமாகும் |
| 40 | 11 | சாரணமாகவும் | காரணமாகவும் |
| 43 | 8 | ஜ்ஞாஞஸ்ரயன் | ஜ்ஞாஞஸ்ரயன் |
| 46 | 31 | சம்சகாரி | சம்சாரி |
| 50 | 28 | உளளுர | உள்ளுர |
| 59 | 8 | பேதப்படும்பெழுது | பேதப்படும்பொழுது |
| 60 | 15 | அஹக்கார | அஹங்கார |
| 68 | 19 | உலகங்ளென்றும் | உலகங்களென்றும் |
| 82 | 2 & 3 | உடைவன் | உடையவன் |
| | 27 | ஆவேசம | ஆவேசம் |
| 84 | 7 | பிரகு | பிருகு |
| 86 | 33 | சக்கரத் | சக்கரத் |
| 87 | 12 | ஸ்ரு | ஸ்ரீ |
| 88 | 17 | அவன்தான | அவன்தான் |
| 96 | 20 & 21 | விட்டது | அற்றது |
| 103 | 8 | பரர | பார |
| 107 | 9 | இறைவனுக்கூம் | இறைவனுக்கும் |
| 109 | 21 | அளிப்பதால | அளிப்பதால் |
| 113 | 3 | பெற்றுக் | பேற்றுக் |
| 115 | 15 | தானுங | தானுங் |
| 117 | 32 | நமத்கு | நமக்கு |
| 126 | 30 | கூயறி | கூறிய |
| 131 | 9 | தீர்க்கும | தீர்க்கும் |
| 138 | 15 | பரகிருதியைக் | பிரகிருதியைக் |
| 142 | 29 | பிள்ளைலோகாசாரியர் | எறும்பியப்பா |

ஸ்ரீ:
ஸ்ரீமதே வேதாந்த ராமாநுஜ மஹா தேசிகாய நம:

ஸ்ரீ புஷ்பாலயம்பா சமேத
தேகளீசப்பெருமாள் திருவடிகளே சரணம்.

# முகவுரை.

"பாவருந் தமிழாற் பேர்பெறு பனுவல் பாவலர் பாதிநா ளிரவில், மூவரு நெருக்கி மொழிவிளக்கேற்றி முகுந்தனைத் தொழுத நன்னாடு" என்று புகழ்ந்து கூறும்படி முதலாழ்வார் மூவரும் ஒருவரையொருவர் சந்தித்து அந்தாதி பாடின தல மாகிய திருக்கோவலூர் எனும் நடுநாட்டுத் திருப்பதியின்கண் அடியேன் இருந்த காலத்துச் சில அன்பர்களால் கூட்டுவிக்கப் பட்ட கோவல் தமிழ்ச்சங்கம் எனும் அறிஞர் சங்கத்தில் பழக நேர்ந்தது. அப்பொழுது அச் சங்கத்தில் ஸ்ரீ வைஷ்ணவ சமயச்சார்பாக சில சொற்பொழிவுகள் அடியேனால் செய்ய நேர்ந்தன. ஆங்குக் கூடியிருந்த சில அன்பர்கள் ஸ்ரீ வைஷ்ணவ சமய நூல்கள் எளிதில் உணரமுடியாத மணிப்பிரவாள நடையில் எழுதப்பட்டிருப்பதால் அதன் உண்மை அநேக ருக்கு விளங்காமலிருக்கின்றது என்றுரைத்தனர். உடனே ஸ்ரீ புஷ்பாலயம்பா சமேத தேகளீசப்பெருமாள் சிறிதளவு தமிழ்மாத்திரம் கற்றவர்களுக்கும் எளிதில் விளங்கும்படியான எளிய தமிழ் நடையில் ஸ்ரீ வைஷ்ண சமய நுட்பங்களை அறி விக்கும் ஓர் நூல் இயற்றும்படி அடியேனுடைய மனத்தின் கண் உணர்வித்தார். இது காரணங்கொண்டு இச் சிறு புத்த கம் "ஸ்ரீ வைஷ்ணவ சமய சாரம்" எனும் பெயரால், எம் பெருமான் உணர்விக்க அடியேன் பேனா ஸ்தானத்தில் நின்று எழுதலாயினேன்.

இந்நூல் ஆழ்வாரருளிச் செயல்கள், ஸ்ரீ பாஷ்யம், வியாக் யானங்கள், வடகலை, தென்கலை சம்பிரதாய கிரந்தங்கள் ஆகிய இவைகளின் துணைகொண்டு இயற்றப்பட்டது.

அடியேனுடைய விருப்பத்துக்கிணங்கி அன்புகூர்ந்து இந்நூலைப் பிழைதிருத்திக் தந்த திருப்பாதிரிப்புலியூர் ஸ்ரீ ஞானியார் ஸ்வாமிகளுக்கு அடியேனுடைய அன்பார்ந்த வந்தனம் உரித்தாகுக.

அடியேனுடைய சிற்றறிவினால் இந் நூலின்கண் ஏதேனும் பிழையிருப்பின், "பிழைப்பராகிலும் தம்மடியார் சொற்பொறுப்பது பெரியோர் கடனன்றே" என்றபடியே நற்கலையில் நன்னெறி சேராத்திகர் அசாரத்தை உபேக்ஷித்து சாரத்தை அங்கீகரிக்க வேணுமென்று தாளுந் தடக்கையுங் கூப்பிப்பணிந்து வேண்டுகின்ற,

திருப்பாதிரிப்புலியூர்,
1—7—1936.
தாதுஸ்ரீ ஆனிமீ 18உ

தாஸாநு தாஸன்,
தே. வரதராஜ தாஸன்.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ஸ்ரீ வைஷ்ணவ சமய சாரம்.

## I. சாதி.

1. இவ்வுலகின்கண் வாழ்வதற்கு இன்றியமையாத பொருள் ஈட்டுவதற்காக அவரவர் செய்யும் தொழில் காரணமாகப் பண்டைக் காலத்தில் ஏற்பட்ட பிரிவு சாதி.

2. அவரவர் போட்டியின்றி மன அமைதியுடன் தங்கள் தங்கள் தொழிலைச் செய்துவர உதவியது சாதி.

3. தந்தை செய்த தொழிலை தனயன் செய்துவர, இப்படி வாழையடி வாழையாகத் தொடர்ந்துவந்த தொழில் காரணமாகப் பிறப்பால் ஏற்பட்டது சாதி.

4. உலகம் செழித்து வாழ வேதம் ஓதல், வைதீக கர்மங்கள் செய்தல் ஆம் இவைகளை நடாத்தியவர் பிராமணர். தேசத்தைக் காத்து நீதியுடன் அரசு நடாத்தியவர் க்ஷத்திரியர். உழவு, வாணிபம் இவைகளைச் செய்தவர் வைசியர். முன் சொல்லிய மூவருக்கும் காயத்தாலாகிய உதவிபுரிந்தவர் சூத்திரர் என நான்கு வகை சாதி.

5. ஒரு தொழிலாளன் அதே தொழிலைச் செய்யும் மற்றொருவனைக் கண்டால் அதிக விருப்பத்துடன் குலாவுகின்றான். ஆதலால், பொதுவாக ஒரு சாதியினர்க்குள்ளாகவே

பெண் கொடுக்கல் வாங்கல் நடந்தது இயற்கை. இக்காரணங் கொண்டு கட்டுப்பட்டது சாதி.

6. "முற்காலத்தில் இராஜ ரிஷியாகவிருந்த விசுவாமித்திரர் தபசால் பிரம்மரிஷியானார்" என்னும் சரித்திர வாயிலாக நாம் அறிவது ஓர் சாதியில் பிறந்தவன் அதே பிறவியில் அவனுடைய நடக்கையின் காரணமாக வேறு சாதியை அடையக்கூடுமென்பதாகும். இவ்விதமாகப் பண்டைக்காலத்தில் சிறப்பில் உயர்வு தாழ்வு நேர்ந்திருக்கின்றது.

7. பிற்காலத்தில் சாதிக்குள் சாதியாக வேர்விட்டு சாதி பலவாயின. முற்காலத்தில் தொழில் கருதி ஏற்பட்ட சாதிவேற்றுமை இக்காலத்தில் பிறப்பில் உயர்வு தாழ்வு கருதும் சாதி வேற்றுமையாக மாறி நமது நாட்டை பெரும் பிணியாய்ப் பிடித்து நிற்கிறது. ஒவ்வொரு தொழிலும் மக்களது வாழ்விற்கு அவசியமாதலால், தொழிலில் உயர்வு தாழ்வு கற்பிப்பது மடமையாகும். ஆதலால், நாம் பிறப்பில் உயர்வு தாழ்வு கற்பிப்பதை விட்டுப் பண்டைக் காலத்தைப்போல் சிறப்பில் உயர்வு தாழ்வு கருதுவோமானால் இக்காலத்தில் நடக்கும் அநேக அட்டூழியங்கள் தொலைந்து நம் பாரத பூமி சுகம் பெறும்.

அந்தண ரென்போ ரறவோர்மற் றெவ்வுயிர்க்குஞ்
செந்தண்மை பூண்டொழுக லான். (திருக்குறள்.)

## II. மதம்.

---

1. இம்மை, மறுமை என இரண்டுள. இம்மை இவ்வுடலுடன் இருக்கும் நாள். மறுமை இவ்வுடலைவிட்டகன்ற பின்புள நாள்.

9. இம்மை வாழ்விற்குப் பொருளீட்ட நாம் செய்வது தொழில். தொழிற்குக் காரணமாகவிருந்தது சாதி. ஆதலால், இம்மை நலங் கருதிப் பண்டைக் காலத்தில் ஏற்பட்டது சாதி.

10. மறுமைச்சுகம்பெற நாம் செய்வது இறை வழிபாடு. இறைவழிபாட்டைப்பற்றி அறிவுறுத்துவது மதம். ஆதலால், மறுமை நலங்கருதி ஏற்பட்டது மதம்.

11. முற்றும் வேறுபட்ட இரண்டு விஷயங்களுக்காக ஏற்பட்டன சாதியும் மதமும். ஆதலால், சாதிக்கும் மதத்திற்கும் ஒருவிதமான தொடர்புங் கிடையாது.

12. மறுமை நலங்கருதி நடப்பவனுக்கு வேண்டுவது மதம். சாதி என்பது மதத்திற்கு முற்றும் வேறுபட்ட ஒன்றாகையால் சாதியை மதத்துடன் புகுத்துவது ஒவ்வாது. மதம் வளர சாதிப்பற்று ஒழிதல்வேண்டும்.

13. பெரியாழ்வார் திருப்பல்லாண்டிலே, "வாழாள் பட்டுநின் றீருள்ளீரேல் வந்து மண்ணும் மணமும் கொண்மின்," என்றும், "தொண்டக் குலத்திலுள்ளீர் வந்தடி தொழுதாயிரநாமம் சொல்லிப் பண்டைக் குலத்தைத் தவிர்ந்து பல்லாண்டு பல்லாயிரத்தாண்டென்மினே," என்றும் கூறியுளார். இதுகொண்டு இறைவழிபாட்டிற்குப் புறம்பானது சாதி என்பது விளங்கும்.

14. ஒரு மதத்தினரெல்லோரும் அடைய விரும்புவது ஒன்றே. அதற்கு ஏற்பட்ட வேலை ஒருவகைப்பட்டதே. ஆதலால், ஒரு மதத்தினரெல்லோரும் ஒரு குலத்தினர் ஆகின்றார்கள்.

15. பாகவதாபிமானத்திற்குப் புறம்பான கிராமகுலாதிகளால் வரும்பேரானது ஸ்வரூபத்திற்கு (ஸ்ரீ வைஷ்ணவத்தில்

சொல்லப்பட்ட ஆத்மாவினுடைய ரக்ஷணத்திற்கு) அநர்த்தத்தை உண்டாக்கும். (ஸ்ரீ வசனபூஷணம்.)

16. ஆகையால், விப்ரநாராயணரென்கிற திவ்ய பெயரொழிந்து "தொண்டரடிப்பொடி" என்னும் திருநாமம் பெற்றார் நமது ஆழ்வார். (குருபரம்பரா ப்ரபாவம்.)

17. ஸ்ரீ வைஷ்ணவர்கள் பக்கல் குலம் முதலியவைகளை இட்டுத் தாழ்வாக நினைத்தல் அபசாரமானாற்போலே கௌரவித்து நினையாதொழிகையும் அபசாரமாம். (ஸ்ரீ வசன பூஷணம்.)

18. எம்பெருமானிடத்தில் ஆசையுள்ளவர்களிடத்தில் உள்ள சாதி முதலிய குற்றங்களைப் பொருட்படுத்தாமல் அவர்களிடம் பிரீதி பண்ணுவது உண்மை பாகவதர்களுடைய அடையாளம். (ஸ்ரீ ரஹஸ்யத்ரயஸாரம்.)

19. ஒருவனுக்கு ஊர், குலம், பணம் முதலியவைகளால் வரும் மேன்மை மேன்மையன்று. இறைவழி நிற்றலே சிறப்பு. (ஸ்ரீ ரஹஸ்யத்ரய ஸாரம்.)

20. ஓர் வைஷ்ணவனை இன்னொரு வைஷ்ணவன் கண்டால், சந்திரனையும் குளிர்ந்த தென்றலையும் சந்தனத்தையும் தனது மனதுக்கினிய மனைவியையும் அடைந்ததுபோல் அன்புடன் வரவேற்றல்வேண்டும்.

21. இதுவரையில் எடுத்துக்காட்டிய பெரியோர்களது வாக்கியங்களிலிருந்து மத விஷயத்திலே சாதி வித்தியாசத்தைப் பாராட்டுவது தவறு என்பது உள்ளங்கை நெல்லிக்கனியென விளங்கும்.

22. அந்தணர் குலத்துதித்த இராமாநுஜர் வைசிய குலத்துதித்த பாகவதராகிய திருக்கச்சி நம்பிகள் சாப்பிட்ட மிகுதியை "போனகஞ் செய்த சேடம் தருவரேற் புனிதமன்றே" என்று விரும்பியதினாலும், அந்தணராகிய பெரிய

நம்பிகள் இழிகுலத்துதித்த மாறனேர் நம்பி என்னும் பாகவதருக்குப் புத்திரர்கள் செய்யவேண்டிய ஈமக்கடன் செய்ததினால், பாகவதர்களிடத்தில் பிறப்பை நோக்கக்கூடாது என்பது நமது பூர்வாசாரியர்களின் கொள்கை என்பது தெற்றென விளங்கும். (குருபரம்பரா ப்ரபாவம்.)

23. சாஸ்திரங்கள் பிராமண குலத்தை மேன்மையாகச் சொல்லியிருக்க, பிறப்பால் வரும் மேன்மை உபயோகமற்றது என்று சொல்லலாமோவெனில்; வேதங்களை ஓதியுணர்ந்து இறைவனை அடைய உதவும் பார்ப்பனீயம் சிறந்தது என்று கூறப்பட்டதேயொழிய, எக்கேடுற்றாலும் பார்ப்பனீயம் சிறந்தது என்பது பொருளன்று. உயர் குலத்தவர்களுக்கும் இழிகுலத்தவர்களுக்கும் பகவத் ஸம்பந்தம் (இறைவனிடத்தில் தொடர்பு.) உண்டானால் இருவரும் பாகவதர்களே. (ஸ்ரீ வசனபூஷணம்.)

24. சாதியால் சிறப்பு என்று எண்ணுவது பிராந்தி. பகவத் ஸம்பந்தத்துக்கு அநுகூலமான ஜன்மம் உயர்ந்தது. பகவத் ஸம்பந்தத்திற்குப் பிரதிகூலமான ஜன்மம் தாழ்ந்தது. (ஸ்ரீ வசனபூஷணம்.)

25. பாகவதர்களெல்லோரும் ஏக ஜாதியர் என்று சொல்லின், பாகவதனான சூத்திரன் வேதம் ஓதலாமோ வெனில், வேதம் ஓதுதல் பிராமணனுடைய தொழில். அது சூத்திரனுடைய தொழிலல்ல. "வேதம் ஓதுதல் கேவலம் படனமாத்திரத்திற்குப் பிரயோசனமேயன்றி மதத்தின் நுட்பங்களை அறியப் பிரயோசனமில்லை. ஆனால், வேதத்திலுள்ள உட்பொருள்களை யறிந்துய்வதற்கு எல்லோருக்கும் உரிமையுண்டு" என்று ஸ்ரீ ராமாநுஜர் பிள்ளையுறங்கா வில்லிதாசரைக் குறித்து அபயப்பிரதான விஷயமாக உபந்நியஸிக்கும்பொழுது கூறியுள்ளார். (வார்த்தாமாலை.)

26. ஆனால், சூத்திரன் வேத சப்தத்தைக் கேட்டால் காதில் ஈயத்தைக் காய்ச்சி ஊற்றவேண்டுமென்று ஸ்மிருதி

கூறுகின்றதேயெனில்: இந்த விதி எக்காலத்திலிருந்ததோ, யார் அநுஷ்டித்தார்களோ தெரியவில்லை. பூர்வாசாரியர்களின் காலத்திலேயே சந்நிதிகளில் சகலருக்கும் கேட்கும்படியாக வேதபாராயணம் நடந்திருக்கின்றது. பூர்வாசாரியர்களால் சகலரும் வாசித்துப் பயனடையும்படி எழுதப்பட்ட நூல்களிலே வேத வாக்கியங்களை எடுத்து ஆண்டிருக்கிறார்கள்.

27. பாகவதர்களெல்லோரும் ஏகஜாதியர்களென்றால், அவர்களுக்குள் பெண் கொடுக்கல் வாங்கல் பிறப்பைப் பொறுத்துதானே நடக்கின்றதென்றால், பிறப்பால் அடைந்த சாதி நமது பூர்வ கர்மத்தை இம்மையில் அநுபவிப்பதற்கு இறைவனால் கொடுக்கப்பட்டது. மனைவி, மக்கள் இம்மை சுகத்துக்குரியவர்கள். ஆகையால், இம்மைக்குரிய பிறப்பால் ஏற்பட்ட சாதிக்குள் கல்யாணங்கள் நடைபெறுகின்றன. ஆனால், பாகவதர்களெல்லோரும் ஏகஜாதியர்களென்பதற்கு ஒரு பாகவதனை இன்னொரு பாகவதன் கண்டால் தனக்கு மிகவும் வேண்டிய உறவினனைக் கண்டால் எவ்வளவு பூரிப்புடன் அன்பைச் செலுத்துவனோ அவ்வளவு பேரன்பைப் பிறப்பை விசாரியாமல் பகவத் சம்பந்தம் ஒன்றையேகொண்டு செலுத்த வேண்டுமென்பதுதான் பொருள். உள்ளத்தில் அன்பு நிலவும்பொழுது பன்மையுணர்வு அற்றுவிடும்.

28. ஆனால், இக்காலத்தில் பிராமண பாகவதர்கள் பிராமணரல்லாத பாகவதர்களைக் கண்டால் அன்புடன் நடக்காமல் பிறப்புக்கு ஏற்றத்தைக் கொடுக்கின்றார்களே என்றால்: இது தங்கள் சுயநலங் கருதி ஏற்பட்ட புரோகிதக் கூத்தாகும். இந்த ஜாதித்வேஷமானது நமது பூர்வாசாரியர்களிடத்தில் எள்ளளவும் இருந்ததாகத் தெரியவில்லை. ஸ்ரீ ராமாநுஜரும் பிராமணரல்லாத பிள்ளையுறங்கா வில்லிதாசரிடம் அருவைப் பட்ட பிராமண சீடர்களுக்கு "குணமே பெரியது குலம் பெரிதல்ல" வெனத் தெற்றென விளக்கியுள்ளார்.

29. பாகவதர்களுக்குள் வித்தியாசமில்லை என்று சாத்திரங்கள் கூறியிருக்க, உபதேசம் செய்ய (பஞ்ச சம்ஸ்காரம்

செய்ய) பிராமண ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு மாத்திரம் உரிமை யிருப்பானேனென்றால்: பிராமணர்கள் பிறப்பால் ஏற்பட்ட தொழில் கொண்டு ஏனையோர்களைவிட சாத்திரங்களை நன்கு ஆராய்ந்து உண்மையையறிந்து பிறருக்கு நல்லதைச் சொல்ல அவகாசமுடையவர்களாக விருத்தல்பற்றி அவர்கள் தேசிகர்க ளாக ஏற்படுத்தப்பட்டனர்.

30. ஸ்ரீ வைஷ்ணவர்களெல்லோருக்கும் பிறப்பால் ஏற் பட்ட "ஸர்மா, வர்மா" முதலிய குலப்பெயர் ஒழிந்து "தாஸன்" என்னும் தாஸ்ய நாமம் ஆசாரியனால் உபதேச மானதும் ஏற்படுகிறது. இற்றை நாளில் பிறப்பால் கருதப் படும் உயர்வு தாழ்வை வெறுத்துச் சிறப்பில்தான் உயர்வு தாழ்வு உண்டு என்னும் நீர்மையைப் புகட்டுவது மதத்தின் சீரிய கொள்கையாகுமென்பது இதனால் தெற்றெனப் புலப் படும். ஆகையால், நம் செந்தமிழ் நாட்டிலே சாதிப் பிணி யிருக்கின்றதே என்று மதத்தை நோவதில் என்ன பயன்? அதைவிட, மதத்தின்பேரால் நடைபெறும் அட்டூழியங்க ளுக்கு அடிப்படையாகவிருக்கும் முட்சுரங்களைக் களைந் தெறிய ஏற்பாடு செய்தால் மதம் வலுப்பட்டு அனைவருக்கும் நன்மை பயக்கும்.

31. உலகத்தில் தேவர், மனிதர், மிருகம், தாவரம் எனும் நால்வகைப் பிறவியிலே எப்பிறவியில் உதித்தவராயி னும் என்னிடம் வர எல்லோருக்கும் ஒரே விதமாகவிருக்கி றேன். பிறவியின் உயர்வு தாழ்வுகளைப்பற்றி நான் கவனிப்ப தில்லை. எவன் என்னைத் தியானிக்கின்றானோ அவன் விஷயத் தில் **என்னைக்காட்டிலும்** * உயர்ந்தவனிடத்தில் போலே இருப்பேன். (ஸ்ரீமத் கீதாபாஷ்யம் 9-வது அத்தியாயம் 29-வது சுலோகம்.)

---

* இறைவனைவிட மேலானவர் கிடையாது. ஆனால், இவ் விடத்தில் "என்னைவிட மேலானவன்" என்று பகவான் சொன்னது பக்தனுடைய மேன்மையை உலகத்திற்கு வெளிப்படுத்துவதற்காம்.

32. ஆதலால், மதமானது ஒரு தேசத்தாருக்காவது ஒரு சாதியாருக்காவது மாத்திரம் உரியதன்று. எல்லோருக்கும் தாங்கள் விரும்பிய எம்மதத்தையும் ஆசிரிக்க உரிமையுண்டு.

33. ஆனால், இந்துக்களுக்குள் மதமாறுதல் இருக்கின்றதே தவிர, இந்துக்களல்லாதாரை இந்து மதங்களிலெதனிலும் சேர்த்துக்கொள்ளுவது வழக்கிலில்லை என்றால்: முற்காலத்தில் பௌத்தர்கள், சமணர்கள் ஆகிய இவர்கள் சைவர்களாகவும் ஸ்ரீ வைஷ்ணவர்களாகவும் மதம் மாறினதாகச் சரித்திரங்களில் சொல்லப்படுகிறது. அத்வைதிகள் ஸ்ரீவைஷ்ணவர்களானதாக ஸ்ரீ குருபரம்பரா ப்ரபாவத்தில் கூறப்படுகிறது. இக்காலத்தில் இம்மாதிரியான மதமாறுதல் கிடையாது. பூர்வாசாரியர்களைப்போல் மதத்திற்காகப் பாடுபடும் தயாளுகள் (மக்கள் உண்மையையறியாமல் படும் கஷ்டத்தைக்கண்டு சகிக்க முடியாத அன்புடைய பெரியோர்கள்) இக்காலத்தில் இல்லாதிருப்பதே இதற்குக் காரணம். பூர்வாசாரியர்களின் காலத்தில் மற்றத் தேசத்தவர்களிருந்து நம் மதத்திற் சேர இஷ்டப்பட்டிருப்பராகில் அவர்களும் நம்மைப்போல் சீவர்களாகையால் சந்தேகமின்றி நம் மதத்தில் சேர்த்துக்கொள்ளப்பட்டிருப்பார்கள்.

34. உண்மை மதப்பற்று பெருகப் பெருகச் சாதி வேற்றுமை தானே மறைந்துபோகும். ஆதல்பற்றி பிறப்பில் உயர்வு தாழ்வு கருதும் சாதிப்பிணி நம்மவரிடமிருந்து அகலுதலை புரிவது உண்மை மதமாகும்.

## III. மதப் பிரிவு.

---

35. வேதத்தை ஒப்புக்கொள்ளும் மதங்கள், வேதத்தை ஒப்புக்கொள்ளாத மதங்கள் என இருவகை.

36. வேதத்தை ஒப்புக்கொள்ளும் மதங்களுக்கு வைதிக மதங்களென்றும், வேதத்தை ஒப்புக்கொள்ளாத மதங்களுக்கு அவைதிக மதங்களென்றும் பெயர்.

37. நமது நாட்டில் தோன்றிய பௌத்தர், சமணர் ஆகிய மதங்களும், பிற நாடுகளில் தோன்றிய மஹம்மதியர், கிறிஸ்தவம் இன்னும் பிற மதங்களும் வேதத்தை ஒப்புக்கொள்ளுவதில்லை. ஆகையால், அவை அவைதிக மதங்கள்.

38. வேதம் அநாதியானது. அதாவது, வேதம் இந்தக் காலத்தில் உண்டாயிற்று இன்னாரால் செய்யப்பட்டது என்பது கிடையாது. கடவுள் எப்படி அநாதியோ அப்படி வேதமும் அநாதியானது. அது எப்பொழுதும் இருந்துகொண்டிருக்கிறது. வேதத்தில் சில மந்திரங்கள் இருஷிகள் பெயரால் வழங்குகின்றனவே ஆகையால், வேதம் அநாதி என்பது எப்படி பொருந்துமென்னில்: காலக்கிரமத்தில் மறைந்திருந்த சில மந்திரங்களை இருஷிகள் ஞானதிருஷ்டியால் பார்த்து வெளியிட்டார்களேயொழிய புதிதாக மந்திரங்களைச் செய்யவில்லை. "இருஷி" என்னும் பதத்திற்கே "பார்த்தவர்" என்பது பொருள்.

39. அநாதியான வேதத்தை ஒப்புக்கொள்ளும் அதாவது பிரமாணமாகக்கொண்ட வைதிக மதங்களுக்கு "ஸநாதன தர்மம்" என்று பெயர். "ஸநாதநம்" என்றால் புராதனமான அதாவது அநாதியான, "தர்மம்" என்றால் மதம். வைதிக மதங்கள் புராதனமானவை என்பது பொருள்.

40. பண்டைக்காலத்திலே நமது தேசத்தில் தோன்றிய பேரறிஞர்கள் வேத வாக்கியங்களில் சொல்லப்பட்ட ஜீவனுக்கும் தெய்வத்திற்குமுள்ள சம்பந்தத்தைக் கொண்டு வைதிக மதத்தை அத்வைதமென்றும், த்வைதமென்றும், விசிஷ்டாத்வைதமென்றும் மூவகையாகக் கொண்டுளர்.

41. ஜீவனும் தெய்வமும் ஒன்று என்பது அத்வைதம். ஜீவன் வேறு, தெய்வம் வேறு என்பது த்வைதம். ஜீவனும் தெய்வமும் வேறுதான்: ஆனால், ஜீவனுக்குள் அந்தர்யாமியாகத் தெய்வமிருக்கிறது - ஜீவனும் தெய்வமும் பிரிவின்றியிருப்பதால் சேர்க்கையால் ஜீவனும் தெய்வமும் ஒன்று என்பது விசிஷ்டாத்வைதம். விசிஷ்டாத்வைதம் என்பது விசிஷ்ட, அத்வைதம் என்னும் இருபதங்களால் ஆய தொடர். "விசிஷ்ட" என்றால் சேர்க்கை, "அத்வைதம்" என்றால் ஒன்று. அதாவது, புஷ்பமும் மணமும்போல் ஒன்றைவிட்டு ஒன்றைப் பிரிக்க முடியாத அவ்வளவு நெருங்கிய சம்பந்தம் ஜீவனுக்கும் தெய்வத்திற்கும் இருக்கிறது என்பது பொருள்.

42. அத்வைதத்தை பிரசாரம் செய்தவர் சங்கரர். த்வைதத்தை புனருத்தாரணம் செய்தவர் மாத்வர் விசிஷ்டாத்வைதத்தைப் புனருத்தாரணம் செய்தவர் ஸ்ரீ ராமாநுசர்.

43. அத்வைத பரமான பொருள் தரும் வாக்கியங்களும் த்வைத பரமான பொருள் தரும் வாக்கியங்களும் வேதத்தின்கண் உள. அத்வைத பரமான வாக்கியங்களை முக்கியப் பிரமாணமாகக் கொண்டனர் அத்வைதிகள். த்வைத பரமான வாக்கியங்களை முக்கியப் பிரமாணமாகக் கொண்டனர் த்வைதிகள்.

44. ஆனால், வேத வாக்கியங்களனைத்தும் உண்மையானவை. ஆதலால், ஒரு பகுதிக்குமாத்திரம் ஏற்றத்தைக் கொடுப்பது பொருந்தாது. வேதத்தில் ஓர் இடத்தில் உலகமனைத்தும் இறைவனுக்கு உடம்பு என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதுதான் வேதத்தின் உண்மைப் பொருளை அறிவதற்குத் திறவுகோல். இதைக்கொண்டு த்வைத அத்வைத பரமான வேத வாக்கியங்களை நோக்குங்கால், த்வைத பரமான வாக்கியங்களுக்கு ஜீவன் தெய்வம் என்பவை இரண்டும் இயற்கையில் வேறுபட்டவை என்றும், அத்வைத பரமான வாக்கியங்களுக்கு ஜீவன் உடம்பாகவும் அதற்குத் தெய்வம்

ஆத்மாவாகவுமிருக்கும் ; சேர்க்கையால் ஒன்று என்றும் பொருள்படும். இதைத்தான் விசிஷ்டாத்வைதம் என்பது.

45. மதங்களின்கண் அமைந்துள்ள ஜீவன் தெய்வம் இவற்றின் சம்பந்தத்திற்கு ஏற்க மோக்ஷநிலையும் அதையடையும் வழியும் வேறுபடும்.

46. மதங்களனைத்தும் சுயநலமற்ற பெரியவர்களால் உலகத்தின் நன்மையையே கருதி ஏற்பட்டன. உலகத்தில் மருந்துகள் பல இருந்தபோதிலும் நோயாளி தனக்குள்ள பிணியைப் போக்கும்படியானதும் தனக்குக் கிடைக்கக்கூடியதுமான மருந்தைத்தான் சாப்பிடுவான் ; அதுபோல உலகத்தில் பல மதங்களிருப்பினும் நமது பிறவி நோயைத் தீர்க்கும்படியானதும் நம்மால் அநுஷ்டிக்கச் சாத்தியமானதுமான மதத்தை ஆராய்ந்து மேற்கொள்ளுவது இறைவன் நமக்குக் கொடுத்திருக்கும் பகுத்தறிவின் பயனாகும்.

## IV. ஸ்ரீ வைஷ்ணவம்.

47. விசிஷ்டாத்வைதத்தில், சைவ விசிஷ்டாத்வைதமென்றும் வைஷ்ணவ விசிஷ்டாத்வைதமென்றும் இருவகையுள.

48. கி. பி. ஒன்பதாவது நூற்றாண்டிலிருந்த ஸ்ரீ கண்ட சிவாச்சாரியரால் சைவ விசிஷ்டாத்வைதம் மக்களிடத்தில் பரவியது.

49. கி. பி. பதினோராவது பனிரெண்டாவது நூற்றாண்டுகளிலிருந்த ஸ்ரீ ராமாநுஜரால் வைஷ்ணவ விசிஷ்டாத்வைதம் மக்களிடத்தில் பரவியது.

50. இவ்விரண்டிற்கும் வித்தியாசம் - சைவ விசிஷ்டாத்வைதத்தில் சிவன் இறையென்றும், வைஷ்ணவ விசிஷ்

டாத்வைதத்தில் விஷ்ணு இறையென்றும் கொள்ளப்படுகிறது. மற்றப்படி இரண்டும் ஒத்துள.

**51.** வைஷ்ணவ விசிஷ்டாத்வைதமானது ஸ்ரீ ராமாநுஜருக்கு முன்பே வியாஸருடைய சிஷ்யர் போதாயனர், திரமிதாச்சாரியார், பிரம்மாநந்தி, குஹதேவர், கபர்த்தி, ஸ்ரீமந் நாதமுனிகள், யமுனைத்துறைவர் முதலிய பூர்வாச்சாரியர்களால் அநுஷ்டானத்திலிருந்து, ஸ்ரீ ராமாநுஜர் காலத்தில் தேசமெங்கும் பரவியது.

**52.** விஷ்ணுவை இறைவனாக வழிபடுபவர் வைஷ்ணவர். ஸ்ரீமத்வர், சைதன்ய ஸ்வாமிகள், ராமானந்தர், மாலுக்தாஸ், ஸ்ரீ வல்லபாச்சாரியார், மீராபாய் முதலியவர்களால் ஏற்படுத்தப்பட்ட மதங்களனைத்தும் வைஷ்ணவமே. சுமார் இருபது வைஷ்ணவ சமயங்களிருக்கின்றன. ஆனால், ஸ்ரீ ராமாநுஜரால் உபதேசிக்கப்பட்ட மதத்திற்கு "**ஸ்ரீ வைஷ்ணவம்**" என்கிற சிறப்புப் பெயர் வழங்குகிறது.

**53.** வடநாட்டில் ஸ்ரீ வைஷ்ணவத்திற்கு **ஸ்ரீ சம்பிரதாயமென்றும்**, அதை அநுஷ்டிப்பவர்களுக்கு **ஸ்ரீ சம்பிரதாயிகளென்றும்** பெயர் வழங்குகிறது.

**54.** ஸ்ரீ ராமாநுஜருக்குப்பின் கி. பி. பதின்மூன்றுவது நூற்றாண்டிலிருந்த ஸ்ரீ வேதாந்த தேசிகரும் அவரது தாயாதியார் பிள்ளைலோகாசாரியரும் கியாதிவாய்ந்தவர்கள். ஸ்ரீ வேதாந்த தேசிகர் வடமொழியில் சுமார் 117 வேதாந்த நூற்களையும், தமிழர்கள் உய்யுமாறு இரஹஸ்யத்ரயசாரம் முதலிய இரகசியங்களை (மறைபொருள்களை)யும் தேசிகப் பிரபந்தமென்னும் ஓர் பிரபந்தத்தையும் அருளிச்செய்தார். ஸ்ரீ பிள்ளை லோகாசாரியர் ஸ்ரீ வைஷ்ணவ விசிஷ்டாத்வைத சார்பாக அநேக தமிழ் நூல்களை யருளிச்செய்தார்.

**55.** ஸ்ரீ வைஷ்ணவத்தில் **வடகலை, தென்கலை** என இருவகையுள.

56. வேதம், சாஸ்திரம், ஸ்ரீ பாஷ்யம் முதலிய நூற்கள் வடமொழியிலிருக்கின்றன. அவைகளுக்கு ஏற்றங் கொடுக்கும் ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கு மொழி காரணமாக "வடகலையார்" என்று பெயராயிற்று. "வடகலை" என்பதற்கு "வடமொழி" என்று பொருள். இவர்கள் ஸ்ரீ வேதாந்த தேசிகர் அருளிச்செய்த ரஹஸ்யங்களை அநுஷ்டிக்கிறார்கள்.

57. தென்மொழியில் ஆழ்வாராதிகளால் அருளிச் செய்யப்பட்ட நாலாயிர திவ்ய பிரபந்தத்திற்கு ஏற்றங்கொடுக்கும் ஸ்ரீ வைஷ்ணவர்கள் "தென்கலையார்" என்று மொழி காரணமாக அழைக்கப்படுகிறார்கள். இவர்கள் பிள்ளை லோகாசாரியாரால் அருளிச் செய்யப்பட்ட நூற்களையும் அவைகளுக்கு கி. பி. 14-வது நூற்றாண்டிலிருந்த ஸ்ரீ மணவாள மாமுனிகளால் தமிழில் எழுதப்பட்ட வியாக்யானங்களை (விரிவுரைகளை) யும் அநுஷ்டிக்கிறார்கள்.

58. வடகலை, தென்கலை எனும் இரு பிரிவுகளின் பொதுக்கொள்கை ஒன்றாயிருப்பினும், சில சிறு வேறுபாடுகளுள. அவைகள் இப்புத்தகத்தின்கண் ஆங்காங்கு குறிக்கப்பட்டுள.

## V. பஞ்சஸம்ஸ்காரம் அல்லது ஐந்து குறிகள்.

59. எப்படி ப்ராஹ்மணக்ருத்யங்களைச் செய்வதற்கு உபநயனம் அவஸ்யமோ, அதுபோல ஸ்ரீ வைஷ்ணவத்தை யநுஷ்டிப்பதற்கு பஞ்ச சம்ஸ்காரம் அவஸ்யம்.

60. தாபம், புண்ட்ரம், நாமம், மந்த்ரம், அர்ச்சனம் ஆகிய இவை ஐந்துஞ்சேர்ந்து பஞ்ச சம்ஸ்காரம்.

61. தேசம், சாதி, ஆஸ்ரமம், ஆண், பெண் ஆகிய ஒருவிதமான வேற்றுமையுமின்றிச் சகலருக்கும் பஞ்ச ஸம்ஸ்காரம் பெற உரிமையுண்டு.

62. ஒரு இராஜசேவகன் தன்னை இன்னானென்று அறிவிக்க இராஜ சின்னங்களை அடையாளமாகப் பூணுவதுபோல இறைவனது தொண்டர்களாகிய நாம் இறைவனது சின்னங்களாகிய சங்கு சக்கரங்களை ஓமத்தில் காய்ச்சி ஆசாரியனால் தோள்களில் இறைவனது அடிமைகள் என்று காண்பிப்பதற்கு அடையாளமாக ஒற்றப்பட்டுத் தரித்துளோம். இது **தாப** மெனப்படும்.

63. இறைவனது திருப்பாத கமலங்களே நமக்குத் தஞ்சமென்று காண்பிக்க, இறைவனது திருப்பாதாக்ருதியான * ஊர்த்வ புண்டரங்களை உத்தமாங்கமான முகத்திலும் மற்றைப் பதினோரிடங்களிலும் திருமண் ஸ்ரீசூர்ணாதிகளைக் கொண்டு ஆசாரியனால் தரிக்கப்படுகிறோம். ஊர்த்வ புண்டரங்கள் தரித்துக்கொள்ளும் 12 இடங்களாவன: முகத்தில் 1, வயிற்றில் 3, மார்பில் 1, தோள்களில் 2, கழுத்தில் 3, முதுகில் 2. இவைகள் பன்னிரண்டும் கேசவ, நாராயண, மாதவ, கோவிந்த, விஷ்ணு, மதுசூதன, திரிவிக்ரம, வாமன, ஸ்ரீதர, ஹ்ருஷீகேச, பத்மநாப, தாமோதர எனும் விஷ்ணுவின் பன்னிரு நாமங்களை முறையாகக் கொண்டுள. இவ் ஊர்த்வ புண்டரங்களை யணியும்பொழுது அவ்வவ்விடத்திற்குரிய நாமங்களைச் சொல்லி அந்தந்த மூர்த்திகளை அவ்வவ்விடங்களில் ஆவாஹனம் செய்வதாக மனத்தின்கண் பதிய வைத்தல் வேண்டும். ஊர்த்வ புண்டரங்களை தேகத்தின் பல பாகங்களில் தரிப்பது நமது தேகம் இறைவன் ஆலயம் என்னும் உண்மையை விளக்கும் குறியாகும். இந்த ஊர்த்வ புண்ட

* கோயில்களில் எழுந்தருளியிருக்கும் எம்பெருமான்கள் நமக்கு இறைவனிடத்தில் பிரீதியையுண்டாக்கி நாம் உய்யுமாறு செய்கிறார்கள். ஆதலால், அவர்கள் நமக்கு ஆசாரியஸ்தானத்திலிருக்கிறார்கள். அதுகொண்டு அவர்களுக்கு ஊர்த்வபுண்டரம் சாத்தப்படுகிறது.

ரங்களைப் பிறகு தினந்தோறும் நாம் தரித்துக் கொள்ளல் வேண்டும். இதற்குப் புண்டரம் என்று பெயர்.

64. இறைவனது சம்பந்தமான திருப்பெயரை தாஸ்ய நாமத்துடன் பெறல். இது நாமம் எனப்படும்.

65. நமக்கும் இறைவனுக்குமுண்டான சேர்க்கை உபாயம், உபேயம் இவைகளின் வாசகமான திருவஷ்டாக்ஷரம், சரணாகதி மந்திரமாகிய த்வயம், சரமஸ்லோகம் எனும் இம்மூன்று மந்திரங்களையும் பொருளுடன் ஆசாரியனால் உபதேசம் பெறுதல். பிறகு இம்மூன்று மந்திரங்களையும் தினந்தோறும் மனனம் செய்தல்வேண்டும். இது மந்த்ரம் எனப்படும்.

66. நமது அடிமை சித்திப்பதற்காக இறைவனை ஆராதித்தல். இது யாகம் அல்லது அர்ச்சனம் எனப்படும்.

## VI. பிரதான பிரதி தந்திரம் அல்லது முக்கியமான சிறப்பியல்.

---

67. ஸ்ரீ வைஷ்ணவத்தில் அநேக பிரதி தந்திரங்கள் (தனிப்பட்ட கொள்கைகள்) உள. அவற்றுள் மிகவும் முக்கியமானது "உலகமனைத்தும் (சீவனும், அறிவில்லாத பிரக்ருதி முதலியவைகளும் அவைகளால் ஆக்கப்பட்டவைகளும்) இறைவனுக்கு உடல் என்பதாகும்.

68. ஏன் இது முக்கியமானதென்றால்: இதையறிந்தால் இதுவரையில் கருத்துக்குப் புலப்படாதிருந்த முற்றும் வேறுபட்ட வேதவாக்கியங்களுக்குச் சரியான பொருள் புலனாவதாலும் பல்வேறு சமயங்களிலுள்ள கொள்கைகளைக்

காணுங்கால் நமது மனம் சஞ்சலமடையாத நிலையுண்டாவதாலும் முக்கியம்.

69. இக் கொள்கை வேதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

70. இதைக்கொண்டு எல்லா வேத வாக்கியங்களுக்கும் உண்மையான கருத்தையறிவது எப்படியென்றால்: "உலகம் வேறு இறைவன் வேறு" என்கிற த்வைத பரமான வேத வாக்கியங்களுக்குச் சரீரத்தைவிட "நான்" என்கிற ஆத்மா வேறுபட்டிருப்பதைப்போல இறைவனுக்கு சரீரமாகிய ஜீவர்களும் அறிவில்லாத மற்ற வஸ்துக்களும் (அசேதனங்களும்) சரீரியாகிய இறைவனைவிட வேறுபட்டவை என்பது பொருள். "நான் பிரம்மம்" என்கிற அத்வைத பரமான வேத வாக்கியங்களுக்குச் சரீரியாகிய இறைவன் சரீரமாகிய உலகத்துடன் சேர்ந்து எப்பொழுதும் ஒன்றாயிருக்கின்றான் என்பதுபொருள். இறைவனையும் உலகத்தையும் தனியாகப் பிரிக்க முடியாது. இறைவன் ஆத்மாவாகவும் நாம் அவனுக்குச் சரீரமாகவுமிருக்கும் இருப்பு "அடியோமோடும் நின்னோடும் பிரிவின்றி யாயிரம் பல்லாண்டு" என்கிற ஆழ்வார் பாசுரத்தின்படி எப்பொழுதுமிருக்கிறது.

71. ஜீவர்களாகிய நாம் இப்பொழுது அடைந்திருக்கும் சரீரத்தைவிட்டு ஒருநாள் பிரிவது உண்மை. எதற்குப் பிறப்பு உண்டோ அதற்கு அழிவு உண்டு. சரீரம் பிறக்கிறது. ஆதலால், அது அழிகிறது. இச்சரீரம் நமக்குச் சட்டை போன்றது. பழைய உபயோகமற்ற சட்டையை நாம் நீக்கி விடுவதுபோல இச்சரீரமாகிய சட்டை உபயோகமற்ற பொழுது இதினின்று ஜீவன் நீங்குகிறான். ஆதலால், ஜீவன் எப்பொழுதும் நீங்காமல் ஒரே சரீரத்துடன் இருப்பது இயலாது. ஆனால், இறைவன் உடல்மிசை யுயிரெனக் கரந்தெங்கும் பரந்துளன். இறைவன் அநந்தன். அதாவது, இறைவன் ஒரு இடத்திலிருக்கிறான் இன்னொரு இடத்திலில்லையென்றாவது, இறைவன் ஒரு வஸ்துவில் இருக்கிறான் மற்

றொரு வஸ்துவில் இல்லையென்றாவது, இறைவன் ஒரு காலத்தி லிருந்தான் மற்றொரு காலத்திலில்லையென்றாவது சொல்ல முடியாது. இறைவன் எல்லாவிடங்களிலும், எல்லா வஸ்துக் களிலும், எல்லாக் காலங்களிலுமிருக்கிறான். ஆகையால். அவனுக்கு இடத்தாலாவது, வஸ்துவாலாவது, காலத்தா லாவது அளவு கிடையாது. ஆதலால், ஜீவர்களும் அசேத னங்களும் இறைவனுக்குச் சரீரமாகக் கூடியிருக்கும் இருப்பு எப்பொழுதுமுண்டு. அதாவது பிரளயகாலத்திலுமுண்டு.

72. "நான் பிர்மம்" என்கிற வாக்கியத்தில் "நான்" என்கிற பதத்திற்கு ஜீவனாகிய எனக்குள் அந்தர்யாமியாக (ஆத்மாவாக) விருக்கும் இறைவன் என்பதுதான் பொருள். இது எப்படி பொருந்துமென்றால்: ஒருவன் தன்னைக்குறித்து "நான் இளைத்திருக்கிறேன் - நான் பருத்திருக்கிறேன் - நான் கறுப்பன் - நான் சிகப்பன்" என்று கூறுகிறான். இளைத் திருப்பதும் பருத்திருப்பது கறுமையாகவிருப்பதும் செம்மை யாகவிருப்பதும் அவனது சரீரத்தைக் குறிக்கின்றதே தவிர "நான்" என்கிற பதம் ஜீவனைக் குறிக்கவில்லை. ஒரு வாழைப்பழத் தட்டைத் தூக்கிக்கொண்டு போகிறவனை, "ஏ, வாழைப்பழம்" என்று கூப்பிடுகிறோம். ஆனால், அவன் வாழைப்பழமல்ல, அதைத் தூக்கிக் கொண்டிருப்பவன். என் னைப் பார்த்து ஒருவர் நீர் யாரென்றால், நான் "திருக்கோவ லூர்" என்கின்றேன். ஆனால், நான் திருக்கோவலூரல்ல. திருக்கோவிலூரிலிருப்பவன். இவ்விதமாக வாழைப்பழத்தை யும் திருக்கோவலூரையும் விட்டுப் பிரியும்படியான ஒருவனை கண்ணிற்கு வேறு என்று புலனாகியும் அந்தந்த வஸ்துக்க ளுடன் ஒன்றாய்ச்சேர்த்துக் கூறுகிறோம். இந்த உடம்புடனே இப் பூமியின்கண் இருக்கும்படியான என்னை - இந்த உடம்பை விட வேறு என்று கண்ணிற்குப் புலனாகாத வென்னை இவ் வுடலுடன் சேர்த்துச் சொல்வது மிகையாகாது. அதுபோல, ஜீவனுக்கு எப்பொழுதும் ஆத்மாவாகவிருக்கிற இறைவனை ஜீவனுடன் சோதது வேதத்தில் ஒன்றாகச் சொல்லியிருக் கிறது.

73. உடம்பிற்கும் ஆத்மாவிற்கும் உள்ள லக்ஷணங்களாவையென்றால்: ஒன்றை அது உள்ளவரையில் எது தூக்குகின்றதோ, எது ஏவுகின்றதோ, எது உபயோகித்துக் கொள்ளுகின்றதோ அது அந்தப் பொருளுக்கு ஆத்மாவென்று சொல்லப்படும். தூக்கப்படுவதும், ஏவப்படுவதும், உபயோகப்படுவதுமான அந்தப் பொருள் அதற்கு உடல் என்றுச் சொல்லப்படும். இறைவன்தான் இவ்வுலகத்தை (சேதனசேதனங்களை)த் தூக்குகிறான், ஏவுகிறான், உபயோகப்படுத்திக்கொள்ளுகிறான். ஆதலால், இவ்வுலகத்திற்கு இறைவன் ஆத்மாவென்றும், இவ்வுலகம் இறைவனுக்கு உடல் என்றும் சொல்லப்படுகிறது.

74. இவ்வுடலில் " நான் " என்கிற ஜீவன் உள்ளவரையில் இவ்வுடல் ஜீவனுடைய உகப்பிற்காக வேண்டிய வேலைகளைச் செய்யக் கடமைப்பட்டிருப்பதுபோல, இறைவனுக்குச் சரீரமாகிய இந்த ஜீவன் சரீரியாகிய இறைவனது உகப்பிற்காகவே வேலைசெய்யக் கடமைப்பட்டிருக்கிறது.

75. ஜீவனுக்கு இறைவன் ஆத்மாவாகவிருக்கும் இருப்பு எப்பொழுதுமுள்ளதாகையால், நாம் இறைவனுக்கு எல்லாக்காலங்களிலும் எல்லாத் தேசங்களிலும் எல்லா அவஸ்தைகளிலும் வேலைசெய்யக் கடமைப்பட்டவர்கள்.

76. வேலைசெய்பவனைச் சேஷமென்றும், வேலையைப் பெறுகிறவனை சேஷி என்றும் வடமொழியில் கூறப்படுகிறது. ஆதலால், ஜீவன் சேஷம், இறைவன் சேஷி.

77. நமது சரீரமானது சுயநலப்பற்றின்றி, தனக்குச் சரீரியாகிய " நான் " என்கிற ஜீவனுடைய உகப்பிற்காகவே வேலைசெய்கிறது. அதுபோல, இறைவனுக்குச் சரீரமாகிய நாம் நமது நலத்தைக் கருதாமல் சரீரியாகிய இறைவனுடைய உகப்பிற்காகவே சகல வேலைகளையும் செய்தல்வேண்டும். தன்னலம் தேயத்தேய அஃதொருகால் தனது முழுநிலையை அடையும். தன்னலம் விடுத்த ஒருவன் தனது மனச்சான்று

வழியே நடப்பன். அவன் எற்றுக்கு நீதிக்கு மாறுபட்ட தீவினையை ஆற்றுவன். ஆதலால்தான் நமது நம்மாழ்வாரும் "அற்றது பற்றெனி லுற்றது வீடுயிர்" என்று கூறியுளார்.

78. நமது சரீரமிருப்பது "நான்" என்னும் சரீரியாகிய ஜீவனுக்காக. அதுபோல சரீரமாகிய ஜீவனிருப்பது சரீரியாகிய இறைவன் பொருட்டேயாம்.

79. "நான் எனக்கல்ல, உனக்காக நான்" என்கிற இந்த அறிவை "ஸ்வரூபஜ்ஞானம்" என்று சொல்வது. இதுதான் ஜீவனுடைய லக்ஷணம்.

80. இந்த ஸ்வரூபஜ்ஞானம் ஸ்ரீவைஷ்ணவத்திற்கு அடிப்படையானது. ஆதலால், இந்த ஸ்வரூபஜ்ஞானத்தை யடைவதற்கு அடிப்படையாகவுள்ள "உலகம் இறைவனுக்கு உடம்பு" என்கிற பிரதி தந்திரம் மிகவும் முக்கியமானது.

81. ஸ்வரூபஜ்ஞானம் பிறந்ததும் நாம் எம்பெருமானுக்குத் தொண்டர்களென்ற அறிவு விளங்கும். ஸ்வரூபஜ்ஞானத்தால் "நான் எனக்கு" என்றிருந்த இருப்புபோய் "உனக்காக நான்" என்கிற இருப்பு உண்டாகிறது. ஆதலால், ஒருவனுக்கு ஸ்வரூபஜ்ஞானம் சித்திக்கதும் முன்னிருந்த பழைய பிறப்பறுந்து இரண்டாவது பிறவியுண்டாகிறது "இப்படி ஐஸ்வர்யத்தில் ப்ரேமம் போய் பகவத் ப்ரேமயுக்தருடைய திரளிலே உளரான நீங்கள், 'தொண்டக்குலம்' என்று-தனியே ஒரு ஸந்தானம்போலே காணும்" என்று பெரியவாச்சான் பிள்ளை திருப்பல்லாண்டு வ்யாக்யாநத்திலே அருளிச்செய்திருக்கிறார்.

82. நாம் ஒரு பெரியாருக்குத் தொண்டு செய்யவேண்டுமென்று விரும்பினல், நாம் அவரது சரீரத்துக்குத்தான் தொண்டுசெய்ய முடியுமே தவிர சரீரியாகிய ஜீவனுக்கு நேராகத் தொண்டுசெய்ய முடியாது. நாம் சரீரத்திற்குச் செய்யும் தொண்டானது சரீரியாகிய ஜீவன் பொருட்டேயாம். அவ்

விதமாகச் சரீரத்திற்குச் செய்யும் தொண்டானது சரீரியாகிய ஜீவனுக்கு உகப்பை விளைவிக்கின்றதென்று நாம் தினந்தோறும் கண்கூடாகக் காண்கின்றோம். இன்னும் சரீரத்திற்குச் செய்யும் தொண்டானது சரீரிக்கு உகப்பை விளைவிப்பதுடன் சரீரத்திற்கும் நலத்தைச் செய்கிறது.

83. அதுபோல, நாம் இறைவனுக்குத் தொண்டுசெய்ய வேண்டுமானல் அவரது சரீரமாகிய உலகத்திற்குத்தான் தொண்டுசெய்யவேண்டும். உலகத்திற்கு நாம் செய்யும் தொண்டு சரீரியாகிய இறைவனைக் கருதியேயாம். ஆதலால், சரீரமாகிய உலகத்திற்குச் செய்யும் தொண்டு சரீரியாகிய இறைவனுக்கு உகப்பாகும். சரீரமாகிய உலகத்திற்குச் செய்யும் தொண்டு சரீரியாகிய இறைவனுக்கு உகப்பையுண்டாக்குவதுடன் சரீரமாகிய உலகத்திற்கும் நன்மையைச் செய்யும். உலகம் நன்மையையடைந்தால் உலகத்துக்குள்பட்ட நாமும் நன்மையையடையலாம். நாம் க்ஷேமமாகவிருந்தால்தான் இறைவனைப்பற்றி நினைப்பதற்கும், இறைவனுக்கு உகப்பான தொண்டு செய்வதற்கும், ஆசார்ய கைங்கரியத்திலீடுபடுவதற்கும் இயலும். தன்னலத்தைக் கடிந்து இறைவனது உகப்பிற்காகவே என்று செய்யும் ஒவ்வொரு தேசத்தொண்டும் நமது ஸ்ரீவைஷ்ணவ லக்ஷணத்திற்குப் பொருந்தியதேயாகும். நமது பூர்வாசாரியர்களும் அநுஷ்டித்திருக்கிறார்கள்.

84. நாம் தினந்தோறும் சேவிக்கும் சாத்துமறை பாசுரங்களிலே "நானிலமுந் தான்வாழ" என்று வடகலையாரும், "கடல் சூழ்ந்த மன்னுலகம் வாழ" என்று தென்கலையாரும் சேவிக்கின்றோம். ஆதலால், உலகம் வாழ்வதற்கு அவசியமாகிய தொண்டை நாம் செய்தல் வேண்டுமென்பதும் இது நம்முடைய பூர்வாசாரியர்களுடைய கொள்கை என்பதும் நன்கு புலனாகும். முற்காலத்திலே நமது நாடு செழிப்பாகவிருந்தமையால் மதம் செழித்தது. இக்காலத்திலே நமது நாடு பஞ்சப்பிணிக்கு ஆளாயிருப்பதால், மதம் க்ஷீண தசையை யடைகிறது. ஆதலால், மதம் செழிக்கத் தேசம் செழிக்கவேண்டும். தேசம் செழிக்க நாம் தேசப்பணி செய்தல்வேண்டும். தேசப்பணி இறைவன்பணியேயாகும்.

85. "சிஷ்யன் ஆசார்யனுடைய தேகத்தைப் பேணக் கடவன்" என்கிற ஸ்ரீ வசனபூஷண வாக்கியத்தினால் சிஷ்யன் ஆசாரியனது உணவிற்கு வேண்டிய சகல சாமான்களையும் கொடுத்தல்வேண்டும் என்பது புலனாகும். இவ்விதமாக ஆசாரியனுடைய கைங்கர்யத்தில் ஈடுபடுவதற்குச் சிஷ்யன் க்ஷேமமாகவிருக்கவேண்டும். உலகம் க்ஷேமமாகவிருந்தால் தான் சிஷ்யன் க்ஷேமமாகவிருக்கலாம். ஆதலால், உலக க்ஷேமத்தின்பொருட்டுச் செய்யும் தொண்டு ஆசாரிய கைங்கர்யத்திற்கு அத்தியாவசியமானது.

86. கோவில்கள் கட்டி அவைகளில் அர்ச்சைகளைப் பிரதிஷ்டை செய்வதன்மூலமாகவும் உத்ஸவாதிகள் செய்வதன்மூலமாகவும் இறைவனுக்கு ஸ்தூலமாக (சாதாரணமாக)த் தொண்டு செய்கிறோம். தேசம் நலத்துடன் வாழ்ந்தால்தான் இத் தொண்டும் செய்யமுடியும். இக்காலத்தில் தேசநிலை தடுமாறியிருப்பதினால்தான் நமது பூர்வீக பெரிய ஆலயங்களும் கிலமாகி பழுது பார்ப்பாரின்றிக் கிடக்கின்றன. எத்தனைப் பெரிய கோபுரங்களும் மண்டபங்களும் பழுதுபட்டுக் கிடக்கின்றன. இவற்றிற்கெல்லாம் காரணம் நமது தேசத்தின் வறுமையேயாம்.

87. ஆதலால், நாமெல்லோரும் தேசத்தொண்டு செய்தல்வேண்டும். சுயநலப்பற்றின்றி இறைவன்பொருட்டுச் செய்யும் தேசத்தொண்டு இறைவனது உகப்பிற்காகச் செய்யும் தொண்டேயாகும். இத் தொண்டால் இறைவன் நம்மிடத்தில் பிரீதிகொண்டு இம்மையில் சுகத்தையும் மறுமையில் மீளுதலில்லாத பேரின்பத்தையும் அளிப்பன். இது திண்ணம்.

88. திருமந்திரத்தில் ஜீவன் இறைவனுக்குத்தான் சேஷம் என்று சொல்லியிருக்கத் தேசத்தொண்டு எப்படி பொருந்துமென்றால் "சேஷம்" என்கிற பதத்திற்கு இன்னொரு வஸ்துவின் பிரயோஜனத்திற்காகவே ஏற்பட்டிருப்பவன் என்று பொருள். ஜீவன் அறிவுள்ளவனாகையால்,

இவன் இறைவனுக்கு இஷ்டமான வேலைகளையே செய்யக் கடவன். இறைவனோ நம கண்ணிற்குப் புலப்படுவதுமில்லை. நம்மோடு பேசுவதுமில்லை. ஆதலால், இறைவனுக்கு ஒரு வேலை இஷ்டமென்பதைப் பிரமாணங்களைக் கொண்டுதான் அறியலாம். அப் பிரமாணங்களாவன வேதம், அதில்லா விடத்தில் ஸ்மிருதி, இரண்டுமில்லாவிடத்தில் அநாதியான வழக்கம், சாஸ்திரத்தில் இரண்டுவிதமாய்ச் சொல்லியிருந் தால் தன்னுடைய இஷ்டம், தெளிந்த மனதுள்ளவர்களுக்குப் பண்ணலாமென்று தோன்றுகை, சாஸ்திரத்திற்கு விரோத மில்லாத பரம்பரையாய் வந்த வழக்கம், ஆபஸ்தம்பர் முதலிய சூத்ரக்காரர்களுடைய ஏற்பாடுகள், சில தேசத்தில் ஏற் படுகை, சிலகாலத்தில் ஏற்படுகை, பெரியவர்களுடைய உத்தி ரவு முதலியனவென்று ஸ்ரீ தேசிகர் ஸ்ரீ ரகஸ்யத்ரய ஸாரத் தில் சாஸ்திரீய நியமநாதிகாரத்தில் கூறியுள்ளார். தேச சேவையோ நாம் சுயநலப் பற்றின்றிச் செய்வதால் நமது சேஷத்வம் கைகூடுகிறது. தேச சேவையானது இத்தேசத் திற்கு இக்காலத்தில் முக்கியமானது. இது மிகுந்த பெரிய வர்களுடைய கட்டளையுமாகும். தேசசேவை செய்வது சாஸ்திரவிரோதமுமல்ல. ஆதலால், தேச சேவையானது எம் பெருமானுக்கு மிகவும் உகப்பையுண்டாக்குவதும் ஸ்ரீவைஷ் ணவ லக்ஷணத்திற்குப் பொருந்தியதுமாகும். ஸ்ரீவைஷ்ண வர்களாகிய நாம் சுயநலப்பற்றின்றி இறைவன் உகப்பிற்காக தேசசேவை செய்வது முக்கியமான கடமையாகும்.

89. ஸ்ரீவைஷ்ணவத்தின் கருத்து தன்னலப்பற்றின் றித் தேச சேவை செய்வது-அதாவது பொதுநலத்திற்காக உழைப்பது என்பதற்கு ஏதாவது சான்று உண்டோவெனில், பிரம்ஹாண்ட புராணத்தில் தீர்த்தகாண்டத்தில் பிருகு நாரத சம்வாதத்தில் நாராயணன் என்னும் ஓர் அந்தணர் திருவேங் கடமலையில் எம்பெருமானைக்குறித்து அருந்தவமியற்றி எம் பெருமானைச் சேவித்து தன்னைப்போல் எல்லோரும் தவ மியற்றி இறைவன் தரிசனம் பெறுவது சாத்தியப்படாதாகை யால் எல்லோருக்கும் எல்லா காலங்களிலும் அர்ச்சாரூபமாக விருந்து சேவைசாதித்து அருள்புரியல் வேண்டுமென்று வரம்

பெற்றார் என்று கூறியுள்ள சரித்திரத்தினின்று அற்றைநாளில் பெரியோர்கள் தங்கள் நலத்தையுங் கடிந்து உலக நன்மையையே விரும்பிச் செயல்கள் ஆற்றியிருக்கின்றனர் என்பது தெற்றெனவிளங்கும். ஆழ்வாராதிகளில் திருமங்கை மன்னன் தனது இறுதிநாட்களில் ஸ்ரீரங்க க்ஷேத்திரத்தில் (கோயிலில்) "பார்வானத்துறை"யிலே தன்னால் தகனம் செய்யப்படும் சகல ஜீவராசிகளுக்கும் பரமபதம் அருளவேண்டுமென்று பெரியபெருமாளைக் கேட்டு வரம்பெற்றுத் திக்கற்ற பிணங்களைத் தகனம்செய்து வந்ததாகக் குருபரம்பரா ப்ரபாவம் கூறுகிறது. இதிலிருந்து பிறருடைய நலத்துக்காக உழைப்பது ஸ்ரீவைஷ்ணவத்தின் லக்ஷணம் என்பது நன்கு புலனாகும். தவிரவும், நமது இராமாநுஜர் திருக்கோட்டியூர் நம்பிகளிடமிருந்து அதிக சிரமப்பட்டு உபதேசம் பெற்ற பெரிய திருமந்திரார்த்தத்தை தான் குருவின் ஆணையை மீறி நடப்பதால் தான் நரகம் எய்வது திண்ணம் என்று தான் அறிந்திருந்தும், தான் ஒருவன் நரகமடைந்தாலும் அநேக ஜீவராசிகள் உய்வார்கள் என்ற பரோபகார எண்ணத்தையுடையவராய் ஆசாரியனது ஆணையை மீறிச் சகலருக்கும் பெரிய திருமந்திரார்த்தத்தைத் தானம் செய்தார் என்று குருபரம்பரா ப்ரபாவத்தில் கூறியுளது. இப் பெரியோர்களெல்லாம் இறைவனுக்கு மிகவும் வேண்டியவர்கள். இவர்கள் செய்த பொது ஊழியங்களெல்லாம் எம்பெருமானுக்கு உகப்பை விளைவித்தது என்பது திண்ணம். இவர்களெல்லோரும் வீடுபெற்றார்கள் என்பதை நாமெல்லோரும் நம்புகிறோம். ஆதலால் இராமாநுஜரது தரிசனத்தைப் பின்பற்றும் நாம், அவரை பரமாசாரியனாகக் கொண்டிருக்கும் நாம் சுயநலத்தையே பற்றியிருப்பது பொருந்துமா? ஸ்ரீவைஷ்ணவர்களென்று சொல்லிக்கொள்ளும் நமக்கு இந்தப் பரந்த நோக்கமும் பரோபகார சிந்தையுமல்லவோ இருக்கவேண்டும். "தன்னுயிர்போல் மன்னுயிரைப் போற்றவேண்டும்" என்னும் ஆன்றோர் வாக்கியத்தைவிட நமது ஸ்ரீவைஷ்ணவத்தின் கொள்கை ஒருபடி மேலானதாகவல்லவோ யிருக்கிறது. கடவுள் அன்புமயமாகவிருக்கின்றார். நாமும் அன்புமயமானால் தான் அக் கடவுளை நாம் அடையமுடியும். அதனால்தான்

திருக்கோட்டியூர் நம்பிகளும் இராமாநுஜர் பெரிய திருமந்தி ரார்த்த தானத்தில் ஜீவராசிகளிடத்தில் தனக்குள்ள பேரன் பைக் காட்டியபொழுது மிகவும் உவந்து இவ்விதமாக பரோப கார சிந்தையும் கருணையும் நமக்கு உண்டாகவில்லையே என்று மிகவும் வருந்தி ஸ்ரீ ராமாநுஜரை வாழ்த்தி "எம்பெருமானே (அன்புவடிவாகிய நமது இறைவனே) நீர்" என்று அவரை அணைத்துக்கொண்டார். அதுமுதற்கொண்டு ஸ்ரீ ராமாநுஜ ருக்கு "எம்பெருமானார்" என்ற திருப்பெயர் வழங்கலாயிற்று. எப்பொழுது நமது உள்ளத்தில் அன்பு நிலவுகிறதோ அப் பொழுது எல்லா சீவராசிகளிடத்தும் சமரச நோக்கம் ஒளி றும். "சமசரம்" என்கிற பதத்திற்கு ஒருவரிடத்தும் த்வேஷமின்றி எல்லோருடைய நலத்தையும் கருதி மனம் வாக்கு காயம் ஆகிய மூன்றாலும் ஆகிய வேலையைச் செய்தல் என்பது பொருள். "சகல சீவராசிகளும் நலத்தையடைய வேண்டும். உலக நலத்திற்காக நம்மால் இயன்ற பணிசெய் தல்வேண்டும்" என்கிற நல்லெண்ணம் எப்பொழுது நமக்கு உண்டாகிறதோ அப்பொழுதுதான் நாம் உண்மை ஸ்ரீவைஷ் ணவர்களாவோம். இதனால்தான் திருக்கோட்டியூர் நம்பிகள் "பாரதந்திரியம் பிறந்தாலொழிய அர்த்த காம ராக த்வே ஷாதிகளொழியா. ராகத்வேஷாதிக ளொழிந்தாலொழிய ஸ்ரீ வைஷ்ணவத்வம் கைகூடாது" என்று 18 குட்டி ரஹஸ் யங்களில் அருளிச்செய்துள்ளார். ஆதலால், ஸ்ரீவைஷ்ணவர்க ளாகிய நாமெல்லோரும் ஒன்றை மனத்தால் நினைக்கும்பொழு தும் ஒன்றை வாயால் சொல்லும்பொழுதும் ஒன்றை கையால் செய்யும்பொழுதும் எம்பெருமானுக்கு உகப்பை விளைவிக்கும் படியான பொதுநலத்துக் குரியதாவென்று ஆய்ந்து நிகழ்த் தல்வேண்டும். இவ்விதமான நல்லெண்ணம் நமக்குத் தோன்றுமாயின் நம்முடிருக்கும் இறைவன் அதை ஆக்கி வைப்பான். ஆசாரியனருளால் இந்த நல்லெண்ணம் நமக்குத் தோன்றுக.

# VII. அர்த்த பஞ்சகம் அல்லது ஐந்து பொருள்.

---

90. இதுவரையில் சொல்லிவந்ததிலிருந்து நாம் எப்பொழுதும் இறைவனுக்குத் தொண்டர்கள் என்பது விளங்கும். இதுதான் நமது இலக்ஷணமாம். ஆனால், நாம் இப்பொழுது சுயநலப்பற்றின்றி இறைவன் தொண்டையே எப்பொழுதும் செய்ய இயலவில்லை. அடிக்கடி சுயநலம் நம்மைப் பற்றுகின்றது. நமது இலக்ஷணத்தின்படி எப்பொழுதும் இறைவனுக்குத் தொண்டர்களாகவிருக்கும் நிலைமை நாம் மோக்ஷமடைந்த பிறகுதான் கைகூடிவரும்.

91. ஸ்ரீவைஷ்ணவத்தில் திலகம்போல் விளங்கும் அர்த்தபஞ்சக ஞானமானது என்றும் நீங்காத இறைவன் பணியே செய்து நித்திய சுகத்தையடையும் வழியை விளக்குகிறது.

92. **அர்த்தபஞ்சகம்** என்னும் வடமொழிச் சொற்றொடருக்கு **ஐந்து பொருள்** என்பது பொருள்.

93. எந்த வேலையாயினும் சரி, ஒவ்வொரு வேலையிலும் ஐந்து பொருள்களுள. அவைகளாவன:—

(1) அடைகிறவன்.
(2) அடையப்படும் வஸ்து.
(3) அடைந்த வஸ்துவின் பிரயோஜனம்.
(4) அடைவதற்கு உபாயம்.
(5) அடைவதற்கு இடையூறுகள்.

94. நாம் முக்தியடைந்து இறைவனுக்கு ஒழிவிலா அடிமை செய்யும் நிலையை அடைவதற்குச் செய்யவேண்டிய வேலையிலும் இவ்வைந்து பொருள்களுள. அவையாவன:—(1) அடைகிறவன் ஜீவன், (2) அடையப்படுவது இறைவன்,

(3) அடைந்ததால் பிரயோஜனம் முடிவிலாத இன்பம், (4) அடைவதற்கு உபாயம் பக்தி அல்லது பிரபத்தி, (5) அடைவதற்கு இடையூறு சாஸ்திர விரோதமான செய்கை. இவ்வைந்து சங்கதிகளை முறையே ஸ்வஸ்வரூபம், பரஸ்வரூபம், புருஷார்த்தஸ்வரூபம், உபாயஸ்வரூபம், விரோதிஸ்வரூபம் என்று சொல்வது வழக்கம். இவ்வைந்தும் சேர்ந்தது அர்த்த பஞ்சகம் எனப்படும். நாம் உய்வதற்கு அர்த்த பஞ்சக ஞானத்தை தெளிவாக அடைதல்வேண்டும்.

95. ஸ்வஸ்வரூபம்:—ஒரு வஸ்துவை மற்ற வஸ்துக்களைவிட வேறு என்று காட்டக்கூடியதும், அவ்வஸ்துவினிடம் எப்பொழுதும் இருக்கக்கூடியதுமான விஷயங்களுக்கு ஸ்வரூபநிரூபகங்கள் என்று வடமொழியில் பெயர். ஸ்வ(தன்னுடைய அதாவது அடைகிறவனாகிய ஜீவனுடைய)ஸ்வரூப நிரூபங்கள் ஐந்து (i) அணுத்வம் - மிக சிறியது. ஒரு மயிரின் நுனியை நூறு பங்காக்கி அதில் ஒரு பங்கை நூறு பங்காக்கினால் எவ்வளவு சிறியதாகவிருக்குமோ அவ்வளவு சிறியது ஜீவன். (ii) ஞானத்வம் - அறிவுள்ளவன். நாம் கர்மத்தால் கட்டுப்பட்டிருப்பதால் இப்பொழுது நமது அறிவு சுருங்கியிருக்கிறது. கர்மத்திலிருந்து விடுபட்டு மோக்ஷத்தையடையும்பொழுது நமது அறிவு விரிகிறது. (iii) ஆனந்தத்வம் - தனக்குத்தான் இன்பமாயிருப்பவன். ஜீவனை உள்ளபடி பார்ப்பது மிகவும் இன்பமாயிருக்கும். நாம் அயர்ந்து தூங்கினால் "சுகமாகவிருந்தது" என்று சொல்லுகிறோம். அயர்ந்து தூங்கும்பொழுது மனதானது அடங்கி ஜீவனிடத்தில் லயமாகிறது. ஆதலால், அப்பொழுது இன்ப நுகர்ச்சியுண்டாகிறது. மனதை ஜீவனிடத்திலேயே லயிக்கச் செய்யும் கைவல்யத்தில் இன்பத்தை நுகர்கின்றோம். ஆதலால், ஜீவன் ஆனந்தன். (iv) அமலத்வம் - சுபாவத்தில் ஒரு குற்றமுமில்லாதவன். ஆனால், நாம் எம்பெருமானுக்கு இஷ்டமில்லாதவைகளைச் செய்ததின் காரணமாக இப்பொழுது குற்றமுள்ளவர்களாகவிருக்கிறோம். மோக்ஷமடைந்ததும் நமக்கு அமலத்வம் கைகூடும். (v) சேஷத்வம் - இறைவன் நமக்கு ஆதாரமாக நமக்குள் ஆத்மாவாகவிருக்கின்றான். ஆதலால், இறை

வனுக்கு ஜீவன் சரீரமாகின்றான்: சரீரமானது தனக்கென்றில்லாமல் சரீரியினுடைய உகப்பிற்காகவே சகல வேலைகளையும் செய்கின்றதுபோல இறைவனது சரீரமாகிய ஜீவன் தனது ஆத்மாவாகிய இறைவன் உகப்பிற்காகவே மனோ வாக்கு காயங்களாலாகிய வேலைகளைச் செய்யவேண்டியவனாக விருக்கின்றான்.

96. நாம் இப்பொழுது குற்றமுள்ளவர்களாகவிருப்பதும் இறைவனுக்கு ஒழிவிலா அடிமை செய்ய இயலாதவர்களாகவிருப்பதும் நமது இயற்கைக்குப் புறம்பானவை. நாம் குற்றமற்றவர்களாய் எம்பெருமானுக்கு நித்தியத் தொண்டர்களாகவிருக்கும் நிலையையடைய முயற்சிப்பது நாம் மானிடராகப் பிறந்ததின் பயனாகும்.

97. பரஸ்வரூபம் - பர(அடையப்படும் இறைவனுடைய)ஸ்வரூபநிரூபங்கள் ஐந்து. (i) ஸத்யத்வம் - ஒரு விகாரமுமின்மை. மண்ணிலிருந்து சட்டிசெய்கின்றோம். சட்டி உடைந்தால் பிறகு மண்ணாகிறது. அதுபோலன்றி இறைவன் எப்பொழுதும் ஒரேவிதமாக எவ்வித மாறுதலுமின்றி யிருக்கின்றான் (ii) ஞானத்வம் - எப்பொழுதும் பரந்த அறிவையுடையவன். (iii) அநந்தத்வம் - இறைவன் எல்லா இடங்களிலும், எல்லா வஸ்துக்களிலும், எல்லா காலங்களிலும் இருக்கிறான். அவனுக்கு இடத்தாலும் வஸ்துவாலும் காலத்தாலும் அளவு கிடையாது. (iv) ஆனந்தத்வம் - எல்லையற்ற சுகமாகவிருக்கை. இறைவனை அனுபவிப்பது எல்லையற்ற சுகத்தைத்தரும். (v) அமலத்வம் - வெளிச்சத்தைத் தரும் சூரியனிடத்தில் இருட்டு அடையமாட்டாததுபோல சர்வ குற்றங்களையும் போக்கும் இறைவனிடத்தில் எக்குற்றமுமணுகாது.

98. இவ்வித கல்யாண குணங்களையுடைய ஈசுரனுக்கு உடம்புகள் ஐந்து விதங்கள். அவையாவன:—(i) பரம் - பரமபதம் என்னும் ஸ்ரீ வைகுண்டத்திலேயிருக்கும் ஆதியஞ்சோதியுருவான பரவாசுதேவர், (ii) வியூஹம் -

பரவாசுதேவனுடைய உருவத்திலிருந்து பிரிந்தவை. வியூகங்கள் வாசுதேவன், ஸங்கர்ஷணன், ப்ரத்யும்நன், அநிருத்தன் என நான்கு உள. பாற்கடலில் (North Pole) பள்ளிகொண்டிருக்கும் கோலம் வாசுதேவன் எனப்படும். உருத்திரனுக்கு அந்தர்யாமியாகவிருந்து அழிக்குந் தொழிலைச் செய்பவன் ஸங்கர்ஷணன். பிரம்மாவிற்கு அந்தர்யாமியாகவிருந்து படைக்குந் தொழிலைச் செய்பவன் ப்ரத்யும்நன். காப்பாற்றுந் தொழிலை அநிருத்தனாகவிருந்து செய்கின்றார். அநிருத்தனைத் தான் விஷ்ணு என்று சொல்லுவது வழக்கம். ஸ்ரீமந் நாராயணனே பிரம்ம ருத்திரேந்திராதிகளின் இருதயகமலங்களிலே அந்தர்யாமியாகவிருந்து அவரவர்களின் தொழிலைச் செய்கின்றார் என்பது ஸ்ரீ வைஷ்ணவர்களுடைய கொள்கை.

(iii) விபவம் - ராமகிருஷ்ணாதி அவதாரங்கள். ஆசாரிய புருஷர்களும் விபவாவதாரங்களென்று சொல்லப்படுகின்றனர்.

(iv) ஹார்த்தன் எல்லாருடைய இருதயங்களிலும் கட்டைவிரல் பருமனாக எழுந்தருளியிருக்கும் இறைவனது உருவம். இவ்வுருவம் ஸ்வரூபவ்யாப்தி (ஆத்மாவுக்குள் நிறைந்திருத்தல்) எனவும், "உள்ளுவாருள்ளத்தெல்லாம் உடனிருந்தறிதி" என்ற திருமாலைப் பாசுரத்தின்படி பாகவதர்களுடைய திருவுள்ளத்தில் லக்ஷ்மீசமேதராய் எழுந்தருளியிருக்கும் இருப்பாகிய விக்ரஹவ்யாப்தி எனவும் இருவகைப்படும். ஸ்வரூபவ்யாப்தி எல்லோருடைய இருதயங்களிலும் உண்டு. விக்ரஹவ்யாப்தி பக்தர்களுடைய இருதயங்களில் மாத்திரம் ஒளிரும்.

(v) அர்ச்சை - பர, வியூஹ ரூபங்களை நாம் பார்க்கமுடியாது. விபவ ரூபங்களையும் அவதார காலங்களிலிருந்தவர்கள் தான் பார்த்தார்கள். ஹார்த்தன் தியானஞ்செய்யும் யோகிகளுக்குத்தான் தரிசனந் தருவன். நம்போன்றவர்களுக்கு அதிசுலபமாக இறைவன் அர்ச்சாவதாரத்தில் காட்சி தருகின்றான். தனக்கென்று ஒரு உருவமும் ஒரு பெயரும் இல்லாமல் பாகவதர்கள் உகந்த வடிவே வடிவாகவும், அவர்களிட்ட பெயரே பெயராகவும், சர்வத்தையும் அறிந்தவனாய் (சர்வஜ்ஞனாய்) இருந்தும் ஒன்றும் அறியாதவனை (அஜ்ஞனை)ப்போலும் குறைவற்றவனாயிருந்தும் குறைவுள்ளவன்போலும் கண்ணில்லமை யாருடி நம் கண்களுக்கு விஷயமாம்படி தேச கால

அவதி அன்றிக்கே கோயில்களிலும் இல்லங்களிலும் அர்ச்ச கர்களுடைய சுவாதீனமாக வெழுந்தருளியிருக்கும் நிலை அர்ச்சாவதாரம் எனப்படும். சிலவுருவங்களை ஈசுரன்தானே அமைத்துக்கொண்டு சேவை சாதிப்பதுமுண்டு. அவைக ளுக்கு **ஸ்வயம் வியக்தம்** என்று பெயர்.

99. முற்காலத்திலிருந்த மஹான்கள் இறைவனைக் குறித்துத் தபசு செய்து இறைவனுடைய தரிசனத்தைப் பெற்ருர்கள். தாங்களடைந்த இன்பத்தைத் தங்களுக்குப் பின்வருபவரும் அடையவேண்டுமென்ற நல்ல நோக்கத் துடன் “இப்புவியின்கண் தங்களுக்கு சேவை சாதிக்க உரு வத்துடன் அர்ச்சையாக எழுந்தருளிச் சகல ஆத்மாக்களையும் உய்விக்கவேண்டும்” என்று இறைவனை வேண்டிக்கொள்ள, அவர்களுடைய விருப்பத்தை நிறைவேற்றும்பொருட்டுத் திருப்பதிகளில் அர்ச்சாரூபமாகவெழுந்தருளிச் சகலரும் உய் யும் வண்ணம் இறைவன் இப்பொழுதும் சேவை சாதிக்கின் ருன். மந்திரங்களில் சக்தி இருப்பதைப்போல் அர்ச்சைகளி லும் பூர்ணசக்தியுண்டு. அர்ச்சாரூபமாகவிருக்கும் இறைவனை நாம் பீடம் முதல் முடிவரையில் சேவித்தால் ஐந்து மஹா பாதகங்களும் போய்விடுமென்றும், நாம் யுக்தியால் ஒன்றை கண்டுபிடிக்கும்பொழுதும் புத்தகங்களை வாசிக்கும்பொழுதும் உண்மையான சங்கதி தோன்றுவதுபோல் அர்ச்சா ரூபமாக விருக்கும் இறைவனை வணங்கும்பொழுது இறைவனைப் பற் றிய உண்மையான நிலை நமக்குத் தெரியுமென்றும், நாம் அர்ச்சாரூபமான எம்பெருமானுக்கு பதிவிரதை தன் கணவ னுக்குப்போலவும், சிஷ்யன் ஆசாரியனுக்குப் போலவும், நண் பன் தன் நண்பனுக்குப்போலவும் அன்புடனும், சிறுபிள்ளை யான மஹாராஜாவுக்கும், மதம்பிடித்த யானைக்கும், மாப்பிள் ளைக்குப்போல பயந்தும் சகலஉபசாரங்களையும் செய்யவேண்டு மென்றும் ஸ்ரீ தேசிகர் ஸ்ரீ ரஹஸ்யத்ரயசாரத்தில் உத்திர கிருத்தியாதிகாரத்தில் கூறியுள்ளார்.

100. தவிரவும், ஸ்ரீ பிள்ளை லோகாசாரியார் “தாக விடாய் உள்ளவனுக்கு மேகத்திலுள்ள நீர் நினைத்தவுடன்

பிரயோஜனப் படாததைப்போல் நித்யமுக்தர்களுக்குமாத்தி ரம் சேவ்யமான பரரூபமென்றும், பாற்கடலிலுள்ள நீரை அடையமுடியாததைப்போல் தேவர்களுக்கு மாத்திரம் சேவ்யமான வியூகரூபமென்றும், காலபேதத்தால் அடையக் கூடாத ஆற்றுப் பிரவாகநீர்போல அவதாரகாலங்களிலிருந்த வர்களுக்குமாத்திரம் சேவ்யமான விபவாவதாரமென்றும், இருந்த இடத்திலிருப்பினும் குந்தாலிகொண்டு தோண்டாமல் அடையமுடியாத ஊற்று நீரைப்போல யோகாப்யாஸிகளாலன்றி அடையமுடியாத ஹார்த்தரூபமென்றும், விடாயைத் தீர்த்துக் கொள்ள நினைத்தவுடன் பிரயோஜனப்படும் ஆற்றுமடுக்களி லுள்ள தேக்கங்களைப்போல நாம் நினைத்தவுடன் அடைய முடிவதான அர்ச்சாவதாரமென்றும்" ஸ்ரீ வசனபூஷணத்தி லும் "அர்ச்சையாகவிருக்கும் இறைவன் நேத்ரதானம், புத்ர தானம், முதலாக மோக்ஷம்வரையில் தன்னை சேவிப்பவர் களுக்கு அருளுவர்" என்று தத்வத்ரயத்திலும் கூறியுளார்.

101. ஒருவன் தேசாந்திரம் சென்றிருக்கும்பொழுது அவனது புகைப்படத்தைப் பார்த்து அவனுடைய பந்துமித் திரர்கள் ஆறுதல் அடைகிறார்கள். ஆனால், அப் புகைப்படம் அவனாகாது. அது அவனுடைய உருவத்தை மாத்திரம் காண் பிக்கின்றதே தவிர அவனுடைய ஜீவன் அதற்குள் இல்லை. அதுபோல அர்ச்சாரூபமும் இறைவனுடைய அடையாள மாக அமைக்கப்பட்ட ஒரு வெறும் உருவமேயன்றி அதற் குள் இறைவன் இல்லை என்பது சிலருடைய கருத்தாகும். இது தப்பான அபிப்பிராயம் ஆகும். ஜீவன் வியாபகனல்லன். இறைவனோ எங்கும் வியாபி. இறைவனில்லாதவிடமே கிடை யாது. ஆதலால், அர்ச்சாரூபங்களில் இறைவன் எப்பொழு தும் சாந்நித்யமாகவிருக்கின்றான். அர்ச்சையை வணங்குவது இறைவனை நேரே வணங்கினதேயாகும். இது பரந்த நோக் கத்துடன் செய்யும்படியான இறைவழிபாடாகுமேயன்றி தாழ்ந்தபடியான இறைவழிபாடு ஆகாது.

102. அடையவேண்டிய இறைவனிடத்தில் அன்பும் நம்பிக்கையும் உண்டாவதற்கு ஈசுரன் கீழ்கண்ட குண ;

களையுடையவனென்று நினைக்தல் வேண்டும் - (1) கிருபா ஸ்வரூபியான ஸ்ரீ மஹாலக்ஷ்மியுடன் எப்பொழுதும் கூடியிருப்பவன் (2) அகிலஹேயப்ரத்யனீகன் - எல்லா குற்றங்களுக்கும் எதிர்தட்டானவன் (3) அளவிலாகல்யாணகுணங்களையுடையவன் (4) அளவில்லாத அழகுள்ளதும் கண்டவுடன் சர்வ பாபங்களையும் போக்குவதுமான அழிவில்லாத (அப்ராக்ருத அதாவது மாறும் தன்மையுள்ள பிரகிருதி சம்பந்தமில்லாத) தேகத்தையுடையவன் (5) சர்வ சேஷி - சகலருடைய கைங்கர்யத்தைப் பெறுவதற்குரியவன் (6) சர்வ ரக்ஷகன் - சகலரையும் காப்பாற்றுபவன். (7) ஆஸ்ரிதபாரதந்திரியன் - ஆசிரிப்பவர்களுக்கு வினியோகப்படுபவன்.

103. புருஷார்த்த ஸ்வரூபம் - புருஷார்த்தங்கள் ஐவகைப்படும். (i) தர்மம் - பிராணிகளுடைய சுகத்திற்காகச் செய்யப்படும் யக்ஞாதி தொழில்கள் தர்மம் எனப்படும். (ii) அர்த்தம் - குலாசாரப்படி உழைத்து ஊதியம் சம்பாதித்துத் தேவதைகள், பித்ருக்கள், பிராணிகள் பொருட்டுச் செலவிடுகை அர்த்தம் எனப்படும். (iii) காமம் - இகலோக, பரலோக காமங்கள் என இருவகையுள. இகலோக காமமாவது மண், பெண், பொன் ஆகிய இவற்றால் வரும் சுகம். இவ்வுலகத்திற்கு மேற்பட்டதும் எப்பொழுதும் வெளிச்சமாகவிருப்பதுமான சுவர்க்காதி லோகங்களிலே சென்று புண்ணியம் நசிக்கிறவரையில் பசி, தாகம், சோகம், மோகம், கிழத்தனம், மரணம் இவைகள் இல்லாமல் அம்ருதபானம்பண்ணி தேவ மாதர்களுடன் கேளீவிலாசத்துடன் கூடியிருக்கு மிருப்பு பரலோக காமம் எனப்படும். அவரவர்செய்த புண்ணியத்திற்குத்தகுந்த சுகத்தைப் பரலோகத்திலடைந்து புண்ணியம் நசிக்க பிறகு பூமியிலே திரும்பி பிறப்பார், (iv) மோக்ஷத்தை ஆத்மானுபவமென்றும், பகவதனுபவமென்றும ஸ்ரீ பிள்ளை லோகாசாரியார் இருபிரிவாகப் பிரித்துள்ளார். ஆத்மானுபவம் ஜீவனை உள்ளபடி பார்ப்பது மிக சுகமாகவிருக்கும். இது கைவல்லியம் எனப்படும். இதைச் சிலர் மோக்ஷமென்கிறார்கள். இது தெய்வத்தை யடைவதற்கு இடைஞ்சலாகவிருப்பதால் இது மோக்ஷமா

காது. (v) பகவதனுபவம் - இது நமது கர்மம் கழிந்து பிறப்பு இறப்புக்களினின்று விடுவிக்கப்பட்டு நீங்குதலில்லாத ஆனந்தமயமான திருமாமணி மண்டபத்தையடைந்து தேவர் குழாங்கள் கைதொழ சோதிவெள்ளத்தினுள்ளே எழுந்தருளி யிருக்கிற பரவாசுதேவனை நித்தியம் நீங்காமல் அனுபவித்து அவனுக்குத் தொண்டுசெய்து கிடத்தல் ஆகும்.

104. இவைகளுள் கடைசியில் சொல்லப்பட்ட பகவ தனுபவமாகிய மோக்ஷந்தான் எல்லையில்லாத நித்யசுகத்திற்கு உகந்த பரம புருஷார்த்தமாகும். இதைத்தான் நாம் அடைய வேண்டும்.

105. உபாயஸ்வரூபம் - உபாயங்கள் ஐவகையுள. (i) கர்மயோகம் - சாஸ்திரத்தைக்கொண்டு இறைவனுடைய ஸ்வரூபத்தையும் தன்னுடைய ஸ்வரூபத்தையும் அறிந்து தனது விருப்பம் நிறைவேறும்வரையில் செய்யும்வேலை கர்ம யோகம் எனப்படும். யாகம், தபோத்யான ஸந்தியாவந்தனாதி கள், பஞ்சமகாயக்ஞங்கள் இவைகள் அனைத்தும் கர்மயோகத் தைச் சேர்ந்தவை. தபோத்யானாதிகளாலும் விரதமனுஷ் டிப்பதாலும் புண்ணிய தீர்த்த ஸ்நானத்தாலும் நமது பாபம் ஒழியும். பாபம் ஒழிந்தால் சாத்வீககுணம் உண்டாகும். தனக்குரிய வேதசாகையை ஓதுதலாகிய பிரஹ்மயக்ஞம், ஓமம் செய்தலாகிய தேவயக்ஞம், தர்பணம் செய்தலாகிய பிதுர்யக்ஞம், அதிதி பூஜை (புதிதாக வந்தவனும் வந்த ஊரில் பந்துக்களில்லாதவனுமாகிய மனிதனுக்கு அன்னமிடல்) செய்தலாகிய மனுஷ்யயக்ஞம், காகம் முதலிய ஜந்துக்களுக்கு அன்னமிடலாகிய பூதயக்ஞம் ஆகிய இவ்வைந்தும் பஞ்ச மஹாயக்ஞங்கள் எனப்படும். இவைகளை தினந்தோறும் செய்வதால், குத்தல், புடைத்தல், கொழித்தல் முதலிய நித் திய கர்மங்களில் அறியாமல் நம்மால் செய்யப்படும் ஜீவ இம் சையால் ஏற்படும் பாபம் தொலையும். யக்ஞங்களைச் செய்வ தற்கு பணம் சம்பாதிக்கவேண்டும். யக்ஞங்கள் பகவா னுடைய பிரீதிக்காகவென்று நினைத்து அவைகளுக்காக வேண்டிய பணத்தைச் சம்பாதிக்கச் செய்யும் கர்மத்தால்

(வேலையால்) பந்தம் (கட்டு) உண்டாகாது. எலலாம் இறைவனுடைய ப்ரீதிக்காகவென்று சாஸ்திரங்களில் விதிக்கப்பட்ட கர்மங்களை நான், எனது (நான் செய்கின்றேன், வேலை என்னுடையது) என்னும் குற்றங்களற்று செய்துவந்தால், ரஜஸ்ஸு தமஸ்ஸு என்னும் குணங்கள் ஒழிந்து சத்வகுணம் மேலிடும். அப்பொழுது பத்து இந்திரியங்களும் அடங்கி மனம் ஒருமைப்படும். மனம் ஒருமைப்பட்டால்தான் ஞானயோகம் கைகூடும். ஞானயோகத்திற்கு அடிப்படையாக இருப்பது கர்மயோகமாகும். கர்மயோகமின்றி ஞானயோகம் கைகூடாது. ஆனால், கர்மயோகத்தில் ஆத்மாவைப் பற்றிய நினைவு இருப்பதால் கர்மயோகத்தை மாத்திரம் கொண்டு ஞானயோகத்தின் பலனை அடையலாம்.

(ii) ஞானயோகம் - தனது (ஜீவ) ஸ்வரூபத்தை இடைவிடாமல் நினைக்கை ஞானயோகம் எனப்படும். தனது ஸ்வரூபத்தை தியானம் செய்வதில் நான்கு படிகளுள. (1) விஷயங்களில் தனது மனம் செல்லுமென்று பயந்து தனித்த இடத்திற்குச் சென்று தியானத்தில் பழகுவது முதல் படி. (2) இருந்தவிடத்தி லிருந்துகொண்டு சந்தோஷத்தையும் துக்கத்தையும் ப்ரயத்தனப்பட்டுத் தடுத்து மனதைத் தியானத்தில் செலுத்துவது இரண்டாவது படி. (3) விஷயங்களால் வரும் சுகதுக்கங்களைப் பொருட்படுத்தாமல் தியானத்தில் நிலைத்திருப்பது மூன்றாவது படி. (4) விஷயங்களை தெரியாதிருப்பது நான்காவது படி. சுகதுக்கங்களில் கவலையற்றவனும், பணத்தையும் ஓட்டாஞ்சல்லியையும் சமமாக நினைப்பவனும், சிநேகிதன் பகைவன் என்கிற பாகுபாடு இல்லாதவனுமாகியவன்தான் தியானத்திற்குரியவன்.

இந்த யோகம், யமம், நியமம், ஆஸனம், ப்ராணாயாமம், ப்ரத்யாஹாரம், தாரணை, தியானம், சமாதி எனும் எண்வகை யங்கங்கள் கொண்டது. ப்ரம்மச்சர்யம், அஹிம்சை, பொன் திருடாமை, பொய் கூறாமை, துஷ்ட பதார்த்தங்களை அங்கீகரியாமை ஆகிய இவை ஐந்தும் யமம் எனப்படும். வேதம் ஓதுதல், சௌசம் (மனசுத்தி, திரேகசுத்தி), கிடைத்தமட்

டில் திருப்தி, உபவாஸங்கள், ப்ரம்மநிஷ்டை ஆகிய இவைகள் நியமம் எனப்படும். யோகம் செய்யும்பொழுது மனது சஞ்சலமற்றிருக்கும்படியாக உட்கார்தல் **ஆஸனம்** எனப்படும். சாதாரணமாகப் பத்மாஸனம், சித்தாஸனம் ஆகிய இவ்விரண்டையும் யோகிகள் கையாளுகிறார்கள். மூச்சை வெளிவிடும் (ரேசகம்), உள்ளிழுக்தும் (பூரகம்), அடக்கியும் (கும்பகம்), உடம்பிலுள்ள அழுக்கைப் போக்குவது **பிராணாயாமம்** எனப்படும். வெளியில் திரியும் மனதை உள்ளிழுத்தல் **பிரத்யாஹாரம்** எனப்படும். உள்ளிழுக்கப்பட்ட மனதைத் தியானத்தில் நிறுத்துவது **தாரணை** எனப்படும். நிறுத்தப்பட்ட மனது அதிலேயே நீடித்திருப்பது **தியானம்** எனப்படும். இந்த தியானம் கனித்து நிற்பது **ஸமாதி** எனப்படும். இந்தப்படி தனது ஜீவ ஸ்வரூபத்தைப் பார்ப்பது மிகவும் ஆனந்தமாக விருக்கும். ஒருவிதமான கஷ்டமும் தனக்குத் தெரியாது. ஆனால், இந்தச் சுகமானது இறைவனைத் தியானம் செய்வதால் வரும் சுகத்தைக்காட்டிலும் மிகவும் அல்பமானது. இறைவனை அடைய விரும்புகிறவன் ஆத்மானுபவத்தில் (தனது ஜீவ ஸ்வரூபத்தைக் காண்பதில்) வீணே காலத்தைப் போக்காமல் பக்தி யோகத்திற்கு விரைந்து செல்லுவான். இந்த ஞானயோகத்தைக்கொண்டு கைவல்யம் என்கிற ஆத்மானுபவத்தையடையலாமே தவிர மோக்ஷத்தைப் பக்தியோகத்தைக் கொண்டல்லாமல் அடைய முடியாது.

(iii) **பக்தியோகம்** - இறைவனைத் தனது ஆத்மாவிற்கு அந்தர்யாமியாகக்கொண்டு எல்லா இலக்ஷணங்களும் பொருந்திய திருமேனியுடனும் சகல கல்யாண குணங்களுடனும் இடைவிடாமல் நினைப்பது (தியானிப்பது) பக்தியோகம் எனப்படும். இந்த யோகம் மூன்று அங்கங்களைக் கொண்டுளது. (1) நல்லோரிணக்கத்தால் ஈசுரனுடைய ஸ்வரூபத்தை உள்ளபடி அறியவேண்டுமென்கிற ஆசை ஏற்பட்டதனால் இறைவனிடத்தில் வந்த பிரீதி **பக்தி** எனப்படும். (2) பிறகு, அவன் சாஸ்திரத்தாலும் நல்ல ஆசாரியனுடைய உபதேசத்தாலும் இறைவனை உள்ளபடி அறிந்து இறைவனைத் தனக்குள் அந்தர்யாமியாகக் கொண்டு தியானம் செய்வன்.

இப்படித் தியானம் செய்தால் இறைவனைப் பார்க்கவேண்டுமென்ற ஆசையுண்டாகும். பிறகு மிகவும் வருத்தப்பட்டு அழுது கூப்பிடுவன். அப்பொழுது, இறைவன் தன்னைப் பக்தனுக்குப் பூர்ண ஸ்வரூபத்துடன் காட்டிக்கொடுப்பன். இப்படி இறைவனைப் பார்ப்பதற்குப் **பரஞானம்** எனப்படும். (3) பிறகு எப்பொழுதும் இறைவனை அனுபவித்துக்கொண்டு இறைவனிடத்திலேயே இருக்க வேண்டுமென்ற ஆசை மேலிட்டு இறைவனை ஆணையிட்டுக் கூப்பிடுவன். இதற்கு **பரமபக்தி** என்று பெயர்.

இவ்விதமாக இறைவனை நினைக்கும்பொழுது அளவில்லாத பிரீதியும் கண்ணால் நேரில் பார்ப்பது போன்ற தெளிவுமிருக்கும். வேறு எண்ணம் கலவாமல் தைலதாரா அவிச்சின்னமாக (எண்ணெயைத் தூக்கிவிட்டால் ஒரே கம்பியாய் விழுவதைப்போல்) இறைவனைக் குறித்து ஒரே நினைவாகவிருக்கவேண்டும். மோக்ஷமடையும்வரையில் பக்தியோகத்தைச் செய்யவேண்டும். ஆரம்பத்தில் தியானம் கொஞ்சம் நேரந்தானிருக்கும். பிறகு பழகப்பழக தியானம் நீடித்து வருஷக்கணக்காக நிற்கும். வால்மீகரிஷி தியானத்திலிருந்தபொழுது அவர் உடம்பில் புற்றுகூட வளர்ந்ததாகச் சொல்லுகிறார்கள். இந்தத் தியானத்தின் பலத்தால் உயிர் உடலைவிட்டு அகலும்பொழுது பத்து இந்திரியங்களும் அடங்கி மனது மாத்திரம் தனித்து தியானத்திலேயே இருக்கும். இதற்கு அந்திமஸ்மிருதி (கடைசியில் வருகிற நினைவு) என்று பெயர். இவ்விதம் நேர்ந்தால்தான் மோக்ஷமுண்டு.

**(iv) பிரபத்தி** - பக்தியோகத்தால்தான் மோக்ஷத்தையடையலாம் என்று மேலே கூறப்பட்டது. பக்தியோகத்தில் ஆத்மாவுடன் ஆத்மாவுக்கு அந்தர்யாமியாக இறைவனைத் தியானிக்க வேண்டுமென்று சொல்லப்பட்டது. ஆதலால், பக்தியோகத்திற்குமுன் ஆத்மாவை உள்ளபடி அறிதல்வேண்டும். ஆத்மாவை உள்ளபடியறிவதற்கு ஞானயோகம் அவசியமானது. ஞானயோகத்தையடைய கர்மயோகம் அவசியமானது. கர்மயோகத்தில் யக்ஞாதிகள் செய்யவேண்டியிருத்த

லால், அதற்கு அதிகாரமுடைய த்வஜனாக (இருபிறப்பாளனாக) பிறக்கவேண்டும். ஆதலால் பக்திக்குப் பிறப்பால் கட்டுப்பாடு இருக்கிறது. எல்லா ஜாதியாரும்செய்யத்தகுந்தது பிரபத்தி (கெஞ்சிக் கேட்டுக்கொள்ளுதல்) ஒன்றேயாம். இதைப் பக்தி யோகம் செய்யச் சக்தியற்றவர்கள் அனைவரும் எந்த ஜாதியில் பிறந்தவராயினும் செய்யலாம். பிரபத்தி என்பது நினைவு தான். இதை உக்தி (சொல்மாத்திரத்தில்) நிஷ்டை என்று சொல்லப்படுகிறது. இதை ஒருதடவை மனப்பூர்வகமாகச் செய்தால்போதும். இது சீக்கிரமாக ஒரே ஜன்மத்தில் பலனளிப்பதாகும். தன்னுடைய தற்கால நிலைமைக்கு மிகவும் வருந்தி உய்விக்குமாறு இறைவனைக் கெஞ்சிக் கேட்டுக்கொள்பவனை இறைவன் கட்டாயம் ஆட்கொள்ளுவான். பிரபத்தியைப்பற்றி விரிவாக 11-வது அதிகாரத்தில் கூறப்படும்.

(v) ஆசார்யநிஷ்டை - கர்ம, ஞான, பக்தி, பிரபத்தி இவைகளில் ஒன்றையும் ஆசரிக்க முடியாதவனுக்கு ஆசாரிய நிஷ்டை ஏற்பட்டது. முலையுண்ணும் சிறு குழந்தை நோய்ப் பட்டால் அதனுடைய தாய் மருந்துண்டு பத்தியமிருப்பதைப் போல ஆசாரியன் தன்னுடைய சிஷ்யன் படும் கஷ்டத்தைப் பார்த்து தான் வருந்தி இறைவனிடத்தில் அவனைக்காப் பாற்றும்படியாகக் கெஞ்சிக்கேட்டுக்கொள்ளுவான். ஆசாரியன் இறைவனுடைய ஸ்வரூபங்களை நன்கு அறிந்தவனாகவும் இறைவனுக்கு மிகவும் வேண்டியவனாகவுமிருக்க வேண்டும். இவ்விதமான யோக்கியதை ஆசாரியனுக்கு இல்லாவிட்டால், மண் குதிரையை நம்பி ஆற்றில் இறங்கின கதையாக ஆசார்ய நிஷ்டை முடியும். ஆசாரிய நிஷ்டையிலே ஆசாரியனுக்காகவே சிஷ்யனுக்கு பகவான் மோக்ஷம் கொடுப்பதால், சிஷ்யனுடைய குணம் அவசியமில்லை. சிஷ்யன் ஆசாரியனுடைய கட்டளைப்பிரகாரம் நடத்தல் ஒன்றே போதுமானது.

இது வரையில் கூறியதிலிருந்து பிரபத்தி உபாயமானது சாலச்சிறந்தது என்பது விளங்கும்.

106. விரோதி ஸ்வரூபம் - ஜீவர்கள் இறைவனால் ஏற்படுத்தப்பட்ட சாஸ்திரங்களுக்கு விரோதமாய் நடந்தமையால்,

இறைவன் கோபமடைந்து * பாபத்திற்கு ஏற்றவாறு தாவரங்களாகவும் மிருகங்களாகவும் ஜீவர்களைப்பிறக்கச்செய்கிறான். ஏதோ புண்ணிய வசத்தால் ஜீவர்கள் மானிட தேகங்களை அடைகிறார்கள். மானிடராகப்பிறந்தும் வேதத்தை ஒப்புக்கொள்ளும் வைதீகமதத்தில் பிறப்பது அரிது. அப்படி வைதீகமதத்தில் பிறந்தும், தேகமே ஆத்மாவென்று விபரீத வெண்ணத்தைக்கொண்டு நமது தேகத்தின் பேரில் ஆசை வைத்தல், தேக சம்பந்தத்தால் ஏற்பட்ட பிள்ளை பெண்டாட்டி முதலியவர்களுக்காக உழைத்தல், நான் உனக்காக எவ்கிற ஸ்வரூபத்தை விட்டு தனக்குத்தானே தன்னலங்கருதி நலம் தேடிக்கொள்ளுதல் ஆகிய இவைகளெல்லாம் **ஸ்வரூப விரோத மாகும்.** இவைகளெல்லாம் பிரகிருதி சம்பந்தத்தால் உண்டாகுவன. இந்திரஜாலம் செய்பவனுக்கு மயில் தோகை ஜனங்களை மயக்குவதற்கு உபயோகமாவது போல இறைவனுக்குப் பிரகிருதியானது ஜீவர்களுடைய ஸ்வரூபத்தைமறைக்க உபயோகப்படுகிறது.

(ii) எம்பெருமானையொழிந்த மற்றத்தேவதைகளுக்குப் பரத்வமுண்டென்று நினைத்தலும், எம்பெருமானுக்குச்சமானமான தேவதை உண்டென்று நினைத்தலும், யக்ஷபிசாசு முதலிய அற்ப தேவதைகளுக்குச்சக்தியுண்டென்று நினைத்தலும், பகவானுடைய அவதாரங்களை மனிதராக நினைத்தலும், அர்ச்சாவதாரங்களில் (விக்கிரங்களில்) சக்தியில்லை என்று நினைத்தலும் **பரத்வவிரோதி** எனப்படும்,

(iii) தர்மம், அர்த்தம், இகலோககாமம் (ஐஹிகம்), பரலோககாமம் (ஆமுஷ்மிகம்), கைவல்யம் இவைகளில் இச்சை வைத்தல் **புருஷார்த்த விரோதி** எனப்படும்.

---

* சாதாரணமாக நமக்கு வரும் கோபத்திற்குக்காரணம் துவேஷமாகும். அக்கோபம் பிறருக்குக்கேட்டை விளைவிக்கும். இறைவனது கோபம் அவ்விதமானதன்று. இறைவனுடைய கோபம் ஜீவர்கள் திருந்தி நல்லதையடைய வேண்டுமென்ற நல்ல நோக்கத்துடன் ஜீவர்களைச்சிக்ஷிக்கிறது. இறைவனுடைய கோபம் பெற்றோர்களுக்குத்துஷ்டபிள்ளை விஷயத்திலிருக்கும் கோபம் போன்றது.

(iv) கர்ம, ஞான, பக்தியோகங்களை நன்மையென்று பயிலுதலும், பிரபத்தியில் அவநம்பிக்கையும், எம்பெருமான் நம்மை எல்லா பாபங்களையும் மன்னித்துக் கர்மபந்தத்திலிருந்து காப்பாற்றுவான் என்ற நம்பிக்கையின்மையும் உபாய விரோதி எனப்படும். கர்ம, ஞான, பக்தியோகங்களாலும் மோக்ஷத்தையடையலாம். ஆனால், அவைகளைக்கொண்டு மோக்ஷமடையத் தாமதப்படும். ஆகையால், அவைகள் விரோதிவர்க்கத்தில் சேர்க்கப்பட்டன.

(v) நாம் செய்த சாஸ்திர விரோதமான கர்மங்களால் வந்த இறைவனது கோபத்தால் இச் சரீரத்தையடைந்தும், நமது பாபங்களை நினைத்து வருந்தாமை, இறைவனிடத்திலும் இறைவனுக்கு வேண்டியவர்களிடத்திலும் (பாகவதர்களிடத்திலும்) அபசாரப்படல், சாஸ்திரங்களுக்கு விரோதமான பதார்த்தங்களை உண்பதால் வந்த தோஷம் (சாஸ்திரங்களில் விலக்கப்பட்ட அன்னத்தைச் சாப்பிட்டால் ஞானம் கெடும்), துஷ்டர் சகவாசம் (துஷ்டர் சகவாசம் பகவத் கைங்கர்யத்தைக் கெடுக்கும்), அபிமானம், கர்வம் இவைகள் ப்ராப்தி விரோதி எனப்படும்.

107. “ அறிந்துகொண்ட இந்த ஐந்து பொருள்களையும் தினந்தோறும் நினைக்கவேண்டும், இவைகளை உபகரித்த ஆசாரியனிடத்தில் நன்றி பாராட்டவேண்டும், பிரபத்தி பண்ணிக்கொள்ளாதவன் அதைச் செய்வதற்குத் தடிக்கவேண்டும் ” என்று ஸ்ரீ தேசிகன் கூறியுளார்.

108. “ அர்த்தபஞ்சக ஞானம் உண்டாகி மோக்ஷத்தில் இச்சையும் பிறந்து இல்லறத்திலிருக்கும் புருஷன் தனது சம்சாரத்திலே ஆசையைப் பெருக்கிக் கொள்ளாமல், வேண்டிய அன்னவஸ்திராதிகளை நன்னெறியில் சம்பாதித்து, எல்லாவற்றையும் இறைவனுக்கு நிவேதனம் செய்து, பாகவதர்களுக்குத் தன்னால் கூடியவரையில் உதவி, மிகுதியை, தன்னுயிர் வாழ்விற்கு வேண்டியவளவு உண்டு, தன்னுடைய ஆசாரியனிடத்தில் நன்றி பாராட்டியும், தன்னுடைய அறிவின்மையை

ஆசாரியனிடத்தில் எடுத்துச் சொல்லியும், இறைவனிடத்தில் பாபத்தை எடுத்துக் கூறியும், பாகவதர்களிடத்தில் தான் செயலற்றிருத்தலையும் (பாரதந்திரத்தையும்) சம்சாரிகளிடத்தில் தனது வேறுபாட்டை ஆசரித்தும், மோக்ஷம் அடைவதில் பரபரப்பும், இறைவன் இரக்ஷிப்பான் என்ற பெரும் நம்பிக்கையும்கொண்டு ஜீவித்தல்வேண்டும். இவ்விதமாக நடப்பவனிடம் எம்பெருமானுக்கு பிராட்டியிடத்திலிருக்கும் பிரீதியைவிட அதிக ஆசையுண்டாகும்" என்று ஸ்ரீ பிள்ளை லோகாசாரியர் கூறியுளார்.

109. அர்த்த பஞ்சகத்தை யறிந்ததின் பயனை நாம் அர்த்த பஞ்சகத்தில் சொல்லியிருக்கும் விஷயங்களை நமது ஜீவிய நாளில் கையாளுகின்றோமாவென்று உணர்ந்து அதன்படி நடந்தால்தான் அடைவோம். சர்க்கரை என்று கடிதத்தில் எழுதி நக்கினால் தித்திக்குமா? தித்திக்காது. அதுபோல, புத்தகங்களில் அர்த்த பஞ்சகத்தைப்பற்றி வாசித்துக் கற்பதினால்மாத்திரம் பிரயோஜனத்தை யடையமாட்டோம். கற்பதெல்லாம் அநுஷ்டானத்தின் பொருட்டேயாம். கற்றதை ஜீவிய நாட்களில் கையாண்டால்தான், கற்றதால் ஆய பயனை யடைவோம். ஆகையால் நாமெல்லோரும் அர்த்தபஞ்சகத்தில் சொல்லியிருப்பதின்படி நடக்க முயற்சிக்கவேண்டும். ஆசார்யகடாக்ஷமும் பகவத்கடாக்ஷமும் இதைக் கூட்டி வைக்குமாக.

---

## VIII. தத்வத்ரயம் அல்லது மூவகை உண்மைகள்.

---

110. "பிறப்பு இறப்பு எனும் பிணியினின்று நீங்கிப் பேரின்பத்தையடைய விரும்புபவனுக்கு மோக்ஷமடையும் பொழுது தத்வத்ரயஞானம் உண்டாகவேண்டும்." என்று

ஸ்ரீ பிள்ளைலோகாசாரியர் கூறியுள்ளார். ஆதலால், முமுக்ஷு க்கு (மோக்ஷத்தில் இச்சையுடையவனுக்கு) தத்வத்ரயஞானம் மிகவும் அவசியமானது.

**111.** "**தத்வத்ரயம்**" என்றதால் மூன்று உண்மைகள் தான் உள என்பது விளங்குகிறது. அவைகள் **ஈச்வரன், சித்** (அறிவுள்ள ஜீவர்கள்), **அசித்** (அறிவில்லாதவைகள்) ஆகும்.

**112.** இறைவன் (பரப்ரம்மம் அல்லது ஈச்வரன்) தான் முக்கியமான உண்மை (**பிரதான தத்வம்**). **உலக சிருஷ்டிக்கு* பரப்ரம்மமே உபாதான காரணமாகவும் (Material Cause) நிமித்த காரணமாகவும், (Instrumental Cause) சஹகாரி காரணமாகவும் (Auxiliary Cause)** இருக்கின்றார். உதாரணமாக ஒரு மட்பாண்டத்தை எடுத்துக்கொண்டால், அதற்கு உபாதானகாரணம் மண், நிமித்தகாரணம் குயவன், சஹகாரி காரணம் சக்கரம் முதலியவை ஆகும். ஆனால், இந்த உலக சிருஷ்டிக்கு இந்த மூன்று காரணங்களும் இறைவன்தான் ஆகின்றான். இறைவன் (பரமாத்மா அல்லது பரப்ரம்மம்) சித் (ஆத்மா) அசித் (அனாத்மா) ஆகிய மற்றும் இரண்டு உண்மைகளுடன் (தத்வங்களுடன்) நீக்கமற எப்பொழுதும் சேர்ந்து இருக்கின்றான். இவ்விதமான சேர்க்கையைக்கொண்டுதான் இறைவனையறியமுடியுமே தவிர இறைவனை மாத்திரம் தனித்து அறியமுடியாது. இந்த சேர்க்கையானது ஆதியந்தமற்றதாகவிருக்கிறது. ஈச்வரன், சித், அசித் ஆகிய இம்மூன்றுக்கும் பிறப்பு கிடையாது. எப்பொழுதும் இருந்துகொண்டிருக்கின்றன. எதற்கு பிறப்பு இல்லையோ அதற்கு அழிவு கிடையாது. ஆதலால், ஈச்வரன் சித், அசித் ஆகிய மூவகை உண்மைகளும் நித்யமானவை. ஈச்வரன் **நியந்தாவாகவும்** (ஏவுகிறவனாகவும்), சித் அசித் ஆகிய இவைகள் **நியாம்யங்களாகவும்** (ஏவப்படுபவைகளாக

---

* இறைவன் இல்லாத ஒன்றை புதிதாக உண்டாக்கவில்லை. சூக்ஷமமாகவிருக்கும் பிரகிருதியை ஸ்தூல ரூபங்களையடையும்படியாகச் செய்கின்றான்.

வும்) இருக்கின்றன. ஈச்வரன் ஒருவனதான ஸ்வதந்தரனாக விருக்கின்றான். மற்ற இரண்டு தத்வங்களும் ஈச்வரனுக்கு அடக்கமானவை. ஆதலால், ஈச்வரன் ஒருவன்தான் முக்கிய தத்வம் என்று சொல்லப்படுகிறது. சித் அசித் ஆகிய இவை கள் இறைவனுடைய நினைவன்றி ஒன்றும் செய்யமுடியா. ஈச்வரனுடைய நினைவே உலகதோற்றத்திற்கு முக்கிய காரண மாகவிருப்பதால் ஈச்வரன்தான் உலக சிருஷ்டிக்கு மூன்று காரணங்களாகவும் இருக்கின்றான் என்று சொல்லப்படுகிறது.

**113.** மூன்று தத்வங்கள் (உண்மைகள்) இருக்கின்றன வென்று யுக்தியாலும் பிரமாணத்தாலும் அறியலாம். அறி வில்லாத நமது உடம்பானது உயிருடன் இருக்கும்பொழுது அழியாமலிருந்து, இறந்த பிறகு அழிந்துவிடுகின்றது. இத ஞல் உடம்பைக் காட்டிலும் வேறான ஏதோ ஒரு பொருள் உடம்புக்குள் இருந்துகொண்டு உடம்பைக் காத்துக்கொண் டிருந்ததாகவும், அது உடம்பைவிட்டகன்றதும் காப்பாரின்றி உடம்பு அழிந்துவிடுவதாகவும் அறிகிறோம். உடம்பைக் காத்துக்கொண்டிருந்த அப் பொருள் அறிவுள்ள ஜீவனாகும். நாம் விழித்துக்கொண்டிருக்கும்பொழுது ஜீவனுடைய அறிவு உடலைக் காக்கின்றது. தூங்கும்பொழுது ஜீவன் உடலைக் காக்கின்றான். ஆதலால், உயிருடன் இருக்கும்பொழுது உடல் கெடுவதில்லை. ஆதலால், உடலைவிட ஜீவன் வேறு என்பது தெற்றென விளங்கும். வேதமும் அப்படித்தான் சொல்லு கிறது.

**114.** இவ்வுலகத்திலே சிலர் அழகுள்ளவர்களாகவும் சிலர் அழகில்லாதவர்களாகவும் சிலர் செல்வர்களாகவும் சிலர் ஏழைகளாகவும் இருக்கின்றனர். ஜீவன் தனது விருப்பத் தால் உடலையடைவானாகில் தனக்குச் சுகந்தரும் உடலை யடை வானே தவிர துக்கத்தைத் தரும் உடலையடையமாட்டான். ஆதலால், ஜீவன் உடலையடைவது தன்னிச்சையாலல்லவென் பதும், வேறொன்றினுடைய விருப்பத்தால்தான் உடலைப் பெறுகிறானென்பதும் புலனாகின்றது. சிலர் அதை கர்ம மென்பர். கர்மம் என்பது வேலையாகும். வேலை என்பது

அதைச் செய்து முடித்ததும் போய்விடுகின்றது. ஆதலால், கர்மம் காரணம் ஆகாது. நெருப்பிலே வைத்த நீரின் உஷ்ணம் நெருப்பு தணிந்த பிறகும் இருக்கின்றது. அதுபோல கர்மத்தால் ஏற்பட்ட அதிர்ஷ்டம் என்பது காரணமாகலாம் என்று சிலர் சொல்லுவர். அதிர்ஷ்டம் என்பது அறிவில்லாதது. அறிவில்லாத வஸ்து ஒன்றைத் தானகச் செய்யமுடியாது. அறிவுள்ளவன் ஒருவன் இருந்துதான் அறிவில்லாத வஸ்துவைக்கொண்டு ஒன்றைச் செய்ய முடியும். இந்த அறிவுள்ளவனைத்தான் ஈச்வரன் என்று சொல்லுகிறது.

115. சித், அசித், ஈச்வரன் ஆகிய இம்மூன்று உண்மைகளில் ஒவ்வொன்றினுடைய ஸ்வரூபம், பிரவிருத்தி (வேலை) காலம் ஆகிய இவை வேறுபடும்.

## ஜீவர் அல்லது சேதனர்.

116. ஜீவனுடைய ஸ்வரூபங்கள் நான்கு ஆகும். அவை அணு, ஞானம், ஆநந்தம், அமலம் என்பவையாம்.

117. அணு (atom) - இறக்கும்பொழுது இருதயத்திலிருக்கும் ஜீவன் கண் வழியாகவாவது கபாலத்தின் வழியாகவாவது மற்றெவற்றின் வழியாகவாவது புறப்பட்டு சந்திர மண்டலம் முதலியவற்றுக்கு போவது என்றும் கர்மத்தால் மீண்டும் இவ்வுலகத்திற்கு வருவது என்றும் வேதாந்த சாஸ்திரம் கூறுவதால், ஆத்மா அணுவளவாக இருத்தல்வேண்டும் என்பது புலனாகிறது. இரத்தினம், சூரியன், விளக்கு முதலியவைகள் ஓரிடத்தில் தங்கியிருந்தாலும் அவைகளுடைய காந்தியானது எங்கும் வியாபித்திருப்பதைப்போல ஜீவன் அணுவளவாக இருதயத்தில் வீற்றிருந்தாலும் அவனுடைய அறிவு (ஞானம்) உடலெங்கும்மொக்க வியாபித்துச் சுகதுக்கங்

களை அனுபவிக்கிறது. ஒரே காலத்தில் பல தேகங்களை ஸௌபரி, கார்த்தவீர்யார்ஜுனன் முதலியவர்களைப்போல அனுபவிப்பது ஜீவனுடைய ஞானத்தினுலேயேயாகும். ஜீவன் வியாபகனல்ல. அவனுடைய ஞானந்தான் வியாபகமானது.

118. ஞானம் - ஜீவன் சேதனன் என்பதால் ஜீவன் அறிவுள்ளவன் என்று தெற்றென விளங்கும். ஆதலால், ஜீவனை ஜ்ஞாநாஸ்ரயன என்று சொல்லப்படுகிறது. ஜ்ஞாநாஸ்ரயன் என்பதற்கு ஞானத்திற்கு இருப்பிடமானவன் என்று பொருள். விளக்கினின்று வெளிச்சத்தை எப்படி பிரிக்க முடியாதோ அதுபோல ஜீவனினின்றும் ஞானத்தைப் பிரிக்க முடியாது. விளக்கு வெளிச்சத்திற்கு இருப்பிடமானது. விளக்கை வெளிச்சத்திற்கு தர்மி அல்லது ஆதாரம் என்றும், வெளிச்சத்தை விளக்கினுடைய தர்மம் அல்லது ஆதேயம் என்றும் சொல்லப்படுகிறது. அதுபோல, ஜீவன் ஞானத்திற்கு தர்மி என்றும் ஞானம் ஜீவனுடைய தர்மம் என்றும் சொல்லப்படுகிறது. ஜீவனை தர்மி பூத ஞானமென்றும், ஞானத்தை தர்ம பூத ஞானமென்றும் சொல்லுவது வழக்கமாம். கர்மத்தால் கட்டுப்பட்டு இருக்கும்வரையில் ஜீவன் தனது ஞானத்தைக்கொண்டு நேராக ஒன்றையறிய முடியாது. ஞானத்தைக்கொண்டு தன்னுடைய இந்திரியங்களின் வழியாகத்தான் ஒன்றையறியமுடியும். ஆனால், யோகசாதனத்தால் ஸௌபரியைப்போல் பல தேகங்களில் தனது ஞானத்தைப் பரவச் செய்யலாம். எப்பொழுது ஜீவன் தனது கர்மங்களிலிருந்து விடுதலையடைகிறனே அப்பொழுது அவனுடைய ஞானம் எங்கும் பரவுகிறது. அந்நிலையில் ஜீவனுக்கு ஒன்றையறிய ஞானந்தவிர இந்திரியங்களின் உதவி வேண்டியதில்லை. எல்லாவற்றையும் எப்பொழுதும் தனது ஞானத்தைக்கொண்டே ஜீவன் அறியலாம்.

119. தர்மபூத ஞானம் தன்னையும் மற்றப் பொருள்களையும் தன்னுடைய இருப்பிடமாகிய ஜீவனுக்குக் காண்பிக்கும். ஆதலால், அது பராக்கு எனப்படும். தர்மிபூதஞான

மாகிய ஜீவன் தன்னைத்தானே "நான்" என்று அறிவன். ஆதலால், ஜீவன் பிரத்யக்கு எனப்படுவன். ஜீவனை அஜடம் அல்லது ஸ்வயம் பிரகாசம் என்று சொல்லுவதும் வழக்கமாம்.

120. ஆநந்தம் - ஆனந்தவடிவன். தனக்குத் தான் மிகவும் சுகமாயிருக்கப்பட்டவன். கைவல்யத்தில் இச்சுகத்தை அடையலாம்.

121. அமலம் - இயற்கையில் ஓர் குற்றமுமில்லாதவன். இப்பொழுது கர்மசம்பந்தத்தால் குற்றமுள்ளவனாகவிருக்கிறான். கர்மம் நீங்கினால் அமலனாகுவான்.

122. ஜீவனுடைய மற்ற லக்ஷணங்கள் எவை என்றால், அன்னமயம், ப்ராணமயம், மனோமயங்களுக்கு மேற்பட்டு விஜ்ஞானமயம் ஆத்மாவாக (ஜீவனாக) விருக்கிறது. அதற்குமேல் ஆனந்தமயமாக ஈச்வரன் (பரமாத்மா) இருக்கிறான். ஜீவன் அவ்யக்தமாய், அசிந்த்யமாய், நிரவயவமாய், நிர்விகாரமாய், நித்தியமாய் இருக்கிறான்.

123. அவ்யக்தமாவது மானஸஞானத்தால் கண் முதலியவைகளுக்குக் குடம், வஸ்திரம் முதலிய ஜட பதார்த்தங்களைப்போல தோன்றாதிருக்கையாம்.

124. அசிந்த்யமாவது ஜட பதார்த்தங்களைப்போல் நினைக்கமுடியாதிருக்கையாம்.

125. நிரவயவமாவது ஆத்மா, ஜட பதார்த்தங்களைப் போல அவயங்களுடன் கூடியிராமல் ஞானத்தையே வடிவாக உடையது.

126. நிர்விகாரமாவது, மண் குடமாகவும், குடம் உடைந்த பிறகு மறுபடியும் மண்ணாவதும்போல ஜீவன் விகாரமடையாமல் ஒரேவிதமாக இருக்கையாம். இறைவன் எப்

படி விகாரமற்று சத்தியமாகவிருக்கின்றதோ அதுபோல ஜீவர்களும் சத்யர்கள்தான் (விகாரமற்றவர்கள்தான்). கர்மத்திற்குத் தக்க பலனையடைவதற்கு ஜீவனுடைய ஞானம் மாறுபாட்டையடைகின்றதே தவிர ஜீவனுடைய ஸ்வரூபம் மாறுபாட்டையடைகின்றதில்லை. இக்குணம் சத்யத்வம் என்று சொல்லப்படுகிறது. சத்யத்வம் என்னும் குணம் ஈச்வரனுக்கும் ஜீவர்களுக்கும் பொதுவானது. ஆனால், ஜீவர்களுடைய ஞானம் மாறுபடுவதைப்போல ஈச்வரனுடைய ஞானம் மாறுபடுவதில்லை. ஆதலால், ஈச்வரனைச் சத்தியங்களுள் சத்தியம் என்று சொல்லுவதுவழக்கமாம்.

127. ஜீவன் நிரவயமாய் நிர்விகாரமாயிப்பதால் ஜீவனை வெட்டவும், எறிக்கவும், நனைக்கவும், உலர்த்தவும் முடியாது. அதாவது ஜீவன் அழிவில்லாதவனும்.

128. நித்யன் - ஜீவன் மூன்று காலங்களிலும் இருக்கப்பட்டவன் எனப்படும். பிறப்பு இறப்பு உடலுக்கே தவிர ஆத்மாவுக்குக்கிடையாது. உடலையடைவது பிறப்பு என்றும் உடலை விடுவது இறப்பு என்றும் சொல்லப்படுகிறது.

129. ஈச்வரனையும் ஜீவனையும் சேர்த்து நோக்குங்கால் ஜீவன் ஈச்வரனுக்கு நியாம்யமாய், தார்யமாய், சேஷமாயிருக்கின்றான்.

130. ஜீவன் ஈச்வரனுக்கு நியாம்யமாவது ஜீவன் இறைவன் ஏவுகிறபடி நடக்க வேண்டியவனும். சரீரத்தினுடைய சகல வேலைகளும் சரீரியினுடைய புத்தி ஆதீனமாக உண்டாகிறதுபோல் இறைவனுக்கு சரீரபூதனாகிய ஜீவனுடைய மனோவாக்குக்காயங்களாலாகிய சகல வேலைகளும் சரீரியான பரமாத்வாவினுடைய புத்தி ஆதீனமாகவே உண்டாகும்படி இருக்கையாம்.

131. தார்யமாகையாவது ஜீவன் இறைவனால் தரிக்கப்பட்டவனும். எப்படி தேகம் தனது ஜீவனுடைய ஸ்வரூபத்தாலும் சங்கல்பத்தாலும் தரிக்கப்பட்டு ஜீவன் அகன்றதும்

சத்தை இல்லையாம் படி இருக்கிறதோ அது போல ஈச்வரனுடைய திவ்யாத்மஸ்வரூபத்தையும் அவனுடைய நித்திய இச்சாக்கார்யமான சங்கல்பத்தையும் ஒழிந்த போது தன் சத்தை இல்லையாம்படி இருக்கையாம். தேகத்தை விட்டு ஜீவன் அகலும். ஆனால், சரீரியாகிய ஈச்வரன் சரீரமாகிய ஜீவனை விட்டு ஒருகாலும் அகலான். ஆகலால், ஜீவன் தனது சத்தை இல்லையாம் படி எப்பொழுது இருக்க இயலும் என்றால் ஜீவன் ஞானஸ்வரூபியாக விருந்தும் இறைவனுக்குச்சரீரமாக இறைவனுடன் சேர்ந்து இருந்தும் பிரளயகாலத்திலே ஜீவனுடைய மனசையும் இந்திரியங்களையும் வாங்கி விடுவதால் ஜீவனுடைய ஞானம் சோபிதமின்றி ஜீவன் கல்லைப்போல் கிடப்பான். ஏனென்றால், கர்பபந்தம் இருக்கும் வரையில் ஜீவனுடைய ஞானமானது இந்திரயங்களின் வழியாகத்தான் ஒன்றையறியும் என்றுச் சொல்லப்பட்டிருக்கிறது.

132. இறைவனுக்கு ஜீவன் சேஷம் என்றால் இறைவனுக்கு ஜீவன் அடிமை என்பது பொருளாகும். சந்தனம், புஷ்பம், தாம்பூலாதி பதார்த்தங்கள் பூசிக்கொள்பவனுக்கும் சூடிக்கொள்பவனுக்கும் போட்டுக்கொள்பவனுக்கும் உபயோகமாய் தனக்கு இஷ்டமுள்ளவர்களுக்குக்கொடுக்கப்படுவதற்கு யோக்கியமாயிருத்தலைப்போல, அறிவுள்ளவனாக விருந்தாலும் ஜீவன் இறைவனுடைய உகப்புக்கே விஷயமாய் அவனுகந்த விஷயங்களுக்குப்பிரயோஜனப்படும்படியாக விருக்கையாம். இதைத்தான் பாரதந்த்ரியம் என்பது ஆம். சுய நலத்தை விட்டாலொழிய பாரதந்த்ரியம் பிறக்காது.

133. இவ்வித லக்ஷணங்களுடன் கூடியிருக்கும் ஜீவர்கள் பத்தர், முக்தர், நித்யர் என மூவகைப்படுவர்.

அறிவின் மயக்கத்தால் (அவித்யையால்) உடம்பைத்தானென்றும் உடம்பைச்சேர்ந்த மனைவிமக்கள் இன்னும் பிற உறவினர்கள் தனது என்றும் தப்பெண்ணங்கொண்டு செய்யும் நல்வினை தீவினைக்கேற்ப மாறி மாறி தேவ, மனுஷ, திரியக் (மாக்கள்), தாவர தேகங்களை அனுபவிக்கும் சம்சாரி

ளாகிய கர்மத்தால் கட்டுப்பட்டவர் பத்தர் எனப்படுவர். இவர்களுடைய அறிவு (ஞானம்) அவரவர்களுடைய கர்மத்திற்கேற்க விரிந்தும் சுருங்கியுமிருக்கும்.

தன்னுடைய லக்ஷணத்தை உள்ளபடி யறிந்து கர்ம பந்தத்திலிருந்து விடுபட்டு வீடு பெற்ற ஜீவர்கள் முக்தர் எனப்படுவர். இவர்களுடைய அறிவு எப்பொழுதும் பரந்திருக்கும். முக்தருக்கும் இறைவனுக்கும் உள்ள வித்தியாசமாவது - முக்தருக்கு அறிவு மாத்திரம் எங்கும் பரவியிருக்கும். இறைவனோ தானும் தன்னறிவும் எங்கும் எப்பொழுதும் பரவியிருக்கப்பட்டவன். அளவும் நிறையும் வடிவும் ஒத்துச்சமமாயிருக்கிற நெல்மணிகளுக்குப்பேத குணம் ஒன்றுமில்லையானாலும் அவைகள் பலவாக விருக்கின்றன. அதுபோல முக்தர்களுக்குள் ஒருபேதமுமில்லையானாலும் அவர்கள் பலராவார்கள்.

ஒரு போதும் கர்மத்தால் கட்டுப்படாத ஜீவர்கள் நித்யர் எனப்படுவர். இவர்களுடைய அறிவு எப்பொழுதும் பரந்திருக்கும். நித்யருக்கும் முக்தருக்கு முள்ள வித்தியாசம் - நித்யர் எப்பொழுதும் கர்மத்தால் கட்டுப்படாதவராம். முக்தர் சில காலம் கர்மத்தால் கட்டுப்பட்டிருந்து பிறகு இறைவனுடைய அருளால் கர்மபந்தத்திலிருந்து நீங்கி வீடுபெற்ற ஜீவர்களாம். நித்யருக்கும் இறைவனுக்கும்உள்ள வித்தியாசம் - இறைவன் எங்கும் வியாபி. நித்யர் இதர ஜீவர்களைப்போல் இருப்பில் கட்டுப்பட்டவர்.

134. ஜீவலக்ஷணத்தில் இறைவனுடைய புத்தி ஆதீனமாகவே சகல வேலைகளையும் ஜீவன் செய்கின்றானென்று சொல்லியிருக்க, கர்மத்தால் ஜீவனுக்கு எப்படி பந்தம் உண்டாகுமென்று நமக்கு சந்தேகம் உண்டாகலாம். "* மனம்,

---

* ஒவ்வொரு வேலையும் ஐந்து காரணங்களால் உண்டாயிருக்க, மனத்தாலாகிய வேலை, வாக்காலாகிய வேலை, காயத்தாலாகிய வேலை என்று பிரித்துச் சொல்வது அந்தந்த வேலையில் அந்தந்த பாகம் விஞ்சி இருப்பதாலாகும்.

வாக்கு, காயம் ஆகிய இவைகளில் எதைக்கொண்டு எந்த வேலையைச் செய்தாலும் அந்த வேலைக்கு உடல், ஜீவன், மனதோடு கூடிய கர்மேந்திரியங்கள், பிராணன், ஈச்வரன் ஆகிய இவைகள் காரணங்களாகும்" என்று பகவான் ஸ்ரீ கீதையில் 18-வது அத்தியாயம் 14-வது சுலோகத்தில் கூறியுளார். ஜீவனால் ஆட்டிவைக்கப்படுகிறது உடலாகும். வேலைக்கு அதிகாரி (கர்த்தா) ஜீவனாகும். மனதோடு கூடிய கர்மேந்திரியங்கள் வேலையைச் செய்யும் கருவிகளாகும். உடம்பையும் கர்மேந்திரியங்களையும் வேலை செய்வதற்கு ஜீவனுக்கு உதவும்படியாகச் செய்வது பிராணனாகும். எல்லாவற்றிற்கும் ஆத்மாவாகவிருந்து ஏவுபவன் ஈச்வரனாகும். ஆதலால், ஜீவன் ஈச்வரனுடைய ஆதீனமாகவிருந்து வேலையைச் செய்கின்றான் என்றுச் சொல்லப்பட்டது. உடலாகவும் இந்திரியங்களாகவுமிருக்கும் பிரகிருதி யந்திரத்திலே வீற்றிருக்கும் ஜீவர்களுடைய சகல வேலைகளுக்குங் காரணமாக விருக்கும் நினைவு உற்பத்தியாகும் இடமாகிய இருதய ஸ்தானத்திலே எம்பெருமான் அந்தர்யாமியாகவிருந்து அவரவர்களுடைய பூர்வ கர்மத்திற்குத் தக்கவாறு நல்லதையோ கெட்டதையோச் செய்யும்படியான ஆசையை நினைவால் உண்டாக்குகின்றான். ஒரு மாந்தோப்பு இருவர்களுக்குச் சொந்தமானதாகவிருக்கிறது. அவர்களில் ஒருவன் மற்றொருவனுடைய உத்திரவைப் பெற்று தோப்புக்குச் சென்று பழத்தைப் பறித்துத் தின்றான். இதில் பழத்தைப் பறித்துத் தின்றவன்தான் தனது வேலையாலாகிய பலனையடைந்தானேயன்றி பழத்தைப்பறித்துத் தின்ன உத்திரவு தந்தவன் ஒரு பலனையும் அடையவில்லை. அது போல, உடலும் கர்மேந்திரியங்களும் ஜீவனுக்கும் இறைவனுக்கும் சொந்தமானவையாம். உடலையும் கர்மேந்திரியங்களையும் கொண்டு ஜீவன் வேலையைச் செய்வதற்கு இறைவன் ஜீவனுக்கு நினைப்பையுண்டாக்குவதன் வழியாக உத்திரவைக் கொடுக்கின்றான். ஆதலால், ஜீவன்தான் ஒவ்வொரு கர்மத்தாலாகிய பலனையும் அனுபவிக்கவேண்டியவனாகின்றான்.

135. ஜீவர் இறைவனுடைய ஆதீனமாகவிருந்து சகல வேலைகளையும் அவரவர்களுடைய பூர்வகர்மத்திற்குத் தக்க

வாறு செய்கின்றார்களென்றால், இறைவன் அன்புமயமானவனென்பதும் வீடுபெற முயலுவதுதான் மானிடராகப் பிறந்த ஒவ்வொருவருடைய கடமையுமாகும் என்பதும் எப்படி பொருந்தும்? ஜீவர்கள் உய்யும்வண்ணம் வேத சாஸ்திராதிகளை இறைவனார் ஏற்படுத்தியிருக்கின்றார். அவைகளைக் கொண்டு ஜீவர்கள் நல்லன இவை தீயன இவை என்று அறிந்து தீயன அகற்றி நல்லன செய்து பரமனருளையடையலாம். எந்த ஜீவன் இறைவனுக்குப் பயந்து அன்புடன் ஒழுகுகின்றானோ அவனுடைய சகல பாபங்களையும் போக்கி இறைவன் இரக்ஷிக்கின்றான். ஆதலால், இறைவன் அன்புமயமானவன் என்பதில் என்ன சந்தேகமிருக்கின்றது?

136. இறைவன் அவரவர்களுடைய பூர்வ கர்மத்திற்கேற்ற பலனையனுபவிப்பதற்காகத் தேகத்தையும் பந்துக்கள் மித்திரர்கள் முதலிய சம்பந்தங்களையும் ஏற்படுத்துகிறானே தவிர, புதிய கர்மங்களைச் செய்யுமாறு அவன் சொல்லவில்லை. ஒருவனுக்கு அன்னம் படைக்கப்பட்டது. அதில் விஷம் கலந்திருப்பதாக அறிகிறான். பிறகு, அந்த அன்னத்தை அவன் புசிப்பானா? அதுபோல, இறைவன் நமக்கு இந்த உடலையும் பந்துக்களையும் கொடுத்திருக்கின்றான். அவைகளின்மேல் பாசம் வைப்பது நமது ஆத்மாவிற்குக் கேட்டை விளைவிக்குமென்று சாஸ்திரங்களால் அறிகிறோம். அவ்விதமாகவறிந்தும் அவைகளின்மேல் பாசம் வைக்கலாமா? ஒரு விறகுவெட்டி பணப்புதையல் கிடைக்கும் வழியையறிகின்றான். பிறகு அவன் விறகு வெட்டும் தொழிலை விட்டுவிட்டு பணப் புதையலையடையும் வழியையல்லவோ பற்றுவான். அதுபோல சம்சாரத்திலே அலைந்துகொண்டிருக்கும் நாம் எம்பெருமானுடைய நித்யவிபூதியாகிய பரமபதத்தையடைந்து முடிவு இல்லாத பேரின்பத்தையடைய உரியவர்கள் என்று அறிந்ததும் துச்சமாகிய சம்சார இன்பத்தைவிட்டுப் பேரின்பமடையும் வழியையல்லவோ பற்றவேண்டியவர்களாகவிருக்கின்றோம். ஆதலால், வீடுபெற முயலுவதுதான் மானிடராகப் பிறந்த ஒவ்வொருவருடைய கடமையாகுமென்பது தெற்றென விளங்கும்.

137. **பத்தருடைய ஸ்வரூபம்**:—அவித்யை, கர்மம், வாசனை, உருசி, பிரகிருதி சம்பந்தம் இவைகளுடன் சேர்ந்திருக்கையாம். ஜீவன் ஓர் பிறவியையடைந்ததும்,

"வேதநூல் பிராயம்நூறு மனிசர்தாம் புகுவரேலும்
பாதியும் உறங்கிப்போகும் நின்றதில் பதினையாண்டு
பேதைபா லகனதாகும் பிணிபசி மூப்புத்துன்பம்
ஆதலால் பிறவிவேண்டேன் அரங்கமா நகருளானே!"

என்னும் திருமாலைப் பாசுரத்தின்படி குழவி பருவத்தில் தனக்குத்தான் உபயோகமற்றும், தளர்நடை பருவத்தில் தனக்கு இது நல்லது இது கெட்டது என்ற பகுத்தறிவின்றி விழுந்தும் தள்ளாடியும், யௌவனத்தில் எண்ணிலா விஷயங்களைத் தான் அடையவேண்டுமென்று அவா பெருக்கெடுத்து, சமுத்திரத்தில் எல்லா ஜலமும் விழுந்தாலும் சமுத்திரம் நிறையாமலிருப்பதைப்போல "ஆசைக்கோரளவில்லை" என்னும் ஆன்றோர் வாக்கியத்திற்கேற்க தனது ஆசை பூர்த்தியாகாமல் ஒரு விநாடிகூட அமைதியின்றி மனதானது பற்பல எண்ணங்கொண்டு அலைந்துகொண்டேயிருக்கும். தன்னை உடம்பாகவும், தன்னை ஈச்வராதீனமென்று நினையாமல் சுதந்தரனாகவும், தனக்காகவே தானிருப்பதாகவும் எண்ணுவதாகிய **அவித்யை**யின் காரணத்தால் ஜீவன் தனது கர்மத்தாலடைந்த சரீரத்தைதான் என்றும் பரஸ்பர கர்மசம்பந்தத்தால் ஏற்பட்ட பந்துக்களை தனது குடும்பத்தார் என்றும் நினைத்து தன்னுடைய சரீரத்திற்காகவும் பந்துக்களுக்காகவும் உழைக்கின்றான். உழைப்பினால் இந்திரியங்கள் பல ஈனமடைகின்றன. இந்திரியங்கள் திருப்தி பலமடைவதற்காகத் தூங்குகின்றான். உறங்கும்பொழுது இந்திரியங்களடங்கிச் செயலற்று ஜீவனுடன் ஒன்றாய்ச் சேர்ந்துவிடுகின்றன. அப்பொழுது மனதும் அடங்கிவிடுவதால் உள்ளூர இருப்பதையும் அறியான். தனது உடம்பையும் மறந்துவிடுகிறான். விழித்துக்கொண்டிருந்தபொழுது (ஜாக்கிராவஸ்தையில்) தான் இருந்த இருப்பையும் மறந்துவிடுகிறான். இந்த உலகத்தையே மறந்து விடுகிறான். ஆதலால், அவன் அப்பொழுது கர்மத்திற்கு உட்பட்

டில்லை. அப்பொழுது அவன் பரிசுத்த நிலையில் இருப்பதால் செய்யத்தகாதன ஒன்றும் செய்யான். அவன் பிரம்மத்தி னிடத்திலயித்து இருந்தாலும், பல மலர்களிலிருந்து ஈக்களால் சேகரிக்கப்பட்ட தேனில் இத்துளி இந்த மலரிலிருந்து எடுத் தது என்று வகுத்து அறியமுடியாததைப்போல ஜீவன்தான் ஈச்வரனுடன் சேர்ந்திருப்பதாக தன்னையும் ஈச்வரனையும் தனித்து அறியான். நல்ல தூக்கத்தில் பிரம்மத்துடன் இவ் விதமான ஐக்கியம் ஜீவனுக்கு உண்டாவதால், ஜீவன்தான் இழந்த பலத்தைத் திரும்பிப் பெறுகிறான். தூக்கத்தில் கர் மத்திலிருந்து விடுபடுவது தன்னுடைய இந்திரியங்களின் அசக்தியாலாகும். திரும்பி தனது உடலும் இந்திரியங்களும் பலத்தையடைந்ததும் ஜீவன் விழித்துக்கொள்ளுகிறான். பிறகு தன்னுடைய கர்மத்தின் பலனை அனுபவிக்க ஆரம்பிக் கின்றான்.

ஜீவன் இவ்வுலகத்திலேதான் விரும்பியதையடைந்தால் சந்தோஷத்தையும், அடையாவிட்டால் துக்கத்தையும் அடை கின்றான். கிழத்தனம் வந்துவிட்டால், அங்கங்களெல்லாம் பலஈனமடைகின்றன. தான் விரும்பியதையடைய சக்தி யற்றவனும் விஷயங்களையனுபவிக்க சக்தியற்றவனும் தள் ளாடுகின்றான். பிறகு மரணமடைகின்றான். மரணமடையும் பொழுது, சகல இந்திரியங்களும் மனத்தில் கலக்கின்றன. மனம் பிராணனில் ஐக்கியமாகின்றது. பிராணன் ஜீவனில் ஐக்கியமாகின்றது. பிராணன் ஜீவனுடன் பஞ்ச சூக்ஷ்ம பூதங்களில் சேர்ந்து இருதயத்திலிருக்கும் பரமாத்மாவுடன் ஐக்கியமாகிறது. பழுத்த பழமானது மரத்திலிருந்து பிரிந்து விடுவதைப்போல, பிராணன் ஜீவன் பஞ்சசூக்ஷ்ம பூதங்கள் பரமாத்மா ஆகிய இவர்களுடன் மெலிந்த சரீரத்திலிருந்து பிரிந்துவிடுகிறது. தூங்கும்பொழுது உண்டாகும் ஜீவ பிரம்ம ஐக்கியமானது எப்படி உழைப்பால் அடைந்த சிரமத்தைப் போக்குகின்றதோ அப்படி மரணவேதனையால் அடையும் சிரமத்தை அப்பொழுது நேரிடும் ஜீவ பிரம்ம ஐக்கியம் நிவர்த் திக்கின்றது. என்னே ஈசன் செயல்!

புண்ணியம்பண்ணின ஜீவன் புகையிலே கலந்து சந்திர மண்டலம் போய்ச் சேருகிருன். அவ்விடத்தில் ஜீவன் பூலோகத்திலிருக்கும்பொழுது செய்த புண்ணியத்திற்குத் தக்க தேகமாக ஜீவனுடன் சென்ற பஞ்சசூக்ஷ்ம பூதங்களும் ஆகின்றன. ஜீவன் தனது புண்ணியத்தினுடைய பலன் க்ஷீணமாகும்வரையில் அங்கே இருக்கிருன். இந்த ஜீவன் மேலுலகங்களிலும் மற்ற தேவர்களுடைய பணியாளாக விருக்கின்ருனேயன்றி யஜமானனுகவிருக்கவில்லை. ஏனெனில் இவனுக்கு முன்பே அவ்விடங்களில் யஜமானர்களுடைய ஸ்தானங்களில் இதர ஜீவர்களிருக்கின்ருர்கள். அவர்கள் அந்த ஸ்தானங்களில் உலக முடிவுவரையில் இருப்பார்கள். மஹா பிரளயத்திற்குப் பிறகு அந்த ஜீவர்கள் மோக்ஷமடைவார்களென்றும் உலக ஸ்ருஷ்டிகாலத்தில் அவர்களைப்போல் புண்ணியம்செய்த மற்ற ஜீவர்கள் அந்த ஸ்தானங்களையடைவார்களென்றும் சாஸ்திரம் கூறுகின்றது.

புண்ணியம் செலவானதும் இந்த ஜீவன் ஆகாசத்தில் கலந்து, ஆகாசத்தினின்று வாயுவில் கலந்து, வாயுவிலிருந்து நீராவியில் கலந்து, நீராவியிலிருந்து மேகத்தில் கலந்து, மேகத்திலிருந்து மழையில் கலந்து பூமிக்கு இறங்குகின்ருன். பிறகு நெல் முதலிய தானியங்களில் ஒட்டிக்கொள்ளுகிருன். பிறகு அத் தானியங்களைச் சாப்பிடும் புருஷருடைய விந்துவில் கலந்துகொள்ளுகிருன். விந்துவிலிருந்து ஸ்திரீயினுடைய கர்ப்பத்தையடைந்து தனது கர்ம பலனையனுபவிக்கத் தேகத்தைப்பெற்று இப்பூமியின்கண் உதிக்கின்ருன். ஜீவன் சரீரத்தைவிட்டு நீங்கினதிலிருந்து சந்திரமண்டலம் சேரும்வரையிலும், பிறகு சந்திரமண்டலத்திலிருந்து பூலோகத்திற்கு வரும்வரையிலும் ஜீவனுக்கு ஸ்தூல தேகமில்லாமையால் கர்மத்தையனுபவிப்பது கிடையாது. ஜீவன் எதனுடன் ஒட்டிக்கொண்டாலும் அதனுடனே இருப்பான். அதற்குரிய ஜீவன் அதினின்று பிரிந்தாலும், அது என்ன சுகதுக்கத்தையடைந்தாலும் ஒட்டிக்கொண்டிருக்கும் ஜீவனைப் பாதிக்காது. ஆதலால்தான் தானியமானது அறுத்து உலர்த்தி மாவாக

அரைக்கும்பொழுதும் திட்டும்பொழுதும் அடுப்பில் வேகும் பொழுதும் ஜீவனானவன் அதை விடாமல் ஒட்டிக்கொண் டிருந்து தானியத்தைச் சாப்பிடுகிறவனுடைய விந்துவில் கலந் துகொள்ளுகிறான். விந்து கர்ப்பத்தையடையாமல் சேத மாய்விட்டால் அதிலுள்ள ஜீவன் திரும்பித் திரும்பி தானி யத்தையடைந்து அதுவழியாக விந்துவில் கலந்து தான் ஒரு தேகத்தையடையும்வரையில் அலைந்துகொண்டேயிருப்பான். இதுபற்றித்தான் செயற்கையால் நாம் செய்துகொள்ளும் கர்ப்பத்தடை பாபமானது என்று பெரியோர்கள் கூறு கிறார்கள்.

மிகவும் பாபம்செய்த ஜீவர்கள் உடனுக்குடன் தேகங் களையடைகிறார்கள். அவை சந்திரமண்டலம் போய் பிறகு பூமியின்கண் மழைவழியாக இறங்கவேண்டியதில்லை. அவை, புல், மரம் முதலிய தேகங்களை உடனே அடைந்துவிடு கின்றன.

இவ்விதமாக பிறப்பும் இறப்பும் மாறி மாறி வந்து கொண்டே இருக்கும். இதற்குத்தான் **சம்சாரம்** என்பது. இதற்குக்காரணம் அவித்யையால் மிகவும் சின்ன சுகங்களுக் காகத்தான் செய்யும் கர்மங்களாகும். ஜீவன் சரீரத்துடன் கர்மத்தால் பிணைக்கப்பட்டிருக்கிறான். தான் பூர்வம்செய்த கர்மத்திற்குத் தக்கவாறு சுகத்தையோ கஷ்டத்தையோ தனது உடலின் வாயிலாக அடைகின்றான். நாம் பருப்புக் குழம்புடன் சாதத்தைப் பிசைந்து சாப்பிட்டுவிட்டுக் கையை நன்றாகத் தேய்த்துக் கழுவிவிட்டாலும் கையில் ஒட்டிய குழம் பின் வாசனை உடனே நீங்குவதில்லை. அதுபோல நெடுநாட்க ளாக மனைவி மக்களின்மேல் வைத்த பாசத்தால் செய்துவந்த கர்மத்தால் ஏற்பட்ட பழக்கம் அதாவது வாசனை லேசில் போகாது. இந்த வாசனையால் ஆசை அல்லது உருசி உண்டா கும். அதனால் மறுபடியும் முன்போலவே கர்மங்களைச் செய் கின்றான். இம்மாதிரியாகக் கர்மமானது வற்றாத ஆற்றுப் பிரவாகம்போல வந்துகொண்டேயிருக்கிறது. இதற்குக் காரணம் இவ்வுலகத்தில் நாம் அடையும் சின்ன இன்பங்களில்

ஆசைவைப்பதேயாகும். இந்தச் சிற்றின்பம் ஏழு குற்றங்களை உடைத்தாயிருக்கிறது. (1) இந்த இன்பம் மிகக் கொஞ்சமானது, (2) இது நிலையில்லாதது, (3) வருத்தப்பட்டு அடையப்படுவது, (4) அனுபவிக்கையிலும் வருத்தம் கலந்துளது, (5) அனுபவித்த பிறகும் பிறப்புக்குக் காரணமாக விருப்பதால் திரும்பவும் வருத்தத்திற்குக் காரணமாக விருக்கிறது. (6) ஜீவனை உள்ளபடியறியாமல் அவித்யாகாரணமாக இது இன்பமாகத் தோன்றுவது, (7) இது இறைவனை யடைந்து பெறும் பேரின்பப் பேற்றிற்கு விரோதமாகவிருக்கின்றது. ஆதலால், மானிடராகப் பிறந்திருக்கும் நாம் கர்ம பந்தத்திலிருந்து நீங்கி மோக்ஷமடைவதற்கு முயலவேண்டுவது அவசியமாகும்.

இப் பூலோகத்திலிருக்கும்பொழுதுதான் நாம் மோக்ஷமடைய முயற்சிப்பதற்கு அருகர். சுவர்க்கம் அல்லது நரகம் அடைந்த ஜீவன் அவ்விடங்களிலே இருந்து மோக்ஷத்திற்கு வேண்டிய வேலையைச் செய்ய முடியாது. ஏனெனில், சுவர்க்கத்திலிருக்கும் ஜீவன் எப்பொழுதும் துன்பம் கலவாத இன்பத்தை யனுபவிக்கிறான். நரகத்திலிருக்கும் ஜீவன் இன்பம் கலவாத துன்பத்தையனுபவிக்கிறான். இவ்வுலகத்திலே இன்பத்தையும் துன்பத்தையும் கலந்து ஜீவன் அனுபவிக்கிறான். நிழலின் அருமை வெய்யலில் இருந்தவனுக்குத்தான் தெரியும். இன்பத்தையும் துன்பத்தையும் கலந்து அனுபவித்தால்தான் இது துன்பம் இது இன்பம் என்று பகுத்தறிய முடியும். அப்பொழுதுதான் ஜீவன் துன்பத்திற்குக் காரணம் யாது என்று ஆராய்ந்து, பிறகு அதற்கு மூலமாகவிருக்கும் பிறப்பு இறப்பு என்னும் பிணியினின்று நீங்கிப் பேரின்பத்தை யடைய முயலுவன். இதை ஸ்ரீ வைஷ்ணவர்கள் காலக்ஷேப காலங்களில் "இந்த பூலோகத்தில்தான் ஸ்ரீ ராமானுஜம் என்கிற புக்கிங் ஆபீஸ் இருக்கிறது. ஜீவன் இந்த உலகத்தில் தான் ஸ்ரீ ராமானுஜம் என்கிற புக்கிங் ஆபீஸில் பரமபதத்திற்குச் செல்ல டிக்கட்டு பெறவேண்டும்." என்று வேடிக்கையாகச் சொல்வது வழக்கம். இந்த பூலோகத்தை ஒரு இரயில்வே ஸ்டேஷனாகவும் பரமபதத்தை நாம் செல்ல நினைக்

கும் ஊராகவும் எடுத்துக்கொள்ளலாம். எப்படி நாம் ஓர் ஊருக்கு இரயில் மார்க்கமாகச் செல்லவேண்டுமானால் இரயில்வேஸ்டேஷனை முதலில் அடையவேண்டியது அவசியமோ அப்படி பரமபதத்திற்குச் செல்ல நாம் இந்த பூலோகத்தில் பிறக்கவேண்டியது அவசியமானது. இரயில்வே ஸ்டேஷனுக்குச் சென்றதும் டிக்கட்டு பெறுவதின்பேரில் நமது முழு கவனமும் இருக்கும். அதுபோல இந்த பூலோகத்தில் பிறந்திருக்கும் நாம் நல்ல ஆசானையடைந்து அவனிடம் பரமபதம் அடைவதற்கு வேண்டிய உபதேசத்தைப் பெறுவதன்மேல் கருத்தாகவிருக்கவேண்டும். டிக்கட்டைப் பெற்றதும் பிரயாணி இரயில்வே ஸ்டேஷனைப்பற்றிய எண்ணத்தை விட்டுவிட்டு தான் சேர விரும்பிய ஊருக்குப் போவதில் முழு கவனத்தையும் செலுத்துவன். அதுபோல நாம் உபதேசம்பெற்றதும் சம்சாரத்தில் அலுப்பு உண்டாகி வீடு பெறுவதில் நமது முழு கவனத்தையும் செலுத்தவேண்டும். பிரயாணிக்கு ஊருக்குச் செல்ல இரயில் வண்டி கருவியாகவிருக்கிறது. அதுபோல நாம் பரமபதம் அடைய நமது தேகம் கருவியாகவிருக்கிறது. பிரயாணம் முடிந்ததும் இரயில் வண்டியின் உதவி வேண்டியதில்லை. அதுபோல வீடுபெறுவதற்காகச் செய்யவேண்டிய வேலை முடிந்ததும் நமக்கு இந்த உடல் வேண்டியதில்லை. ஆதலால், நாம் இந்த தேகம் அழிவதன் முன்னம் வீடுபெறுவதற்கு வேண்டிய வேலைகளைச் செய்து முடித்தல்வேண்டும். தேகம் நீர்க்குமிழிபோல் நிலையற்றதாகையாலே நாளை என்று ஒதுக்கிவைக்காமல் இன்றே நலத்தையடைய முயலுதல்வேண்டும். எம்பெருமான் நமக்கு நல்ல அறிவைத் தந்தருளுவாராக!

138. பத்தருடைய வேலை:—பாபத்தையோ, புண்ணியத்தையோ, பாப புண்ணியங்களாகிய இரண்டுமற்றதையோ செய்கையாம்

139. பத்தருடைய ஸ்திதி:—கர்ம பந்தத்திலிருந்து விடுபடும்வரையில் பிறப்பு இறப்பு தொடர்ந்துவரும்.

140. முக்தருடைய ஸ்வரூபம்:—பக்தி அல்லது பிர பத்தியால் இறைவனுடைய அருளைப்பெற்றுக் கர்மபந்தத்தி லிருந்து விடுவிக்கப்பட்டு மறைந்திருந்த தனது இயற்கை யான தன்மையையடைதலாம்.

141. முக்தருடைய வேலை:-இறைவனைக்கண்டு அனு பவித்து ஆனந்தப்பெருக்கால் இறைவனுக்குகந்த வேலையைச் செய்தலாம்.

142. முக்தருடைய ஸ்திதி:—முடிவிலா ஆனந்தத் துடன் பரமபதத்தில் நித்யவாசம் செய்தலாம்.

143. நித்யருடைய ஸ்வரூபம்:—எப்பொழுதும் கர் மத்தால் கட்டுப்படாதவர்களாகையால், என்றும் தங்களு டைய நிஜஸ்வரூபத்துடன் இருக்கையாம்.

144. நித்யருடைய வேலை:--இறைவனைக்கண்டு ஆனந் தித்துக்கொண்டு தங்கள் தங்களுக்குரிய இறைவனுடைய வேலையைச் செய்தலாம்.

145. நித்யருடைய ஸ்திதி:—எப்பொழுதும் இறை வனை அனுபவித்துக்கொண்டு நித்ய விபூதியில் வீற்றிருக்கை யாம்.

146. மூவகை ஜீவர்களுக்கும் முக்கிய லக்ஷணம் சேஷத்வத்தோடு கூடிய ஜ்ஞானத்ருவத்வமாம். அதாவது இறைவனுடைய தொண்டன் என்னும் எண்ணத்துடன் கூடிய அறிவையுடைமையாம். அறிவினுடைய இயற்கை எங் கும் வியாபித்திருத்தலாகும். ஆனால், அறிவு இப்பொழுது சுருங்கியிருப்பது நமது கர்மபந்தத்தாலாகும். கர்மம் ஒழிந் ததும் அறிவு விரியும். கர்மம் ஒழிந்தால் மோக்ஷம் சித்திக் கும். தவிர, உலகத்திலுள்ள சகல பொருள்களும் இறைவ னுடைய உடம்பாய்க் காணும்பொழுது எல்லாம் அநுகூல மாகத் தோற்றவேண்டும். ஆனால், இப்பொழுது நமக்குச்

சில பொருள்கள் அநுகூலமாகவும் சில பிரதிகூலமாகவும் தோற்றுகின்றன. இதற்குக் காரணம் தேகமே ஆத்மா வென்கிற பிராந்தியும், கர்மமும், இறைவன் அனைத்திற்கும் ஆத்மாவென்கிற தெளிவு இல்லாமையுமாகும். மோக்ஷ மடைந்த பிறகு ஜீவனுக்கு சகல பொருள்களும் அநுகூல மாகவே தோன்றும். நாம் இயற்கைக் குணங்களையடைவது மோக்ஷமடைந்த பிறகுதான். ஆதலால், மோக்ஷத்திற்குச் சாதனமாகிய இறைவழி நிற்றல் சாலச் சிறந்ததாகும்.

---

## அசேதனங்கள்.

---

**147.** அசித் - அறிவில்லாதவைகள் சுத்தசத்வம், மிஸ்ர சத்வம், சத்வ சூன்யம் என மூவகைப்படும். சுத்தசத்வம் என்பது பரமபதமாம். மிஸ்ரசத்வம் என்பது ராஜச தாமச குணங்களுடன் சேர்ந்த சத்வ குணத்தை உடைத்தாயிருக் கும் பிரகிருதியாம். சத்வசூன்யம் என்பது சத்வமேயில்லாத காலமாம்.

**148.** **சுத்தசத்வம்** - அதனுடைய ஸ்வரூபம் ரஜஸ்ஸு தமஸ்ஸு ஆகிய குணங்களினுடைய கலப்பு இல்லாமல் தனி சத்வகுணத்தை யுடைத்தாயிருப்பது. சுத்தசத்வமென்பது பிரகிருதியாலாக்கப்பட்ட லீலாவிபூதியாகிய இந்த பிரம்மாண் டத்திற்குமேல் நித்தியவிபூதியாகத் துலங்குவதாம். அது பரமபதம் என்று சொல்லப்படுகிறது.

சுத்தசத்வமானது சோதியையே வடிவாக உடையது. சூரியனுடைய வெளிச்சம் அதற்கு மின்மினிப் பூச்சிபோன் றது. அது நிமிடத்திற்கு நிமிடம் அதிக அற்புதமாகத் தோன்றும். பிரம்மாண்டத்திற்கு வெளிச்சங் கொடுக்கத் தனி யான சோதி உருவம் வேண்டியது. சுத்தசத்வம் வேறொன்

றின் உதவியில்லாமல்தானே பிரகாசமாகவிருக்கும். ஆதலால், அது அஜடம் எனப்படும்.

149. ஸ்திதி - பிரம்மாண்டம் காலத்திற்கேற்க மாறுதலையடையும். சுத்தசத்வம் எப்பொழுதும் ஒரேமாதிரியாகவிருக்கும். அது பரமபதத்திலே கோபுர பிரகாரங்களாகவும், ஈச்வரன், நித்யர், முக்தர், இவர்களுடைய திருமேனியாகவும் அழிவில்லாமல் விளங்குகிறது.

150. பிரவிருத்தி - அது நித்யர் முக்தர் ஆகிய இவர்களால் இறைவனுக்குச் செய்யப்படும் தொண்டிற்கு உதவியாகவிருக்கிறது.

151. பிரகிருதி - இதனுடைய ஸ்வரூபம் சத்வம், ரஜஸ்ஸு, தமஸ்ஸு ஆகிய முக்குணங்களுடன் கூடியிருப்பதாம். அதனால்தான் இதற்கு மிஸ்ரசத்வம் என்று பெயர். இந்த முக்குணங்களும் பிரகிருதியினிடத்தில் எப்பொழுதுமிருக்கின்றன. நமது உடம்பில் வாத பித்த சிலேத்தும நாடிகள் சமமாயிருக்கும்பொழுது ஒரு வியாதியுமில்லாமலும் அவை விகாரமடையும்பொழுது வியாதி உண்டாவதும்போல இது மூன்று குணங்களும் சமமாயிருக்கும்பொழுது கண்ணுக்குத் தோன்றாத (சூக்ஷ்மமாயிருக்கும்) மூலப் பிரகிருதியாகவும், அக்குணங்கள் பேதப்படும்பொழுது கண்ணுக்குத் தோற்றுவதான பிரம்மாண்டமாகவு மாகின்றது. குணங்களை நாம் பிரத்யக்ஷத்தில் அறியமுடியாது. அவைகளால் ஏற்படும் காரியங்களிலிருந்துதான் அவைகளை நாம் அறியலாம். சத்வ குணமானது ஒன்றை உள்ளபடி அறிவிக்கும். ராஜஸ குணமானது த்வேஷத்தையும், ஆசை, பயம், கோபம் ஆகிய குணங்களையும் உண்டாக்கும். இது ஒருவனுடைய மனதை அலையச் செய்யும். இக் குணம் நீங்கினால்தான் ஒருவனுக்குச் சாந்தியுண்டாகும். தாமஸ குணம் ஒன்றை உள்ளபடி அறியச் செய்யாது. இக்குணம் ஒருவனுக்குச் சோம்பலை உண்டாக்கும். இம்மூன்று குணங்களும் சமமாயிருக்கும்பொழுது இவைகளுடைய காரியம் கண்ணுக்குப் புலப்படாது.

பிரகிருதியானது அவித்யை என்றும் மாயை என்றும் வழங்குகிறது. மஹத் முதலிய விகாரங்களை தன்னிடத்தில் நின்றும் பிறப்பிக்கின்றமையாலே இது பிரகிருதி என்று சொல்லப்படுகிறது. இது ஞானத்திற்கு விரோதியாகையாலே "அவித்யை" என்றும், ஒன்றைப்போல ஒன்று இராத ஆச்சரியகரமான சிருட்டியைச் செய்கையாலே மாயை என்றும் கூறப்படுகிறது.

மூன்று குணங்களும் பேதப்படும்பொழுது இது இருபத்திநான்கு தத்துவங்களாக ஆகின்றது. இவற்றில் முதல் தத்வம் பிரகிருதியாகும். இந்தப் பிரகிருதியானது "அவிபக்த தமஸ்ஸு" என்றும் "விபக்த தமஸ்ஸு" என்றும் இரண்டு அவஸ்தைகளை உடைத்தாயிருக்கிறது. அவிபக்த தமஸ்ஸு என்பது சம்ஹார காலத்தில் அதாவது பிரளய காலத்தில் அவ்யக்தா அவஸ்தை குலைந்து அக்ஷராவஸ்தமாய், அது தானும் குலைந்து அதி சூக்ஷ்மமாய் தமஸ்சப்தவாச்யமாய் நாமரூப விபாக யோக்யமில்லாதபடி ஈச்வரனுடன் மூலப்பிரகிருதி லயித்து இருக்கு மிருப்பாம். விபக்ததமஸ்ஸு என்பது சிருட்டி காலத்தில் ஈச்வரனால் ஏவப்பட்டு நாம ரூப விபாக யோக்கியமாம்படி ஈச்வரன் பக்கல் நின்றும் விபக்தமாய் பிரிந்து கார்யத்திற்கு யோக்கியமாய் இருக்குமிருப்பாம்.

உலக சிருட்டி காலத்திலே ஈச்வர சங்கல்பத்தால் (நினைவால்) மூலபிரகிருதியானது தமோ அவஸ்தை குலைந்து ஜீவ சமூகத்தைக் கர்ப்பமாகக் கொண்டுளது என்று சொல்லும்படியான அக்ஷராவஸ்தையையடையும். மூலப்பிரகிருதி விதை போன்றது. அக்ஷரம் தண்ணீரால் நனைக்கப்பட்ட விதை போன்றது. அது பிறகு அவ்யக்த அவஸ்தையை யடைகின்றது. அவ்யக்தம் தண்ணீரில் ஊறி உப்பின விதை போன்றது. அவ்யக்தத்திலிருந்து மஹத் தோன்றும். மஹத் என்பது முளை கிளம்பின விதை போன்றது. செடியினுடைய குணம் விதையில் அடங்கி இருந்தாலும் விதை முளைத்த பிறகுதான் அதனுடைய குணம் தோன்றுகிறது. அதுபோல பிரகிருதியில் மூன்று குணங்களும் எப்பொழுதும் அடங்கி

இருந்தாலும் அவை பிரகிருதியானது மஹத் அவஸ்தையை அடைந்த பிறகுதான் தோன்றுகின்றன. மஹத் அவஸ்தையிலே மூன்று குணங்களும் பிரகாசத்தாலும், பிரவர்த்தியினுலும், மோகத்தினுலும் சாத்வீகம், ராஜஸம், தாமஸம் என்று ஊகிக்கும்படியான நிலையில் இருக்கின்றன. மஹத் என்பது புத்தி தத்வம் எனப்படும். மஹத்திலிருந்து தேகம் ஆத்மா இவைகளின்பேரில் அபிமானம் உண்டாவதற்குக் காரணமாகவிருக்கும் அஹங்காரம் என்னும் தத்வம் உண்டாகிறது. இது நன்ருய் வளர்ந்த செடிபோன்றது. இதில் மூன்று குணங்களும் நன்ருய்த் தோன்றும். அதிகமாகத் தோன்றும் குணத்திற்கு ஏற்க ஸாத்வீக அஹங்காரமென்றும், ராஜஸ அஹங்காரமென்றும், தாமஸ அஹங்காரமென்றும் "அஹங்காரம்" என்னும் தத்வம் மூவகைப்படும். இவை முறையே வைகாரிகம், தைஜஸம், பூதாதி என்றும் சொல்லப்படும். சாத்வீக அஹக்காரமென்கிற வைகாரிகத்திலிருந்து பார்க்க கண்ணும் (சக்ஷுஸ்), வாசனையறிய மூக்கும் (கிராணம்), உருசியறிய நாக்கும் (ரஸநம்), கேட்கக் காதும் (ச்ரோத்ரம்), குளிர்ச்சி உஷ்ணம் இவைகளையறிய உடம்பெங்கும் பரவியிருக்கும் தோலும் (த்வக்) ஆகிய ஐந்து ஞானேந்திரியங்களும், பேச வாயும் (வாக்கு), வேலைசெய்யக் கைகளும் (பாணி), நடக்கக் கால்களும் (பாதம்), மலங்கழிக்கப் பாயுவும் சுகிக்கக் குறியும் (உபஸ்தம்) ஆகிய ஐந்து கர்மேந்திரியங்களும் இவைகளை நடத்த மனதும் ஆக பதிஞெரு இந்திரியங்களும் உண்டாகும். உடலாகிய வண்டியிலே ஞானேந்திரியங்கள் ஐந்து கர்மேந்திரியங்கள் ஐந்து ஆக பத்து இந்திரியங்களாகிய குதிரைகளைப் பூட்டியிருக்கிறது. குதிரைகளுக்கு கடிவாளம்போல மனது இருக்கின்றது. ஆதலால்தான் ஆன்ருேர்கள் மனது அடங்கினுல் எல்லா இந்திரியங்களும் அடங்கி நமது சுவாதீனப்படுமென்றும் அதற்காகப் பல யோக முறைகளையும் ஈச்வர உபாசனையையும் ஏற்படுத்தியிருக்கிருர்கள். தாமஸ அஹங்காரமாகிய பூதாதியினின்று சூக்ஷ்ம பூதங்களாகிய சப்த, ஸ்பரிச, ரூப, ரஸ, கந்தமென்கிற ஐந்து தன்மாத்திரைகளும், இவைகளுடைய ஸ்தூலமாகிய ஆகாசம் (Ether) வாயு (காற்று) தேஜஸ்ஸு (அக்கினி அல்லது

நெருப்பு) அப்பு (ஜலம் அல்லது தண்ணீர்) ப்ரதிவி (பூமி) என்கிற ஐந்து மஹா பூதங்களும் உண்டாகும். விதை முளைப்பதற்கு ஜலம் உதவியாகவிருப்பதைப்போல சாத்வீக தாமஸ அஹங்காரங்களினின்று உண்டாகும் இந்திரியங்களும் பூதாதிகளும் வேலை செய்வதற்கு உதவுவது இராஜஸ அஹங்காரமாம்.

சாத்வீக அஹங்காரமானது தன்மாத்திரைகளை உதவியாகக்கொண்டு ஜ்ஞானேந்திரியங்களையும், ஜ்ஞானேந்திரியங்களைச் சகாயமாகக்கொண்டு கர்மேந்திரியங்களையும் உண்டாக்குகிறது. பயிருக்கு ஜலம்போல இந்திரியங்களுக்கு ஆகாசாதி பூதங்கள் போஷகங்களாம். இவைகள் கீழ்கண்ட சக்கரத்தில் (Table) குறிக்கப்பட்டுள.

சாத்வீக அஹங்காரத்தினின்று உண்டாகும் இந்திரியங்களினுடைய சிருட்டி விபரம்.

| ஜ்ஞானேந்திரியங்களின் உற்பத்திக்கு உதவியாகவிருக்கும் தன்மாத்திரைகள். | ஒவ்வொரு தன்மாத்திரையின் உதவியால் முறையே உற்பத்தியாகி கர்மேந்திரியங்களின் உற்பத்திக்கு உதவியாகவிருக்கும் ஜ்ஞானேந்திரியங்கள். | ஒவ்வொரு ஜ்ஞானேந்திரியங்களின் உதவியால் முறையே உற்பத்தியான கர்மேந்திரியங்கள். | ஒவ்வொரு கர்மேந்திரியத்திற்கும் முறையே போஷகமாகவிருக்கும் பூதங்கள். | குறிப்பு. |
|---|---|---|---|---|
| சப்த தன்மாத்திரை | காது | வாக்கு | ஆகாசம | ஜ்ஞானேந்திரியங்களுக்கும் கர்மேந்திரியங்களுக்கும் சகாயமாக மனதைக் கூடவே சிருட்டிக்கும். |
| ஸ்பரிச தன்மாத்திரை | தொக்கு (தோல்) | கை | வாயு | |
| ரூப தன்மாத்திரை | கண் | பாதம் | தேயு (நெருப்பு) | |
| ரச தன்மாத்திரை | நாக்கு | உபஸ்தம் (குறி) | அப்பு (நீர்) | |
| கந்த தன்மாத்திரை | மூக்கு | பாயு | பிருதிவி | |

இவ்விதமாக இந்த மிஸ்ர தத்வமானது பிரகிருதி, மஹத், அஹங்காரம், 5 ஜ்ஞானேந்திரியங்கள், 5 கர்மேந்திரியங்கள், மனது, 5 தன்மாத்திரைகள், 5 பூதங்கள் ஆக இருபத்தி நான்கு தத்வங்களைக் கொண்டுளது. ஜீவன் என்னும் சித் 25-வது தத்வம். ஈச்வரன் 26-வது தத்வம். என தத்வங்கள் 26 என்று பூர்வாசாரியர்கள் வகுத்துளர். தத்வங்களின் சங்கியை பலவிதமாக பிறர் சொல்லுவார்கள். பிறர் மிஸ்ரசத்துவத்தின் 24 தத்வங்களினுடைய உள் பிரிவுகளைச் சேர்த்து கணக்கிடுவார்கள். ஆனால் முக்கியமாகவிருக்கும் தத்வங்கள் இருபத்தாறு தான்.

மிஸ்ர தத்வமானது அறிவை உடையதாயில்லாமையால் தானே ஒன்றைச் செய்ய முடியாது. ஈச்வரன் சர்வக்ஞனாகவும் சர்வ வியாபகனாகவுமிருக்கிறான். ஈச்வரன் தான் பலவாக ஆக நினைத்தான். ஆதலால் சூக்ஷ்மசித் அசித் (கூடியிருக்கிற) விசிஷ்ட ஈச்வரன் உலக சிருட்டிக்கு உபாதான காரணமாகின்றான். விரும்பிய ஈச்வரனே * பலவாக ஆகினதால் உலக சிருட்டிக்கு சங்கல்ப விசிஷ்ட ஈச்வரன் உபாதான காரணமாகிறான். உலக சிருட்டிக்குச் சகாயமாகவிருந்தவை ஈச்வரனுடைய ஞானமும் சக்தியும். ஆகையால் ஞான சக்தி விசிஷ்ட ஈச்வரனே சஹகாரிகாரணமுமாகின்றான். ஆதலால் உலக சிருட்டிக்கு ஈச்வரன் தான் மூன்று காரணமுமாகவிருக்கின்றான் என்று சொல்லப்பட்டது.

ஈச்வரன் தானே பலவாக ஆகின்றான் எனில், ஈச்வரன் தமஸ்ஸை தனது உடலாகக்கொண்டு அக்ஷரமாகின்றான், அக்ஷரத்தை தனது உடலாகக்கொண்டு அவ்யக்தமாகின்றான், அவ்யக்தத்தை தனது உடலாகக் கொண்டு மஹத் ஆகின்

---

* கண்ணுக்குப்புலனாகும் பல உருவங்கள் பிரகிருதியாலானவை. ஆனால் அவைகளுக்குள் அந்தர்யாமியாகவிருந்து ஆட்டிவைப்பவன ஈச்வரன் ஆம். ஈச்வரன் உள்ளிராவிட்டால் பிரகிருதியால் ஆன உருவங்கள் சத்தை இல்லாதவைகளாகிவிடும். ஆதலால் ஈச்வரன் தான் பலவாக ஆகின்றான் என்றுச் சொல்லப்பட்டிருக்கிறது.

ருன், இவ்விதமாக 24 தத்வங்களாகவும் தானே ஆகின்றான் என்பதாம். இது "சமஷ்டி ஸ்ருஷ்டி" என்றும் "* அத்வாரா கஸ்ருஷ்டி" என்றும் சொல்லப்படும்.

நாம் உலகத்திலே மனிதர், மிருகம், தாவரம் எனும் பல பொருள்களைப் பார்க்கிறோம். தவிரவும், ஒவ்வொரு பொருளிலும் பல பேதமுள்ளவைகளைப் பார்க்கிறோம். இது பஞ்சீகரணத்தாலே (ஐந்து பூதங்களின் கலப்பாலே)உண்டாவதாம். ஆகாசாதி பூதங்கள் ஐந்தையும் தனித்தனியாக இருகூறாக்கி, அவற்றில் ஒரு கூறை நான்கு பங்கு ஆக்கிமற்றப்பூதங்களில் ஒவ்வொரு பூதத்திலும் எல்லாப் பூதங்களுடைய குணங்களுமிருக்கும்படி செய்வது பஞ்சீகரணம் எனப்படும். ஒவ்வொரு பூதத்திலும் அதனுடைய குணம் பாதியிருத்தலால் அந்தந்தப் பூதங்களிலும் அவ்வவற்றின் குணம் விஞ்சி நிற்கும் என்பதற்குச் சந்தேகமில்லை. பூதங்கள் தனித்த நிலையில் பல உருவங்களாக அமைய சக்தியற்றவை. ஆனால், அவைகள் பஞ்சீகரணத்தால் பல உருவங்களாக அமைய சக்திவாய்ந்தவைகளாகின்றன. தனது கர்மத்திற்கேற்கச் சுக துக்கங்களை அனுபவிப்பதற்காக ஜீவனுக்கு பூதங்களின் பஞ்சீகரணத்தாலும் மஹத் அஹங்காரங்களாலும் ஆகிய உடலைத்தந்து ஈச்வரனும் இரண்டுக்கும் (ஜீவனுக்கும் உடலுக்கும்) ஆத்மாவாக வீற்றிருக்கின்றான்.

பிராணன் என்பது மற்ற இந்திரியங்களை நடத்த ஜீவனுக்குக் கருவியாகவிருக்கிறது. பிராணன் என்பது ஒரு புதுமையான வஸ்து அல்ல. அது வாயுவினுடைய வேறுபட்ட நிலைமையேயாகும். பிராணன் மிகவும் முக்கியமானது. ஏனெனில், பிராணனில்லாமல் மற்ற இந்திரியங்கள் வேலை செய்ய சக்தியற்றவையாம். இந்திரியங்கள் என்றால் அவைகள் உள்ள அவையவங்களல்ல. ஆனால், அவ்வவையவங்களிலுள்ள சக்திகளுக்குத்தான் இந்திரியங்கள் என்று பெயர். மரணகாலத்தில் இந்திரியங்களெல்லாம் பிராணனுடன் ஐக்கிய

* அத்வாராகம் = தானே.

மாகி வெளியாகின்றனவென்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆதலால், இந்திரியங்கள் அணுக்களாம். உடலையும் இந்திரியங்களையும் காப்பாற்றும் படியான பிராணன் என்பது பிராணன், அபானன், வியானன், உதானன், சமானன் என அது செய்யும் வேலையின் காரணம் பற்றி ஐவகைப் பெயர்களை உடைத்தாயிருக்கிறது. பிராணன் இரத்தத்தைச் சுத்தப் படுத்தும். சமானன் உண்ட உணவை ஜீர்ணிக்கச்செய்யும். வியானன் இரத்தத்தை ஓடச்செய்யும். அபானன் ஜீர்ணமான உணவைத் தள்ளிவிடும். உதானன் ஜீவன் உடலை விட்டுப் பிரியும்பொழுது ஜீவனை வெளிப்படுத்தும்.

வெவ்வேறாகவிருக்கும் மண், மணல், ஜலம் முதலிய பொருள்களைச்சேர்த்து சுவர்கட்டு வாரைப்போன்று ஈச்வரன் மஹத்முதல் பிரதிவி பர்யந்தமான தத்வங்களை ஒன்றோடொன்று கலக்கும்படியாகச் சேர்த்து அவற்றைக்கொண்டு இவ்வண்டத்தைச் சிருட்டித்தான். இவ்வண்டத்துக்குட்பட்ட அதல, விதல, நிதல, தலாதல, மகாதல, சுதல, பாதாளமென்னும் கீழ் ஏழு உலகங்களையும், மனிதர் வசிக்கும் பூலோகம், அதற்குமேல் சூரியனுக்குக் கீழுள்ள கந்தர்வர்கள் வசிக்கும் புவர்லோகம், சூரியனுக்குமேல் துருவனுக்குக் கீழ்கிரக, நக்ஷத்திர, இந்திராதிகள்வசிக்கும் சுவர்லோகம், துருவனுக்கு மேல் அதிகாரத்தினின்று விடப்பட்டவராய் அதிகார அபேக்ஷிதரான இந்திராதிகள்வசிக்கும் மகர்லோகம். அதற்குமேல் ஜனகாதி பரமயோகிகள் வசிக்கும் ஜன லோகம், அதற்கு மேல் பிரஜாபதிகள் வசிக்கின்ற தபோலோகம், அதற்குமேல் பிரம்மா, விஷ்ணு, சிவன் இவர்கள் வசிக்கும் சத்தியலோகம் ஆகிய மேல் ஏழு உலகங்களையும் சிருட்டித்து, அவைகளில் தேவ, மனுஷ்ய, திரியக், தாவர ஜீவ வியாபகம் செய்வதற்கு பிரம்மாவைச் சிருட்டித்து, பிரம்மா முதலிய சேதனர்களுடைய இருதயங்களில் வீற்றிருந்து சங்கல்ப ஜ்ஞானாதிகளை உண்டாக்கி இறைவன் சிருட்டிக்கிறான். இது வ்யஷ்டி ஸ்ருஷ்டி (வியாபகம்) அல்லது சத்வராக ஸ்ருஷ்டி (ஒருவனால் உண்டாக்கப்படுமது) என்று சொல்லப்படும்.

இந்தப் பிராம்மாண்டத்தைவிட 10-மடங்கு அதிகமான ஜலதத்வமும், அதை அதைவிட 10-மடங்கு அதிகமான தேஜஸ் தத்வமும், அதை அதைவிட 10-மடங்கு பெரியதான வாயு தத்வமும், அதை அதைவிட 10-மடங்கு பெரிதான ஆகாச தத்வமும், அதை அதைவிட 10-மடங்கு பெரிதான மஹத் தத்வமும், அதை சுற்றிப் பிரகிருதி தத்வமும், இருக்கின்றன. இவைகள் அண்டத்துக்கு ஆவரணம் என்று பெயர். ஏழாவரணங்களால் சூழப்பட்ட இவ்வண்டம் ஈச்வரனுக்கு விளையாட்டுக் கருவியாகிய பந்து போன்றது. அண்டங்கள் பலவுள. ஒவ்வொரு அண்டத்திற்கும் பிரம்மா முதலிய தேவர்கள் வெவ்வேறு உளர்.

**152. ஸ்திதி அல்லது இருப்பு:**—பிரகிருதி எப்பொழுதும் உளது. ஆனல் பிரகிருதியினின்று உண்டாகும் பொருள்கள் மாறத்தக்கவை. அவைகள் கொஞ்சகாலம் இருந்து மறுபடி யும் பிரகிருதியாக மாறிவிடுகின்றன.

**153. பிரவிருத்தி அல்லது வேலை:**-உலக சிருட்டியால் ஈச்வரனுக்கு ஆகவேண்டியது ஒன்றுமில்லை. உலக சிருட்டியானது ஈச்வரனுக்கு விளையாட்டாகவேஇருக்கின்றது என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆதல்பற்றிதான் இந்த பிரம்மாண்டத்திற்கு "லீலாவிபூதி" என்று பெயர். ஆனல், உலக சிருட்டியானது ஜீவர்கள் தங்கள் தங்களுடைய கர்ம பலத்தை யனுபவிக்கவும் கர்மபந்தத்திலிருந்து நீங்கி மோக்ஷமடையவும் இன்றியமையாதது. மஹா பிரளய காலத்தில் ஜீவர்களுடைய தேகத்தையும் மனதையும் இறைவன் வாங்கிவிடுகின்ருன். அப்பொழுது அவர்கள் சேதனர்களாகவிருந்தும் கல்லைப் போல் ஆகின்ருர்கள். உலக சிருட்டியின்பொழுது அவர்கள் திரும்பித் தேகத்தையும் மனதையும் அடைகிருர்கள். இந்த உலகமானது ஜீவர்களுக்கு ஓர் பள்ளிக்கூடம் போல இருக்கின்றது. எப்படி பாடசாலை செல்லும் மாணவர்கள் உபாத்தியாயர் சொல்லும் வார்த்தைகளைக் கேட்டுச் சோம்பலின்றிக் கவனத்துடன் பாடம் பயின்றுவந்தால் பாடசாலை சென்ற பயனையடைவார்களோ அப்படி பூலோகத்தில் பிறந்திருக்கும்

ஜீவர்களாகிய நாம் வேதாதி சாஸ்திரங்களும் ஆசாரியனும் சொல்லும் வார்த்தைகளைக் கேட்டு சோம்பலின்றி வைராக்கியத்துடன் அவர் சொல்வழிநிற்போமாயின் நாம் பெற்றிருக்கும் பிறவியின் பயனை யடைவோம்.

154. பிரகிருதியால் ஆக்கப்பட்ட இவ்வுலகமானது ராஜஸம், தாமஸம், சத்வம், எனும் முக்குணங்களை உடைத்தாயிருக்கிறது. பிரகிருதியில் சம்பந்தப்பட்டிருக்கும் நம்மை இம்முக்குணங்களும் பற்றுகின்றன. ராஜஸம், தாமஸம் எனும் இவ்விரு குணங்களும் நம்மை அவித்யையின்பால் படுத்தி நாம் கொண்டிருக்கும் சரீரங்களுக்காகவே வேலை செய்யும்படியாகச்செய்து கர்மத்தில் காலூன்றி இறப்புப் பிறப்புக்களை வற்றாத ஆற்றுப்பிரவாகம் போல் ஒன்றின்பின் ஒன்றாக அடையும் படியாகச் செய்கின்றன. ராஜஸம், தாமஸம் எனும் குணங்கள் உயிருக்கு (ஜீவனுக்கு) வியாதிபோன்றன. தேகத்திற்கு வியாதி வந்துவிட்டதென்றால் தகுந்த வயித்தியரைத் தேடி மருந்து உண்டு வியாதியைப் போக்கிக் கொள்ளுவோமல்லவா? அதுபோல, உயிருக்கு பெரும் வியாதியாகவிருக்கும் ராஜஸம் தாமஸம் எனும் துர்க்குணங்களைச் சாஸ்திரங்களையும் ஆசாரியனையும் தேடி அடைந்து உண்மையை யறிந்து அதன்படி ஒழுகிப்போக்கிக்கொள்ள வேண்டுவது நமது கடமையல்லவா? உண்மைவழி நிற்றலால் சாத்வீகம் தலை எடுத்து ராஜஸ தாமஸாதி குணங்கள் அடங்கிவிடும். பிறகு இறைவனருளால் கர்மபந்தத்தினின்று விடுவிக்கப்பட்டு மோக்ஷத்தை யடைவோம். இதுதான் நாம் இப் பிறவியை யடைந்ததின் பயனாகும்.

155. காலத்தின் ஸ்வரூபம்—காலத்தில் கொஞ்சங்கூட சத்வகுணம் இல்லாமையால் இது சத்வ சூன்யம் என்று சொல்லப்படுகிறது. இது ஜடமாம். இது பிரகிருதியிலும் சுத்த சத்வத்திலும் பரவியிருக்கின்றமையால் இது விபு ஆம்.

156. ஸ்திதி—காலம் எப்பொழுதும் இருக்கின்றது. அதாவது, காலம் அழிவில்லாதது.

157. வேலை—விநாடி, நாழிகை, நாள், வாரம், மாதம், வருஷம் எனப் பிரிவுகளையடைந்து சிருட்டி, காப்பாற்றல், அழித்தல் ஆகிய மூன்று காரியங்களுக்கும் ஈச்வரனுக்கு உதவியாகவிருக்கின்றது. கலியுகம் 4,32,000 வருடங்களுள்ளது. துவாபரயுகம் இதில் இரண்டு பங்கு கொண்டது. த்ரேதாயுகம் கலியுகத்தில் மூன்று பங்கு கொண்டது. கிருத யுகம் கலியுகத்தில் நான்கு பங்கு கொண்டது. இந் நான்கு யுகங்களும் ஆயிரம்தடவைகளானல் பிரம்மாவுக்கு ஒரு பகலாம். இந்தப் பகல் முடிவில் பூலோகம், புவர்லோகம், சுவர் லோகம் எனும் இம்மூன்று உலகங்களையும் இறைவன் அழிக்கின்றான். பிரம்மாவிற்கு ஆயுள் நூறுவருடங்களாகும் பிரம்மாவினுடைய ஆயுள் முடிவில் ஜனலோகம், தபோலோகம், சத்தியலோகம் ஆகிய இம்மூன்று உலகங்களையும் இறைவன் அழிக்கின்றான். மஹர்லோகம் என்னும் நான்காவது உலகத்தின் கீழ்பாகம் பிர்ம்மாவின் ஓர் பகலின் முடிவில் மற்றக் கீழ் மூன்று உலகங்களுடன் அழிக்கப்படும். மேல்பாகம் பிரம்மாவின் ஆயுசு முடிவில் மற்ற மேல் மூன்று உலகங்களுடன் அழிக்கப்படும். கீழ்மூன்று உலகங்களை கிருத (செய்யப்பட்ட) உலகங்ளென்றும், மேல் மூன்று உலகங்களை அகிருத (செய்யப்படாத) உலகங்களென்றும், நான்காவது உலகமாகிய நடு உலகத்திற்கு கிருத அகிருத உலகமென்றும் பெயர். எல்லா உலகங்களும் இறைவனால் சிருட்டிக்கப்பட்டவைகள்தான். ஆனல், மேல் மூன்று உலகங்களும் கீழ்மூன்று உலகங்களை விட அநேக மடங்கு நீடித்திருக்கின்றனவாகையால் அவை அகிருதம் என்று சொல்லப்படுகின்றன. சுத்த சத்வமாகிய பரமபதம் சிருட்டி அழிவு ஆகிய தொழில்களுக்கு உட்படாதிருக்கின்றமையால் அவ்விடத்தில் காலம் நித்தியமாம்.

## ஈச்வரன்.

158. ஈச்வரனுடைய ஸ்வரூபம்:—இறைவனைச் சேதனர்களாகிய ஜீவர்கள் அசேதனங்களாகிய சுத்தசத்வம், பிரகிருதி, காலம் ஆகிய இவைகளினின்றும் வேறு என்று பிரித்துக்காட்டுவன சத்யத்வம், ஞானத்வம், அநந்தத்வம், ஆனந்தத்வம், அமலத்வம் எனும் ஐந்து இயல்புகள் (ஸ்வரூபங்கள்) ஆம்.

சத்யத்வம் - எம்பெருமான் விகாரமற்றவர் என்பதால் பரிணாம ரூபமாகிய விகார தோஷங்களுக்குட்பட்ட அசேதனங்களைவிட வேறு என்பது புலனாகும். ஈசுரன் எப்பொழுதும் ஒரேவிதமான பரந்த ஞானத்தையுடையவன் என்பதால் கர்மத்திற்கேற்ற சுருக்கமும் விரிவும் ஆன ஞானத்தையுடைய பத்த ஜீவர்களையும் எங்கும் பரந்த ஞானத்தை யடைந்திருக்கும் முக்தர்களையும்விட வேறு என்பது தோன்றும்.

ஞானத்வம் - ஞானத்தைத் தனக்கு வடிவாகவும் குணமாகவும் உடையவன். எப்பொழுதும் பரந்த ஞானத்தையுடையவனாகையால் முக்தர்களைவிட வேறு என்பது புலனாகும்.

அநந்தத்வம் - ஈசுரனுக்கு இடத்தாலும் காலத்தாலும் பொருளாலும் அளவு கிடையாது என்பதால் அசேதனங்களாகிய சுத்த சத்வம் பிரகிருதி இவைகளைவிட இறை வேறு என்பதும், நித்ய முக்த பத்த ஜீவர்களைவிட இறை வேறு என்பதும் புலனாகும். இறைவன் சேதன அசேதனங்களாகிய அனைவற்றிற்கும் ஆத்மாவாக விருக்கின்றான் என்பதால் அவனில்லாத இடமாவது, பொருளாவது, காலமாவது கிடையாது என்பது நன்கு விளங்கும்.

ஆனந்தத்வம் - இறைவன் ஆனந்தத்தையே வடிவாக உடையவன். ஆதலால், அவனை அடைந்தவர்கள் ஆனந்தத்தையடைகிறார்கள்.

அமலத்வம் - ஈச்வரன் அகிலஹேயப்ரத்யநீகன் அதாவது எல்லா குற்றங்களுக்கும் எதிர்கட்டானவன் ஆம். இருட்டுக்கு வெளிச்சம்போலவும், பாம்புக்கு கருடனைப்போலவும், மூன்றுவிதமான அசேதனங்களுடைய பரிணாம ரூபமான விகார தோஷங்களுக்கும் பத்தருடைய அஞ்ஞான தோஷங்களுக்கும் முக்தருடைய சம்சாரத்திலிருந்து விடுபட்ட தோஷத்திற்கும் ஈசுரன் மாறியிருக்கின்றான். மேலும், இறைவன் தன்னை ஆசிரிப்பவர்களுடைய சகல தோஷங்களையும் போக்குமவனாக விருக்கின்றான். சிறையில் அடைபட்டிருக்குமொருவன் சிறையிலிருக்கும் மற்றொருவனை சிறையினின்று விடுவிக்க முடியாது. சிறையில் அடைப்பட்டிராத ஒருவன்தான் சிறையிலிருக்குமவனை விடுவிக்க இயலும். அதுபோல இறைவன் ஒரு குற்றமுமில்லாதவனாகவிருந்தால்தான் தன்னை அடைந்தவர்களை குற்றங்களிலிருந்து விடுவிக்க முடியும். ஆதலால் இறைவன் குற்றமற்றவனாம்.

இறைவன் குற்றமுள்ளவனா அல்லனா என்று விசாரிக்குங்கால், அடியிற்கண்ட மூன்று சந்தேகங்கள் எழும். அவையாவன:—(1) இருதய கமலத்திலே இறைவன் எழுந்தருளி இருக்கின்றமையால் ஜீவனைப்போல் இறைவன் சுகதுக்கங்களை அனுபவிக்கமாட்டானா? (2) சீழ், நரம்பு, இரத்தம் முதலியவைகளாலாகிய இவ்வுடலில் ஈசுரன் இருப்பதால் அசுத்தம் இறைவனைப் பாதிக்காதா? (3) இறைவன் சகலத்திற்கும் ஆத்மாவாக இருக்கின்றமையால், இறைவனுக்குச் சகலமும் உடம்பாகின்றது. ஆதலால், சாஸ்திரப்படி உடலாலாகிய கர்மங்கள் இறைவனைப் பாதிக்காதா?

"ஒரு மரத்தில் இரண்டு பறவைகள் உட்கார்ந்து கொண்டு இருக்கின்றன. அதில் ஒருபறவை அம் மரத்திலுள்ள பழத்தைச் சாப்பிடுகின்றது. மற்றொரு பறவை அதைப் பார்த்துக்கொண்டிருக்கிறது. அதுபோல, இவ்வுடலிலுள்ள இருதய கமலத்திலே ஜீவனும் இறைவனும் வீற்றிருக்கின்றனர். ஜீவன் தனது கர்ம பலத்தை உடலால் அனுபவிக்கிறான்." என்று முண்டக உபநிஷத்தில் கூறியுளது. ஆத

லால், இறைவன் ஜீவனைப்போல சுகதுக்கங்களையனுபவிக்க வில்லை என்பது விளங்கும்.

ஜீவன் ஒரு தேகத்தையடைவது கர்மவசத்தாலேயாம். இறைவன் ஒரு தேகத்தையடைவது தனது இச்சையாலே யாம். ஒவ்வொரு ஜீவனும் அவனவனுடைய கர்மபலத்தை யனுபவிப்பதற்காக இறைவன் தேகத்தைக் கொடுத்து ஆள் கிறான். இறைவனுக்கு இது திருவிளையாடலேயாகும். ஆக லால், ஈசுரனைத் தேகத்திலுள்ள அசுத்தம் பாதிக்காது.

ஈசுரனைச் சூரியனுக்கும் ஆகாசத்திற்கும் ஒப்பிட்டுச் சாத்திரங்கள் கூறுகின்றன. சூரியனுடைய பிம்பம் தண்ணீ ரில் ஒருவிசை சிறியதாகவும் ஒருவிசை பெரியதாகவும் தோன்றுகிறது. ஆனால், சூரியன் எப்பொழுதும் ஒரேமாதிரி யாகத்தான் இருக்கின்றான். பல உருவங்களையுடைய குடங்க ளொவ்வொன்றிலும் ஆகாசம் இருந்தாலும் குடங்களுடைய உருவங்கள் ஆகாசத்தினுடைய உருவத்தை பாதிக்கா. இவைபோல இறைவன் சகலத்திலும் இருந்தாலும் அவைக ளுடைய குற்றங்கள் இறைவனைப் பாதிக்காது. ஆதலால், இலறைவன் அமலனாம்.

மேற்கூறியுள சத்யத்வம், ஞானத்வம், அநந்தத்வம், ஆனந்தத்வம், அமலத்வம் ஆகிய இவை ஐந்தும் **ஸ்வரூப நிரூபக தர்மங்கள்** என்று சொல்லப்படும்.

இறைவன் அமலனாகவிருப்பதுடன் எண்ணிறந்த கல்வி யாண குணங்களை உடையவனாகவிருக்கின்றான். சாஸ்திரத் தில், ஈசுரன் நிர்குணன் என்று சொல்லியிருக்க, ஈசுரன் அநந்த கல்யாண குணங்களை உடையவன் என்பது எப்படிப் பொருந்தும்? "நிர்குணன்" என்பதற்கு ஈசுரன் நமக்கு இருக்கும் பிரகிருதி சம்பந்தமான தோஷ குணங்களைப்போ லில்லாமல் மிகச் சிறந்த குணங்களெல்லாவற்றையும் உடைய வன் என்று பொருளாம். இவ்விதமான சிறந்த குணங்களுக் குள் **ஞானம், பலம், ஐஸ்வர்யம், வீர்யம், சக்தி, தேஸஸ**

ஆகிய இவைகள் ஷட்குணங்கள் (ஆறு குணங்கள்) என்று சொல்லப்படும். இவ்வாறு குணங்களும் எம்பெருமானுடைய உயர்த்தியைக் காண்பிக்கின்றன.

(1) ஞானமாவது எல்லாவற்றையும் ஒரே காலத்தில் அறியும்படியான வல்லமை அதாவது சர்வக்ஞத்வமாம். (2) பலமாவது எல்லாவற்றையும் வகிக்குந் தன்மை அதாவது தாரண சாமர்த்தியமாம். (3) ஐஸ்வர்யமாவது எல்லாவற்றையும் சுதந்தரனாக நியமிக்கும் வல்லமையாம். (4) வீர்யமாவது உலகத்திற்கு மூலகாரணமாகவிருந்து சிருட்டித்துத் தாங்கி நியமித்துந் தான் ஒரு விகாரமும் இளைப்பும் இல்லாமலிருத்தலாம். (5) சக்தியாவது பிறருக்கு அசாத்தியமாகவிருக்கும் எதையும் தான் சுலபமாகச் செய்யும் வல்லமையாம் (6) தேஜஸ்ஸாவது ஒருவர் சகாயமுமில்லாமல் தானே எல்லாவற்றிற்கும் மேலாகவிருக்கும் வல்லமை அதாவது தன்னை ஜயிப்பார் ஒருவருமின்றித் தான் எல்லோரையும் ஜயிக்கும் வல்லமையாம்.

160. "பிடித்தாலும் புளியங்கிளையைப் பிடிக்கவேண்டும்" என்ற பழமொழிப்படி நாம் பற்றினாலும் சிறந்த குணங்களையுடைய ஒருவனைத்தான் பற்றவேண்டும். இதுதான் அறிவுடைமைக்கு அழகாகும். நாம் எதை எதை சிறந்த குணமென்று எண்ண முடியுமோ அவ்விதமான எல்லாச் சிறந்த குணங்களையுமுடையவன் ஈசுரன் ஒருவனே ஆம். ஆகலால், நாம் பற்றவேண்டுவது ஈசுரனுடைய தாள்களேயாம். புளியங்கிளையை ஒருவன் பற்றிக்கொண்டால் பற்றிக்கொண்டிருப்பவனை கிழே விழாமல் அது காப்பாற்றும். மற்றப் பல மற்ற கிளைகளில் எதாவது ஒன்றைப் பற்றிக்கொண்டால் கிளை முறிந்து கிளையுடன் பற்றிக்கொண்டவனும் கீழே விழுந்துவிடுவான். அதுபோல ஈசுரனுடைய தாள்களை நாம் பற்றிக்கொண்டால் ஈசுரன் நம்மைச் சம்சாரத்தில் மீண்டும் விழாமல் காப்பாற்றுவான். ஈசுரனைத் தவிர்த்து இதர தேவர்களைப் பற்றினால் அவர்களும் சம்சாரிகளாகையால் நாமும் சம்சாரத்தையே மீண்டும் அடைவோம்.

**161.** மேருகிரி பொன்மயமானது என்று சொல்லு கிறார்கள். அம்மலையையடைந்தால் நமது தரித்திரம் தீரும். ஆனால், அம்மலையையடைய நம்மால் முடியாது. அதுபோல இறைவன் சிறந்த குணங்களை உடையவன். அவனையடைந் தால் நமது சம்சார துன்பம் தீரும். ஆனால், அவனையடைய நம்மால் முடியுமா என்கிற சந்தேகம் நமக்கு வரலாம். ஆசிரிப்பவர்களுக்கு இறைவன் மிகவும் சுலபன் என்று சாத் திரம் கூறுகிறது. இதற்குறுப்பான க்ஷமை, கிருபை, வாத் ஸல்யம், சௌலப்யம், சௌசீல்யம், காம்பீர்யம், ஔதார் யம் என்னும் கல்யாண குணங்கள் ஈச்வரனுக்கு உள.

அறிந்தும் அறியாமலும் தாங்கள் செய்த பாபங்களை எண்ணி வருந்துபவர்களுடைய அபராதங்களை ஈசுரன் மன் னிப்பது க்ஷமை எனும் குணம் கொண்டாம். "எப்பாவம் பலவும் இவையே செய்து இளைத்தொழிந்தேன்" என்று திருமங்கை மன்னன் தனது பாபங்களை நினைத்து வருந்தியது போல் நாமும் நமது பாபங்களை நினைத்து வருந்தினால் ஈசுரன் நம்மை பாபங்களிலிருந்து விடுவிப்பது திண்ணம்.

சம்சார சக்கரத்தில் உழன்று கஷ்டப்படும் நாம் ஈச் வரனை நினைத்துத் துக்கப்பட்டால் நமக்கு ஈசுரன் அருள் புரி வது கிருபை எனும் குணம் கொண்டாம். பிரளய காலத்தில் ஜீவர்களுக்குத் தேகமும் இந்திரியங்களும் இல்லாமையால் அவர்களுடைய ஞானம் சோபியாமல் அவர்கள் கல்லைப்போ லிருக்கும் இருப்பை ஈசுரன் கண்டு இரக்கங்கொண்டு உல கத்தை மறுபடியும் சிருட்டித்து ஜீவர்களுக்குக் கரணகளே பரங்களைக் கொடுத்து அவைகளை உபயோகப்படுத்திக்கொள் ளும்படியான சக்தியையும் கொடுக்கிறான். தன்னையடைவ தற்காக வேத சாத்திரங்களைப் பிரம்மாவாலும் இருஷிகளா லும் ஈசுரன் உலகத்திற்கு உபகரிக்கின்றான். சாத்திரங்கள் காலக்கிரமத்தில் மறைந்துவிட்டால், பகவத் கீதையில் 4-வது அதிகாரத்தில் 1, 2, 3 சுலோகங்களில் கூறியுளப்படி ஈசுரன் தானே உலகத்தில் அவதாரம் செய்து சாத்திரங் களைப் புனருத்தாரணம் செய்கின்றான். ஈசுரனை எவனொரு

வன் பக்தியுடன் தியானிக்கின்றானோ அவனைச் சகல கர்ம பந்தத்திலிருந்தும் விடுவிக்கின்றான். இவ்விதமாக ஈசுரன் நமது கர்மத்தைப் போக்காவிட்டால் கர்மங்களுடைய பலன்களை யனுபவித்துக் கர்மங்களைப் போக்கிக்கொள்வது நம்மால் இயலாது. ஏனெனில், கர்மங்களையனுபவிக்கப் பிறவி எடுத்தல்வேண்டும். ஓர் பிறவியையடைந்ததும் நாம் புதிய கர்மங்களைச் செய்கின்றோம். கர்மம் செய்வதினால் வாஸனை உண்டாகிறது. வாஸனையால் அத்தகைய கர்மம் திரும்பவும் செய்வதற்கு ருசி உண்டாகிறது. இவ்விதமாகப் புதிய கர்மங்களைச் செய்து கர்ம பலனாகிய மூட்டையைச் செலவழியாமல் பெருக்கிக் கொள்ளுகின்றோம். தவிர, பிராயச் சித்தாதிகளால் நமது கர்மங்களைப் போக்கிக் கொள்ளலாமென்றால் அதுவும் நம்மால் இயலாது. முன்னொரு காலத்தில் வசிஷ்டர் தன்னை வந்தடைந்த மஹா பாபியாகிய ஒரு பிராமணனுடன் பிரம்மலோகஞ் சென்று பிரம்மாவைப் பார்த்துத் தன்னை யாவரும் இராஜ புரோகிதனென்று அழைப்பதால் இராஜாக்கள் செய்யும் பாபங்கள் புரோகிதரை வந்தடையுமாகையால் இந்த பாபத் தொழிலால்தான் மிகவும் துக்கமடைந்திருப்பதாகவும், தன்னிடம் வந்திருக்கும் பிராமணன் அநேக துர்தானங்களைப் பெற்றும் கொடுத்ததைக்கொண்டு திருப்தியடையாமல் பேராசை கொண்டும் இருந்தமையால் அனைவராலும் தள்ளப்பட்டுப் பாபங்களிலிருந்து தன்னை விடுவிக்கும்படியாக தன்னை வந்தடைந்திருப்பதாகவும் கூறித் தங்கள் இருவருடைய பாபங்களைப் போக்கிக் கொள்ளும்படியான உபாயத்தை அருளிச்செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டார். அதற்கு பிராயச்சித்தம் செய்து உங்களுடைய பாபங்களைப் போக்கிக்கொள்ளலாம் என்று பிரம்மா பதில் கூறினார். அப்பொழுது வசிஷ்டர் பிரம்மாவைப் பார்த்து "அடியோங்களுடைய பாபங்கள் அநேகமானபடியினாலே பிராயச்சித்தஞ் செய்து முடியாது. ஆகையால் சுலபயத்தினத்தால் அடியோங்களுடைய பாபங்கள் ஒழியும் மார்க்கத்தையறியத் தேவரீரை வந்து அடைந்தோம்" என்று கூறினார். பிறகு பிரம்மாவினால் உபதேசிக்கப்பட்டுத் திருமலையையடைந்து கோண தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து திருவேங்கடமுடை

யானைத் தியானித்துத் தங்களுடைய பாபங்களைப் போக்கிக் கொண்டதாகப் பிரம்மோத்தர காண்டத்தில் ஸ்ரீ வேங்கட கிரி மஹாத்மியத்தில் சௌனகாதி ருஷி சூதசம்வாதத்தில் கூறப்பட்டுளது. யாரொருவன் தனது பாபங்களை நினைத்து வருந்தி இறைவனையடைகின்றானோ அவனைப் பாபங்களி லிருந்து இறைவன் விடுவிப்பான் என்பது இச் சரித்திரத்தி லிருந்து தெற்றென விளங்கும். தவிரவும், எம்பெருமா னுடைய கிருபையானது இத்துடன் நில்லாமல் ஜீவர்கள் அறிந் தும் அறியாமலும் செய்யும் ஒவ்வொரு நல்ல காரியத்திற்கும் பலன் கொடுத்துப் பாபத்தைக் குறைத்துப் புண்ணியத்தை விருத்தியாக்கி உண்மையையறியும்படியாகச் செய்து ஈசுரன் தன்னிடத்தில் அழைத்துக்கொள்ளுகின்றான். இதற்கு உதா ரணமாக ஒருவன் நெற்பயிருக்கு இறைக்கும் தண்ணீர் பயி ருடன் அவனறியாமல் முளைத்திருந்த துளசி செடிக்கும் பாய் கிறது. மற்றொருவன் நெற்பயிருடன் துளசிச் செடி இருப் பதையறிந்து துளசிச் செடிக்கும் ஜலம் பாயட்டும் என்ற நினைவு இல்லாமலேயே நெற்பயிருக்குத் தண்ணீர் இறைக் கிறான். இவ்விரண்டு காரியங்களுக்கும் இறைவன் புண்ணி யத்தில் கணக்கு வைத்துக்கொள்ளுகிறான். இவைகளுள் முதற் கூறியதை **யாத்ரிச்சிகம்**மென்றும் இரண்டாவது கூறி யதை **பிராசங்கிகம்** என்றும் சொல்லப்படும்.

இறைவன் எல்லா ஜீவர்களையும் நேசிக்கின்றான். இது இறைவனுடைய **வாத்சல்யம்** என்னும் குணத்தாலாம். எவ னொருவன் இறைவனையடைய வேண்டுமென்று இறைவனைத் தியானிக்கின்றானோ அவனுக்குத் தன்னைக் காண்பித்துத் தியானத்திற்கு உதவி புரிகின்றான். யாரொருவன் இறை வனை இறைவனுக்காகவே தியானிக்கின்றானோ அவனுக்கு நேரிடும் கஷ்டங்களை அவன் அழைக்காதிருக்கும்பொழுதும் இறைவன் தானே நின்று அக் கஷ்டங்களைப் போக்குகின் றான். இதைப் பிரகலாதாழ்வான் விஷயத்தில் பரக்கக் காண லாம். தனது பக்தர்கள் எப்பொழுதாவது அஹங்காரங் கொண்டால் இறைவன் அவர்கள் கொண்ட தப்பெண்ணத்தி லிருந்து திருத்தி ஆட்கொள்கின்றான். இது விஷயம் கேன

உபநிஷதத்தில் கூறியுள தேவாஸுர யுத்த விருத்தாந்தம் ஒன்றால் தெற்றெனவிளங்கும். ஒருகாலத்தில் தேவர்கள் யுத்தத்தில் அஸுரர்களை வென்றார்கள். தாங்கள் ஜயமடைந்தது தங்களுடைய சக்தியால்தான் என்று தேவர்கள் தப்பெண்ணம் கொண்டனர். இதையறிந்த இறைவன் அவர்களை திருத்தியாட்கொள்ளும்பொருட்டு அவர்களுக்கு முன் ஓர் யக்ஷனாகத் தோன்றினான். அப்பொழுது அக்னிதேவன் அவரிடம் வந்து "நீர் யாரென்று" கேட்க, "நான் அக்னி" என்றான் இறைவன். "நான் அக்னியாகவிருக்க நீர் எப்படி அக்னியாவீர்" என்று அக்னி தேவன் இறைவனை வினவினான். அதற்கு இறைவன் "அக்னியின் சக்தி என்ன" வென்று பதில் கேட்டான். "அக்னியின் சக்தி தகிப்பது" என்று அக்னிதேவன் கூறினான். பிறகு, இறைவன் ஒரு சிறு துரும்பை அக்னிதேவனின் முன் வைத்து "இதைத் தகித்துவிடும் பார்ப்போம்" என்று சொன்னான். அக்னி தேவன் தனது பூர்ண பலத்தைக்கொண்டு அத் துரும்பைத் தாக்கியும் அதை ஒன்றும் செய்ய முடியாமையைக் கண்டு வெட்கித் திரும்பினான். பிறகு மற்ற தேவர்களும் வந்து அவமானமடைந்து சென்றார்கள். கடைசியில் இந்திரனும் இறைவன் யக்ஷனாகத் தோன்றியிருக்குமிடத்திற்கு வந்து சேர்ந்தான். அப்பொழுது, பார்வதியானவள் தோன்றி "யக்ஷனாக வந்திருப்பவன் இறைவன்" என்றும் "இறைவனுடைய சக்தியால் நீங்கள் ஜயமடைந்திருக்க உங்கள் சக்தியினாலேயே ஜயமடைந்ததாக நீங்கள் கொண்டிருக்கும் தப்பெண்ணத்தைப் போக்கி உங்களைத் திருத்த இறைவன் இந்த லீலையைச் செய்தான்" என்று கூறி மறைந்தனள். தாயார் தனது குழந்தை பெரிய குற்றத்தைச் செய்தாலும் தனது வாத்ஸல்யத்தால் சொற்ப தண்டனையைச் செய்துவிட்டு விடுவதைப்போல், இந்த உலகத்திற்கே தாயாகவிருக்கும் எம்பெருமான் தன்னுடைய பக்தர்கள் செய்யும் பெருங் குற்றத்திற்கும் சொற்ப தண்டனை விதித்து விட்டு விடுகிறான்.

இறைவன் தன்னை ஜீவர்கள் அனுபவிக்கும்படியாக, பரமபதத்திலுள்ள நித்ய முக்தர்களுக்குச் சேவ்யனாக பர

வாஸுதேவனாகவும், தேவர்களுக்குச் சேவ்யனாக பாற்கடலில் க்ஷீராப்தி நாதனாகவும், யோகிகளுக்குச் சேவ்யனாக ஸூரிய மண்டலத்திலும், பக்தர்களுக்கு தியானத்திற்கு விஷயமாக ஹ்ருதய கமலத்திலும், பிரபந்நர்களுக்கு உபகாரார்த்தமாக அர்ச்சையாகவும் இறைவன் சேவை சாதிக்கின்றான். இறைவனை அவனுடைய ஸ்வரூபத்துடன் தனித்துப் பார்ப்பது ஜீவர்களால் இயலாது. ஆதலால், இறைவன் அவரவர்களுக்கேற்றவாறு உருவத்துடன் சேவை சாதிக்கின்றான். இது இறைவனுடைய **சௌலப்யம்** என்கின்ற குணத்தாலேயாம்.

இறைவன் மிகவும் தாழ்ந்தவர்களிடத்தும் மிகவும் ஆசையுடன் பழகுவான். அவன் ஜாதி முதலியவைகளை இட்டு விலக்கிவிடமாட்டான். இந்த குணத்திற்கு **சௌசீல்யம்** என்று பெயராம். ஸ்ரீ ராமாவதாரத்தில் கரடி, வானரங்கள் ஆகிய இவைகளுடன் சேர்ந்து பழகினதினின்றும் ஸ்ரீ க்ருஷ்ணவதாரத்தில் யாதவர்களுடன் சேர்ந்து பழகினதினின்றும் இறைவனுடைய இக்குணம் தெற்றெனவிளங்கும்.

சம்சாரத்தில் துக்கப்பட்டுக்கொண்டிருக்கும் நாம், கர்ம பந்தத்திலிருந்து நீங்கினதும் ஆனந்த வடிவினனாகிய இறைவன் நமக்கு சேவை தந்து முடிவில்லாத ஆனந்த சாகரத்தில் முழுகும்படியாகச் செய்கிறான். நாம் செய்த வேலையோ சொற்பமானது. இதற்கு எம்பெருமான் செய்த உபகாரமோ ஈடொன்றுமில்லாத பேரின்பமாம். ஈச்வரனுடைய இக்குணத்திற்கு **காம்பீர்யம்** என்று பெயர்.

தங்கள் தங்கள் உடமையைத் தாங்கள் தாங்கள் உபயோகப்படுத்திக் கொள்ளுமாப்போலே, ஈசுரன் தன்னையும் தன்னுடமையையும் உபயோகப்படுத்திக் கொள்ளலாம்படி தனது பக்தர்களுக்குக் கொடுத்தும், இன்னும் பக்தர்களுக்குத்தான் கடமைப்பட்டிருப்பதாக இறைவன் எண்ணுகின்றான். இது **ஔதார்யம்** எனும் குணமாம்.

162. இறைவன் நம்மை நேசிக்கிறானென்றும், நமது பாபங்களை நினைத்து வருந்தி மன்னிக்கும்படியாகக் கேட்டுக் கொண்டால் சந்தேகமின்றி மன்னிப்பானென்றும், நமது துக்கத்தைக்காணுமிடத்து அய்யோ வென்று இரங்கி நாம் துக்கத்தினின்று விடு படுவதற்கு உதவி செய்கின்றானென்றும் அறிந்தோம். இவ்விதமான கல்யாண குணங்களையுடைய இறைவனை நாம் பற்றி நல்லதை யடைய பரபரப்பு நமக்கு இல்லாதிருப்பது என்னே விபரீதம்! இவ்வுலகத்தில் ஒரு தன வந்தன் தயாளு என்று அறிந்தால், அவன் சகாயம் வேண்டு பவர்கள் விரைந்து சென்று அவனை யடைவார்களல்லவா? நாம் இப்பொழுது பிறப்பு இறப்பு என்னும் துக்கக்கடலில் மூழ்கி இருக்கின்றோம். இத்துக்கத்தைப் போக்குவது இறை வனால் தான் முடியும். இறைவனோ பரம தயாளு ஆம். ஆத லால் நாம் இறைவனையடைய துரிதப்பட வேண்டுமல்லவா? ஆமாம், இறைவன் நமது கண்ணுக்குத் தோன்றினால்தானே அவனைப்பற்றலாம். கண்ணுக்குத் தோன்றாத பொருளை எப் படிப்பற்றுவது என்ற சந்தேகம் நமக்கு வரலாம். ஸ்ரீ கீதை யில் 4-வது அத்தியாயம் 11-வது சுலோகத்தில் பகவான் "ஒருவன் எந்த உருவத்தோடு என்னைப்பார்க்க வேணுமென்று விரும்புகின்றானோ அந்த உருவத்தோடு வந்து என்னை அவனுக் குக் காட்டுகின்றேன்" என்று கூறியுள்ளான். ஆதலால், நாம் கண்ணுக்குப்புலனாகும் அர்ச்சைகளிலே இறைவன் சான்னித் யமாக விருக்கின்றான் என்று அறிந்தோம். இறைவன் தயாளு என்றும் அவனை யடைவது எளிது என்றும் அறிந் தோம். ஆதலால், நமது துக்க நிவர்த்திக்காக இறைவனைச் சுலபமாக அடையலாம். நாம் இறைவனைப்பற்றினாலும் நாமி ருக்கும் இழிந்த நிலையை நோக்கி நம்மை இறைவன் அங்கீ கரிப்பானா எனும் சந்தேகம் எழலாம். இறைவன் சௌசீல்ய குணமுடையவன் அதாவது தன்னை வந்தடைந்தாருடைய ஜாதி முதலிய குற்றங்களைப் பாராமல் தாழ்ந்தவர்களுடனும் பழகும் குணமுடையவனும். ஆதலால், நாம் எவ்வளவு தாழ் ந்தவர்களாக விருந்தாலும் இறைவனைப்பற்றும் பக்ஷத்தில் நம்மை இறைவன் கட்டாயம் அங்கீகரிப்பான். நம்மை இறை வன் அங்கீகரித்தாலும் நாம் வேண்டுவதை இறைவன் கொடுப்

பானு என்ற சந்தேகம் வரலாம். இறைவனே நாம் செய்யும் தியானத்திற்கு நம்மால் இவ்வளவு என்று நினைக்க அரிதான பேரானந்தத்தைத் தரும்படியான காம்பீர்யகுணமும் தன்னைப்பஜிப்பவர்களுக்குத் தன்னையும் தன்னுடைமையையும் வழிங்கியும் திருப்தியடையாமல் இன்னும் கொடுக்க வேண்டுமென்று நினைக்கும் ஔதார்ய குணமும் உடையவன் என்று அறிந்தோம். ஆதலால், நாம் எவ்வளவு பாபங்களைச் செய்திருந்தாலும் எவ்வளவு தாழ்ந்தவர்களாக விருந்தாலும் இறைவனைப் பற்றுவோமானால், இறைவன் நம்மைச்சகல பாபங்களினின்றும் விடுவித்து நமது துக்கத்தைப்போக்கிப் பேரானந்தப் பதவியை அளிப்பன் என்பது திண்ணம். நமக்கு இறைவனைப்பற்றும் நல்லறிவு ஆசாரியனுடைய கடாக்ஷத்தாலும் சத்சங்கத்தாலும் உண்டாகுக.

163. இவ்வித கல்யாண குணங்களுடன் கூடியிருக்கும் இறைவன் சிருஷ்டி தசையில் தன்னோடு ஒன்றாய்க்கலந்து தமஸ்ஸப்த வாச்யமாக விருக்கும் அசித்தைத் தன்னிடத்தில் நின்றும் வேறாக்கி பின்பு அதை அக்ஷரா அவஸ்தமாக்கி, பிறகு அதை அவ்யக்தா அவஸ்தமாக்கி, அதை ஸமஷ்டி வ்யஷ்டி ரூப சகல காரியங்களும் ஆகும்படி பரிணமிக்கச் செய்கின்றான். மூலபிரகிருதியில் உருமாய்ந்து கிடந்த சேதனருக்கு உடலையும் இந்திரியங்களையும் கொடுத்து முன்பு மங்கியிருந்த ஞானத்தை விரியும்படியாகச்செய்கிறான். தன்னால் சிருட்டிக்கப்பட்ட பொருள்களுக்குப் பயிருக்கு நீர் நிலை போலே சேதனு சேதன ரக்ஷணத்துக்கு அநுகூலமாக அவற்றுள் அந்தர்யாமியாக விருந்து அவைகளுக்கு வேண்டிய ரக்ஷகங்களையும் பண்ணுகின்றான். சொற்படி நடவாத துஷ்ட புத்திரனைப் பிதாவானவன் அவன் க்ஷேமத்தை யடையும் பொருட்டு விலங்கிட்டு வைக்குமாப்போலே, தன்னையடைந்து உய்வதற்கு உதவியாகத்தான் கொடுத்த தேகேந்திரியாதிகளைக் கொண்டு தன்னை வழி படாமல் இதர விஷயங்களில் மோகங் கொண்டு நடக்கும் ஜீவர்களுடைய கரண களேபரங்களை இறைவன் பிரளய காலத்தில் (சம்ஹார காலத்தில்) குலைத்து ஒடுக்கி வைக்கின்றான்.

164. ஈசுரன் சகல ஆத்மாக்களேயும் தன் சரீரத்திலே யுடைய பிரம்மாவுக்கும் அந்த பிரம்மாவால் சிருட்டிக்கப்பட்டு நித்ய சிருஷ்டிக்கு கர்த்தாக்களான தசபிரஜாபதிகளுக்கும், சிருட்டிக்கு அபேக்ஷிதமான காலத்திற்கும், ஒன்றுக்கொன்று உற்பத்தியாகின்ற ஜகத்துக்கும் அந்தர் யாமியாக விருந்து சிருட்டிக்கு ஏதுவான ரஜோகுணத்துடன் கூடிக்கொண்டு சிருஷ்டிக்கிறான். இறைவன் சத்தியலோகத்திலுள்ள விஷ்ணு முதலிய அவதாரங்களே எடுத்து மனு, யாக்ஞ வல்கியர் முத லிய இரிஷிகளால் ஸ்ம்ருதி இதிகாச புராணுதிகளே உண்டாக்கி ஜீவர்கள் துன்மார்க்கத்தில் நடவாமல் ஈடேறுவதற்கு ஏது வான நல்வழிகளேக்காட்டி, ரக்ஷகத்திற்கு உபயோகமான காலத்துக்கும் லோகங்களில் ஒன்றுக்கொன்று ரக்ஷகமாகிற சகல ஆத்மாக்களுக்கும் அந்தர்யாமியாக விருந்து ஞானத்துக் கும் பிரகாசம் முதலியவைகளுக்கும் ஏதுவான சத்துவ குணத் துடன் கூடி இரக்ஷிக்கின்றான். எம்பெருமான் சம்ஹரிக்கிற வர்களில் தலேவனுன உருத்திரனுக்கும், மற்ற சம்ஹார கர்த் தாக்களான அக்னி யமன் முதலானவர்களுக்கும், சம்ஹாரத் துக்குபயோகமான காலத்துக்கும், ஒன்றுக்கொன்று நாசக மான சகல பூதங்களுக்கும் அந்தர்யாமியாக விருந்து தயை பாராமல் செய்வதற்குறுப்பான தமோ குணத்துடன் கூடி சம்ஹரிக்கின்றான். ஆதலால், எம்பெருமான்தான் உலக சிரு ஷ்டி ஸ்திதி சம்ஹாரகர்த்தாவாக இருக்கின்றான்.

165. ஈசுரன் சிலரைச் சுகிகளாகவும் சிலரைத் துக்கிக ளாகவும் சிருட்டிக்கின்றமையால், சர்வசமனுய் பரம தயாளு வாயிருக்கும் ஈசுரனுக்கு எல்லோரிடத்தும் ஒத்து இராமை யான வைஷம்யமும், துக்கிகளாகச் சிருட்டிக்கையால் கிரு பையில்லாமையும் வாராதோ என்னில், சிலரைச்சுகிகளாகவும் சிலரைத்துக்கிகளாகவும் சிருட்டிப்பது அவரவருடைய கர்ம மூலமாகச் செய்கையாலும், தவிரவும் சிலரைத் துக்கிகளாகச் சிருட்டிப்பது தனக்கு நோயை உண்டாக்கும் மண்ணே விரும் பித்தின்ற குழந்தையை இனிமேல் மண் தின்னுதபடி நாக்கிலே சூடியிட்டு மண்தின்ன பயப்படும்படி செய்யும் மாதாவைப் போலே இவர்கள் இனிமேல் துக்க ஏதுவான காரியங்களேச்

செய்ய அஞ்சும்படி இதபரனுய் செய்கையாலும், வைஷம்யம், கிருபை இல்லாமை ஆகிய தோஷங்கள் இறைவனைச்சாரா.

166. சிருஷ்டி, ஸ்திதி, சம்ஹாரகாரண பூதனான இறைவன் ஆனந்தத்தை விளைவிக்கும்படியானதாய், தனக்குத்தக்கதாய், உற்பத்தி நாசமில்லாததாய், வளர்தல் குறைதல் முதலிய விகாரங்களற்றதாய், இரஜோதமோ குண சம்பந்தமற்ற சுத்த சத்வத்தாலாகிய அப்ராக்ருத வடிவாய், சேதனர் தேகம் போலே தேஜோ ரூபமான ஸ்வரூபத்தை வெளியில் தோற்றுதபடி மறைத்தலல்லாது மாணிக்கத்தைச் செப்பாகச் சமைத்து அதற்குள்ளே பொன்னை இட்டு வைத்தால் அது உள்ளிருக்கிற பொன்னை வெளியில் தோற்றுவிக்குமாப்போலே பொன்னுருவென்று சொல்லப்படுவதான திவ்யாத்ம ஸ்வரூபத்துக்குத்தான் பிரகாசமாய், நித்ய முக்த விக்ரஹ தேஸஸைக் காட்டிலும் எல்லையற்ற தேஜோரூபமாய், ஸௌகுமார்யம், ஸௌந்தர்யம், லாவண்யம் முதலான கல்யாண குணங்களுக்குக் கொள்கலமாய், தன் அழகைக் கண்டவர்களுக்கு இதர விஷய அனுபவத்தில் வைராக்கியத்தை விளைக்கக் கடவதாய், நித்யராலும் முக்தராலும் அனுபவிக்கப்படுவதாய், எண்ணிறந்த அவதாரங்களும் அசாதாரண விக்கிரஹத்தினின்று தீபத்திலுண்டான ப்ரதீபம் போலே வருமவையாகையாலே அவ்வவ்வவதாரங்களுக்கெல்லாம் கிழங்காய், ஐஸ்வர்யார்த்திகன், கேவலர், பகவத் சரணார்த்திகளான உபாசகர், ப்ரபந்நர், நித்யர், முக்தர் ஆகிய எல்லோருக்கும் ரக்ஷகமாய், திவ்யாயுதங்களாலும் திவ்யாபரணங்களாலும் அலங்கிருதமாக விருக்கும் இந்தத் திவ்ய மங்கள விக்ரஹத்தோடு கூடியுள்ள ஈச்வரனுடைய ஸ்வரூபம் பரத்வம், வ்யூகம், விபவம், அந்தர்யாமித்வம், அர்ச்சை என ஐந்து வகைப்படும்.

167. ஈசுரனுக்கு உருவம் உண்டு என்றால் ஈசுரன் அரூபன் என்று கூறும் சாத்திரம் பொய்யா என்ற சந்தேகம் நமக்கு வரும். "அரூபன்" என்ற பதத்திற்கு எண்ணிறந்த உருவங்களையுடையவனென்றும் குறைதலுக்கும் வளர்தலுக்கும் ஏதுவாய் விகாரப்படும்படியான பிரகிருதியாலாகிய நமது

தேகம்போலன்றி குறைதல் வளர்தலின்றி ஒரேமாதிரியாக இருக்கும்படியான சுத்தசத்வத்தால் ஆகிய உருவத்தை உடையவன் என்றும் பொருளாம்.

168. நித்ய விபூதியாகிய பரமபதத்தில் நித்யர் முக்தர்களுக்கு சேவ்யனான பரவாசுதேவ ரூபத்திற்கு பரத்வம் என்று பெயர். பரத்வத்திலிருந்து பிரிந்து தேவர்களுக்குச் சேவ்யனான வியூஹ வாசுதேவ ரூபத்திற்கும், சம்ஹாரகர்த்தாவாகிய சங்கர்ஷணன், சிருட்டி கர்த்தாவாகிய ப்ரத்யும்ணன், காப்பவராகிய அனிருத்தன் ஆகிய மூன்று ரூபங்களும் சேர்ந்து வ்யூகங்கள் * நான்கு எனப்படும். தவிரவும், சங்கர்ஷணன் போன சாத்திரங்களைப் புதிப்பிக்கிறான். புதிதாகவும் சாத்திரங்களை ஏற்படுத்துகிறான். அநிருத்தன் அவைகளுக்கு அர்த்தம் சொல்லுகிறான். ப்ரத்யும்னன் தெரிந்தபடி நடத்துவிக்கிறான். ஞானம், பலம், ஐசுவர்யம், வீர்யம், சக்தி, தேஜஸ் என்கிற ஆறுகுணங்களும் பரவாசுதேவ ரூபத்திலும் வியூக வாசுதேவ ரூகத்திலும் உள. சங்கர்ஷணன் என்கிற ரூபத்தில் ஞானம், பலம் என்கிற இரண்டும், பிரத்யும்னன் எனும் ரூபத்தில் ஐசுவர்யம், வீர்யம் என்கிற இரண்டும், அநிருத்தன் எனும் ரூபத்தில் சக்தி, தேஜஸ் என்கிற இரண்டு குணங்களும் உள. நெற்றி முதல் பிடரி கடைசியாக நின்று சரீர ரக்ஷணம் பண்ணிக்கொண்டுள நான்கு வியூகங்களினின்றும் முறையே மும்மூவராய் அவதரித்தவரான கேசவன் முதல் தாமோதரன் அந்தமாக உள்ள பன்னிரண்டு ரூபங்களுக்கும் வியூகங்கள் என்று பெயராம்.

விபவாவதாரம் கௌணவம், முக்கியம் என்று இருவகைப்படும். கௌணவம் என்பது ஆவேச அவதாரமாம். ஆவேசமும் ஸ்வரூப ஆவேசம, சக்தியாவேசம் என இருவகைப்படும். ஆதியஞ்சோதியுருவை அங்கு வைத்து இங்குப் பிறந்த இராமகிருஷ்ணாதி அவதாரங்கள் முக்யாவதாரங்கள்

---

* இந்நான்கு உருவங்கள் ஜாக்கிரதா, ஸ்வப்தி, துரியம், துரியாதீதம் என்று சொல்லப்படுகின்றன.

என்ப்படும். இறப்பு பிறப்பு அற்றதான சர்வேச்வரவத்வ, சுபாவ விபவங்களையுடைய மற்றொரு தீபம் தனக்குக் காரணமான தீபத்தின் சுபாவங்களை உடைத்தாயிருக்குமாப்போலே அசாதாரண விக்கிரகத்தினுடைய சுபாவங்களை உடைத்தாயிருக்கும்படியான முக்கியாவதாரங்களெல்லாம் முமுக்ஷுக்கள் உபாசிக்கத் தக்கவைகளாக விருக்கின்றன. சிருஷ்டி கர்த்தாவான பிரம்மா, சம்ஹார கர்த்தாவான சிவன், அக்னி, வேதங்களை வகுத்த வியாசர், பரசுராமன், கார்த்தவீர்யார்ஜுனன், அர்ஜுனன், குபேரன் முதலானவர்கள் கௌணவ அவதாரங்களாம். அஹங்காரத்தோடு கூடின ஜீவர்களைக் கார்யார்த்தமாக ஆவேச மூலத்தால் ஈசுரன் பற்றி நிற்கை யால், கௌணவ அவதாரங்கள் புபுக்ஷுக்களுக்கு (உலக போகத்தில் இச்சையுடையவர்களுக்கு) உபாசிக்கத்தக்கனவே யன்றி, முமுக்ஷுக்களுக்கு (மோக்ஷத்தில் இச்சையுடையவர்களுக்கு) உபாசிக்கத் தக்கனவல்ல. எம்பெருமானுடைய அவதார விஷயங்களிலே சில சந்தேகங்கள் உண்டாகின்றன. (1) இராமகிருஷ்ணாதி அவதாரங்களில் குழந்தைப்பருவத்தில் பால் முதலியவைகளுக்கு அழுததாக சரித்திரங்கள் கூறுவதால், இராமகிருஷ்ணாதி உருவங்கள் பொய் என்ற சந்தேகம் வரலாம். இராமகிருஷ்ணாதி உருவங்கள் பொய்யாகவிருக்கும்பக்ஷத்தில் ஸ்ரீராமருடைய பாததூளியானது எப்படி சிலையைப் பெண்ணாக்க முடியும். ஸ்ரீ கிருஷ்ணாவதாரத்தில் பூதனையை ஸ்தந்யபானம் பண்ணி எப்படி கொல்ல முடியும். சகடாசுரனை எப்படிக் காலால் உதைத்துக் கொல்ல முடியும். ஆதலால், அந்த உருவங்கள் மெய்யானவையேயாம். (2) ஸ்ரீராமாவதாரத்தில் கர வதத்தின்பொழுது சண்டையில் காயமுற்று தனது தேகத்தில் இரத்தம் கொட்டினதாகவும், சீதை இராவணனால் அபகரிக்கப்பட்டபொழுது அழுததாகவும் ஸ்ரீமத் இராமாயணம் கூறுகின்றமையால், ஸ்ரீராமன் எம்பெருமானுடைய அவதாரமாகவிருந்தாலும் பூமியில் பிறந்தவுடன் தெய்வத்தன்மை போய் நமது உடம்புபோலவே அவர்களுடைய உடம்பு ஆயிற்று என்ற சந்தேகம் வரலாம். இராமருக்கு யுத்தத்தில் இரத்தம் வடிந்ததும் அவர் அழுததும் துஷ்டர்களுக்கு மயக்கத்தை உண்டாக்குவதற்கும்

சாதுக்களுக்குத் தன்னிடத்தில் ஆசையை உண்டாக்குவ தற்குமாகும். ஆதலால், எம்பெருமான் உலகத்தில் அவதாரம் செய்ததால் அவனுடைய குணங்களுக்கு யாதொரு குறைவு மில்லை. (3) முக்கியாவதாரங்கள் பரத்வத்தின் ஒரு பாகமே இவ்வுலகத்திற்கு வந்தமையால் பரத்வத்தைப்போல் சுத்த சத்வத்தால் ஆனவைகளாம். (4) இவ்வவதாரங்களுக்கு கர் மம் காரணமல்ல. பிருகு சாபத்தால் பிறந்தான் என்று சில புராணங்கள் கூறுகின்றன. சாபம் வியாஜமாத்திரமேயன்றி அவதாரங்கள் எடுத்தது தனது நினைவாலேயேயாம். கௌணாவதாரங்களுக்கும் காரணம் பகவானுடைய நினைவே யாம். (5) அவதாரங்களுக்குப் பலன்கள் தர்மத்தை ஸ்தா பிக்கையும் (6) சாதுக்களை ரக்ஷிக்கையுமாம். அவதாரங் களில் துஷ்டர்களைச் சிக்ஷித்திருந்தாலும் அது முக்கிய பல னாகாது. ஏனெனில், அவதாரங்களை எடுக்காமலே துஷ்டர் களைச் சிக்ஷிக்கும் சக்தி இறைவனுக்கு உண்டு. தன்னை நேரில் அனுபவிக்க விரும்பிய சாதுக்களுக்குத்தான் அவதாரம் செய் யாமல் மனோரதத்தைப் பூர்த்திசெய்ய முடியாது. ஆதலால் அவதாரங்களுடைய முக்கிய பலன் சாதுரக்ஷணமேயாம். இந்த ஆறு சங்கதிகளையும் தியானம் பண்ணினால் பக்தனுக்கு எம்பெருமானிடத்தில் அளவிலா ஆவல் உண்டாகி அதே ஜன்மத்தில் பரஞானமும் பரமபக்தியும் கைகூடி மோக்ஷத்தை யடைவான் என்றும், பிரபந்நனுக்கு எம்பெருமானிடத்தில் பிரபத்திக்கு இன்றியமையாத பூர்ண நம்பிக்கை பிறக்கும் என்றும் ஸ்ரீ தேசிகன் கூறியுளார்.

எல்லாச் சேதனர்களுக்கும் ஆத்மாவுக்குள்ளே ஸ்வரூ பத்தாலே வியாபித்து நின்று துணையாய் அவர்களை ஒருக் காலும் விடாமல் அந்தராத்மாவாய் நிற்கிற **ஸ்வரூபவ்யாப்தி யும்**, சேதனருக்குத் தியானருசி பிறந்தபோது தியானத் திற்கு உரியவனாகவும் அவர்களை ரக்ஷிக்கைக்காக பந்து பூத னாய் இருதய கமலத்துக்குள்ளே வீற்றிருக்கும் **விக்ரஹ வியாப்தியும்** ஹார்த்தன் எனப்படும்.

அயோத்யா த்வாரகாதி தேசநியமமும், பதினோராயிர வருஷம் நூறு வருஷம் என்னும் காலநியமமும், தசாத வசு

தேவாதி அதிகாரிநியமமும் உடைத்தாய் காட்சிதந்த ராம, கிருஷ்ணுதி விபவ அவதாரங்கள்போலல்லாது ஒரு தேச நியமமும், அர்ச்சகனுடைய அபேக்ஷகாலமொழிய தனக்கென்று ஒருகால நியமமும், உருசியுடையாரெல்லார்க்குமாக இன்னுரென்பதொரு அதிகார நியமமும் இல்லாதபடி சந்நிதி பண்ணி அவர்கள் செய்யும் அபராதங்களைக் காணு கண்ணிட்டு, அர்ச்சக பரதந்திரமான ஸ்நான, அன்ன, ஆசனுதிகளாகும் சமஸ்த வியாபாரங்களும் உடையவனுய்க் கொண்டு, திவ்ய தேசங்களிலும் ஆசிரிதருடைய வீடுகளிலும் எழுந்தருளி நிற்கும் நிலை அர்ச்சை எனப்படும். அர்ச்சையைப் பற்றி 97-101 பாராக்களில் மிக விரிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

169. ஈச்வரனுடைய பிரவிருத்தி (வேலை):—ஈசுரன் உலகத்தை சிருட்டித்து, காத்து, அழிக்கின்றுன். ஜீவர்களுக்கு மோக்ஷத்தையு மளிக்கின்றுன்.

170. ஈச்வரனுடைய ஸ்திதி:— ஈசுரன் ஆதி அந்தமற்றவனும்.

171. தென்கலை சம்பிரதாயப்பிரகாரம் மஹாலக்ஷ்மி புருஷகாரியான ஜீவனே தவிரத் தெய்வம் அல்ல என்பதாம். வடகலை சம்பிரதாயப் பிரகாரம் நாராயணன் மஹாலக்ஷ்மி இரண்டுபேரும் சேர்ந்துதான் தெய்வம் என்பதாம். யஜுர் வேதமானது மஹாலக்ஷ்மி உலகத்தை சிருட்டித்து, ஆண்டு, மோக்ஷம் கொடுக்கிறுள் என்று கூறுகிறது. இவைகள் தெய்வத்தின் வேலைகளாகையால் மஹாலக்ஷ்மியும் தெய்வந்தான் என்பது தெற்றென விளங்கும். எப்படி அக்னி சோமன் எனும் தேவதைகள் இரண்டாகவிருந்தும் ஒன்றுகச் சேர்த்து ஒரு தேவதையாகப் பாவித்து ஆஹுதி செய்கின்றேமோ அப்படி நாராயணன் லக்ஷ்மி இருவரும் சேர்ந்து நாம் வணங்கும் தெய்வமாக இருக்கின்றுர்கள். இருவருக்கும் எல்லாக் கல்யாண குணங்களும் உண்டு. ஆனுல், நாராயணனிடத்தில் தகப்பனுருக்கு வேண்டிய குணங்களும், மஹாலக்ஷ்மி

யிடத்தில் தாய்க்குவேண்டிய குணங்களும் விளங்குகின்றன. நாம் இருவரையுந்தான் சேர்த்து வணங்கவேண்டும். இருவருந்தான் சேர்ந்து நமக்கு மோக்ஷங்கொடுக்கிறார்கள். இருவருக்குந்தான் நாம் அடிமைசெய்தல் வேண்டும். நாராயணன் மஹாலக்ஷ்மி இருவரும் சேர்ந்து தெய்வமேயன்றி, தனித்து நமது தெய்வம் அல்ல என்பது வடகலை சம்பிரதாயமாம்.

172. நமது பூர்வாசாரியர்களால் அருளிச் செய்யப்பட்ட தத்வத்ரயத்தை நாமறிந்ததினால், தேகம், ஜீவன், தெய்வம் ஆகிய இவை மூன்றும் அவைகளுடைய தனிப்பட்ட அடையாளங்களைக் கொண்டு வெவ்வேறானவை என்று அறிந்தோம். இப்பொழுது சரீரத்தைத்தான் என்று நினைத்துக் கொண்டு சரீரத்திற்காகவும் சரீர சம்பந்தமான பந்துக்களுக்காகவும் உழைப்பதும் இவ்வுலக இன்பமே பரம புருஷார்த்தமென்று நினைப்பதும் நாம் அவித்யையுடன் சம்பந்தப்பட்டிருப்பதினால் என்று அறிந்தோம். எல்லாவற்றிற்கும் ஆத்மாவாய், அவரவர் கர்மத்திற்குத் தக்கதாக சுகதுக்கங்களைக் கொடுப்பவனாய், சர்வத்துக்கும் ஆதாரமாய், சர்வத்தையும் ஏவுகிறவனாய் இருப்பவன் எம்பெருமான் என்று அறிந்தோம். ஆதலால், எல்லாம் எம்பெருமானுடைய ஆதீனமென்றும், அவன் ஆட்டுவிக்க நாம் ஆடுகிறோம் என்றும் நினைத்து, உலகத்தில் நாம் இருந்தாலும் ஜலத்திலேயே பிறந்து ஜலத்திலேயே வாழும்படியான தாமரை இலை ஜலத்தில் ஒட்டாமலிருப்பதுபோல் வாழ்ந்துகொண்டு இறைவனையே பற்றாகப் பற்றிக்கொண்டு இருத்தல்வேண்டும். இதைப்பற்றி நாம் புத்தகங்களில் வாசிக்கலாம். ஒருவர் சொல்லக் கேட்கலாம். ஒருவருக்கு நாமும் சொல்லலாம். ஆனால், இது மனத்தில் படுவது கஷ்டமாம். மனத்தில் பட்டாலும் அதன்படி நடப்பது கஷ்டமாம். இதற்காகத்தான் சாதுக்களுடன் நாம் பழகுதல் வேண்டும் என்று பெரியோர்கள் சொல்லுகிறார்கள். சாதுக்களுடன் பழகுவதால், நாம் பக்குவத்தை அடைந்து இவ்வழி நிற்றல் இயலும். இந் நோக்கங்கொண்டுதான் நம்மாழ்வார் “பொன்னெடுஞ் சக்கரத் தெந்தைபிரான் தன்னை,

'பாதம் பணியவல்லாரைப் பணியுமவர் கண்டீர், ஓதும் பிறப்பிடைதோறெம்மையாளுடையார்களே" என்றும், "அடியார்ந்த வாயிரத்துளிவை பத்தவன் தொண்டர்மேல் முடிவு, ஆரக் கற்கிற்கில் சன்மஞ் செய்யாமை முடியுமே" என்றும் அருளிச் செய்திருக்கின்றார். பிள்ளை லோகாசாரியரும் பாகவதாபிமானமானது நம்மை ஆசாரிய நிஷ்டையில் ஊன்றுவித்து நம்மை உய்விக்குமென்று ஸ்ரீ வசனபூஷணத்தில் கூறியுளார். ஸ்ரீ தேசிகனும் "திவ்யதேசவாசம் சாதுக்களுடன் பழகுவதற்கு அநுகூலமாகவிருக்குமென்று விதிக்கப்பட்டதென்றும், திவ்ய தேசத்தில் அடியார்கள் இல்லாதொழிந்தால் அடியார்கள் உள்ள இடமே வாசத்திற்கு யோக்ய" மென்றும் ஸ்ரீ ரஹஸ்யத்ரயசாரத்தில் கூறியுளார். ஆதலால், நமக்குச் சாது சங்கம் மிக முக்கியமானது என்று தெற்றென விளங்கும். ஆசார்ய கடாக்ஷமும் பகவத் கடாக்ஷமும் நம்மை அடியார்க்கடியாராக்குக.

---

## IX. பரப்ரஹ்மம் அல்லது தெய்வம்.

---

173. சகல சமயத்தவர்களும் "தெய்வம் ஒன்றுதான்" என்று ஒப்புக்கொள்ளுகிறார்கள். ஆனால், தெய்வத்தைப் பல வெவ்வேறு பெயரிட்டழைக்கின்றனர். ஒரு ஆற்றினின்று பல வாய்க்கால்கள் பிரிகின்றன. ஒவ்வொரு வாய்க்காலுக்கும் ஆதாரம் ஆற்றின் ஜலந்தான். வாய்க்கால்கள் ஆறு ஆகா. ஆனால் அவற்றிலிருக்கும் ஜலம் ஆற்றுஜலமாகும். அதுபோல் தெய்வமென்று கொண்டு அழைக்கப்படும் பல பெயர்களையுடையவர்கள் தெய்வமாகார். அப் பெயர்களையுடையவர்களுக்குள் அந்தர்யாமியாகவிருக்கும் பரமாத்மா எவனோ அவன் தான் தெய்வமாவான்.

174. மாம்பழத்தில் உயர்ந்தவையான ஒட்டு ஜாதி என்றும் தாழ்ந்தவையான நாட்டு ஜாதி என்றும் இருவகை

யுள. அதுபோல ஜீவர்களில் துக்கக் கலப்பில்லாத சுகத்தை யனுபவிப்பவர் தேவர் என்றும், துக்கமும் சுகமும் சேர்ந்து அனுபவிப்பவர் மனிதர் என்றும் இருவகையுளர். ஒட்டு ஜாதி மாம்பழங்களில் உயர்ந்தது "மல்கோவா" என்னும் பழமாம். அதுபோல தேவர்கள் பலர். அவர்களில் சிறந்தவர் சிவபிரான், பிரம்மா, தேவேந்திரன் முதலியவராவர். ஒட்டுமாம்பழம் நாட்டுமாம்பழம் ஆகிய இவை இரண்டும் மாவினத்தைச் சேர்ந்தவையாம். அதுபோல சிவபிரான் முதல் சகல தேவர்களும் மனிதர்களும் ஜீவராசியைச் சேர்ந்தவர்களாம். மாம்பழங்களெல்லாம் ஓரினத்தைச் சேர்ந்தவை. வாழைப்பழம் மற்றோரினத்தைச் சேர்ந்தது. அதுபோல, சிவபிரான் முதல் சகலரும் ஜீவ இனத்தைச் சேர்ந்தவர். தெய்வம் தெய்வ இனத்தைச் சேர்ந்தவர்.

175. எவனிடத்திலிருந்து அனைத்துலகும் உண்டாகின்றனவோ, எவனாலிவையாவும் நிலைபெற்றிருக்கின்றனவோ, முடிவில் எவனிடத்தில் அவைகளெல்லாம் லயமாகின்றனவோ அவன்தான தெய்வமாம். "தேவும் எப்பொருளும் படைக்க பூவில் நான்முகனைப் படைத்த தேவன் எம்பெருமான்" என்றும், "தரும் சீர்த்தன் தனிமுதலினுள்ளே - மிகுந்தேவும் எப்பொருளும் படைக்க - தரும் கோலத்தாமரைக் கண்ணனெம்மான் - மிகுஞ் சோதி மேலறிவார்யவரே?" என்றும், "யவரும் யாவையும் எல்லாப் பொருளும் - கவர்வின்றித் தன்னுளொடுங்க நின்ற - பவர்கொள் ஞானவெள்ளச் சுடர்மூர்த்தி - அவர் எம்மாழியம்பள்ளியாரே" என்றும், "காக்கும் இயல்வினன் கண்ண பெருமான்" என்றும் நம்மாழ்வார் உலகத்தைச் சிருட்டிக்கிறவனும் காப்பாற்றுகிறவனும் உலகம் தன்னுள் ஒடுங்க நின்றவனும் ஸ்ரீமந் நாராயணன்தான் என்றும் அவன்தான் பரப்ரஹ்மமென்றும் தெற்றென விளக்கியுளார்.

176. வேதத்தின் முதலிலும் முடிவிலும் சொல்லப்பட்டிருக்கிற பிரணவத்தின் பிறப்பிடமாகிய அகாரத்தில் ஐக்கியமாயிருப்பவனெவனோ அவன்தான் தெய்வமாம்.

"அகாரோ விஷ்ணு: ப்ரதம நாமோச்யதே" என்கிற ஸ்ருதி வாக்கியத்தின்படி, அகாரம், விஷ்ணுவின் முக்கியப் பெயரைச் சொல்லுகிறது. "அக்ஷராணாம் அகாரோஸ்மி" என்று ஸ்ரீ கீதாசாரியன் கூறியுள்ளார். வீரசைவரான சிவப்ரகாசரென்பாரும் "சாத்துவிக குணமோடகர வெழுத்தரி தெய்வம்" என்று வேதாந்த சூடாமணி என்னும் நூலில் கூறியுள்ளார். இந்த அர்த்தத்தை நினைத்தன்றோ நமது தெய்வப் புலமை திருவள்ளுவரும் ஸ்மிருதியை யொத்த குறளில் வேதம்போலவே முதலில் "அகரமுத லெழுத்தெல்லா மாதி பகவன் முதற்றே யுலகு" என்று வாழ்த்துக் கூறியுள்ளார்.

**177.** இறைவனை ஜீவர்களிலிருந்து பிரித்துக் காட்டும் சிறப்பியல்களுக்குள் முக்கியமாக விளங்குவது **அநந்தத்வமாம்** அதாவது **வியாபகத்வமாம்.** மந்திரங்களுக்குள் ஸர்வ வியாபகத்தைக்காட்டும் மந்திரங்கள் மூன்று ஆகும். அவை **அஷ்டாக்ஷரியாகிய நாராயண மந்திரமும், சடாக்ஷரியாகிய விஷ்ணு மந்திரமும், த்வாதசாக்ஷரியாகிய வாசுதேவ மந்திரமுமாகும்.** சேதன சேதனங்களுக்குள்ளும் புறம்பும் வியாபித்து எல்லாவற்றிற்கும் உபேயமாயும் உபாயமாயும் விளங்குவதால் நாராயணனென்றும், தனக்குப் புறம்பிற் போகவிட்ட சேதன சேதனங்களில்லாமல் அவைக்குட் புறம்புகளில் வியாபித்துள்ள நீர்மையால் விஷ்ணு என்றும், இச் சேதன சேதனங்களுக்குள்ளே வசித்து வாழ்ந்தருளும் சில நீர்மை தோன்ற வாசுதேவனென்றும் இறைவன் அழைக்கப்படுகின்றான். தவிரவும், "வேத வேதாந்த ஸ்மிருதியாதிகளிலுள்ள சர்வாக்ஷரங்களும் ஸ்ரீமந் நாராயணனுடைய திருநாமங்களாக விருக்குமேயன்றி இதரமானவர்களைச் சொன்னதேயில்லை, அப்படி சொல்லியபோதினும் சரீரத்தைச் சுட்டிய நாம வந்தனுதிகள் சரீரவாசி ஸப்தம் சரீரி பரியந்தம் காட்டும்" என்று நம் மாசாரியர்கள் கூறியுள்ளார். ஆதலால், விச்வரூபனான எம் பெருமானுடைய சரீரங்களாகவிருக்கும் தேவதைகளைச் சொன்ன வாசகங்களுக்கெல்லாம் வாச்சிய பூதன் ஸ்ரீமந் நாராயணனே என்று உரைக்கடவது. இக் காரணங்களைக்

கொண்டு "கண்ணனல்லாற் றெய்வமில்லை" என்பது உள்ளங்கை நெல்லிக்கனியென விளங்கும்.

178. "நீந்தும் துயர்ப்பிறவி உட்பட மற்றெவ்வெவையும்
நீந்தும் துயரில்லா வீடுமுதலாம்
பூந்தண் புனல் பொய்கை யானையிடர் கடிந்த
பூந்தண் துழாய் என்தனி நாயகன் புணர்ப்பே."

என்கிற திருவாய்மொழி பாசுரத்தினுல் பிறவிக்கடலிலிருந்து நீந்தி வீடுபெற ஸ்ரீமந் நாராயணனைத்தான் வழிபட வேண்டுமென்பது விளங்கும்.

"மனமாசு தீரும் அருவினையும் சாரா
தனமாய தானே கைகூடும்—புனமேய
பூந்துழா யானடிக்கே போதொடு நீரேந்தி
தாம் தொழா நிற்பார் தமர்."

என்றும்,

"வினையால் அடர்படார் வெந்நரகில் சேரார்
தினையேனும் தீக்கதிக்கண் செல்லார்—நினைதற்
கரியானைச் சேயானை ஆயிரம்பேர்ச் செங்கண்
கரியானைக் கைதொழுதக் கால்."

என்றும் பொய்கையார் அருளிய பாசுரங்களினுல் கர்மபந்தத்திலிருந்து நீங்குவதற்கு கண்ணன் கழலினை நண்ணுதல் வேண்டுமென்பது புலனுகும். நாராயணன்தான் பரமபதத்திற்குப் பதியாம். அதனுலல்லவோ அவனைப் பரந்தாமன் என்று அழைக்கின்ருேம். ஒரு வீட்டினுள் நுழையவேண்டுமானுல் அவ் வீட்டிற்குடையவனுடைய தயவு இருந்தால்தான் நுழையலாம். அதுபோல பரமபதத்துக்குள் செல்ல பரந்தாமனுடைய கிருபை அவசியமாம். ஸ்ரீமந் நாராயணன் மோக்ஷங் கொடுப்பவனுகையாலன்ருே "முகுந்தன்" என்று அழைக்கப்படுகிருன். மேற்கூறிய காரணங்களால் ஸ்ரீமந் நாராயணன்தான் பரத்வமென்பதும் நாம் வீடுபெற ஸ்ரீமந் நாராயணனைத்தான் வழிபட வேண்டுமென்பதும் தெற்றென விளங்கும்.

**179.** மஹா லக்ஷ்மியுடன் கூடிய நாராயணன்தான் தெய்வமாம். மஹாலக்ஷ்மியும் நாராயணனும் சேர்ந்துதான் நமக்கு மோக்ஷங் கொடுக்கிறார்கள். அவர்களிருவருக்குந் தான் நாம் மோக்ஷமடைந்த பிறகு வேலை செய்கிறோம். பராசரர் ஸ்ரீ விஷ்ணு புராணத்தில் உலகத்தில் ஆண்களிடத்து நாராயணனும் பெண்களிடத்து மஹாலக்ஷ்மியும் ஆத்மாவாக வியாபித்திருக்கிறார்களென்று கூறியுள்ளார். லக்ஷ்மி ஸஹஸ்ர நாம ஸ்தோத்திரத்திலும் "ஹார்தமூர்தி:" என்று கூறப் பட்டுள்ளதை நோக்குக. வியாபித்திருத்தல் தெய்வத்தி னுடைய முக்கிய சிறப்பியலாகும். ஆதலால், மஹாலக்ஷ்மியும் தெய்வந்தானென்றும், அக்னி சோமன் எனும் தேவதைகள் இரண்டாகவிருந்தும் ஆஹுதிகள் கொடுக்கும்பொழுது ஒன்றாகப் பாவித்துக் கொடுக்குமாப்போல் நாம் மஹாலக்ஷ்மியை யும் நாராயணனையும் சேர்த்துத்தான் தெய்வமென்று வழிபட வேண்டுமென்றும் வடகலையார் அபிப்பிராயப்படுகிறார்கள். நாராயணன்தான் மோக்ஷங் கொடுக்கிறான், பரமபதமடைந் ததும் நாராயணனுக்குத்தான் வேலைசெய்ய கடமைப்பட்ட வர்களென்றும், மஹாலக்ஷ்மி ஜீவன்தான், மஹாலக்ஷ்மி மோக்ஷத்திற்கு சிபார்சு மாத்திரம் செய்யவல்லவள், எப்படி இவ்வுலகத்தில் ஒருவனுக்கு வேலையாளாக ஏற்பட்ட ஒருவன் யஜமானனுடைய மனைவிக்கும் வேலைசெய்ய வேண்டியிருக் கிறதோ அதுபோல பரமபதத்திலும் எம்பெருமான் பொருட் டுப் பிராட்டிக்கும் வேலைசெய்ய வேண்டியிருக்கிறது என் றும் தென்கலையார் அபிப்பிராயப்படுகிறார்கள். கொள்கை எப்படியாகினும் ஆகுக. இருகலையாரும் மோக்ஷமடைவ தற்கு மஹாலக்ஷ்மியினுடைய அருள் அவசியமென்றும் மோக்ஷமடைந்த பிறகும் மஹாலக்ஷ்மியினுடைய கைங்கர்யம் லபிக்கிறதென்றும் ஒப்புக்கொள்ளுகிறார்கள். சிறு வித்தியாசங் களைப்பற்றி நாம் சண்டையிட்டுக்கொள்ளுவது அநாவசிய மாம். நாமெல்லோரும் வடகலை சம்பிரதாயமானாலும் சரி தென்கலை சம்பிரதாயமானாலும் சரி மஹாலக்ஷ்மியுடன் சேர்த்தே நாராயணனை வழிபடுகிறோம்.

180. மோக்ஷந்தவிர மற்றப் பலன்களைக் கொடுக்கப் பிரம்மா முதலிய தேவதைகளுக்குஞ் சக்தியுண்டு. அச் சக்தியை தேவதைகளுக் களித்தவன் இறைவன்தான். நாம் தேவதைகளை வணங்கும்பொழுது,

"அவரவர் தமதமது அறிவறி வகைவகை
அவரவர் இறையவர்என அடியடைவர்கள்
அவரவர் இறையவர் குறைவிலர் இறையவர்
அவரவர் விதிவழி அடைய நின்றனரே."

என்கிற திருவாய்மொழி பாசுரத்தின்படி அந்தந்த தேவதைகளுக்குள் எம்பெருமான் அந்தர்யாமியாகவிருந்து நமக்கு பலனளிக்கிறான். ஆனால், நாம் மோக்ஷந்தவிர மற்றப் பலனையும் எம்பெருமானை வழிபடுவதால் அடையலாம். நமது நித்ய நைமித்ய கருமங்களில் தேவர்களைத் தொழ நேரிடும்பொழுது அவர்களை எம்பெருமானுடைய உடம்புகள் என்று நினைத்துத் தொழுதால் நாம் செய்யும் எல்லா கைங்கர்யங்களும் எம்பெருமானை உவப்பிக்கும். தவிரவும், நாம் எம்பெருமானையடைவதற்கு அவர்கள் சிபார்சு செய்பவர்களாவார்கள். எல்லா தேவதைகளும் நமது எம்பெருமானுக்கு உடம்பாதலால் அவர்களைத் தூஷிக்கலாகாது. தேவதைகளைத் தூஷிப்பவர்கள் எம்பெருமானது கோபத்திற்காளாவார்கள். தேவதைகளைத் துன்புறுத்திய மஹாபலிச் சக்கரவர்த்தி எம்பெருமானது திருபாதத்தைத் தன் சென்னியின்மேல் அடையப் பெற்றும் வீடுபெற்றானில்லை. இந்த உதாரணமொன்று நமக்குப் போதாதா? எம்பெருமானுடைய கல்யாண குணங்களில் ஈடுபட வேண்டிய நமது மனதை தேவதைகளுடைய தூஷணத்தில் ஈடுபடுத்துவது என்னே விபரீதம்!

181. ஒருவன் மையைக்கொண்டு சித்திரம் தீட்டுகிறான். சித்திரத்தின் பெருமை தீட்டினவனுக்குரியதா அல்லது மையுக்குரியதா? சித்திரத்தைக் காணும்பொழுது தீட்டினவனையும் அவனுடைய சாமர்த்தியத்தையுமல்லவா நாம் நினைப்போம். அதுபோல, தேவர்களைக்கொண்டு அநேக

அருஞ்செயல்களை அவர்கட்குள் அந்தர்யாமியாகவிருக்கும் எம்பெருமான் செய்தருளன். "புக்கடிமையினால் தன்னைக் கண்ட மார்க்கண்டேயனவனை, நக்கபிரானும் அன்று உய்யக் கொண்டது நாராயணனருளே" என்னும் திருவாய்மொழிப் பாசுரத்தை நோக்குக. இவ்விதமான தேவர்கள் செய்த அருஞ்செயல்களைக் கூறும் சரிதங்களைக் கேட்குங்கால் நாம் பொறுமைகொண்டு அத்தேவர்களைத் தூஷிக்காமல், அவர்களை அவ்விதமாக ஆட்டுவித்த நம்மப்பனுடைய பெருமையை நினைந்து மேலும் மேலும் பக்தி வளரப்பெற்று மனமுருக வேண்டியதல்லவோ உண்மை ஸ்ரீ வைஷ்ணவனுடைய அடையாளமாகும். வேலைக்குரியவனும், வேலையைச் செய்கிறவனும் அதனாலாய பலனையடைபவனும் எம்பெருமான்தான் என்கிற சாத்விகத் தியாக புத்தி நமக்குண்டானால் இதர தேவர்களைப் பற்றிய த்வேஷ புத்தி தானே அற்றுவிடும். இவ்விதமாகச் சாத்விக தியாக புத்தி நமக்குண்டானால்தான் நாம் பரம சாத்விகர்களான ஸ்ரீ வைஷ்ணவர்களென்று சொல்லிக்கொள்ள உரியவர்களாவோம். நான் இப்பொழுது இப் புத்தகத்தை எழுதுகிறேன். இப் புத்தகத்தை எழுதவேண்டுமென்கிற நினைவை உண்டாக்கியவன் இருதயத்தின்கண் குடிகொண்டிருக்கும் எம்பெருமான். இப் புத்தகத்தில் இவ் விஷயங்களை எழுது என்று மனத்தின்கண் உணர்விக்கின்றவனும் அவன்தான். ஆதலால், நான் எழுதும் பேனாவாகவும், எம்பெருமான் இப் பேனாவைக் கொண்டெழுதுகிறவனாகவுமாகவும் இருக்கின்றது. இவ்விதமாக நாம் செய்யும் ஒவ்வொரு வேலையிலும் நினைத்து நினைத்துப் பழகினால் நாளடைவில் நமக்குச் சாத்விக தியாக புத்தி உண்டாகும். எல்லாம்வல்ல எம்பெருமான் நமக்கு நல்லறிவை கொடுப்பானாக.

# X. முமுக்ஷுத்வம் அல்லது வீடுபெற விருப்புகிறவனுடைய தன்மைகள்.

182. "நமது கடன் எம்பெருமானுக்குப் பணிசெய்து கிடப்பதே" என்ற ஜீவனுடைய இயல்பை யறிவோமானல் நாம் இப்பொழுது இருக்கும் நிலைமைக்காக வருந்துவோமென்பது திண்ணம். நாம் இறைவனையடைந்து அவனுக்குகந்த பணியைச்செய்து கிடக்க வேண்டுமென்ற அவா நம்மனத்தின்கண் எழும். இதற்குத்தான் மோக்ஷமடைவதில் இச்சை பிறப்பது என்று சொல்வதாம். இவ்விதமான இச்சை பிறந்த ஜீவனுக்குத்தான் "முமுக்ஷு" என்பதாம்.

183. மனமானது சும்மாயிருத்தலரிது. அது எதையாவது ஒன்றைப்பற்றிக் கொண்டேயிருக்கும் சுபாவமுள்ளது. நம்மிடத்தில் இரண்டு விஷயங்களுள — ஒன்று சரீர சம்பந்தமான உலக வியாபாரம், இன்னொன்று உயிர்ச் சம்பந்தமான ஈச்வரனும். இவைகளுள் சரீர சம்பந்தமான உலக வியாபாரத்தில் நமது மனதைச் செலுத்தினல் மனமானது விரிந்து கொண்டே யிருக்கும். "ஆசைக்கோரளவில்லை" என்ற ஆன்றோர் வாக்கிற்கிணங்க உலக வியாபாரத்தில் ஒரு விதமான திருப்தியும் எப்பொழுதும் உண்டாகாதாகையால், மனது உலக வியாபாரத்தைப்பற்றினல் அது விரிந்து கொண்டேதானிருக்கும். மனது ஈசுரனைப்பற்றினல் நாளுக்கு நாள் ஈசுரனுடைய கடாக்ஷத்தாலே உலக வியாபாரத்தில் விரிந்து கிடக்கும் மனது குவிந்து ஈசுரன் ஒருவனையே பற்றிக்கொண்டு நிற்கும். உலக வியாபாரம் பிரத்யக்ஷமானதாகையால் அதை மனது சுலபமாகப்பற்றுகிறது. ஈசுரனே கண்ணுக்குப்புலனுகாதவன். மனமானது அவ்விதமான புலனுகாத ஈசுர விஷயத்தை எப்படி பற்றும்? இதற்குப் பெரியோர்கள் விவேகத்தைக்கொண்டு மனதை ஈசுரனிடத்தில் பற்றும் படியாகச் செய்ய வேண்டும் என்று கூறியுளர். "நான்" என்பதைப்

பற்றியும் (அஹங்காரம்), " எனது " என்பதைப்பற்றியும் (மமகாரம்), உள்ளபடியறிதல் விவேகம் எனப்படும்.

184. " நான் " என்பது உடம்பல்லவென்றும் உடம்பைக்காட்டிலும் வேறானது என்றும் இறைவன் வசிக்கும் வீடு என்றும் இறைவனாலேயே ஆட்டி வைக்கப்படுகிறதென்றும் வீடு வீட்டுக்காரனுடைய சுகத்திற்காக உள்ளதுபோல இறைவனுடைய சுகத்திற்காகவே ஜீவன் இருக்கின்றதென்றும் அறிந்தால், கெட்ட அஹங்காரமமகாரங்கள் (நான், எனது என்பவையைப்பற்றிய விபரீத எண்ணங்கள்) ஒழியும். நான் உயர்குலத்தவன், நான் மிகவும் மேதாவி, நான் பணக்காரன், நான்மிகவும் நன்னடக்கையுள்ளவன் என்று நாம் நம்மை நினைப்பது கெட்ட அஹங்காரங்களாகும். இவ்விதமான தப்பெண்ணங்களை அறவே யொழித்தல் வேண்டும். " மனத்தில் ஓர் தூய்மையில்லை வாயில் ஓரின்சொலில்லை " என்றும் " தவத்துளார் தம்மிலல்லேன் தனம் படைத்தாரில்லேன் " என்றும் ஆழ்வார் பாசுரத்தின்படி நமது மனத்தில் பட்டால்தான் கெட்ட அஹங்காரங்கள் நம்மை விட்டு விலகும். அப்பொழுதுதான் " மன்னுயிரைத் தன்னுயிர் போல் கருதும் " சமரச நோக்கமுண்டாகும். இவ்வித சமரச நோக்கம் உண்டானால்தான் த்வேஷ புத்தி நம்மிடமிருந்து அகலும். " த்வேஷபுத்தி நம்மிடத்திலிருந்து அகன்றால்தான் ஸ்ரீவைஷ்ணத்வம் கை கூடும் " என்று திருக்கோட்டியூர் நம்பிகள் திருவாய் மலர்ந்தருளியிருக்கிறார்.

மனைவி, மக்கள், மண், பொன், முதலியவைகளை தன்னுடையவை என்றும், ஒருவேலையை முடிப்பது தனது சக்தியைக் கொண்டே என்றும், வேலையால் வரும் பலன் தன்னுடையது என்றும் எண்ணுதல் கெட்ட மமகாரங்களாம். நாம் மோக்ஷமடைவது கூட இறைவனுடைய சந்தோஷத்திற்காகவேயாம் என்று நமது மனதில் படவேண்டும். ஏனெனில், இறைவன் கிருபையால் நாம் சம்சாரத்தில் படும் கஷ்டத்தைக் கண்டு துயரமடைந்து நாம் கடைத்தேறுவதற்காக அநேக விதமான பிரயத்தனங்களைச் செய்கிறான். ஆதலால்,

நாம் மோக்ஷமடைந்தால் இறைவன் சந்தோஷத்தையடைவான் என்பதில் என்ன சந்தேகமிருக்கிறது. ஜீவன் சரீரமாகவும், அதற்குள் இறைவன் சரீரியாகவும் இருப்பதாக நாம் அறிவோம். இவ்வுடலானது ஜீவனது சக்தியைக் கொண்டு சகலவேலைகளையும் செய்தும் பலன் ஜீவனுக்கே உரியதாகின்றது. அதுபோல ஜீவன் தனது ஆத்மாவாகிய இறைவனுடைய சக்தியைக் கொண்டுதான் சகலவேலைகளையுஞ் செய்கின்ருன். இதை நாமறிந்து ஒவ்வொரு காரியத்தையும் "இது ஈசுரனுடையது, இதை ஈசுரன் செய்கின்ருன்" என்று ஈசுர சிந்தனையுடன் செய்து வருவோமானல் ஈசுர கடாக்ஷத்தாலே தன்னலம் தேய்ந்து நல்லன செய்வோம் அதனாலாகிய பலனும் ஈசுரனையே சேரும். ஆதலால் பிறவிக்குக்காரணமாகிய கர்மம் நம்மைச்சாராது. இதைத்தான் சாத்விகத் தியாகம் என்று ஸ்ரீகீதையிலே பகவான் கூறியுளார். இது நம்மனத்தில் சரியாகப்பதிந்து விட்டால் கெட்ட மமகாரங்கள் நம்மை விட்டு ஒழியும். இவ்விதமான அஹங்கார மமகாரங்களைப் பற்றிய தெளிந்த அறிவு **விவேகம்** என்று சொல்லப்படும். இவ்விதமாக விவேகத்தைக் கொண்டுதான் இறைவன்பால் நமது மனதைப்பற்றச் செய்யலாம். இது வீடு பெறுவதற்கு முதல் படியாம். ஆகையால்தான் நமது ஆழ்வாரும் "விட்டது பற்றிறனில் உற்றது வீடு" என்ருர். விவேகத்தால்தான் நமக்கு பாரதந்திரியம் பிறக்கும். அப்பொழுதுதான் நமது சேஷத்வம் கேடுருது.

185. அர்த்த பஞ்சகத்தில் 106-வது பாராவில் சொல்லப்பட்டிருப்பதைப்போல அடாத காரியங்களைச் செய்ததினுல் ஏற்பட்டிருக்கும் நிலைமையை உள்ளபடியறிந்தால் நாம் இதுவரையில் சாத்திர விரோதமாக நடந்தமைக்கு "மனைய் கண்மடவார் மயக்கில்பட்டு, மாநிலத்து நானே நாவுைித நரகம் புகும் பாவம் செய்தேன் என்றும், "கொன்றேன் பல்லுயிரைக் குறிக் கோளொன்றிலாமையினுல், என்றேனும் இரந்தார்க்கு இனிதாக உறைத்தறியேன்" என்றும், "குலந்தானெத்தனையும் பிறந்தேயிறந் தெய்த்தொழிந்தேன், நலந்தானென்றுமிலேன் நல்லதோரறம் செய்துமிலேன்" என்றும்,

"எப்பாவம் பலவும் இவையே செய்து இளைத்தொழிந்தேன்" என்றும் திருமங்கை மன்னன் பாசுரங்களின்படி வருந்துவோம். "பற்றேல் ஒன்றுமிலேன் பாவமே செய்து பாவியானேன்" என்றும் ஆழ்வார் பாசுரத்தின்படி நம்மை பாபி என்று உணருவோம். இது நிர்வேதம் (தனது பூர்வ நடக்கையைப்பற்றி வருந்துதல்) எனப்படும். நமது செய்கையைப் பற்றி உள்ளபடி மனவருத்தம் உண்டானால் நாம் திரும்பவும் தகாதன செய்யோம். இது மோக்ஷத்திற்கு இரண்டாவது படியாம்.

186. மோக்ஷந்தவிர மற்றெல்லா சுகங்களும் தாழ்ந்தவையென்றும் நிலையற்றவை என்றும் உள்ளபடி மனதில் பட்டால், மோக்ஷந்தவிர மற்ற சுகங்களில் மனது செல்லாது. அப்பொழுதுதான் மற்ற சுகங்களில் **விரக்தி** உண்டாகும். இது மூன்றாவது படியாம்.

187. இவ்வளவு காலங்களாக செய்துவந்த கர்மங்களால் கட்டுப்பட்டிருக்கும் நம்மை ஈசுரன் என்ன செய்வானோ என்று பீதி யுண்டாகவேண்டும். இதற்கு உதாரணமாக நமது திருமங்கை மன்னன் அருளிச்செய்த பெரிய திருமொழி 11-வது பத்து 8-ம் திருமொழி "மாற்றமுள" என்கிற பாசுரங்களை வாசிப்போமானால் ஆழ்வார் "தான் செய்துள கர்மங்களுக்கு ஈசுரன் என்ன செய்வானோ" என்று துடித்திருப்பது நன்கு விளங்கும். இவ்விதமான பீதி உண்டாவது நான்காவது படியாம். பீதியுண்டானால்தான் இறைவனை உண்மையாகச் சரணாகதி அடைவோம் அதாவது கெஞ்சிக் கேட்டுக்கொள்ளுவோம்.

188. இவ்விதமாக முமுக்ஷுக்கு மனதைக் கட்டுப்படுத்த விவேகமும், தகாதன செய்யாமல் தடுக்க நிர்வேதமும், சம்சார மோகத்தை ஒழிக்க விரக்தியும், ஈசுரனைச் சரணாகதியடைய பீதியும் முக்கியமாக அடையவேண்டிய தன்மைகள் ஆம். இத்தன்மைகளின்றி நாம் மோக்ஷமடைய முடியாது.

# XI. பிரபத்தி அல்லது கெஞ்சிக் கேட்டுக்கொள்ளுதல்.

---

189. நாம் இப்பொழுது உடைத்தாயிருக்கும் நிலைமையை அறிந்து வருந்தி இந்நிலையிலிருந்து விடுபடுவது நமது யத்தினத்தால் முடியாது என்கிற முடிவிற்கு வந்து, இறைவன்தான் கதி என்றும் இறைவன் நம்மை கட்டாயம் காப்பாற்றுவான் என்றும் முழுமையும் நம்பி, எல்லாவித சுய பிரயத்தினங்களையும் விட்டு, இறைவனையே தஞ்சமென்று கெஞ்சிக் கேட்டுக் கொள்ளுவதற்கு (சரணாகதியடைவதற்கு) பிரபத்தி என்று பெயராம். பிரபத்தியானது வேதங்களில் கூறப்பட்டுள்ள பிரம்ம வித்தைகளில் ஒன்றாகும். இது நியாச வித்தை என்றும் சொல்லப்படும். பிரபத்தியைப்பற்றி வடகலை தென்கலையார்களுக்குள் சில அபிப்பிராய பேதங்களுள. அவை ஆங்காங்கு குறிக்கப்பட்டுள,

190. முக்தியடைவதற்கு பக்தியோகம் அவசியமாம். பக்தியோகத்திற்கு எம்பெருமானிடத்தில் அளவிலா அன்பு உண்டாகி, மனதானது வேறு விஷயங்களில் செல்லாமல் அடங்கி எம்பெருமானுடைய திருவடிகளையே பற்றியிருத்தல் வேண்டும். பகவானிடத்தில் அன்பும் மன அமைதியும் நமது பாபங்கள் தொலைந்தால்தான் கைகூடும். பாபங்கள் தொலைவது பிராயச் சித்தாதி கர்மயோகத்தின் வழியாகத்தான் முடியும். பிராயச் சித்தாதி கர்மயோகம் செய்ய சக்தியற்றவனும் யோக்கியதையற்றவனும், தியானத்தைப்பற்றி அறிந்திருந்தும் செய்யச் சக்தியற்றவனும் பிரபத்தி செய்ய அதிகாரியாம். பக்தியால் மோக்ஷம் பிராரப்த கர்மம் (இப்பொழுது அனுபவிப்பதற்கு இறைவனால் விதிக்கப்பட்ட கர்ம பலன்) அனுபவித்தான பிறகு இப்பொழுது அடைந்திருக்கும் பிறவியின் கடைசியில் கிடைக்கும். பிரபத்தி செய்கிறவனுக்குக் கேட்டபொழுது மோக்ஷம் சித்திக்குமாகையால், மோக்ஷ

யுடைவதற்குக் காரணத்தைப் பொறுக்க முடியாதவனும் பிரபத்திக்கு அதிகாரியாம். (வடகலை)

191. கர்ம, ஞான, பக்தியோகங்களை விடுவதற்குக் காரணம் அவற்றையறிவதற்கும் அநுஷ்டிப்பதற்கும் வேண்டிய ஞான சக்திகளில்லாமையன்று. ஈசுரனுக்கு பாரதந்திரியமாய் (தாக்நற்று) இருக்கின்ற ஸ்வரூபத்திற்கு கர்ம ஞான பக்தி எனும் உபாயாந்தரங்கள் விருத்தமாகையால், அவை விடத்தக்கவையாம். பிரபத்தியொன்றே சகலராலும் அநுஷ்டிக்கத்தக்கதாம். (தென்கலை.)

192. நமது ஸ்ரீ ராமாநுஜர் ஸ்ரீமத் கீதாபாஷ்யத்தில் சரமஸ்லோகத்திற்குப் பொருள் எழுதுகையில் "பக்தி யோகம் மோக்ஷ சாதனம்" என்று குறித்திருப்பதால், அவருடைய தரிசனத்தைப் பின்பற்றும் நாம் பக்தியோகம் செய்வது பிசகு என்று கூறுவது பொருத்தமுடையதன்று. பக்தி யோகந்தான் மோக்ஷத்திற்குச் சாதனமாம். பக்தியோகம் செய்வதற்கு வேண்டிய ஞானசக்தி இல்லாதவர்கள்தான் பிரபத்தியைச் செய்ய அதிகாரிகள் ஆம். பிரபத்தி செய்பவர்களுக்கு எம்பெருமான் பக்தி ஸ்தானத்தில் நின்று பக்தியால் அடையப்படும் மோக்ஷத்தைக் கொடுக்கின்றான். (வடகலை.)

193. பொற்குடத்திலிருக்கும் சுத்த ஜலத்தில் மத்ய பிந்து (ஒரு சொட்டுகள்) கலவாதிருந்தால் அந்த சுத்தோதகம் போக்கியமானது. அதுபோல பொற்குட ஸ்தானத்திலிருக்கும் ஆத்மாவில் சுத்த ஜலம் போன்ற எம்பெருமானிடத்திலுள்ள பக்தியில் மத்யபிந்து போன்ற அஹங்காரம் கலவாதிருக்கும்வரையில் அந்த பக்திக்கு ஒருவித குறைவுமில்லை. பக்திக்குப் பரவசனாய் இறைவன் மோக்ஷந் தந்தானும், பக்தியானது அடைந்த பேற்றுக்கு ஈடாகாது. "யானே நீ என்னுடைமையும் நீயே" என்கிறபடி நாமும் நம்முடைமையும் ஈசுரனுடையதாகையால், நமக்கென்று ஒன்றுமில்லாத பரம தரித்திரர்களாகிய நாம் செய்யும் பக்தியும் ஈசுரனுடை

யதேயாகையால், அது பேற்றுக்குச் சாதனமாகமாட்டாது. தவிரவும், பக்தியை மோக்ஷத்திற்கு உபாயமாகக் கொள் ளுகை பர்த்தாவுடன் போகித்ததற்கு மனைவியானவள் கைக்கூலி தரவேணுமென்று வளைக்குமதையொக்கும். சாஸ் திரங்கள் பக்தியை மோக்ஷத்திற்குச் சாதனமாக விதித்தற் குக் காரணம் கொண்டி பசுவிற்கு (பட்டிமேய்ந்துத் திரியும் பசுவிற்கு) தடிகட்டுவாரைப்போல அஹங்கார மமகாரங்களை யுடைய சேதனர்கள் கஷ்டமான கர்மஞான பக்தியோகங் களை அநுட்டித்தால் அஹங்கார மமகாரங்களால் வந்த கர்வம் அடங்கி ஸ்வரூப ஞானம் சித்திப்பதற்காம். கொடிய வியாதி யால் வருந்தியும் அவ் வியாதியைப் போக்கும்படியான நல்ல மருந்தை உண்ண விரும்பாத குழந்தைக்குத் தாயானவள் குழந்தை விரும்பி உண்ணும் மதுர பதார்த்தத்துடன் மருந் தைக் கலந்து உட்கொள்ளச் செய்யுமாப்போல் பிறவித் துய ரைப் போக்கும்படியான பிரபத்தியை உபதேசித்தும் சுய யத்தினத்தில் மங்கிக் கிடக்கும் சேதனர்களால் பற்றமுடியா தென்று சேதனர்களுக்குப் பழக்கமான சுய யத்தினத்துடன் எம்பெருமானையுங் கலந்து பக்தியோகமாகிய உபாசனை விதிக் கப்பட்டது. எப்படி மதுர பதார்த்தங்களுடன் சேர்ந்திருக் கும் மருந்து மாத்திரமே பிணியைப் போக்கவல்லதாக விருக் கிறதோ அதுபோல உபாசனையில் சுயயத்தினத்துடன் சேர்ந் திருக்கும் எம்பெருமான் மாத்திரமே பிறவிப் பிணியைப் போக்கவல்லவனாகவிருக்கிறான். ஒரு தாயானவள் தான் பெற்ற எல்லா குழந்தைகளுடைய க்ஷேமங்களையும் விரும்பி யிருக்குமாப்போல இறைவன் தாமஸ இராஜஸ சாத்வீக குணங்களையுடைய சகல சேதனர்களும் உய்யுமாறு சாத்தி ரத்தை ஏற்படுத்தியிருக்கின்றான். சேதனர்களுடைய குணங் களுக்குத் தக்கவாறு புருஷார்த்தங்களும் சாதனங்களும் ஏற் படுத்தப்பட்டிருக்கின்றன. தாமஸருக்கு பகைவரைக் கொல் லும்படியான ச்யேநயாகம் முதலிய அபிசார கர்மங்கள் விதிக் கப்பட்டன. இராஜஸருக்கு யாகம் முதலிய காம்ய கர்மங் கள் விதிக்கப்பட்டன. சாத்வீகருக்கு உபாசனை விதிக்கப் பட்டது. பரம சாத்வீகருக்கு பிரபத்தி விதிக்கப்பட்டது. தாமஸ இராஜஸர்களுக்கு விதிக்கப்பட்ட காம்யகர்மங்கள்

சாத்வீகருக்கு விலக்காகிறப்போல, சாத்வீகருக்கு விதிக்கப் பட்ட உபாசனை பரம சாத்வீகருக்கு விலக்காகும். ஆகலால், சாத்திரங்களில் விதிக்கப்பட்டிருப்பதினாலேயே பக்தியோக மாகிய உபாசனை ஸ்வரூபத்திற்கு ஒத்ததாக ஆகிவிடாது. (தென்கலை.)

194. மோக்ஷமடைவதற்கு பக்தி அல்லது பிரபத்தி உபாயமாம். உபாயம் சாத்திய உபாயம் ஸித்த உபாயம் என இருவகைப்படும். இறைவனுக்கு சந்தோஷத்தை யுண்டு பண்ணி அர்த்த பஞ்சகத்தில் 106-வது பாராவில் சொல்லப் பட்ட நம்மேல் இருக்கும் இறைவனது கோபத்தைப் போக்கு வதற்காக நம்மால் செய்யவேண்டிய பக்தி அல்லது பிரபத் திக்கு சாத்தியோபாயம் என்று பெயராம். பலன் கொடுப்ப வனும் ஒரு உபாயமாம். மோக்ஷத்தைக் கொடுப்பவன் இறைவனும். இறைவன் முன்னமேயே உள்ளவனாகலால், இறைவனுக்கு ஸித்தோபாயம் என்று பெயராம். தளிகை சமைக்க முன்னமேயே உள்ள அரிசி, தண்ணீர், விறகு முதலியன ஸித்தோபாயங்களென்றும், அடுப்பு மூட்டுதல் தண்ணீரைப் பாத்திரத்தில் வைத்து அதில் அரிசியை இட்டு கொதிக்கவைத்தல் முதலியன ஸாத்தியோபாயங்களென்றும் சொல்லப்படும். அதுபோல, மோக்ஷத்திற்கு முன்னமேயே உள்ளவனை ஈசுரன் ஸித்தோபாயமென்றும் அவனைப் பற்றுத லாகிய பக்தி அல்லது பிரபத்தி சாத்தியோபாயமென்றும் சொல்லப்படும். நாம் விரும்பும் பலனையடைவதற்கு இரு வகை உபாயங்களும் அவசியமானவையாம். பக்தி அல்லது பிரபத்தியால் இறைவனைப்பற்றினால்தான் இறைவன் நம்மை மோக்ஷத்திற்கு அழைத்துச் செல்லுவன். இதற்கு மர்க்கட நியாயம் (குரங்குதர்மம்) என்று பெயராம். இவ்விதமாக பக்தி அல்லது பிரபத்தி மூலியமாக நம்மை மோக்ஷத்தைக் கேட்கும்படியாகச் செய்வித்துத்தான் நம்மை எம்பெருமான் ஆட்கொள்ளுவான் நாம் கேட்காமல் நிர்ஹேதுகமாக (காரணமில்லாமல்) மோக்ஷத்தைக் கொடுப்பதாயின், இறை வன் மோக்ஷத்தை எல்லோருக்கும் கொடுக்காமல் சிலருக்கு மாத்திரம் கொடுப்பதால் பக்ஷபாதமுள்ளவன் என்னும் குற்

றம் இறைவனுக்கு நேரிடும். ஆகையால், கேட்டுக்கொடுப்பது தான் இறைவனுக்கழகாகும். எம்பெருமான் கிருபையாலே தெரிந்தும் தெரியாமலும் செய்யும் நற்காரியங்களுக்கு (யாத்ரிச்சிக, பிராசங்கிக கர்மங்களுக்கு) புண்ணியங்களை விளைவித்துப் பாபத்தைப் போக்கி, அதைக் காரணமாகக் கொண்டு நம்மானத்தின்கண் பக்தி அல்லது பிரபத்தி செய்யும்படியான நினைவை உண்டாக்குகிறான். பிரளய காலத்திலிருக்கும் ஜீவர்களுடைய இருப்பை நோக்கி இறைவன் மிகவும் வருந்தித் தன்னை வணங்கித் துன்பக் கடலிலிருந்து நீங்கி மோக்ஷமடையுமாறு தனது கிருபையாலே ஜீவர்களுக்குக் கரண களேபரங்களைக் கொடுத்திருக்கின்றானென்றும், ஜீவர்கள் மோக்ஷமடைந்தால் எம்பெருமான் தான் கொண்டிருந்த கவலை தீர்ந்து சந்தோஷமடைகிறானென்றும் சாத்திரம் கூறுகிறது. ஆகலால், மோக்ஷத்தை நாம் அடைய விரும்புவதும் சேஷியாகிய இறைவனுடைய சந்தோஷத்தின் பொருட்டேயாகையால் நமது சேஷத்வ ஸ்வரூபத்திற்கு ஒரு பாதகமுமில்லையாம். (வடகலை.)

195. பிரபத்தியை ஸாத்யோபாயமாகப் பற்றுவது பாரதந்திரிய உணர்ச்சியுள்ள நமக்கு ஒவ்வாது. பிறவிக்கடலில் அழுந்திக்கிடக்கும் நாம் நமது துன்பத்தையறிந்து வருந்தித் துன்பத்தைப் போக்க வல்ல இறைவனை நமது பிரபத்தி என்னும் வேலையாலே சந்தோஷப்படுத்திப் பிறவிக்கடலைத் தாண்ட வழி தேடுவது நமது ஆபத்தைப் போக்கிக் கொள்ளுவதாக பிரமித்து ஸ்வரூப நாசமாகிற பெரிய ஆபத்தைத் தேடிக் கொள்ளுகிறோம். ஆதலால், ஸித்தோபாயமாகிற எம்பெருமானைத்தவிர பிரபத்தியை மோக்ஷத்திற்கு ஸாத்யோபாயமாகக் கொள்ளுவது கூடாது. ஜீவர்கள் அனைவரும் எம்பெருமானுடைய சரீரமாக விருப்பதால், எம்பெருமானுடைய சொத்துக்களாகின்றன. சொத்துக்குடையவன் தனது இஷ்டத்தின் படி சொத்தைக் கொண்டு போக விட்டு இருக்க வேண்டிய பாரதந்திரர்களாகிய நாம் சுய யத்தனத்தினாலே அவனைப்பெற நினைக்கின் அவனுடைய நினைவுங்கூடாதாகையால் நாம் செய்யும் பிரபத்தி பேற்றுக்குச் சாதனமாகாது.

எம்பெருமான் ஆசிரித பாரதந்திரியனும் (அடியாரிட்ட வழக்காயிருப்பவனும்). இதற்கு அவனுடைய கிருபையும் சுதந்திரமும் காரணங்களாம். வேறு புகலற்று/தன்னை வந்து பற்றினவர்களிடத்தில் தனக்குண்டான கருணையாலே அவர்களிட்ட வழக்காயிருப்பதாகிய பாரதந்திரியம் கிருபையாலே வந்ததாகும். ஒரு காரணமுமின்றிச் சிலரை அங்கீகரித்து, தான் அவர்களிட்ட வழக்காயிருப்பதாகிய பாரதந்திரியம் சுதந்திரத்தாலே வந்ததாகும். கிருபையாலே வரும் பாரதந்திரியம் சில சமயங்களில் சுதந்திரத்தாலே தடைப்பட்டு விடும். ஆதலால், சுதந்திரத்தாலே வரும் பாரதந்திரியம் மேம்பட்டதாம். நம்முயற்சியால் நாம் தேடிக்கொள்ளும் நன்மை விலைப்பால் போலே, ஸ்வாமியான எம்பெருமான் தானே "இவனுக்கு இது வேண்டும்" என்று விரும்பி உண்டாக்கும் நன்மை தாய்ப்பால் போலே ஆம். ஆதலால், சுய யத்தினத்தை விட்டுப் பாரதந்திரியர்களாய் இறைவன் விட்ட வழி என்று நாம் இருக்க வேண்டும். இதற்கு மார்ஜால நியாயம் (பூனைக் குட்டி தர்மம்) என்று பெயராம். (தென்கலை)

196. ஜீவன் ஒரு வேலையைச் செய்தால் இறைவன் அதற்குப் பலன் கொடுக்கிறான். ஜீவன் பக்தியைச் செய்தால் இறைவன் அதற்கு மோக்ஷத்தைக் கொடுப்பான். மோக்ஷத்திற்காக பிரபத்தி செய்தால், ஜீவன் பக்தியோகம் செய்வதை விரும்பாமலே பக்தி ஸ்தானத்தில் இறைவன் நின்று அவனுக்கு மோக்ஷத்தைக் கொடுப்பான். சாப்பாட்டிற்குப்போதுமான பொருள் உள்ளவன் பிச்சை எடுத்து சாப்பிடக்கூடாது என்பது போல பக்தியோகம் செய்ய சக்தியுள்ளவன் பிரபத்தி செய்யக்கூடாது. கர்ம யோகம் தொடங்கினது முதல் பக்தியோகம் நிறைவேறும் வரையில் நமது பாபத்தால் வரும் இடையூறுகளை மிகக்கஷ்டப்பட்டுப் பிராயச்சித்தங்களால் நீக்க வேண்டும். ஆதலால், இக்காலத்தில் பக்தியோகம் செய்து மோக்ஷமடைவது மிகவும் அரிதாக விருக்கும். ஆதல் பற்றி இக்காலத்திற்கு உகந்தது பிரபத்திதான். அதனாலேதான் நமது ஆசாரியர்களும் பிரபத்தியை முக்கியமாகக் கொண்டு பிரபத்திக்குரிய மந்திரமாகிய த்வயத்தையும்

அதனால் அடையும் பலனைத் தெரிவிக்கும் சரமஸ்லோகத்தை யும் சீடர்களுக்கு உபதேசம் செய்ய விதித்துளார்.

197. பிரபத்தி செய்பவர் அகிஞ்சநனாகவும் அநந்யகதிக் வனாகவும் இருக்க வேண்டும். அகிஞ்சநனாவது பக்தி யோ கம் செய்ய கையாலாகாதவனாம். அநந்யகதிக்வனாவது சர் வேச்வரனை விட வேறொருவரையும் பற்றாமல், மோக்ஷந்தவிர மற்ற விஷயங்களில் அவா வற்று இருப்பவனாம். மோக்ஷத் திற்காக ஈசுரனிடத்தில் பிரபத்தி செய்பவன்

"பத்திமுத லாமவற்றிற் பதியெனக்குக் கூடாமல்
எத்திசையு முழன்றோடி யிளைத்துவிழுங் காகம் போல்
முத்திதரு நகரேழில் முக்கியமாங் கச்சிதனில்
அத்திகிரி யருளாளர்க் கடைக்கல நான் புகுந்தேனே"

என்கிற பாசுரத்தின் படி மூன்று உலகமும் சுற்றி உயிர் விட மனதில்லாமல் வாடி மறுபடியும் ஸ்ரீராமரிடம் வந்து விழுந்த காகத்தைப் போல் இருப்பன்.

ஒரு வேலையில் இறங்குவதற்குமுன் அதற்கு அநுகூல மாகச் சில விஷயங்கள் நம்மால் செய்யப்படவேண்டும். அவை அந்த வேலைக்கு **அங்கங்கள்** எனப்படும். நாம் பிர பத்தி செய்வதற்குமுன் அதற்கு அங்கங்களாக சில நினைவு கள் நமக்கு இருக்கவேண்டும். அவையாவன:—(1) இறைவ னுக்கு அநுகூலமாகவிருப்பது, (2) பிரதிகூலமானவை களை விடுவது, (3) கார்ப்பண்ணியம் அதாவது மோக்ஷத் திற்காக பக்தி முதலியவைகளைச் செய்ய நம்மால் இயல வில்லையே என்று நன்கு மனத்தில் பட்டு கர்வம்போய் நம் மைக் காப்பாற்றும்படியாக அழுது இறைவனை வேண்டிக் கொள்ளுவது, (4) மஹா விஸ்வாசம் - அதாவது இறைவ னைச் சரணமடைந்தால் அவன் கட்டாயம் நம்மைக் காப்பாற்

---

* தேசிகப்பிரபந்தம், அடைக்கலப்பத்து, பாசுரம் 1.

றுவான் என்ற பெரும் நம்பிக்கை, (5) கோப்த்ருத்வவரணம் அதாவது காப்பாற்ற வேண்டுமென்று இறைவனைக் கேட்டுக் கொள்ளுவது ஆகிய இவைகளாம். இவ்வைந்தும் எது குறித்து பிரபத்தி செய்தாலும் முக்கியமாக விருக்கவேண்டிய அங்கங்களாம். இவ்வுண்மையை விபீஷணாழ்வானுடைய சரணாகதியில் பரக்கக் காணலாம். (1) முதலில் ஸ்ரீ விபீஷணாழ்வார் ஸ்ரீ ராமபிரானுக்கு பகைவனாகிய இராவணனுக்கு "சீதா பிராட்டியை கொண்டுபோய் ஸ்ரீராமரிடம் சேர்ப்பித்து சரணமடை. அப்பொழுதுதான் நாம் ஆபத்தினின்று நீங்குவோம்" என்று பல நல்வார்த்தைகளைச் சொல்லித் திருத்தப்பார்த்தார். தன்னைப் பகைப்பவனும் சுகமுறவேண்டுமென்ற எண்ணம் இறைவனுக்கு உண்டு. ஆதலால், நாம் பகைவரும் சுகமுற வேண்டுமென்ற நல்ல எண்ணத்தைக் கொண்டிருக்கவேண்டும். இது இறைவனுக்கு அநுகூலமானது. (2) இவ்விதமாக சொல்லிய ஸ்ரீ விபீஷணாழ்வாருடைய நல்வார்த்தையை இராவணன் கேட்காமல் கோபித்து "நீ குலத்தைக் கெடுத்தவன்" என்று பதில் கூறினான். இப்படியாக இராவணன் ஸ்ரீராமருக்கு பிரதிகூலமாகவிருந்தமையால், ஸ்ரீ விபீஷணாழ்வார் அவனையும், அவன் ஊரையும், அவன் ஊரிலிருந்த தன் மனைவி, மக்கள் சொத்துக்களையும் விட்டுப் பிரிந்தார். சாத்திரம் இறைவனுடைய விருப்பத்தை தெரிவிக்கின்றமையால், சாத்திரத்தில் செய்யக்கூடாது என்று விலக்கியவைகள் அனைத்தும் ஈச்வரனுக்கு பிரதிகூலமானவைகளாம். ஆதலால், சாத்திர விரோதமானவைகளை நாம் செய்யவே கூடாது. (3) இராவணன் தனக்கு பெரிய விரோதியாகவிருப்பதாகவும் தனக்கு தகுதியான துணை ஒருவருமில்லாத நிலையில் தானிருப்பதாகவும் ஸ்ரீ விபீஷணாழ்வார் ஸ்ரீ ராமபிரானுக்குச் சொன்னார். இதனால் கார்ப்பண்ணியம் சொல்லப்பட்டது. (4) ஸ்ரீராமர் தன்னைக் கட்டாயம் காப்பாற்றுவார் என்று ஸ்ரீராமரிடம் வந்தார். இதனால் மஹா விஸ்வாசம் ஏற்படுகிறது. (5) ஸ்ரீ ராமரைச் சரணம் அடைந்தார். இதிலிருந்து தன்னைக் காப்பாற்றிக் கொள்ளுவதற்காகச் செய்யவேண்டிய வேலையை ஸ்ரீ ராகவனைச் செய்யும்படியாகக் கேட்டுக் கொண்டார் என்பது விளங்குகிறது. இதனால் கோப்த்ருத்வவரணம் சொல்

லப்பட்டது. ஆக ஐந்து அங்கங்களும் ஸ்ரீ விபீஷணுழ்வா ருடைய சரணுகதியில் காணப்படுகின்றன. பிரபத்திக்கு இவ் வைந்து அங்கங்களும் ஏன் அவசியமென்ருல், இறைவனுக்கு அநுகூலமானவைகளைச் செய்யவேண்டுமென்றும் பிரதிகூல மானவைகளை விடவேண்டுமென்றும் எண்ணம் நமக்கு வந் தால்தான் நாம் எம்பெருமானுடைய உகப்பிற்காகச் சகல வேலைகளையும் செய்வோம் அப்பொழுதுதான் நமது சேஷத் வத்துக்கு ஹானி வராது. அப்பொழுதுதான் இறைவனும் நமது பிரபத்திக்கு இரங்குவான். கார்ப்பண்ணியம் என்னும் அங்கமிருந்தால்தான் நாம் கர்வத்தை விட்டு இறைவனைச் சரணுகதியடைவோம். இந்த அங்கமானது பக்தி முதலிய இதர சாதனங்களைவிட்டுப் பிரபத்தியில் இழிவதற்கும், பிர பத்தி செய்தான பிறகு மற்ற உபாயங்களில் அவலம்பிக்காம லிருப்பதற்கும் உதவுகிறது. மஹா விசுவாசம் என்கிற அங்க மானது சந்தேகமில்லாமல் இறைவனைச் சரணுகதியடைவ தற்கும் சரணுகதியடைந்த பிறகு தன்னைக் கட்டாயம் காப் பாற்றுவான் என்று எம்பெருமானைப் பெரிதும் நம்பிக் கவலை யற்று இருப்பதற்கும் உதவுகிறது. காரணமில்லாமல் காரிய மில்லையாதலாலே கோப்த்ருத்வவரணம் அவசியமானது. இவ்வைந்து அங்கங்களும் எதையடைவதற்காகப் பிரபத்தி செய்தாலும் முக்கியமாக வேண்டியவைகளாம். மோக்ஷ மடைவதற்காகச் செய்யும் பிரபத்திக்கு ஸாத்வீக தியாகம் என்கிற ஆருவது உறுப்பும் முக்கியமாம். ஸாத்விக தியாக மென்பது (1) கர்த்ருத்வத் தியாகம், (2) மமதாத் தியாகம், (3) பலத் தியாகம், (4) பலோபாயத் தியாகம் என்னும் நான்கும் சேர்ந்ததாம். நாம் ஒருவேலையைச் செய்யும் பொழுது அதை நாம் செய்யவில்லை என்றும், அதை இறை வன் நம்மைக்கொண்டு செய்விக்கிருன் என்றும் நினைப்பது கர்த்ருத்வத் தியாகமாம். வேலை நம்முடையதன்று, இறைவ னுடையது என்று நினைப்பது மமதாத் தியாகமாம். நாம் இறைவனுக்கு சேஷபூதர்களாகையால் பிரபத்தி முதலிய வேலையின்பயன் இறைவனுடையது என்று நினைப்பது பலத் தியாகமாம். ஒரு பண்ணையாள் யஜமானனுடைய உத்தர வின்பேரில் கொல்லையை மண்வெட்டிகொண்டு கொத்தினன்,

அவனுக்குக் கூலி மண்வெட்டி கொடுக்குமா? அல்லது, கொல்லை கொடுக்குமா? அல்லது கொத்தின வேலை கொடுக்குமா? இவைகள் ஒன்றும் அவனுக்குக் கூலி கொடுக்காது. ஆனால், அவனுடைய வேலையால் சந்தோஷமடைந்த யஜமானன்தான் கூலியைக் கொடுப்பான். அதுபோல இறைவன் நம்மைக்கொண்டு செய்விக்கப்பட்ட பிரபத்தியால் சந்தோஷமடைந்த இறைவனே பலன் கொடுக்கிறான் என்று நினைப்பது பலோபாயத் தியாகமாம். இந்த நான்கு விதத்தியாகங்களும் கொண்ட ஸாத்விகத் தியாகமானது இறைவனுக்கும் நமக்குமுள்ள உறவின் உண்மையை அறிவதால் உண்டாகும்.

மோக்ஷத்திற்காகச் செய்யும் பிரபத்தியானது "இறைவனே! இந்த ஜீவன் உன்னுடையது. நீ இவனைக் காப்பாற்றி, இவனை உன் வேலைக்கு உபயோகப் படுத்திக்கொள்" என்று ஸ்வரூபமென்கிற ஆத்மாவையும், பரமென்கிற ஜீவன் செய்ய வேண்டிய வேலையையும், காப்பாற்றுவதினால் அடைந்த பயனையும் எம்பெருமானிடத்தில் ஒப்புவித்தலாம். இவை முறையே ஸ்வரூப ஸமர்ப்பணம், பர ஸமர்ப்பணம், பல ஸமர்ப்பணம் என்று சொல்லப்படுகின்றன. தானும் தன்னுடைமையும் தன்னுடையதன்று எம்பெருமானுடையது என்று நினைப்பது ஸ்வரூப ஸமர்ப்பணமாம். மோக்ஷத்திற்காகத்தான் செய்யவேண்டிய பக்தி ஸ்தானத்தில் எம்பெருமானே நின்று மோக்ஷங் கொடுக்கவேண்டிய பொறுப்பை எம்பெருமானிடத்தில் ஒப்புவிப்பது பர ஸமர்ப்பணமாம். மோக்ஷத்தைத் தனக்குக் கொடுப்பதால் அடையும் பலன் எம்பெருமானுடையதென்று நினைப்பது பல ஸமர்ப்பணமாம். பரஸமர்ப்பண மாத்திரந்தான் பிரபத்தி என்பதாம். பிரபத்தியை இகலோக சுகத்திற்காகவும் மோக்ஷத்திற்காகவும் செய்யலாம். இகலோக சுகத்திற்காகச் செய்யப்படும் பிரபத்தியில் ஸ்வரூப ஸமர்ப்பணமும் பல ஸமர்ப்பணமும் கிடையாது. ஆனால் மோக்ஷத்திற்காகச் செய்யப்படும் பிரபத்தியில் ஸ்வரூப ஸமர்ப்பணமும் பல ஸமர்ப்பணமும் அவசியமானவையாம். மோக்ஷத்திற்காகச் செய்யப்படும் பக்தி யோகத்திலும் இவ்விருவித ஸமர்ப்பணங்களும் இன்றியமையாதனவையாம்.

பக்தியோகம் செய்யச் சக்தியற்றவர்களாகிய நாம் செய்ய வேண்டிய வேலையின் பொறுப்பையும் ஈசுரனிடத்தில் பிரபத்தி மூலியமாகக் கொடுத்துவிடுவதால், மோக்ஷத்திற்காகச் செய்யும் பிரபத்தியில் மூன்றுவித ஸமர்ப்பணங்களும் இன்றியமையாதனவையாம்.

"பிரபத்தி" என்பது "(1) நானும் என்னுடைமையும் இறைவனுடையது (2) என்னுடையதன்று (3) மோக்ஷத்திற்காக விதிக்கப்பட்ட பக்தியோகம் செய்ய என்னால் முடியவில்லை. அது இல்லாமலேயே மோக்ஷத்தைக் கொடுக்கும் பொறுப்பு இறைவனுடையது (4) என்னுடையதன்று. (5) மோக்ஷத்தைக் கொடுப்பதால் வரும் பலன் இறைவனுடையது (6) என்னுடையதன்று" என்று இவ்வாறு விஷயங்களையும் சேர்த்து நினைப்பதாம்.

பிரபத்தியைத் தானே செய்துகொள்ளலாம் அல்லது பகவானுக்கு வேண்டியவராகிய ஆசாரியரைக்கொண்டாவது செய்துகொள்ளலாம். தானே பிரபத்தி செய்யவேண்டுமாயின் ஓர் நல்ல ஆசானை அடைந்து அவரிடத்தில் பிரபத்தி என்பதைப்பற்றியும் அதற்கு வேண்டிய விஷயங்களைப்பற்றியும் தெரிவிக்கும் த்வயம் எனும் மந்திரத்தினுடைய பொருளை நன்றாய்த் தெரிந்துகொண்டு எம்பெருமானைத் தானே சரணாகதியடையலாம். இவனுக்கு ஸ்வநிஷ்டன் என்று பெயராம். இவ்விதமாக த்வயத்தின் பொருளை முழுதும் தெரிந்து கொள்ளாவிட்டாலும் பொதுவான பொருளையாவது தெரிந்து கொண்டு, தான் அறிந்துகொண்டபடி சில நாட்கள் பழகி, பிறகு ஒருநாள் ஆசாரியனை நினைத்துக்கொண்டு ஆசாரியன் தன்னை எம்பெருமானிடம் ஒப்புவிப்பதாகப் பாவித்துத் த்வயமென்கிற மந்திரத்தைச் சொல்லி ஐந்து அங்கங்களுடன் கூடிய அங்கியாகிய பர ஸமர்ப்பணத்தைச் செய்யலாம். இவனுக்கு உக்திநிஷ்டன் என்று பெயராம். "உக்தி" என்ற பதத்திற்கு "சொல்" என்று பொருளாம். ஆனால், இது நினைவுதான். இதற்கு உக்திநிஷ்டை என்று பெயர் வந்ததற்குக் காரணம் இந்த பிரபத்தியில் மந்திரத்தினுடைய முழு

பொருளையும் அறியாமல் சொல்வதாகும். மந்திரத்திற்கு முழு பொருளை அறிந்து சொன்னாலும், பொதுவாக பொருளை அறிந்து சொன்னாலும் பலன் கிடைப்பது இன்னம். ஸ்ரீ விபீஷணாழ்வார் ஸ்ரீராமரைச் சரணமடையும்பொழுது ஸ்ரீராமபிரானுக்கு மிகவும் வேண்டிய ஸ்ரீ சுக்கிரீவாதிகளைப் பார்த்து "என்னை ஸ்ரீ ராமபிரானுக்கு அறிவியுங்கோள்" என்று கூறியுளார். ஆதலால், நாமும் எம்பெருமானைச் சரணமடையும்பொழுது எம்பெருமானுக்கு மிகவும் வேண்டியவராகிய ஒருவரை அதாவது நமது ஆசாரியனை நினைத்து, அவர் நம்மை எம்பெருமானிடம் ஒப்புவிப்பதாகப் பாவித்துத்தான் பிரபத்தி செய்யவேண்டும். தவிரவும், ஸ்வநிஷ்டனுக்கும் உக்திநிஷ்டனுக்கும் தத்வத்ரய ஞானம் தெளிவாக இருத்தல் வேண்டும். மோக்ஷத்திற்காக எம்பெருமானை நினைக்கும் பொழுது தான் மோக்ஷத்தால் பெறப்போகும் சுத்த நிலையையும் எம்பெருமானுடைய கல்யாண குணங்களையும் நினைக்க வேண்டும். ஏனெனில், இவ்விதமாக நினைத்தால்தான் மோக்ஷத்திலும் இவை தோன்றும். ஆதலால்தான் தத்வத்ரய ஞானம் மோக்ஷமடையும்பொழுது அவசியம் உண்டாக வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆசாரிய நிஷ்டையில் ஆசாரியனுக்காகச் சிஷ்யனுக்கு எம்பெருமான் மோக்ஷத்தை அளிப்பதால சிஷ்யனுக்கு இவ்விதமான நிபந்தனைகள் கிடையாது. ஆசாரியன் சிஷ்யனிடத்தில் உனக்காக நான் எம்பெருமானிடத்தில் பிரபத்தியைச் செய்யப்போகிறேன் என்று சொன்னால், அது வேண்டாமென்று சொல்லாமல் சும்மாவிருத்தலே போதுமானது.

ஸ்ரீ கிருஷ்ணபரமாத்மா சரம சுலோகத்தில் "நீ என்னையே சரணமடை, உன்னுடைய எல்லா பாபங்களையும் போக்குகின்றேன். நீ துக்கப்படாதே" என்று அருளிச் செய்திருப்பதால், பிரபத்தி செய்துகொள்வதற்கு முன்பாக ஆசாரிய நிஷ்டையில் ஆசாரியனுக்கும் ஸ்வநிஷ்டையிலும் உக்தி நிஷ்டையிலும் நமக்கும் நாம் இப்பொழுது இருக்கும் இருப்பைக் குறித்து வருத்தம் உண்டாகவேண்டுவது மிகவும் அவசியமென்பது தெற்றென விளங்குகிறது. ஏனெனில்,

காரணமில்லாமல் கார்யமில்லையாம். பிறகு எம்பெருமானே நம்மேல் கிருபை கூர்ந்து நாம் தெரிந்தும் தெரியாமலும் செய்த நற்காரியங்களைப் புண்ணியமாக வைத்துக்கொண்டு நல்ல ஆசாரியனை அடையும்படியாகச்செய்து அவரால் த்வயம் என்கிற மந்திரத்தின் பொருளை அடையும்படியாகச் செய்து பிரபத்தியையும் செய்விக்கப்பட்டோம். இனி மோக்ஷத்திற் காகச் செய்யவேண்டிய வேலை நமக்கு ஒன்றுமில்லை என்று நிர்ப்பரராய் (கவலையற்றவராய்) எம்பெருமான் நமக்கு மோக்ஷமளிப்பது திண்ணம் என்று நிர்ப்பயராய் (பயமற்றவ ராய்), நாம் அடையப்போகும் மோக்ஷத்தை நினைத்துக் கொண்டு சந்தோஷத்துடன் இருக்கவேண்டும். இதுதான் சரியானபடி பிரபத்தி செய்தவனுடைய தன்மையாகும்.

முறைப்படி தத்வத்ரய ஞானத்தை நன்கு அடைந்து, தான் அடையவேண்டிய உயர்ந்த பலன் மோக்ஷந்தான் என்று மனத்தில் நன்குபட்டு மோக்ஷத்திற்காகப் பிரபத்தி செய்பவனுக்கு அடைந்த அறிவுக்கு அறிகுறியாக அர்த்த பஞ்சக ஞானம் தெளிவாக இருத்தல்வேண்டும். இவ்வித மான ஞானத்தெளிவு இருந்தால்தான் பிரபந்நனுக்கு இவ் வுலகத்திலிருக்கும் வரையில் ஒருவிதமான துக்கமும் உண் டாகாது. உலகத்திலிருந்தாலும் உலகப்பற்று நீங்கிச் சந்தோஷமாகவிருப்பான். ஆகலால்தான் அர்த்த பஞ்சக ஞானம் முமுக்ஷுவுக்கு அவசியம் என்று 94-வது பாராவில் சொல்லப்பட்டது.

பிரபத்தியைச் செய்துவிட்ட பிறகும் சாஸ்திரத்தில் கூறியுள்ள கர்மங்கள் எம்பெருமானுக்கு மிகவும் உகப்பாகை யால் கட்டாயம் அவைகளைச் செய்தாகவேண்டும். கர்மங் களில் பல தேவதைகளைப் பூஜிக்க நேரிடுகிறதாகையால் நாம் செய்த பிரபத்திக்குத் தோஷம் வராதோவென்றால், பல தேவர்களைப் பூஜிக்க நேரிட்டாலும் அவர்களுக்குள் அந்தர் யாமியாகவிருக்கும் எம்பெருமானையே பூஜிப்பதாக எண்ணி அவனுடைய உகப்பிற்காகவே பூஜிக்கின்றோம். ஏனெனில், எம்பெருமானுக்குத் தேவர்கள் சரீரமாவார்கள். ஒரு

பெரியவரை உத்தேசித்து அவர் உடம்பின்பேரில் மாலையைப் போடுகின்றோம். அதுபோல எம்பெருமானை உத்தேசித்து தான் அவனுடைய பிரீதிக்காக சாத்திரத்தில் விதிக்கப்பட்ட சகல கர்மங்களையும் செய்கின்றோம். பிரபத்தி செய்து ஆய் விட்டவனுக்குக் கர்மங்களால் ஒரு பிரயோஜனமுமில்லை. அவைகளுக்கு அவைகளே பிரயோஜனமாம்.

பிரபந்நன் எம்பெருமானுடைய உத்திரவை மீறி நடக்கக் கூடாது. ஆகலால், எம்பெருமானுடைய உத்திரவாகிய சாஸ்திரங்களுக்கு விரோதமாய் நடக்கக்கூடாது. எம்பெரு மானால் நியமிக்கப்பட்டிருக்கும் தேவதைகளை த்வேஷிக்கவுங் கூடாது.

பகவான் ஸ்ரீ கீதையில் சரம ஸ்லோகத்தில் "ஸர்வ பாபேப்யோ" என்று கூறியுளாராகையால், நாம் பிரபத்தி செய்வதற்கு முன் செய்திருந்த பாபங்களனைத்தையும் பிர பத்தி செய்த பொழுது இறைவன் போக்கி விடுகிறான். பிர பத்திக்குப் பிறகு நாம் செய்யும் பாபகாரியங்களுக்கு எம்பெரு மானால் தண்டனையையடைவது திண்ணம். பிரபந்நன் ஏதா வது பாபகாரியத்தைச் செய்துவிட்டால், அப்படி தான் நடந்ததற்காக வருந்தி, பிறகு அவ்விதமான தோஷம் நேரா திருக்கும்படியாகக் கவனித்து நடந்து, தான் செய்த பாபத் திற்குப் பிராயச்சித்தம் செய்துகொள்ள வேண்டுமென்று மனத்திற்பட்டு, பிராயச்சித்தம் செய்துகொள்ள வேண்டும். அப்படி செய்துகொள்ளாவிட்டால், அதற்காக எம்பெருமா னால் தண்டனையையடைவோம். ஆனால், அந்த பாபத்திற்காக மோக்ஷத்தைப் பிரபத்தி செய்த நமக்கு எம்பெருமான் கொடுக்காமல் போகமாட்டான். நாம் செய்த பாபத்திற்குச் சுலப தண்டனையை விதித்து, பிறகு நம்மை மோக்ஷத்திற்கு அழைத்துச் செல்லுவான். நாம் மோக்ஷத்திற்காக பிரபத்தி யைச் செய்யும்பொழுதே நமக்குப் பாபங்கள் நேராவண்ண மும் சகல பாபங்களையும் மன்னிக்கும்படியாகவும் கேட்டுக் கொண்டால் ஒருவிதமான பாபமும் நமக்கு நேராது. நமக்கு பாபங்களைச் செய்யும்படியான புத்தியும் உண்டாகாது.

பிரபந்நன் இவ்வுலகத்திலிருக்கும்பொழுது மனோவாக்கு காயங்களால் செய்யும் ஒவ்வொரு வேலையும் எம்பெருமானுடைய தயவால் நேரிடுகின்றதென்று நினைத்தும், எம்பெருமானுக்கு நிவேதனம் செய்த ஆகாரத்தையே தான் புசித்தும், இறைவனைப்பற்றிக் கூறும் புத்தகங்களை வாசித்துக்கொண்டும், பெரியோர்களிடமிருந்து ஞான நூல்களைக் கேட்டுக்கொண்டும், நல்ல அநுஷ்டானமுள்ள சாதுக்களுடன் கூடி அவர்களிடத்திலிருந்து நல்ல ஆசாரங்களைக் கற்றுக் கற்றவழியில் நின்றும், திவ்ய தேசங்களில் எழுந்தருளியிருக்கும் எம்பெருமான்களைத் தினந்தோறும் சேவித்துக் கொண்டும், இவ்வளவு நல்லறிவை உபகரித்த ஆசாரியனிடத்திலும் எம்பெருமானிடத்திலும் மிகவும் நன்றி பாராட்டியும் இருக்கக்கடவன். இவ்விதமாகச் சதாசார சம்பன்னனாகவிருந்தாலும், இப்படி இருக்கின்றோமே என்று கொஞ்சங்கூட கர்வம் கொள்ளக் கூடாது. எப்பொழுதும் தான் மிகவும் இளப்பமானவன் என்ற எண்ணம் இருக்கவேண்டும். இவ்விதமான எண்ணம் ஆழ்வார்களுடைய அருளிச்செயல்களை நன்கு அறிவதால் உண்டாகும்.

நமக்கு எம்பெருமானிடத்தில் மிகவும் பிரீதியுண்டாகுமாயின், எம்பெருமானுக்கு மிகவும் வேண்டியவராகிய பாகவதர்களுக்கு நம்மாலான கைங்கரியம் செய்யவேண்டும். இதற்கு புருஷார்த்தகாஷ்டை (புருஷார்த்தத்தின் எல்லை நிலம்) என்று பெயராம். இவ்விதமான கைங்கர்யம் நமது சேஷத்வத்துக்கு ஒவ்வாதது அல்ல. ஏனெனில், பாகவதர்களுக்குச் செய்யும் வேலை எம்பெருமானுக்கு மிகவும் உகப்பை விளைவிக்கும். மேலும், நாம் எப்பொழுதும் பாகவதர்களுள்ள இடங்களில் வசிக்கவேண்டும். ஏனெனில், செம்பிற் களிம்பு போல் நம்முடன் அவித்யை கூடியிருக்கிறது. அவித்யையால் உண்டாகும் தப்பு எண்ணங்களைப் போக்கப் பாகவதர்களுடைய சகவாசம் இன்றியமையாததாம். ஆதலால்தான், தேசிகர் "திவ்ய தேசமாகவிருந்தாலும் பாகவதர்களில்லாத இடம் வாசத்திற்கு யோக்கியமற்றது. திவ்ய தேசமாக வில்லாவிட்டாலும், பாகவதர்களுள்ள இடம் வசிப்பதற்கு

யோக்கியமானது" என்று ஸ்ரீ ரஹஸ்யத்ரய சாரத்தில் அருளிச் செய்திருக்கிறார். (வடகலை.)

198. பிரபத்தி நாம் அடையும் பேற்றுக்குக் காரணமல்ல. நாம் இறைவனை மோக்ஷந் தரும்படியாகக் கேட்பது அவன் இட்டப்படி இருக்கவேண்டிய சேஷபூதர்களாகிய நமது ஸ்வரூபத்திற்குத் தகாது. பிரபத்தி மேலுந்து ஓர் உபாயமாகத் தோன்றினும், அத்யந்த பாரதந்திரியத்தை உணருவதால் பிரபத்தி ஏற்படுகிறதால், பிரபத்தி சேஷபூதர்களாகிய நமது பாரதந்திரீய ஸ்வரூபத்துக்கு அநுகூலமாகவும், சுய பிரயத்னத்தை விடுவதாலே பிரபத்தி ஏற்படுகிறதால் அது மிக எளிதானதாகவும் இருக்கிறது. த்வயம் என்னும் பிரபத்தி மந்திரத்தில் மோக்ஷத்தை யாசிக்கின்றமையால் இறைவன் சகலத்தையும் அறிந்தவனுயிருக்க நாம் இறைவனைப் பிரார்த்திக்க வேண்டுவது அநாவசியமல்லவாவெனில், எப்படி நோயால் அன்னத்வேஷங்கொண்ட குழந்தைக்கு இரங்கித் தாயானவள் இவன் இந்த நோய் தீர்ந்து 'அம்மா சாதம்வேண்டும்' என்ற சொல்லைக் காதில்கேட்டு சந்தோஷிக்க மாட்டோமா என்று விசனமுற்று இருக்கும்பொழுது, அந்தக் குழந்தை நோய் தீர்ந்து 'அம்மா அன்னம் வேண்டும்' என்று சொன்னால் அவ் வார்த்தையைக் கேட்டுத் தாயானவள் எப்படிச் சந்தோஷமடைவாளோ அப்படி புருஷார்த்த கைங்கர்யமாகிய அன்னத்தில் ஆசையற்றுக் கிடந்த நாம் அந்நோய் தீர்ந்து புருஷார்த்த கைங்கர்யத்தைப் பிரார்த்திக்கக் கேட்டால் நமது மாதாவாகிய ஸ்ரீமந்நாராயணனுக்குத் திருவுள்ளம் குளிர்ந்து சந்தோஷமுண்டாகும். ஆதலால், த்வயமென்கிற பிரபத்தி மந்திரத்தை யனுசந்திப்பதால் பாதகமில்லை. ஒரு பசுவை அழைத்து உணவையிட விரும்புகிறவர்கள் புல்லைக் காட்டிப் பசுவை அழைத்துப் புல்லையே இடுகிறார்கள். அதுபோல பிரபத்தியில் எம்பெருமான் தானே உபாயமாய்ப் பிறகுதானே உபேயமாயும் (பலமுமாயும்) இருப்பதால், பலம் சாதனம் ஆகிய இரண்டும் ஒரே பொருளாகவிருப்பதால் பிரபத்தியின் குற்றமின்மையும் குணபூர்த்தியும் தோன்றுகின்றது. உடைமையை உடையவன் தானே சென்று கைக்கொள்ளுவதுபோல சுவாமியாகிய எம்பெருமான் அனுக்கிர

க்கப் பார்த்துக்கொண்டிருக்க வேண்டிய பாரதந்திரியர்க ளாகிய நாம் நமது சுயயத்தினத்தால் அவனையடைய நினைக் கின் அவனுடைய எல்லைமுங் கூடாதாகையால் பிரபத்தி யானது பேற்றுக்கு உபாயமாகாது. ஸ்ரீராமருக்கு மன மில்லாதிருந்தபொழுது ஸ்ரீ பரதாழ்வார் செய்த பிரபத்தி யானது ஸ்ரீராமர் சித்திரகூட பர்வதத்தை விட்டு நீங்கி கான கஞ் சென்று பல துன்பங்கள் அடைவதற்குக் காரணமாக விருந்தது. அதுபோல, ஈசுரனுடைய எல்லைம் கூடாத பொழுது நாம் செய்யும் பிரபத்தி பாதகமாகவும் முடியும். ஸ்ரீ ராமபிரான் தானே வந்து அங்கீகரித்த ஸ்ரீ குஹப்பெரு மாள் தோஷசஹிதனாகவிருந்தும் அவன் செய்த பிரபத்தி நன்மையாய்விட்டது. ஆதலால், எம்பெருமான் மனதிற்கு உகப்பானது புண்ணியமாம். எம்பெருமான் மனதிற்கு உகப் பல்லாதது பாவமாம். தவிரவும், எப்படி ஒரு விபசாரி தான் செய்தது தப்பு என்று தெரிந்தும் அச்சமில்லாமல் கணவ னிடம் சென்று என்னைச் சேர்த்துக்கொள் என்று சொல்லு வது அபராதமாகுமோ அதுபோல இவ்வளவு காலமாக பக வத் சம்பந்தத்தைவிட்டு இதர விஷயங்களில் உழன்று திரிந்த நாம் வெட்கமும் தண்டித்தால் என் செய்வது என்ற பயமும் அற்று ஈசுரனுடைய சன்னிதானத்தில் சென்று தன்னைச் சேர்த்துக்கொள்ளும்படியாகச் செய்யும் பிரபத்தி அபராத கோஷ்டியில் சேருமேயன்றி இவன் தானுகப் பற்றும்பற்று பேற்றுக்கு உபாயமாகாது. ஈசுரனே பற்றும்பற்றுதான் பேற்றுக்குக் காரணமாம்.

சேஷபூதராகிய நாம் சேஷியாகிய ஈசுரனை ஆசிரியிக்கும் பொழுதும், ஈசுரன நம்மை அங்கீகரிக்கும்பொழுதும் புருஷ காரபூதையாகிய ஸ்ரீ மஹாலக்ஷ்மியை முன்னிடவேண்டும். நாம் புருஷகாரத்தை முன்னிடுவது நாம் எல்லையற்ற காலமாக ஈசுரனுடைய கட்டளைக்கு மீறி நடந்திருப்பதால் ஈசுரன் நம் மேல் சீறுதிருக்கும்பொருட்டும், ஈசுரன் புருஷகாரத்தை முன் னிடுவது ஈசுரனுக்கும் நமக்கும் உண்டாயிருக்கும் ஒழிக்க வொழியாத உறவிருக்க இதுகாறும் குற்றங்களையே கண்டு கிட்டு நெடுநாள் நம்மைத் தூரத்தில் தள்ளிவைத்திருந்த

த்தைக் குற்றத்தைக் கண்டு நாம் ஈசுரனை வெருவாதபடி செய்விக்கப் பொருட்டுமாம். தவிரவும், புருஷகாரத்தை முன்னிடுவதால் அவரவர் கர்மத்திற்கேற்கச் சுகதுக்கங்களை அவரவர் அனுபவிக்கவேண்டுமென்றும் நாம் செய்யவேண்டுவது ஒன்றுமில்லை என்றும் இருக்கிற ஈசுரனுடைய எண்ணத்தைக் குலைத்து அவசியம் அனுபவித்தே தீரவேண்டும்படியான நல்வினை தீவினை என்னும் கயிற்றால் இழுப்புண்டு சம்சாரத்தில் அழுந்திக்கிடக்கும் நாம் கர்மபந்தத்திலிருந்து விடுவிக்கப் படுகிறோம். இவ்விதமாக சேதனர்களாகிய நாம் புருஷகாரத்தை முன்னிடுவதால் ஈசுரனைத் திருத்தியும், ஈசுரன் புருஷகாரத்தை முன்னிடுவதால் நம்மைத் திருத்தியும் இப்படி இருவரிடத்திலும் ரக்ஷ்யரக்ஷகங்களாகப் பொருந்தும்படி செய்வதாலே கர்மபந்தம் தன்னடையே ஒழியும்.

“ என்னை நெகிழ்க்கிலு மென்னுடை நன்னெஞ்சந்
தன்னை யகல்விக்கத் தானுமகில்லா னினிப்
பின்னை நெடும்பணைத் தோள்மகிழ் பீடுடை
முன்னையமரர் முழுமுதலானே ”

என்கிற பாசுரத்தில் என்னிடத்திலுள்ள குற்றங்களால் என்னைவிட நினைக்கினும் நப்பின்னைப் பிராட்டியடிமையன்றோ வென்று ஈசுரன் என்னுடைய நெஞ்சைவிட முடியாதொழிவான் என்று ஆழ்வார் கூறியுளார். ஆதலால், புருஷகாரத்தை முன்னிடுவதால் ஈசுரனுடைய ரக்ஷ்யம் எப்பொழுதும் நீங்காது.

“ கோலமலர்ப் பாவைக்கன் பாகியவென் னன்பேயோ
நீலவரையிரண்டு பிறைகவ்வி நிமிர்ந்ததொப்ப
கோலவ ராகமொன்றாய் நிலங் கோ டிடைக் கொண்ட
வெந்தாய்
நீலக் கடல்கடைந்தா யுன்னைப் பெற்றினிப் போக்குவனோ.”

---

* திருவாய்மொழி 1-ம்பத்து, 7-ம் திருமொழி 8-ம் பாசுரம்.

† திருவாய்மொழி 10-ம்பத்து 10-ம் திருமொழி 7-ம் பாசுரம்.

என்கிற பாசுரத்தில் ஆழ்வார் இப்படி புருஷகார பூர்வமாக் எனக்கு நல்லையாய் என்னை ரக்ஷிக்குமவனை உன்னைப் பெற்று கைபுகுந்த பின்பு உன்னை நழுவ விடுவேனோ என்கிறார். ஆதலால், புருஷகார முன்னாகவந்த இந்த ரக்ஷ்யரக்ஷக சம்பந்தத்தைச் சேதனனாலும் இல்லை செய்யமுடியாது என்று தெற்றென விளங்குகிறது. குற்றத்தைப் பொறுத்து ஈசுரன் நம்மை அங்கீகரிக்கும்படி செய்வதற்கு புருஷகாரம் அவசிய மானது.

பிரகிருதி சம்பந்தம் கழிந்தால் ஆத்மாவினுடைய ஸ்வரூபம் பரிசுத்தத்துடன் பிரகாசிக்கும். ஆனால், சேதனன் நிர்ப்பந்தித்துச் செய்துகொள்ளுகிற பிரகிருதி சம்பந்த நிவர்த்தியானது சரம சரீரத்துடன் சிறந்து தான் அநுபவிக்க விரும்பிய இறைவனுடைய அநுபவத்திற்கு விரோதமாக இருக்கும். மேலும் ஞான பரிமளம் இவ்வுடலில் வீசுகின்றமையால் அதுபற்றியும் இவ்வுடலை எம்பெருமான் இச்சிக்கின்றான். ஆகையால், பிரபந்நனுடைய உடல் தங்கியிருப்பதற்குக் காரணம் அவனுடைய ப்ராரப்த கர்மத்தைத் தொலைப்பதற்காக வல்லவாம். பகவானுடைய இச்சைதான் அதற்குக் காரணமாம். நாம் நமக்கு நன்மை தேடிக்கொள்ளுவது பிசகாம். எம்பெருமான் நமக்குத்தானே தேடிக்கொடுக்கும் நன்மை தான் உபாதேயமாம். அஹங்காரமும் விஷயத்திலீடுபடுவதும் சேதனனுடைய ஸ்வரூபத்தைக் கெடுக்கும். அஹங்காரத்தின் கொடுமையைப்பற்றிச், சொல்லவேண்டுவதில்லை. விஷயமோ பிரதிகூல விஷயமென்றும் அநுகூல விஷயமென்றும் இருவகைப்படும். பிரதிகூல விஷயங்கள் சாத்திர விரோதமாய் நரகமடைவதற்குக் காரணமாயிருக்கும். அநுகூல விஷயங்கள் சாத்திரத்திற்கு ஒத்ததாய் நரகப் பிராப்திக்கு காரணமல்லாததாயிருக்கும். பிரதிகூல விஷயங்கள் விஷம்போலவும் அநுகூல விஷயங்கள் விஷங் கலந்த அன்னம் போலவும் நாடுபவர்களுடைய ஸ்வரூபத்தை நசிக்கச் செய்யும். எம்பெருமானை அநுபவிப்பதொன்றிலேயே ஊன்றின மனத்தை உடையவனாய் அவனுடைய குணரசத்தில் நைந்துகிடக்கும் பிரபந்நனுக்கு விஷயங்களின் பேர் காதில்பட்டாலே தரிக்க

பிராட்டான். இதுதான் உண்மை பிரபந்நனுடைய அடையாளமாம்.

---

அஹங்காரமும் விஷயத்தில் ஈடுபடுவதும் தாங்களே கெடுப்பதுமன்றி பாகவதாபசாரத்தையும் உண்டாக்கி உருமாயச் செய்யும். பாகவதர்களுடைய குலம், அறிவு, நடை, தேக நிலைமை, உறவினர், இருப்பிடம் ஆகிய இவைகளுள் ஒன்றைக்கொண்டாயினும் நிரூபித்து அன்பு கொள்ளாராகில் பாகவதாபசாரத்திற்கு ஆளாவார்கள். இவ்வபசாரம் எல்லா நன்மைகளையும் குலைத்து, " அமரவோரங்கமாறும் வேதமோர் நான்குமோதி, தமர்களில் தலைவராய சாதியந்தணர்களேலும், நுமர்களைப் பழிப்பராகில் நொடிப்பதோரளவில் ஆங்கே, அவர்கள்தாம் புலையர்போலும் அரங்கமா நகருளானே.'' எனும் திருமாலைப் பாசுரத்தின்படி கர்ம சண்டாளனாக்குவிக்கும்.

இவ்விதமான அஹங்காரத்திற்கும் விஷயசுகங்களில் ஆசைக்கும் பிறப்பிடம் தானே ஆகையால் தன்னையே தனக்கு நாசகனாக நினைக்கவேண்டும். அஹங்காரத்தையும் விஷயசுக ஆசையையும் உபதேசங்களால் உண்டாக்கும் சம்சாரிகளைக் கண்டால் பாம்பைக்கண்டால்போல் தூர விலகி யிருக்கவேண்டும். அக் குற்றங்களை உபதேசத்தாலே போக்கவல்ல பாகவதர்களைக் கண்டால் இவர்கள் நமக்கு நல்துணையானவர்கள் என்று சந்தோஷத்துடன் அவர்களை ஆதரித்து அவர்களுடன் உறவு கொள்ளல்வேண்டும். கோயில்களில் எழுந்தருளியிருக்கும் எம்பெருமான்களைக் கண்டால் பிதாவைக் கண்டால் போல் பய, பக்தி, விசுவாசத்துடன் இருக்கவேண்டும். ஞான, பக்தி, விரக்திகளை விளைவித்து நல்லதை உபதேசித்த ஆசாரியனைக் கண்டால் பெரும் பசியன் சோற்றைக் கண்டால் போல் மிக விருப்பத்துடன் அனுபவித்து உகந்து இருக்க வேண்டும். நல்ல குணங்களெல்லாம் ஆசாரியனுடைய அநுக்கிரக மூலமாக வருகிற இறைவனுடைய கிருபையால்தான் உண்டாக வேணுமென்று நிச்சய புத்தியுடன் இருக்கவேண்டும். நமக்கு எதாவது துக்கம் சம்பவித்தாலும் இதைக்

கொண்டு தேகத்தின்மேல் இருக்கும் நமது மோகத்தைக் களைவதற்காகவல்லவோ ஈசுரன் கிருபையால் செய்த காரியம் இதுவென்றும் தன்னையடைவதற்கு இடைஞ்சலாகவிருக்கும் ப்ராரப்த கர்மம் தொலைவதற்காகவல்லவோ ஈசுரன் செய்த காரியம் இதுவென்றும் நாம் தேறியிருக்கவேண்டும். இறைவனுக்கும் பாகவதர்களுக்கும் இட்ட அன்னத்தையே நாம் புசிக்கவேண்டும். இவ்விதமாக நடந்து வந்தால் ஈசுரன் நமக்குச் செய்யும் உதவிகள் நன்கு புலனாகும். நமக்குச் சகல விதத்திலும் உதவியாகவிருக்கிற குணக்கடலாகிய ஈசுரனை நினைத்தால் "இப்படிப்பட்ட சர்வேசுரன் நம்மை இனி கர்மத்தில் கட்டுண்டிருக்கவிடமாட்டான்" என்ற நம்பிக்கையுண்டாகி, ஒருநாளும் அஞ்சாமல் கவலையற்று பரம சந்தோஷத்துடனிருக்கலாம்.

ஒரு காரணமுமின்றியே நமக்கு முக்தி எய்வதற்கு உதவியாக கரணகளேபரங்களைக் கொடுத்திருக்கும் ஈசுரனுடைய கிருபையின் பலத்தையும் நாம் எப்படி கர்மபலத்தை அனுபவிக்கிறோமோ அப்படி அனுபவிக்கத் தக்கதாம். "நாம் ஈசுரனுக்கு சேஷபூதர்கள். எல்லாம் ஈசனருள்" என்று நிர்ப்பரராய் நாம் சுதந்தரத்தை விட்டதும் ஈசுரனும் இதுகாறும் பூர்வகர்மங்களுக்கேற்க பலன்கொடுத்து வந்த தன் சுதந்தரத்தை விட்டுவிடுகிறான். பிறகு, இறைவன் தனது நிர்ஹேதுக கிருபையால் நம்மை மேல்விழுந்து அங்கீகரிக்கின்றான். ஈசுரனே உபாயமென்றிருக்கிற இவ்வதிகாரிக்கு சம்சாரம் தொடர்ந்து வருவதற்குக் காரணமாகவிருக்கும் தனது கர்மங்களை நினைக்கும்பொழுது பயமும், கர்மத்தைப் பாராமல் அங்கீகரித்து சம்சாரத்தையறுக்கவல்ல ஈசுரனுடைய நிர்ஹேதுக கிருபையை நோக்குங்கால் "இனி சம்சாரம் நம்மருகும் வரமாட்டாது. மரணமானால் வைகுந்தம் திண்ணம்" என்று நிர்பயமும் உண்டாகும். இவ்விதமாகப் பயமும் பயமின்மையும் இவ்வுலகத்திலிருக்கும்வரையில் பிரகிருதி சம்பந்த காரியத்தால் மாறி மாறி உண்டாகிக் கொண்டேயிருக்கும்.

"மேவினே னவன்பொன்னடி மெய்ம்மையே, தேவுமற்றறியேன்" என்ற மதுரகவியாழ்வார் பாசுரத்தின்படி ஆசாரி

யனே உபாயமாகப் பற்றினால் எப்பொழுதும் நிர்ப்பயராகவே யிருக்கலாம். நமது ஸ்வரூபத்திற்கேற்ற பலன் ப்ரதம பர்வம், மத்தியபர்வம், சரமபர்வம் என மூவகைப்பட்டுளது. ஆசாரியனுடைய உகப்பிற்காகச் செய்யும் பகவத் கைங்கர்யம் முதல் பர்வமாம்.[1] பகவானுடைய உகப்பிற்காகச் செய்யும் பாகவத கைங்கர்யம் நடுபர்வமாம்.[2] பாகவதர்களெல்லோருக்கும் உகப்பை விளைவிக்கும் ஆசாரிய கைங்கர்யம் கடைசி பர்வமாம்.[3] ஆனால், ஆசாரிய கைங்கர்யம் கைக்கூடுவது மிகக் கஷ்டமானது. ஈசுரனைப் பற்றுகை அவன் கையைப்பிடித்துக் காரியம் கொள்வதுபோலவாம். ஆனால், ஆசாரியனைப் பற்றுகை இறைவனுடைய காலைப்பிடித்துக் காரியம் கொள்ளுகைபோலாம். கையைப் பிடித்தால் ஒருவேளை உதறிவிட்டு போனாலும் போய்விடலாம். ஆனால் காலைப்பிடித்து வேண்டிக் கொண்டால் கட்டாயம் காரியம் கைகூடிவிடும்.

தண்ணீரிலே பிறந்து தண்ணீரிலேயே இருக்கும் தாமரையை சூரியன் மலரச்செய்கிறான். ஆனால், அத்தாமரை தண்ணீரைவிட்டு நீங்கினால் அச் சூரியனே அதை வாடவைக்கிறான். அதுபோல ஆசாரிய சம்பந்தத்துடனிருக்கும் சேதனனுக்கு ஸ்வரூபத் தெளிவை இறைவன் உண்டாக்குவான். இறைவனே சேதனன் ஆசாரியனுடைய சம்பந்தமில்லாதிருந்தால் ஸ்வரூபத்தை வாடப்பண்ணுவான். ஆதலால், ஆசாரியாபிமானமே அனைவர்க்கும் உத்தாரகமாம். (தென்கலை.)

199. பிரபத்தி எத்தேசத்திலும், எக்காலத்திலும், தேகம் சுத்தமாகவிருந்தாலும் சரி அசுத்தமாகவிருந்தாலும் சரி இருந்த நிலையிலேயே, எல்லாக் குலத்தாரும் எந்தப் பலனை விரும்பியாவது செய்யலாம். பிரபத்தியானது ஒரே ஜன்மத்தில் நிறைவேறுவிட்டாலும், அர்த்தம் தெரியாமல் செய்த பிரபத்திக்கு ஈசுரன் சந்தோஷித்துப் பிரபத்தியைச் சரிவர நிறைவேறும் வரையில், செய்துவைக்கிறான் என்று தேசிகன் அருளிச் செய்துளார். எல்லோரும் பிரபத்தியை எப்படியாவது செய்யவேண்டியது அவசியமென்றும் செய்த பிரபத்தி வீண்போகாதென்றும் இதிலிருந்து நன்கு விளங்குகிறது.

200. அடியேன் சிற்றறிவுக்கு எட்டியதை அடியிற் குறித்துள்ளேன். மிகவும் மன்னிப்பீர்களாக. வடகலை தென்கலை எனும் இரண்டு சம்பிரதாயங்களிலும் தற்காலத்திற்குகந்தது பிரபத்தியேயாம் என்று ஒத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. இருவரும் ஸ்ரீ மஹாலக்ஷ்மியினுடைய புருஷகாரத்தை முன்னிட்டே எம்பெருமானைப் பற்றுகிறார்கள் என்பது த்வயத்திலுள்ள "ஸ்ரீமந் நாராயணௌ" என்கிற பதத்தால் தெற்றென விளங்குகிறது. வடகலையார் மோக்ஷத்திற்கு ஏதுவாகிய பிரபத்தியை எம்பெருமான் தன்னுடைய கிருபையால் செய்து வைக்கிறான் என்னும் எண்ணம் கொண்டுளர். ஆதலால், மோக்ஷத்திற்கு நேர்முகமாக பிரபத்தியிருந்தாலும் எம்பெருமானுடைய எண்ணம் மூலகாரணம் என்கின்ற எண்ணம் வடகலையாரிடத்தில் குடிகொண்டுளது. மோக்ஷத்திற்காகச் செய்யும் பிரபத்தியிலே சாத்விக தியாகம் என்ற அங்கம் அவசியமென்று வடகலையார் விதித்திருப்பதால் அவர்கள் செய்யும் பிரபத்தியிலே ஸ்வரூபத் தெளிவு மிளிர்கின்றது. ஆதலாலே, ஸ்ரீ வைஷ்ணவ சமயத்தைச் சேர்ந்த நம்மவர்களெல்லோரும் அநாவசியமான ஏதோ சில அபிப்பிராய பேதங்களைக்கொண்டு நம் புத்தியை அவைகளிலேயே செலுத்தி ஸ்வரூப நாசத்தை விளைவிக்கும்படியான த்வேஷத்தையும் கோபத்தையும் விளைவித்துக்கொண்டு ஒருவருக்கொருவர் வாக்குவாதம் புரிந்து சண்டையிட்டுக்கொண்டு காலத்தை வீணே கழிக்கின்றோம். எல்லா ஆன்மாக்களும் சுகமுறவேண்டும் என்று தன்னுடைய சுகத்தையும் பாராமல் திருமந்திரதானம் செய்த பரம தயாளுவாகிய எம்பெருமானாருக்கு தனது தரிசனத்திலுள்ளவர்கள் இவ்விதமாகத் தப்பு வழியில் நடக்கின்றதை நோக்கினால் அவருடைய மனதானது எவ்வளவு கொதிக்கும் என்பதைச் சற்று உன்னிப் பார்த்தால் நம் மனதில் படாமல் போகாது. "ஸ்ரீ வைஷ்ணவத்தில் வடகலை தென்கலை சண்டைக்கே ஒரு முடிவு இல்லை" என்று பிறர் பார்த்து கைகொட்டி ஏளனம் செய்வதைவிட்டு "ஸ்ரீ வைஷ்ணவர்கள் சாத்வீகர்கள்" என்று எல்லோரும் போற்றும்படி நடப்பதல்லவோ நமது மதத்தின் ஆழ்ந்த கொள்கை. அன்பர்களனைவரும் சற்று யோசிப்பீர்களாக.

"ஒத்தால் வாழலாம்" என்ற ஆன்றோர் வாக்கியத்தின்படி நமக்குள் சண்டையில்லாமல் ஒற்றுமையாகப் பெரு நோக்கத்துடன் நமது பூர்வாசாரியர்களுடைய அருளிச் செயல்களை ஆராய்ந்து ஒருவர்க்கொருவர் எடுத்துக் கூறிக்கொண்டு சாத்வீக மார்க்கத்தில் ஒழுகுவோமாயின் நாமும் ஸ்ரீ வைஷ்ணவத்தால் அடையவேண்டிய பலனையடையலாம், பிறரும் நமது நல்லொழுக்கத்தைக்கண்டு நம்மை மதித்து நம்முடைய உபதேசங்களுக்குக் காது கொடுத்து ஸ்ரீ வைஷ்ணவத்தின் பலனை அவர்களும் அடையலாம். வேலையில்லா இடத்தில் தான் பேச்சு அதிகம். இது சாதாரணமாக எல்லோரும் அறிந்த உண்மையேயாம். பள்ளிக்கூடங்களிலும் காலக்ஷேப கூடங்களிலும் கூச்சல் அதிகமாகக் கேட்டால் இன்னும் ஆரம்பிக்கவில்லை என்று முடிவு செய்து கொள்ளுகிறோம். அதுபோல நாம் சண்டை சச்சரவுகளில் தலையிட்டுக்கொண்டிருக்கும்வரையில் நாம் இன்னும் சமய அனுஷ்டானத்தில் இறங்கவில்லை என்பது நிச்சயமாம். ஆகையால், நாமெல்லோரும் சண்டைப் போட்டுக்கொள்வதை விட்டு ஸ்ரீ வைஷ்ணவத்தை அநுஷ்டானத்தில் கொண்டுவந்தால்தான் ஸ்ரீ வைஷ்ணவத்தால் ஆய பயனை நாமடைவோம். ஆசாரியர்கள் நமக்கு நல்லறிவைக் கொடுப்பார்களாக.

---

## XII. ஸதாசாரம் அல்லது நன்னடக்கை.

---

201. "ஸதாசாரம்" என்பது ஸத், ஆசாரம் எனும் இரண்டு சொற்களாலாகிய ஓர் சொற்றொடராம். "ஸத்" என்னும் பதத்திற்கு மாறுதலில்லாதது அதாவது உண்மையானது என்று பொருளாம். அதை நீதி என்றும் சொல்லலாம். எம்பெருமானுடைய ஐந்து சிறப்பியல்களுக்குள் (ஸ்வரூபங்களுக்குள்) முதன்மையாக விளங்குவது ஸத் என்பதாம். ஆதலால் ஸத் எனும் பதம் எம்பெருமானையே குறிக்கிறது.

"ஆசாரம்" எனும் பதத்திற்கு நடக்கை என்று பொருளாம். ஆகலால், ஸதாசாரம் என்பதற்கு உண்மையான நடக்கை அதாவது நீதிவழி நிற்றல் என்று பொருள்படும். நாம் எம்பெருமானையடைய விரும்பினால் நமது வாழ்வினுந் தொழின் முறைகளிலும் நீதி நெறி பிறழாது நடக்கவேண்டும். ஆகல் பற்றித்தான் பிறரும் "நீதிக்கண்ணாடி நினைவார் மனத்துளன்" என்று கூறியுளர்.

202. ஸதாசாரம் அல்லது நீதிவழி நிற்றல் என்பதற்கு இறைவழி நடத்தல் என்று பொருளாம். இறைவழி நடத்தல் என்றால் எம்பெருமானுக்கு எந்தக் காரியம் உகப்பாகவிருக்குமோ அதாவது இறைவனுக்கு எப்பணி சந்தோஷத்தை விளைவிக்குமோ அப்பணி செய்தல் என்பது பொருளாம்.

203. தன்னலத்தைக் கடிந்து பிறர் நலத்தையே நாடி வினையாற்றல் நீதிவழி நிற்றல் எனப்படும். தன்னலங் கருதி ஒருவன் நடப்பனாகில் நீதிக்கு மாறாகப் பலதடவை வினையாற்ற நேரிடும். ஆனால், தன்னலங் கருதாமல் பிறர் நலத்தையே நாடி நடப்பவனுக்கு அநீதியிலிறங்குங் கடப்பாடு ஒருக்காலும் நேராது. ஆதலால்தான், திருக்கோட்டியூர் நம்பிகள் "பாரதந்த்ரியம் பிறந்தாலொழிய அர்த்த காம ராக த்வேஷாதிகளொழியா" என்று அருளிச் செய்துளார்.

204. "இராக த்வேஷாதிக ளொழிந்தாலொழிய ஸ்ரீ வைஷ்ணவத்வம் கைகூடாது" எனும் திருக்கோட்டியூர் நம்பிகளுடைய திருவாக்கினால் "ஸ்ரீ வைஷ்ணவத்திற்கு அடிப்படை ஸதாசாரம்" என்று தெற்றென விளங்குகிறது. "ஸ்ரீ வைஷ்ணவத்திற்கு அடிப்படை ஸதாசாரம்" எனும் வாக்கியத்திற்கு "இறைவழிபாட்டிற்கு அஸ்திவாரம் இறைவழி நடத்தல்" என்று பொருளாம். ஸதாசாரம் அடிப்படை. ஸ்ரீ வைஷ்ணவம் கட்டிடம். அடிப்படையில்லாத கட்டிடம் விழுந்துவிடும். அது பயனளிக்காது. ஸதாசாரத்தை விட்டு ஸ்ரீ வைஷ்ணவத்தைக் கைக்கொள்வது "வாயில் இராமநாமம் கட்கத்தில் கன்னக்கோல்" எனும் பழமொழியை ஒக்கும்.

எம்பெருமான் நீதிமான். பக்ஷபாதமற்றவன். அவரவர் செய்யும் வினைக்குத் தக்க பலனையளிக்கின்றான். அப்படியிருக்க நீதியை அதாவது ஸதாசாரத்தை விட்டு எம்பெருமானை வழிபடுதல் இறைவனுக்கு உகப்பாகாது.

205. உய்ய நினைவுடையார் தினந்தோறும் எம்பெருமானை ஆராதிக்க வேண்டுமென்று சாத்திரம் கூறுகிறது. “உடன்மிசை யுயிரெனக் கரந்தெங்கும் பரந்துளன்” என்கிறபடி சகல ஜகத்துக்கும் எம்பெருமான் சரீரி என்னும் நினைவு எப்பொழுதும் நீங்காமல் அவன் விபூதியான (உடைமையான) சேதநாசேதனங்களில் இராக த்வேஷங்கள் மறந்தும் நடையாடாமல் சூறிக்கொண்டு,

“அஹிம்ஸா ப்ரதமம் புஷ்பம் புஷ்ப மிந்த்ரிய நிக்ரஹ:
ஸர்வபூத தயாபுஷ்பம் க்ஷமாபுஷ்பம் விசேஷத:
ஜ்ஞாநபுஷ்பம் தப: புஷ்பம் த்யாநபுஷ்பம் ததைவச
ஸத்யமஷ்ட விதம் புஷ்பம் விஷ்ணோ: ப்ரீதிகரம்பவேத்.”

என்கிறபடியே அஹிம்சை, ஐம்பொறியடக்கல், தயை (அருள்), பொறை, ஞானம் (அறிவு), தபசு, தியானம், சத்யம் ஆகிய அஹிம்ஸாதி எண்வகை புஷ்பங்களால் சதா எம்பெருமானை ஆராதித்து அவனை உவப்பிப்பதிலும் நமக்கு வேறு பேறில்லை. இவ்வித சதாசாரத்தையுடையவன் செய்யும் திருவாராதனந்தான் எம்பெருமானுக்கு உகப்பை விளைவிக்கும்.

அஹிம்சை என்பது ஒரு உயிருக்கும் துக்கத்தை விளைவிக்கும்படியான செயல் ஆற்றாமையாம். இறைவனுக்கு உலகமனைத்தும் சரீரம் என்று நாமறிந்தால், அஹிம்சையின் அவசியம் நன்கு விளங்கும். ஆதல்பற்றித்தான் கொலைக்குக் காரணமாகவிருக்கும் மாமிச உணவு சாத்திரங்களில் விலக்கப்பட்டுளது. தவிரவும், அவ் வுணவானது பரம சாத்வீகர்களாக விருக்கவேண்டிய ஸ்ரீ வைஷ்ணவர்களை தாமஸர்களாக ஆக்கிவிடும். மாமிச உணவானது நோயற்றவாழ்வையும்

பலத்தையும் கொடுக்கிறது என்ற மூட நம்பிக்கை நம்மவர்களுக்குள் பலருக்குண்டு. இற்றை நாளில் மேல்நாடுகளிலுள்ள விஞ்ஞான சாஸ்திரிகளால் மாமிச உணவு அநேக நோய்களுக்குங் காரணமாக விருக்கின்றதென்றும் தாவர உணவே உடல் நலத்திற்குச் சாலச் சிறந்ததென்றும் நிரூபிக்கப்பட்டு அநேகர் மாமிச உணவை அறவே நீக்கித் தாவர உணவைக்கொண்டுளார் என்று பத்திரிகைகளின் வாயிலாகத் தெரிய வருகிறது. குளிர் தேசங்களாகிய மேல் நாடுகளைவிட உஷ்ண தேசமாகிய நம் நாட்டிற்கு மாமிச உணவு மிகக் கெடுதியை விளைவிப்பதாகும். இப்பொழுது கண்டுபிடித்திருக்கும் ஜீவசத்துக்களனைத்தும் (Vitamins) தாவர உணவில்தான் இருக்கின்றன. தாவர உணவு நம் உயிர்வாழ்விற்கு மிகவும் இன்றியமையாதது. தனித்தாவர உணவைக்கொண்டே நாம் உயிர் வாழலாம். ஆதலால், நமது ஆத்மாவிற்குத் தீங்கு விளைவிப்பதான மாமிச உணவை அறவே ஒழித்தல் வேண்டும். அப்பொழுதுதான் எம்பெருமான் நமது ஆராதனத்திற்கு உகப்பையடைவான். ஒவ்வொருவரும் தங்கள் குழந்தைகளுக்கு இத் தீயபழக்கத்தைச் செய்யாதிருப்பார்களானால், அவர்கள் தங்கள் வாழ்வில் மதுவருந்தல் முதலிய கெட்ட வழக்கங்களுக்கு ஆளாகாமல் எம்பெருமானுடைய உகப்பிற்கு பாத்திரர்களாகி ஆத்ம சுகத்தையடைவார்கள். இது எல்லோராலும் செய்ய முடியும்படியான ஓர் சுலபமான காரியந்தான்.

**ஐம்பொறியடக்கல்** என்பது தமது இந்திரியங்களை உலகவழியில் செல்வதிலிருந்து தடுத்து (ஆசையின்வாய்ப் படாமல்) நாமடைய விரும்பும் இறைவழி நாடும்படியாகச் செய்தல் ஆம். இந்திரியங்களை உலகவழியில் செல்லவிட்டு விட்டால் நமது மனம் விரியும். விரிந்த மனது பாழாம். இந்திரியங்கள் இறைவழி நாடினால், மனது குவியும். குவிந்த மனது இறைவனருளை நமக்குக் கூட்டுவிக்கும். இங் குணம் ஜீவஸ்வரூபத்தையும் அவித்யையின் செயல்களையும் உள்ளபடியறிந்தால் உண்டாகும்.

**தயை** என்பது எல்லா ஜீவர்களிடத்தும் அன்பு செலுத்துதலாம். எம்பெருமான் அன்பு மயமானவன். ஆதலால்,

நாம் எல்லா ஜீவாத்மாக்களிடத்தும் அன்புடனிருந்தால்தான் அவரையடையலாம். இறைவன் ஜகத்திற்கு ஆத்மாவென்ற உண்மையை நாமறிந்தால் நமக்கு பாரதந்திரிய உணர்ச்சி பிறந்தால் நமக்கு த்வேஷம் அற்று எல்லா ஜீவாத்மாக்களிடத்தும் அன்பு மிளிரும்.

பொறை என்பது நமக்கு பிறர் துன்பஞ்செய்தால் நாம் அவர்களுக்கு தீங்கு நினைக்காமல் பொருத்துக் கொள்ளுதலாம். துன்பம் செய்தவர்களுக்கு பிரதி துன்பம் நாம் செய்வோமானால் நமக்கு பாபம் விளைந்து சாத்விக குணமடைவதற்கு இடைஞ்சலாக ஆய்விடும். அப்படியின்றி பிறர் செய்த துன்பத்தை நாம் பொறுத்துக் கொண்டால் நமது பாபம் ஒழிந்து சாத்விககுணம் உண்டாகும். சாத்விக குணமுண்டானால்தான் எம்பெருமானைப் பற்றுவதற்கு புத்தியுண்டாகும். நாம் இம்மையில் அனுபவிக்கும் இன்ப துன்பங்கள் நமது பூர்வ கர்மத்திற்கேற்க ஏற்படுகின்றன வென்றும் நமது பிராரப்த கர்மம் தொலைவதற்காகவும் நமக்கு சம்சாரத்தில் அலுப்பு உண்டாவதற்காகவும் எம்பெருமானுடைய கிருபையால் துன்பங்கள் நேரிடுகின்றன வென்றும் நாமறிந்தால், துன்புறுத்தியவர்களைப் பொறுத்து நாம் அவர்களிடத்தில் நன்றி பாராட்டுபவர்களாக விருப்போம்.

ஞான மென்பது ஜீவாத்ம பரமாத்ம விஷயமான தெளிந்த அறிவாம். ஞானமுண்டானால் அவித்யையானது வறுத்த விதைபோலாகும். அது சம்சார ஹேதுவாக ஆகாது. நமக்கு உய்வு உண்டாகும்.

தபசு என்பது அளவு கடந்த துன்பத்தையும் பொறுத்துக் கொள்ளும் தன்மையாம். வெய்யில் காலத்தில் பஞ்சாக்னி மத்தியிலிருந்தும் மழைகாலத்தில் மார்பளவு ஜலத்திலிருந்தும் ஒற்றைக்காலில் நின்றுகொண்டும் தபசு இயற்றினார்களென்று சரித்திரங்களால் அறிகிறோம். ஆகையால், தபசு என்பது இல்லாத துன்பத்தை வருவித்துக் கொண்டு அதைப் பொறுத்துக் கொள்வது என்றும் சொல்லலாம். இவ்

விதமான கடுந்துன்பத்திற்கு நாம் ஆளாகவேண்டுவது அவசியமன்று. நாம் அநாவசியமான பொருள்களை (Luxuries) ஒழித்து நமது வேண்டுதல்களை(Wants) சுருக்கிக் கொண்டு எளிய வாழ்வு நடத்துதலொன்றையே இக்காலத்திற்கேற்ற தபசு என்று கொள்ளலாம். அப்பொழுது தான் நமக்கு கர்வம் போய் அஹங்காரம் ஒழியும். அஹங்காரம் ஒழிந்தால்தான் சாத்வீக தியாகம் முடியும்.

தியானம் என்பது பஹிர் (வெளி)முகமாகவிருக்கும் மனதை திருப்பி பகவானிடத்தில் செலுத்தலாம். அப்பொழுது தான் மனது சாந்தியடையும். எம்பெருமானுடைய திருவாராதனை முழுபலனளிக்கும்.

சத்யம் என்பது மனோவாக்கு காயங்களாலும் உண்மை வழி நடத்தலாம். சத்தியத்தைக் கைப்பிடித்தால்தான் நமக்கு ஓர் பாபமும் நேரிடாது. சத்வகுணம் உண்டாகும். இறைவனையடைவதற்கு அநுகூலமாகும்.

அஹிம்சாதி எண்வகை புட்பங்களும் நம்மிடத்தில் இருக்க வேண்டியவையாம். இவைகளை நாம் உடைத்தாயிருந்தால்தான், செண்பகம், செங்கழுநீர், இருவாக்ஷி, பாதிரி, புன்னை, குருக்கத்தி, கருமுகை, தாமரை ஆகிய எண்வகை (வெளி) புட்பங்களால் இறைவனுக்குச் செய்யும் திருவாராதனம் இறைவனுக்கு உகப்பை விளைவிக்கும்.

206 "அநுகூல்யஸ்ய ஸங்கல்பம் ப்ரதி கூல்யஸ்ய வர்ஜநம்" என்று கூறியிருக்கின்றமையால், பிரபந்நனுக்கு அநுகூல்யங்களெல்லாம் நேராவிடினும் அவைகளில் நினைவு இருந்தாலும் போதுமானது. ஆனால் பிரதி கூல்யங்களைக் கட்டாயம் விடவேண்டும். பிறருக்குத் துன்பம் விளைக்காதவைகளும் நமது அகப்பற்று (அஹங்காரம்) புறப்பற்று (மமகாரம்) க்களைப் போக்குவதுமான செயல்கள் அநுகூல்யங்களென்றும், அவைகட்கு மாறுனவைகள் பிரதி கூல்யங்களென்றும் சொல்லப்படும். இவைகளெல்லாம் முன் கூயறி

நமக்கு இருக்கவேண்டிய எண் வகை புட்பங்களையடை வதற்குச் சாதகமாகவிருக்கின்றன. நீக்க வேண்டியவைகளைப் பற்றிக் கீழ் குறிக்கப்பட்டுளது.

1. போஜன பதார்த்தங்கள் சம்பாதித்த வழியிலேயோ மற்ற எந்த விதத்திலேயோ நமக்குத் தோன்ருமல் நேர்ந்த குற்றங்கள் ஒழி வதற்காகவும், போஜன பதார்த்தங்களனைத்தும் எம்பெருமானுல் நமக்குக் கொடுக்கப்பட்டவை என்று அவரிடத்தில் நன்றி பாராட்டு வதற்காகவும் நாம் பகவானுக்கு நிவேதனஞ்செய்தே சாப்பிட வேண்டும் என்று சாத்திரம் கூறுகிறது. ஆதலால், பெருமாள் சாந்நித்யஞ் செய்து திருவாராதனங் கண்டருளாத கிராமங்களிலும் இல்லங்களிலும் போஜனம் செய்தலும் அவ்விடங்களில் ஒரு தினமாவது வசித்தலும் கூடாது என்று விதிக்கப்பட்டுளது.

2. பாகவதாபசாரம் கர்ம சண்டாளனுக்கி விடுமாகையால், கொஞ்சமாகிலும் பாகவதாபசாரம் நேராமல் வசிக்க வேண்டும்.

3. பிறர் பொருளை அபகரிக்காமலும் கடுஞ்சொல் கூருமலும் இருக்க வேண்டும்.

4. பிறர் குற்றத்தைக் கூறும்பொழுது உள்ளதைக் கூறினுல் அவ்வளவு குற்றம் தன்னைச் சேருமென்றும், இல்லாததைக் கூறினுல் இரட்டித்த குற்றம் தன்னைச் சேருமென்றும், ஸ்ம்ருதிகள் கூறுகின்றன. ஆதலால், பிறர் குற்றத்தை ஒருபோதும் கூறலாகாது.

5. சுராபானம், பரஸ்திரீ சங்கமம், சூதாட்டம் இவைகள் ஒருபோதும் விரும்பக் கூடாதனவாம்.

6. இவைகளுக்கெல்லாம் காரணம் துஷ்டர் சகவாசமாகையால், துஷ்டர் சகவாசத்தை அறவே ஒழித்தல் வேண்டும்.

7. கடன் கொஞ்சமாகிலும் கூடாது. ஏனெனில், கடன்பட்டவர் அநீதியில் இறங்கும்படி நேரிடும்.

8. பிறர்மீது ஜலந் தெறிக்கும்படி மயிரை உதற லாகாது.

9. பெரியோர்களுந் கெதிரில் கால்நீட்டலாகாது. அவர்களனுமதியின்றி உட்காரலாகாது.

10. திருவாராதனம், ஜபம், ஓமம் செய்யுங் காலங் களிலும் ஜனத்திரளிலும் உமிழ்தலும், மூக்கு சிந்தலும், இரு மலும், கொட்டாவி விடலும், திமிர்விடுதலும் கூடாதன.

11. "ஆத்ம ப்ரசம்ஸாமரணம் பரநிந்தாச தத்ஸம:" என்கிறபடி தன்னைப் புகழ்கை ஆத்ம ஹத்தியோடொக்கும். பிறரை நிந்திக்கை அவரைக் கொன்றதோடொக்கும். ஆத லால், தன்னைப் புகழ்ந்து கொள்ளுதலும் பிறரை நிந்திக்கை யும் கூடாது.

12. கோபத்தை அறவே நீக்கவேண்டும். கோபத் திலும் மேலான அபகாரி கிடையாது. அது தர்மார்த்த காம மோக்ஷாதிகளை அழிக்கும். பகவான் ஸ்ரீ கீதையிலே,

" த்ரிவிதம் நரகஸ்யேதம் த்வாரம் நாசநமாத்மந: |
காம: க்ரோதஸ்ததா லோபஸ்தஸ்மா தேதத் த்ரயம் த்யஜேத் ||"

என்கிறபடி காமம், கோபம், லோபம் ஆகிய இவை மூன்றும் ஆத்ம நாசத்தை விளைவிக்குமென்றும் நரகத்திற்குச் செல் லும்படியான மூன்றுவித வாசப்படிகளென்றும் அவைகளை மனிதன் அறவே ஒழித்தல் வேண்டுமென்றும் கூறியுளார். தவிரவும், அடுத்த சுலோகத்தில்,

"ஏதைர் விமுக்த : கௌந்தேய தமோத்வா ரைஸ்த்ரிபிர்நர: |
ஆசரத்யாத்மந : ச்ரேயஸ்ததோ யாதிபராம் கதிம் ||"

என்கிறபடி யாரொருவன் நரகஹேதுவான இம் மூன்று குற்றங்களினின்றும் விடுபடுகிறானோ அவன் தன்னுடைய க்ஷேமத்தை யடைந்தவனாவானென்றும் அவன் பரகதியையு மடைவானென்றும் கூறியுளார். ஆதலால், நாம் இம்மூன்று குற்றங்களையும் அறவே நீக்குதல் அவசியமாம்.

13. பிள்ளையுறங்கா வில்லிதாஸர் உறையூரில் அரசு புரிந்த அளங்கநாட்டாழ்வானிடம் உத்தியோகத்திலமர்ந்திருக்கும் நாளில் இவருடைய மஹிமையைக் கண்டு அரசன் இவரிடத்தில் வேலையைப் பெறாமல் சம்பளமளிக்க அதை வழக்கம்போல் பகவத்பாகவத கைங்கர்யத்திற்காக ஸ்ரீ ராமாநுஜரிடம் சமர்ப்பிக்க, அத்தனம் மெய்வருந்தாமல் கிடைத்ததாகையால் விஷம் கலந்த பால்போல பகவத் பாகவத ஆராதனத்திற்குக் கூடாது என்று புறங்கையால் தள்ளிவிட்டார் என்கிற சரித்திரத்திலிருந்து, நாம் வேலைசெய்யாமல் அடையும் பணம் பகவத் பாகவத கைங்கர்யத்திற்கு உதவாது என்று தெற்றென விளங்குகிறது. கடமையின்றி உரிமை கிடையாது. பணம் அடைவது நமது உரிமை. வேலை செய்வது நமது கடமை. ஆதிகாலத்தில் கிரஹஸ்தன் முதல் சந்நியாசிவரையில் இதை அநுஷ்டித்திருக்கிறார்கள். கிரஹஸ்தன் ஒரு தொழில் செய்து பணம் சம்பாதித்தான். சந்நியாசி தான் அடைந்த ஆகாராதிகளுக்குப் பதிலாக உலக நன்மைக்குரிய உபதேசங்களைச் செய்து வந்தான். நமது பூர்வாசாரியர்களுடைய சரித்திரங்களை நோக்கினால் இவ்வுண்மை நன்கு புலனாகும். நாமெல்லோரும் பாடுபட்டு பணம் சம்பாதிப்பது அவசியமாம்.

14. வியர்த்தமாய் போது போக்குவது மிகவும் நிந்திக்கத்தக்கது.

207 சதா நமக்கு எம்பெருமானுடைய ஞாபகம் இருக்கும்பொருட்டும் எல்லாம் எம்பெருமானுடைய செயல் என்கிற தெளிவு உண்டாகும்பொருட்டும் அடியிற்கண்ட அநுஷ்டானங்கள் பாஞ்சராத்ர சாஸ்திராதிகளில் விதிக்கப்பட்டுள.

உஷக்காலத்தில் (சுமார் காலை 4-மணி) ஹரிஸ்மரணத்துடன் எழுந்து உட்கார்ந்து ஆத்ம ஹிதத்தைச் சிந்திக்க வேண்டும். பிறகு, வலது காலை முன்பாக வைத்து எழுந்திருக்கவேண்டும். ஸ்நானம் முதலியவைகளானதும், நம் இல்லங்களில் எழுந்தருளியிருக்கும் எம்பெருமானிடம் சென்று சேவித்து இன்றைக்குச் செய்யவேண்டிய வேலைகளனைத்தும் அவ்விடத்திய தயவால் ஒரு தடங்கலுமின்றி நிறைவேற வேணுமென்று இறைவனைக் கேட்டுக்கொள்ள வேண்டும். ஸ்ரீ பரதாழ்வான் ஸ்ரீ ராமபிரானுடைய பாதுகைகளினிடத்தில் அறிவித்து இராஜ்ஜிய பரிபாலனம் செய்தாற்போல நாமும் சகல காரியங்களையும் நமது திருவாராதன எம்பெருமானிடத்தில் அறிவித்தே செய்யவேண்டும். சாப்பிடும் பொழுது ஒவ்வொரு கவளத்தையும் ஸ்ரீ கோவிந்தாயநம: என்கிற அநுஸந்தானத்தோடு ஸ்வீகரிக்கவேண்டும். நல்ல மனதோடு பிரசாதத்தில் தோஷ சிந்தை செய்யாமல் மௌனமாய் சாப்பிடவேண்டும். அன்ன தோஷம் ஞானவிரோதியாகையால் பிரபந்நனுக்கு ஆஹாரநியதி அவசியமானது. இதைப்பற்றி தேசிகப்பிரபந்தம் ஆஹார நியமத்தில் பரக்கக் காணலாம். கொட்டாவி விடும்போது கையால் வாயை மூடிக்கொண்டு அக் கையால் வலது காதைத் தொட்டு அஸ்மத்குருப்யோநம: ஸ்ரீமதே ராமாநுஜாய நம: என்று அநுஸந்திக்கவேண்டும். தும்முதல், எச்சில் துப்புதல் முதலிய காலங்களில் திருவரங்கம் என்று அநுஸந்திக்கவேண்டும். வழிநடக்கையில் கேசவ ஸ்மரணஞ் செய்யவேண்டும். இரவு 9-மணிக்குமேல் மாதவ ஸ்மரணத்துடன் சயனித்து கண்ணுறங்குமளவும் பகவத் குணநுபவஞ் செய்யவேண்டும். இவ்விதமாக ஒருவன் அநுட்டிப்பானாகில் அவனுக்கு அஹங்கார மமகாராதிகள் ஒழிவது திண்ணம்.

பெண்கள் அதிகாலையில் குருபரம்பரையையும் தன் கணவனையும் தியானித்து எழுந்திருந்து வீட்டு வேலைகளைமுடித்து ஸ்நானஞ் செய்து விட்டு சமையலுக்கு ஆரம்பிக்க வேண்டும். சுமங்கலிகள் மஞ்சள் பூசிக்கொண்டு மஞ்சள் தீர்த்தத்தை சிரசில் தெளித்துக் கொண்டு கழுத்து வரையில் ஸ்நானம்

(கண்டஸ்நானம்) செய்யவேண்டும். விரத தினங்களில் சிரஸ் நானம் செய்யவேண்டும். விதவைகள் தினந்தோறும் சிரஸ் நானமே செய்யவேண்டும். சமையல் செய்யும் பொழுது திருப்பாவையை அநுசந்திக்க வேண்டும். திருப்பாவை அநுசந்தானம் பிரபந்நர்களாகிய இரு பாலாருக்கும் அத்யாவஸ்யமானது. கர்ம யோகிகளுக்கு பஞ்ச மஹாயக்ஞங்களால் குத்தல் கொழித்தல் ஆகிய இவைகளால் நேரிடும் பாபங்கள் நிவாரணமாகுவதைப்போல் பிரபந்நர்களுக்கு திருப்பாவை யநுசந்தானத்தால் "பாதகங்கள் தீர்க்கும" என்கிற பாசுரத்தின்படி சகல தோழங்களும் தீரும். இவ்விதமாக மங்கள எண்ணத்துடன் அந்யதா சிந்தையின்றி செய்யும் தளிகையைச் சாப்பிடுகிறவர்களுக்கு சாத்வீக குணத்தை உண்டாக்கு மென்பதில் என்ன சந்தேகமிருக்கின்றது. வேலையின்றி பிறர் மனைகளுக்குச் செல்லுதலும் பிறருடைய ஆடையாபரணங்களைத் தரித்துக்கொள்ளுதலும் கணவனுக்குப் பிரியமானவர்களை அவமதித்தலும் கட்டாயம் நீக்க வேண்டியவைகளாம்.

208. சந்நிதிகளில் நாம் மிகவும் வருந்தத் தக்க முறையில் நடந்து கொள்ளுகிறோம். இதற்குக் காரணம் நமது அறிவின்மையும் கோயில் பரி ஜனங்களுடைய நடக்கையுமாகும். நாம் கோயில்களில் அர்ச்சையாக வெழுந்தருளியிருப்பவர் ஸர்வநாயகனுகிய எம்பெருமான் என்று நினைப்பதில்லை. அவ்விதமாக நமக்கு உள்ளபடி மனத்தில் பட்டால் கோயில்களில் பயபக்தியுடனல்லவோ நடந்து கொள்ளுவோம். நாம் ஒரு முனிசீப்பு கோர்ட்டுக்குள்ளாகவோ அல்லது மாஜிஸ்டிரேட் கோர்ட்டுக்குள்ளாகவோ நுழைந்தால் எவ்வளவு பயத்துடன் நடந்து கொள்ளுகிறோம். கோயில்களில் சாந்நித்யமாக விருப்பவர் எம்பெருமானென்றும் சர்வ சக்தி வாய்ந்தவரென்றும் நமக்கு உள்ளபடி பட்டால் சந்நிதிகளில் பயமின்றி நடந்து கொள்ளுவோமா ? கோயில் பரி ஜனங்கள் வைதீகத்தை கைநழுவ விட்டு லௌகீகத்தைக் கைக்கொண்டு பணத்தில் ஆசை பிடித்து கோயிலுக்கு வருபவரிடம் பணம் பறிப்பதிலேயே கண்ணுயிருக்கிறார்கள். தவிரவும், ஜாதி அபிமான

முடையவர்களாகப் பக்ஷபாதமாக நடந்து கொள்ளுகிறார்கள். இக்குற்றங்களால் நடைபெறும் கோயில் நடவடிக்கைகளைக் கண்ணுற்றுப் பிறர் நம்மை நகைக்கின்றனர். ஆசாரிய புருஷர்கள் கோயில்களில் எழுந்தருளியிருக்கும் எம்பெருமான் சர்வேசுரனென்றும் சர்வ வல்லமை வாய்ந்தவனென்றும் நம் மனத்தில் படும்படி உபதேசிப்பதாலும், கோயில் அதிகாரிகள் சேவார்த்திகளிடத்தில் பரிஜனங்கள் யாதொரு உபகாரமும் பெறக்கூடாது என்று விதித்து அர்ச்சனை முதலியவைகளுக் குச் சேரவேண்டிய கட்டணங்களை ஆபீஸில் பெற்று ரசீது கொடுக்கும்படி ஏற்பாடு செய்வதினாலும் கோயில் நடவடிக் கைகள் சீர் படலாம். வராஹபுராணத்தில் “(1) வாஹன மேறியாவது பாதுகை பூண்டாவது கோயிலுக்குப் போதலும் (2) பெருமாளுக்கு உற்சவம் நடக்கும் பொழுது சேவியா திருத்தலும் (3) எம்பெருமானை நமஸ்கரியா திருத்தலும் (4) ஒரு கை யூன்றி தண்டனிடுவதும் (5) பெருமாளுக் கெதிரில் தனக்குத்தான் சுற்றிக்கொள்ளுதலும் (6) எச்சில் பட்ட போதாவது ஆசௌசமாக விருக்கும் போதாவது பெருமாளுக்குத் தண்டன் சமர்ப்பிப்பதும் (7) பெருமாளுக் கெதிரில் கால் நீட் டலும் (8) பெருமாளுக்கெதிரில் காலை முடக்கிக்கொண்டு முழங்காலுக்கும் முதுகுக்குமாய் உத்தரீயத்தைச் சுற்றிக் கொண்டுட்கார்தலும் (9) சந்நிதியில் படுத்தலும் (10) சாப் பிடலும் (11) ஒருவர்க்கொருவர் இரகசியமாகப் பேசிக் கொள்ளுதலும் (12) உரத்துப்பேசலும் (13) வ்யர்த்தமான வார்த்தை யாடுதலும் (14) அழுதலும் (15) கலகம் செய்த லும் (16) ஒருவரை நிக்ரஹிப்பதும் (17) அநுக்ரஹிப்பதும் (18) ஸ்திரீகளுடன் கெட்ட எண்ணத்துடன் பேசுதலும் (19) உசிதமில்லாத வார்த்தைகளைப் பேசுதலும் (20) அபானவாயு விடுதலும் (21) போர்த்துக் கொள்ளுதலும் (22) பிறரை நிந் தித்தலும் (23) பிறரை துதிப்பதும் (24) சக்தனாயிருந்தும் சுலபமாக உபசரித்தலும் (25) பெருமாளுக்கு நிவேதனமாகாத வைகளைப் புசித்தலும் (26) அந்த அந்த காலங்களில் கிடைக் கும் பழ முதலியவைகளை சமர்ப்பியாதிருத்தலும் (27) தான் உபயோகித்து மிகுந்ததை எம்பெருமானுக்கு சமர்ப்பித்தலும் (28) புறங்காட்டி உட்கார்தலும் (29) பெருமாளுக் கெதிரில்

பிறருக்கு தண்டன் சமர்ப்பித்தலும் (30) ஆசார்யனை புகழா திருத்தலும் (31) தன்னைப் புகழ்ந்து கொள்ளுதலும் (32) தெய்வத்தை இகழ்தலும் ஆகிய இந்த முப்பத்திரண்டு குற்றங்களும் தன்னைச் சாராவண்ணம் சந்நிதிகளில் நடந்து கொள்ளவேண்டுமென்று கூறப்பட்டுளது.

இற்றை நாளில் கோயில்களை நமது வீட்டு விஷயங்களையும் ஊர்சமாசாரங்களையும் நண்பர்களுடன் பேசுமிடமாக உபயோகிக்கிறோம். சாதாரணமாக பெண்கள் தங்களுடைய வீட்டுக் குறைகளை யெல்லாம் தங்கள் நண்பர்களுக்கு எடுத்துக் கூறுமிடம் நமது கோவில்கள்தான். கோயிலில் வலம் வரும் பொழுது நண்பர்களுடன் உலக சம்பந்தமான வார்த்தைகளைப் பேசிக் கொண்டு உல்லாசமாக உலாவுமிடமாக நாம் கோயிலைக் கொண்டிருக்கிறோம். நாள் முழுதும் உலக வியாபாரத்தில் மங்கிக்கிடக்கும் நாம் கொஞ்ச நேரமாவது சாந்தத்துடன் எம்பெருமானைச் சேவிக்கவேண்டுமென்று கோயிலுக்குச் சென்றும் அங்கும் நமது உலக வியாபாரத்தை விட்டொழியாமல் குளிக்கப்போயும் சேற்றை பூசிக்கொள்வாரைப் போல மனச்சாந்தி யடைந்த பாடில்லை. நாம் கோயிலுக்குச் சென்றும் அங்கு சென்ற பலனையடையாமல் போய் விடுகின்றோம். சந்நிதியில் வலம் வரும் பொழுது வேறு வார்த்தைகள் பேசாமல் அடி யோசைப் படாமலும் த்வயத்தையாவது ஸ்தோத்திரங்களையாவது அநுஸந்தித்துக் கொண்டு பூர்ண கர்ப்பிணியானவள் ஜலம் நிறைந்த குடத்தை தலையிலேந்தி நடக்குமாப்போல மெதுவாக நடக்கவேண்டுமென்று சாத்திரம் கூறுகிறது. வலம் வரும்போது த்வஜ ஸ்தம்பம், விமானம் இவைகளின் நிழலை மிதிக்காமல் விலகிப் போக வேண்டும். விலக இடமில்லாவிட்டால் அந்நிழலை மூன்று பங்காக்கி விமானாதிகளைக் கிட்டியிருக்கும் முதல் பாகத்தில் நடந்து போகவேண்டும்.

209. ஸ்ரீ வைஷ்ணவ பரிபாஷையைக் குறித்து பிறர் நகைப்பதுண்டு. இதற்குக் காரணம் அவர்களுடைய அறியாமையாம். நெற் பயிர் கதிர் விடும் வரையில் நிமிர்ந்து நிற்கின்

றது. கதிர் விட்டு முதிர்ந்ததும் சாய்ந்து விடுகிறது. அது போல ஞான முண்டாகாத வரையில் அஹங்கார மமகாரங்களுடன் கூடிய சேதனனுக்கு பணிவு உண்டாகாது. ஞானம் உதயமானதும் அஹங்கார மமகாரங்களற்றுச் சேதனனுக்கு பணிவு உண்டாகும். ஸ்ரீ வைஷ்ணவர் தன்னை "அடியேன்" என்றும் பிறரை "தேவாள்" அல்லது "ஸ்வாமி" என்றும் ஒருவரோடொருவர் சம்பாஷிக்கும் பொழுது சொல்லிக் கொள்ளுவது வழக்கமாம். இதில் தன்னடக்கமிருக்கிறது. தவிரவும் நாம் யாருடன் பேசுகிறோமோ அவரை சாதாரணமான ஆத்மாவாக நினையாமல் பரமாத்மாவாகவே நினைத்து அவர்களுக்குளிருக்கும் அந்தர்யாமிக்கு நாம் மரியாதை செய்கின்றோம். இதனால் நமக்கு எம்பெருமானுடைய நினைவு அடிக்கடி வருகிறது. ஒருவரைப் பார்த்து "நீர் சாப்பிட்டாச்சுதா ?" என்று கேட்பதற்கு பதிலாக பரிபாஷையில் "பெருமாள் பிரசாதப்பட்டாச்சுதா ?" என்று கேட்கின்றோம். இதிலிருந்து மேற்கூறிய விஷயம் நன்கு விளங்கும். நாம் எதைச் செய்தாலும் "அதைச் செய்வித்தவனும் இறைவன், அவ்வேலையும், இறைவனுடையது அதை அனுபவிப்பவனும் இறைவன்" என்கிற சாத்விக தியாகபுத்தி நமது பரிபாஷையில் விளங்குகிறது. நாம் உட்கொள்ளும் உணவுப் பொருள்களுக்கு திரு, அமுது என்கிற அடை மொழிகளை யிட்டுச் சொல்லுகின்றோம். நாம் எம்பெருமானுக்கு நிவேதனமான உணவுப் பொருள்களையே உண்கின்றமையால், நாமுண்ணும் பொருள்களெல்லாம் தோஷ மற்றவையாய் விரும்பத்தக்கவையாய் இருக்கின்றனவென்பதை அறிவிப்பதற்காக திரு, அமுது எனும் அடை மொழிகளை யிட்டு அவைகளைச் சொல்லுகின்றோம். ஆதலால், நமது பரிபாஷையானது மிகவும் அர்த்தபுஷ்டியுள்ளது. அதை நாம் காரணமறிந்து உபயோகித்தால் நமது பூர்வாசாரியர்கள் எண்ணிய முழு பலனை யடைவோம்.

210. விலக்ஷண மோக்ஷாதிகாரி நிர்ணயத்தில் பாகவதர்களை ஸத்கார யோக்யர், ஸஹவாஸ யோக்யர், ஸதாநுபவ யோக்யர் என்று மூன்று வகையாகப் பிரித்துளது. எம்பெரு

மானுடைய பெயரும் சின்னங்களும் மாத்திரம் தரித்திருப்பவர் ஸத்கார யோக்யராம். இவர்களை நிந்திக்காமல் நம்மாலாகிய உபகாரம் இவர்களுக்குச் செய்ய வேண்டியது. ஆனால், இவர்களிடத்தில் நமக்கு உறவு கூடாது. இவர்கள் தங்களிடத்தில் அபசாரப்பட்டவரை நசிப்பிக்கத்தான் வல்லவராம். இவர்கள் ஜன்மாந்தரத்திலொழிய இந்த ஜன்மத்தில் மோக்ஷமடையார்கள். விலக்க வேண்டியவைகளைப்பற்றியும் அடைய வேண்டியவைகளைப் பற்றியும் தெளிந்த அறிவு உண்டாகி விலக்க வேண்டியவைகளை அறவே விட்டு உபாதேயத்தைப் பற்றியிருப்பவர்கள் ஸஹவாஸ யோக்யராம். இவர்கள் ஒருவர்க்கொருவர் நேசிப்பதற்கும் சம்சாரத்தில் மோகம் வராதிருப்பதற்கு போதிப்பதற்கும் தகுதியானவராம். இவர்கள் தங்களுடைய ஞானத்தாலே பிறருக்கு உதவ வல்லவராம். இவர்கள் ஆசாரிய பிரசாதத்தாலே உய்வார்கள். ஸதாநுபவ யோக்யர் அநுஷ்டானப்ரதானராம். இவர்கள் சதா பகவத் குணானுபவம் செய்து கொண்டு சுகதுக்கம் மானவமானம் நிந்தாஸ்துதி சத்ருமித்ரு என்கிற பேதமின்றி உலகமனைத்தும் எம்பெருமானுடைய சரீரமென்று உள்ளபடி மனதில் பட்டு ஒரு பொருளினிடத்தும் த்வேஷ சிந்தையில்லாமல் எம்பெருமானைக் காணவேணு மென்ற அபேக்ஷை யொன்றே உள்ளவராக விருப்பர். இவர்கள் பிராட்டியைப் போலே எம்பெருமானுக்கு மிகப் பிரியமுள்ளவர்களாய் ஸர்வேசுரனை வசீகரித்துக் கொண்டு தம்முடைய சம்பந்த சம்பந்திகளையும் உத்தரிப்பிக்க வல்லவராம். இவர்கள் நாம் ஆசாரியர்களாகப் பற்றவும் தீர்த்தப்ரஸாத ஸ்வீகாரம் பண்ணவும் யோக்கியராம். இதிலிருந்து ஸதாசாரத்தின் அவசியமும் ஸதாசாரமில்லாவிட்டால் உய்வு கிடையாது என்பதும் தெற்றென விளங்குகிறது. நாம் பற்றியிருக்கும் ஸ்ரீ வைஷ்ணவத்தினுடைய பலனை அடைவதற்கு ஸதாசாரத்தைக் கைப்பற்ற வேண்டும். ஆதலால், நாமெல்லோரும் ஸதாசாரத்தைக் கைகொள்ள முயலுவோமாக. நமக்கு அதை ஆசாரியனருளும் பகவத் கிருபையும் கூட்டி வைக்குக.

---

# XIII. பரிபூர்ண ப்ரும்மாநுபவம் அல்லது மோக்ஷம்.

---

211. பிரபத்தி செய்தவனை அவனுடைய ஆயுள் முடிவில் எம்பெருமான் புண்ணிய பாபங்களினின்று விடுவித்து மோக்ஷத்திற்கு அழைத்துச் செல்லுகின்றான். எம்பெருமான் தனது பக்தனுடைய புண்ணியத்தை அவனை கோத்தரிப்பவர்களுக்கும் பாபத்தை அவனை நிந்திப்பவர்களுக்கும் மாற்றிவிட்டு தனது பக்தனை பாப புண்ணியங்களாகிய கர்மபந்தத்தினின்று விடுவிக்கிறானென்று சாஸ்திரம் கூறுகிறது. இது பற்றித்தான் சாதுக்களைத் தூஷிக்கக் கூடாது என்று பெரியோர்கள் சொல்லுகிறார்கள்.

212. பகல், சுக்லபக்ஷம், உத்தராயணம் இவைகளில் இறக்கின்றவன் நல்ல உலகங்களை யடைவானென்றும், இரவு அமரபக்ஷம் தக்ஷிணாயணம் இவைகளில் இறக்கின்றவன் கெட்ட உலகங்களை யடைவானென்றும் சிலர் சொல்லுகிறார்கள். இவ்விதமான கட்டுப்பாடு ஒன்றும் பிரபந்நனுக்குக் கிடையாது. ஏனெனில், எம்பெருமான் இவனுக்கு மோக்ஷங் கொடுப்பதாக இவன் பிரபத்தி செய்த பொழுதே சங்கல்பம் செய்து கொண்டான். ஆதலால், எப்படியும் இவனுக்கு மோக்ஷம் சித்திப்பது நிட்சயமாம். எம்பெருமானுடைய நினைவன்றி நாள் செய்வது ஒன்றுமில்லையாம். எவனொருவன் சரியானபடி பிரபத்தியைச் செய்து முடித்து விட்டானோ அவன் எக்காலத்தில் இறந்தாலும் இறைவன் அவனை மோக்ஷத்திற்கழைத்துச் செல்லுவான்.

213. இருதயத்திற்குக் கீழும், சுற்றி நான்கு பக்கங்களிலும், மேலும் நரம்புகளிருக்கின்றன. பாபம் செய்த ஜீவன் இருதயத்திற்குக் கீழே தொங்கும் நரம்புகளின் வழியாக உடலை விட்டு நீங்கி, யமகிங்கரர்களால் யமலோகத்திற்கு அழைத்துச் செல்லப்படுவன். புண்ணியஞ் செய்த ஜீவன்

இருதயத்திற்கு நான்கு பக்கங்களிலுமுள்ள நரம்புகளின் வழியாக உடலை விட்டு நீங்கி, தான் செய்த புண்ணியத்திற் கேற்ற சுவர்க்க லோகத்திற்கு புகை, இரவு ஆகிய இவைக ளுக்குரிய தேவதைகளால் அழைத்துச் செல்லப்படுவன். பக்தி அல்லது பிரபத்தியை முறைபடி செய்து முடித்த ஜீவன் இருதயத்திற்கு மேல் நோக்கி (பிரம்மரந்திரம்) சிரசினுடைய உச்சிக்குச் செல்லும் நரம்பின் வழியாக உடலை விட்டு நீங்கி, அக்கினி பகல் இவைகளுக்குரிய தேவதைகளால் மோக்ஷத் திற்கு அழைத்துச் செல்லப்படுவன்.

214. ஜீவன் இவ்வுடலை விட்டு அகலும் பொழுது பத்து இந்திரியங்களும் அடங்கி பிறகு சுமார் ஒரு நிமிஷம் கழித்து மனம் அடங்கும். அப்பொழுது பக்தி செய்தவனுக்கு அவ னுடைய யத்தனத்தினால் கட்டாயம் எம்பெருமானுடைய நினைவு வரும். இதற்கு அந்திம ஸ்மிருதி என்று பெயராம். இவ்வந்திம ஸ்மிருதி பிரபந்நனுக்கு அவசியமில்லை என்பது தென்கலையார் அபிப்பிராயமாம். மனம் அடங்கி ஜீவன் உடலினின்று பிரியும் தருவாயில் நினைவொன்று மில்லாமலி ராது. அப்பொழுது என்ன நினைவு இருக்கின்றதோ அதை யே அடுத்த பிறப்பில் அடைவான் என்று சாத்திரம் கூறுகி றது. அந்திம ஸ்மிருதியில் தான் வளர்த்துக் கொண்டிருந்த மானை நினைத்துக் கொண்டு உயிர் நீங்கிய ஜடபரதன் மறு பிறப்பில் மானாகப் பிறந்ததாக ஸ்ரீ பாகவதம் பஞ்சம ஸ்கந்தத் தில் கூறியுள்ளதை நோக்குக. ஆதலால், மோக்ஷமடையும் பிரபந்நனுக்கு அந்திம ஸ்மிருதியில் எம்பெருமானுடைய நினைவு கட்டாயம் வரவேண்டு மென்றும், அதை சுய யத்தி னத்தாலன்றி எம்பெருமானே பிரபந்நனுக்கு உண்டாக்குவா னென்றும் ஸ்ரீ தேசிகன் அருளிச் செய்திருக்கின்றார்.

215. ஹார்த்தன் என்கிற நமது இருதயத்தில் அந்தர் யாமியாக விருக்கும் எம்பெருமான் பக்தி அல்லது பிரபத்தி செய்த ஜீவனுக்கு உச்சந்தலை நாடி வழியாகச் செல்ல வெளிச் சங்காட்டி அவனை உச்சந்தலை நாடி வழியாக உடலினின்று வெளியே கொண்டு வந்து அக்கினி பகல் சுக்லபக்ஷம் உத்த

ராயணம் வருஷம் வாயு சூரியன் சந்திரன் மின்னல் முதலிய வழி நடத்துபவர்களைக் கொண்டு பரம பதத்திற்குக் கொண்டு செல்கின்றான். மோக்ஷத்திற்குச் செல்லும் ஜீவன் அக்கினி பகல் முதலிய ஒவ்வொரு தேவதையாலும் அன்புடன் வர வேற்கப்பட்டு அவரவர்களுடைய எல்லை வரையில் கொண்டு வந்து அதற்கு மேல் நடத்த வேண்டிய தேவதையினிடம் ஒப்புவிக்கப்படுகிறான். இவ்விதமாக கடைசியில் மின்ன லுக்கு அதி தேவதையான "அமாநவன்" என்னும் தேவ தையினால் ஜீவன் வரவேற்கப்பட்டு எம்பெருமானிடத்தில் விரஜா நதிக்கரையில் ஒப்புவிக்கப் படுகிறான். அமாநவனுக்கு உதவியாக வருணன் இந்திரன் பிரஜாபதி முதலியவர்கள் நடு வில் இருக்கின்றார்கள். விரஜா நதிக்கரையை யடையும் வரையில் ஜீவனுக்கு சூக்ஷ்ம சரீரம் இருக்கின்றது. ஜீவன் பிரகிருதியில் தனியாக விருக்க முடியாது. இந்த சூக்ஷ்ம சரீரம் பரகிருதியைக் கடக்கும் வரையிலிருந்து விரஜா நதியை யடைந்ததும் போய் விடுகிறது. பிறகு, விரஜா நதியைத் தன் நினைவைக் கொண்டே கடக்கிறான். பரமபதத்தை யடைந்த தும் ஜீவன் அப்ராகிருத சரீரத்தை (பிரகிருதி சம்பந்த மில்லாத உடலை) அடைந்து "ஐரம்ம தீயம்" என்னும் குளத் தின் கரையையும், "ஸோமஸவநம்" என்னும் அரசமரத் தையும் சமீபிக்கிறான். ஆங்கு அப்ஸரஸ்ஸுக்கள் எதிர் கொண்டு வந்து பகவானுடைய அலங்காரம் போல இவனுக்கு அலங்கரிக்கிறார்கள். அப்பொழுது இவனுக்கு எம்பெருமா னைப்போன்ற தேஜஸ்ஸு முதலியவைகள் உண்டாகின்றன. இவன் கோபுரவாசலுக்குச் சென்றதும் பகவானைப் போல ஆங்குள்ளவர்களால் உபசரிக்கப்படுகிறான். பிறகு, ஆனந்த மயமென்கிற மண்டபத்தில் பரவாஸுதேவனைச் சேவிக்கின் றான். அப்பொழுது, தன்னுடைய சுபாவங்களையும் இறைவ னும் தானும் பிரிவின்றி யிருத்தலையும் எம்பெருமானுடைய குணங்களையும் உள்ளபடி பூர்ணமாக அறிகின்றான். ஜீவ னுக்கு அப்பொழுது கர்ம சம்பந்த மில்லாமையால் உபய விபூதிகளிலுமுள்ள எல்லாப் பொருள்களும் சுகத்தைக் கொடுப்பனவாக ஆகின்றன. இவனை எம்பெருமான் தன்னடிக் கீழ் வைத்துக் கொண்டு நித்ய சூரிகளுக்குப் போல சுகத்தைத்

தருகிறான். முக்தி யடைந்த ஜீவன் (முக்தன்) எம்பெருமானைச் சேவித்து அன்பு உள்ளடங்காமல் எம்பெருமானுக்குகந்த வேலைகளைச் செய்து கொண்டு பேரானந்த மடைகிறான். இவனுடைய சந்தோஷத்தைக் கண்டு எம்பெருமானும் சந்தோஷமடைகிறான்.

216. பக்தியோகம் செய்கிறவன் மோக்ஷத்திற்குச் செல்லும் இவ்வழியைத் தன்னுடைய தியானத்திற்கு உறுப்பாகத்தியானிக்க வேண்டும். பிரபந்நனுக்கு இவ்விதமான கட்டுப்பாடு கிடையாது. ஆனாலும், சீதா பிராட்டி இலங்கையில் இராவண பவனத்தில் சிறையிருந்த காலத்து ஸ்ரீராமரிடம் போவதாக எப்பொழுதும் நினைத்துக் கொண்டிருந்ததைப் போல பிரபந்நர்களாகிய நாமும் பரமபதம் செல்லும் மார்க்கத்தை நினைத்துக் கொண்டிருப்பது நலமாம்.

217. ஸாலோக்கியம், ஸாமீப்பியம், ஸாரூப்பியம், ஸாயுஜ்யம் என மோக்ஷம் நால் வகைப்படும். எம்பெருமானும் ஜீவனும் ஒரே இடத்திலிருப்பது ஸாலோக்யமாம். ஒரே வீட்டில் ஒருவன் முன்புரத்திலும் மற்றொருவன் பின்புரத்திலுமிருப்பது போலன்றி எம்பெருமானும் ஜீவனும் ஒரே பக்கத்திலிருப்பது ஸாமீப்பியமாம். எம்பெருமானும் ஜீவனும் ஒரே இடத்தில் ஒரே பக்கத்திலிருந்து கொண்டு ஒரே விதமான சுகத்தை யனுபவிப்பது ஸாரூப்பியமாம். ஒரே இராமாயணத்தை சுவல்ப அறிவுள்ள ஒருவனும் அதிக அறிவுள்ள ஒருவனும் வாசித்தால், சுவல்ப அறிவுள்ளவனைக்காட்டிலும் அதிக அறிவுள்ளவன் அதனால் பெற்ற ஆனந்தத்தை அதிகமாக அனுபவிப்பானல்லவா? அனுபவித்த விஷயம் ஒன்று: ஆனால், அனுபவம் வேறு பட்டிருக்கிறது. இது போலன்றி ஒரு பொருளை ஒரே விதமாக எம்பெருமானும் முக்தனும் அனுபவிக்கை ஸாயுஜ்யமாம். இது ஸார்ஷ்டிதை என்றும் சொல்லப்படும். ஸாயுஜ்யந்தான் சரியான மோக்ஷமாகும்.

218. ஜீவர்கள் மோக்ஷமடைவதற்கு முன் இவ்வுலகின்கண் அடைந்திருந்த பிறவிக்கிணங்க மோக்ஷத்தில் அவர்களு

டைய அனுபவம் வித்தியாசப் படுமென்பது மத்வர்களின் கொள்கையாம். சபரி எனும் வேட்டுவச்சி முக்தி யடைந்தாள் என்று இராமாயணத்தில் கூறப்பட்டுளது. ஆதலால், அவளுடைய அனுபவம் குறைவு பட்டிருக்குமா? பிரகிருதியில் இருக்கும் வரையில் ஜீவன் கர்மத்தால் கட்டுப்பட்டிருக்கிறான். அவனுடைய கர்மத்திற்கேற்க அவனுடைய அறிவு இருக்கும். அவனுடைய அறிவிற்கேற்க அவன் இவ்வுலகத்தில் எம்பெருமானை நினைப்பதில் வாசியிருக்கிறது. மோக்ஷமடைந்த ஜீவனுக்குக் கர்மபந்தம் கிடையாது. அவனுடைய ஞானம் பூர்ண சக்தியை யடைகிறது. ஆதலால், மோக்ஷத்தில் எம்பெருமானை அனுபவிப்பதில் முக்தர்களுக்குள் வித்தியாசமில்லை என்பதுதான் ஸ்ரீவைஷ்ணவத்தின் அபிப்பிராயமாம்.

219. ஸாயுஜ்யம் என்பது ஜீவனும் பிரம்மமும் ஒன்ருய் விடுகிருர்கள் என்று அத்வைதிகள் கூறுகின்றனர். ஸாயுஜ்யம் என்பதற்கு ஒரே வஸ்துவை பிரம்மமும் ஜீவனும் ஒரே மாதிரியாக அனுபவிக்கிருர்கள் என்பது தான் பொருளாம். சிறிய திருவடி பிராட்டியை அசோகவனத்தில் கண்டபொழுது "ஸ்ரீராமரும் சுக்கிரீவனும் ஐக்கியமாய் விட்டார்கள்" என்று கூறினர். இதற்குப் பொருள் இருவரும் ஒருவராக ஆகி விட்டார்கள் என்பதல்ல. இருவரும் சிநேகிதர்களாகி விட்டார்கள் என்று தான் பொருள்படும். அது போல ஜீவன் பிரம்மமாய் விட்டான் என்ருல் ஜீவனும் பிரம்மமும் ஒன்ருய் விட்டார்கள் என்று பொருள் படாது. ஜீவன் பிரம்மத்தைப் போல் ஆகிவிட்டான் என்று தான் பொருள்படும்.

220. மோக்ஷமடைந்த ஜீவன் எம்பெருமானைப்போன்ற அளவிலா தேஜஸ்ஸு பரிமளம் முதலியவைகளுடன் கூடிய தேகத்தை அடைந்து எம்பெருமானைப்போல சகல பொருள்களையும் ஒரே விதமாக அனுபவித்துக் கொண்டு எம்பெருமானுடைய ஸ்வரூபம் திருமேனி குணங்கள் இவைகளுடைய பரி பூர்ணனுபவத்தால் அடைந்த பேரானந்தப் பெருக்கால் எம்பெருமானுக்குச் சகல வேலைகளையும் செய்ய வேண்டு

மென்ற எண்ணம் தனக்குண்டாக எம்பெருமானுக்குக் கைங்கரியங்களைச் செய்து மிகவும் சந்தோஷத்தை யடைவான். எம்பெருமானுடைய கைங்கர்யத்தில் எல்லையற்ற ஆசை கொண்ட இந்த ஜீவனைக்கண்டு, ஸ்ரீ தாயாரும் எம்பெருமானும் நித்திய முக்தர்களும் ஆனந்த மடைவார்கள். இது தான் ஸ்ரீ வைஷ்ணவத்தில் கூறப்பட்டுள்ள மோக்ஷத்தின் தாத்பரியமாம்.

## XIV முடிவுரை.

**221.** ஜாதி உடல் பற்றியது. மதம் உயிர் பற்றியது. ஜாதிக்கும் மதத்திற்கும் தொடர்பு கிடையாது. பக்தி பிரபத்திகளில் ஈடுபட்டவனுக்கு ஜாதிக் கட்டுப்பாடு ஒழிந்து விடும். ஸ்ரீ வைஷ்ணவத்தைப்பற்றுவதால் பெரும் நோக்கமும் ஒற்றுமையு முண்டாகும். ஆகலால், உண்மை ஸ்ரீ வைஷ்ணவர்களாக ஆவோமாக.

**222.** ஈசுரன் உடல் மிசை உயிரெனக் கரந்தெங்கும் பரந்துளனாகையால் நாம் எவரிடத்தும் துவேஷங் கொள்ளுத லாகாது. அநீதியில் நடப்பவர்களையும் அனுசாரர்களையும் கண்டால் நாம் அவர்களிடத்தில் துவேஷங் கொள்ளாமல் இரக்கங் காட்ட வேண்டும். திருவாய் மொழி 4-ம் பத்து 10-ம் திருவாய் மொழிப்பாசுரங்களை நோக்குக. நமது ஆழ்வார் பிற சமயத்தவர்களைக் கண்டு உண்மை யறியாதிருக்கின்றார்களே என்று தான் வருந்தியது நன்கு விளங்கும். உண்மை யறியாதிருப்பவர்களை அவர்கள் மனம் புண்படா வண்ணம் உபதேசாதிகளால் திருத்த நம்மாலான முயற்சி செய்ய வேண்டுமே தவிர அவர்களிடம் துவேஷங் காட்டக் கூடாது. பேயாழ்வார் திருமழிசையாழ்வாரைச் சீர்திருத்தி ஸ்ரீ வைஷ்ணவ ஸமயத்தவராக்குவித்த சரிதத்தை நோக்குக. துவே

ஷம் நம்மை அசுரத் தன்மையை யடையச் செய்யும். இரக்கம் நம்மைத் தெய்வீகத் தன்மையை யடையச் செய்யும். ஆத லால், நாம் எக்காரணங் கொண்டும் எவரிடத்தும் துவேஷங் கொள்ளுதலாகாது. நாம் கருணை வெள்ளத்தில் முழுகுவோ மாக.

223. வடகலை தென்கலைச் சண்டை, அத்யாபகர்கள் வேதபாராயண கோஷ்டிச் சண்டை ஆகிய இவைகளெல்லாம் கருணைக்கடலாகிய எம்பெருமானுடைய தரிசனத்திற்கு புறம்பான வையாம். பரி பூர்ண ப்ரம்மானந்தத்தை இச்சித்திருக்கும் நம்மனத்தை பிளவுகளில் புகச் செய்வது என்னே விபரீதம்! அப்பத்திற்காகச் சண்டை யிட்ட இரு பூனைகள் குரங்கிடம் நியாயத்திற்குச் சென்று அப்பத்தை இழந்து ஏமாந்த கதை போல நமக்குள் சண்டையிட்டுக் கொண்டு கைக்காசையும் செலவழித்து பகவத் கைங்கர்யத்தில் செலவழிக்க வேண்டிய வாழ்நாளை வீணாக்கி உடலெடுத்த பயனை யடையாமல் பாகவத அபசாரத்திற்கும் ஆளாகி நைந்து நிற்கின்றோம். பிறமதஸ்தர்கள் நம்மையும் நம்மதத்தையும் ஏளனஞ் செய்யும் படியாக பகவானுடைய காப்பைப்பற்ற வேண்டிய நாம் போலீ சாரின் காப்பைப் பற்றிக்கொண்டு எம்பெருமானுடைய சந்நி தானத்தில் நிற்கின்றோம். இவ்விதமான விபரீதச் செயல்கள் பிறமதஸ்தர்களுடைய கோயில்களில் நடக்கின்றனவா என்று அன்பர்கள் யோசிக்க. சண்டையிடுவது இராஜஸ குணமல் லவா? பிறகு நாம் சாத்வீகர்களென்றும் பரம சாத்வீகர்க ளென்றும் சொல்லிக்கொள்வது பொருந்துமா? எம்பெருமா னுடைய பெயரும் சின்னங்களுமாத்திரம் தரித்திருக்கும் ஸத்கார யோக்யராகிய பாகவதர்களைக்கூட அவமதிக் கக் கூடாதென்றும், அவர்கள் தங்களிடத்தில் அபசாரப் பட்டாரை நசிப்பிக்க வல்லரென்றும் ஸ்ரீ விலக்ஷண மோக்ஷாதிகாரி நிர்ணயத்தில் பிள்ளைலோகாசாரியர் கூறியுள்ளா ராகையால் எந்த பாகவதர்களிடத்தும் அபசாரப்படினும் அது நம்மை நசிப்பிக்குமல்லவா? நமது ஆத்ம நாசத்திற் காகவா நாம் ஸ்ரீ வைஷ்ணவத்தைக் கைக்கொண்டிருப்பது?

சற்று யோசியுங்கள். உண்மை விளங்காமல் போகாது. "ஸ்ரீ தேசிகன் மிகப்பெருமையுடன் விளங்குவதைக் கண்டு பொறுமை கொண்ட பிள்ளை லோகாசாரியருடைய தம்பியரான அழகிய மணவாளப்பெருமாள் நயினர் முதலான சிலர் அவருக்கு எப்படியாகிலும் அவமானம் பண்ண வேண்டுமென்று நினைத்துத் தேசிகனைத் தரிசன பேதத்தில் வாதத்துக்கழைக்க, தேசிகன் உடையவருடைய ஸ்ரீ சூக்தியிலீடுபட்டவர்களான உத்தம ஸ்ரீ வைஷ்ணவர்களுடைய திருவடிகளைச் சிரசினால் வகிக்கிறேன் என்று சொல்லி ஸ்ரீ வைஷ்ணவர்களோடே வாதம் பண்ணுவதில் தமக்குத் திருவுள்ளஞ் செல்லாமையால் வாதிக்க வராமலிருக்க, அவருக்கு சாமார்த்திய மில்லாமையால் வாதத்துக்கு வரவில்லை என்று நினைத்துத் தேசிகன் திருமாளிகை வாசலிலே தங்கள் பாதரக்ஷகளைக்கட்டி அருகே பார்த்துக் கொண்டிருக்க தேசிகன் கார்யார்த்தமாய்ப் புறப்படும் போது அந்தப் பாதரக்ஷகள் தம் சிரசிலே படக்கண்டு உலகத்திலே நல்வழி பெற்ற சிலர் கருமத்தையும் சிலர் ஞானத்தையும் பற்றி நிற்கிறார்கள், நாமோ பாகவதர்களுடைய பாதரக்ஷகளைப்பற்றி நிற்கிறோம் என்று கூறி மனமகிழ்ந்து முகமலர்ச்சியோடிருக்க, அவர்களிற் சிலர் இப்படிப்பட்ட ஆத்மகுணத்திலீடுபட்டுத் தங்களை மன்னிக்கும்படியாகக் கேட்டுக் கொண்டார்கள்" என்ற சரித்திரத்திலிருந்து ஸ்ரீ வைஷ்ணவர்களுக்குள் வாதமும் பாகவத த்வேஷமும் நமது ஆசாரியர்களுடைய கொள்கைக்குப் புறம்பானவை என்று விளங்கவில்லையா? ஆதலால், பெருந்நோக்கத்துடன் நாமெல்லோரும் ஒற்றுமையுடன் வாழ்வோமாக.

224. நமது சந்நிதிகளில் தீர்த்தச் சண்டைக்குக் குறைவே கிடையாது. இதற்காக நியாயஸ்தலங்களுக்குச் சென்று பரிதபிக்கிறோம். இது சிறுபிள்ளைகள் தின்பண்டத்திற்காகத் தங்கள் தங்களுக்கு முதலில் தரும்படி சண்டையிட்டுக் கொள்வதை ஒக்கும். நாம் நம்மை "அடியேன்" என்று கிளிப்பிள்ளையைப்போல வாயால் சொல்லி, செய்கையில் நமது

அஹங்காரத்தைத் தெரிவிப்பவர்களாக வல்லவோ இருக்கின்றோம். அஹங்காரம் நம்மை நசிக்கவல்லவோ செய்யும். “தேசிகன் திருவடிகளில் ஆசரித்த கிருஷ்ண மிசிரர் சிரேஷ்டரான தேசிகனுக்கு மரியாதைகள் முன்னே நடந்ததும் தனக்கு ஆக வேண்டுமென்று விரும்ப, அன்று கோஷ்டியில் தீர்த்த முதலானவைகள் எல்லோருக்கும் ஆன பிறகு தான் பெற்று கடைசியில் கிருஷ்ணமிசிரர் அடையும் படியாகச் செய்தார்” என்கிற சரித்திரத்திலிருந்து தீர்த்தச் சண்டை பொருளற்றது என்றும் நமது ஆசார்யர்களுடைய எண்ணத்திற்கு ஒவ்வாதது என்றும் புலப்படவில்லையா? ஆதலால், நாம் அஹங்காரத்தை விட்டுப் பணிவுடன் நடப்போமாக.

225. “நமக்கு அறிவு இருப்பது எல்லோருக்கும் உபகாரஞ் செய்ய” என்று ஸ்ரீ தேசிகன் ஸ்ரீ ரஹஸ்யத்ரய ஸாரம் ஸ்வ நிஷ்டாபிஜ்ஞாதிகாரத்தில் ஸ்வரூபத் தெளிவு என்ற தலைப்பின் கீழ் கூறியுள்ளார். உலக மனைத்தும் ஈசுரனுக்கு உடலாதலால் உலகம் வாழ நாம் செய்யும் தொண்டு ஈசுரனை உவப்பிக்கும்.... ஆதலால், எம்பெருமானுடைய உவப்பிற்காக உலகத்தொண்டு புரிவோமாக.

226. ஸ்ரீமந் நாராயணன் தான் தெய்வமென்ற எண்ணம் நமக்கு எப்பொழுதும் இருக்க வேண்டும். அவனொருவனைத்தான் தஞ்சமென்று அடையவேண்டும். எந்த தேவதையைக்கண்டாலும் வேறு எந்தப் பொருளைக் கண்டாலும் அவர்களுக்குள் நாராயணன் தான் அந்தர்யாமியாக விருந்து இயக்குகிறான் என்கிற எண்ணம் நமக்கு அடிக்கடி வர வேண்டும். இவ்விதமாகப்பழகினல் நமக்குக்காணும் யாவையும் நாராயண ஸ்வரூபமாகவே தோன்றும். அப்பொழுது நாம் த்வேஷமற்றுச் சாத்வீகர்களாக விளங்குவோம். ஆகையால், காணும் யாவையும் அவனுருவங்கள் என்னும் நினைவில் பழகுவோமாக.

உண்மை தெளிவித்த ஆழ்வாராசாரியர்கள் வாழ்க
உண்மையறிவிக்கும் அவரருளிச் செயல்கள் வாழ்க.
உண்மை ஸ்ரீ வைஷ்ணவ சீலர்கள் வாழ்க
உண்மை ஸ்ரீ வைஷ்ணவம் எங்கும் ஓங்குக.

எம்பெருமானார் திருவடிகளே சரணம்.
ஸ்ரீமத் வேதாந்த தேசிகன் திருவடிகளே சரணம்.
ஸ்ரீ மணவாள மாமுனிகள் திருவடிகளே சரணம்.

---

ஸ்ரீ வைஷ்ணவ சமய சாரம்
முற்றிற்று.

ஸ்ரீ வெங்கட்டா பிரிண்டிங் ஒர்க்ஸ், திருப்பாதிரிப்புலியூர்.

**The Vital Book for the Engineers**

# MANUAL OF REINFORCED CONCRETE DESIGN AND CONSTRUCTION.

BY

T. VARADARAJAN,

*A. M. I Struct E., M Inst. B. E.*
*Chartered Structural Engineer.*

WITH A FOREWORD BY

DIWAN BAHADUR R. NARASIMHA AYYANGAR,
B. A., B. E.,
*Irrigation Chief Engineer, Madras. P. W. D.*

*16 Mo. Double Crown, 375 p p. 106 Illus 42 tables.*

PRCE ~~Rs~~. 4 Postage extra.

*Oopies can be had from:—*

T. VARADARAJAN,
TIRUPAPULIYUR.
(South Arcot.)

Extract from letter received from Ubhaya Vedanta Pravartaka Sriman A. V. Gopalachariar, M.A., B.L., President and Editor, Sri Desika Sri Sukthi Samrakshna Sabha, Srirangam, dated 6—9—36.

*** I shall be very proud of claiming an author reader like yourself. I read through your book once and I find it interesting and characterised by sincerity and earnest. ***

*Sunday Times, September 20, 1936.*

---

"Quintessence of Vaishnavism. Vaishnavites have got a handy volume of their religious faith in "SRI VAISHNAVA SAMAYA SARAM" (in Tamil) by Mr. T. Varadarajan. The merit of the book lies in its lucid exposition of the teachings of the Great Masters' texts in simple Tamil. The avoidance of terms and expressions that are half Sanskrit and half Tamil, that confront and confound a lay reader of Vaishnavite commentaries is a welcome departure. It deserves to be studied by every lover of Vaishnavism".

---

*Available at:—*

1. HIGGINBOTHAMS' RAILWAY BOOK STALL.

2. G. KRISHNASAMY NAICKER & BROS.,
*Book Sellers. Tirukkoyilur.*

3. MUTHU RAMALINGA EMPORIUM,
*Tirupapuliyur.*